University of Madras

B.A. Degree Examination

Selections in Tamil

VOL. I

PUBLISHED BY THE UNIVERSITY

MADRAS

THE S.P.C.K. PRESS, PRINTERS TO THE UNIVERSITY

1917

T14416

R005D03

University of Madras

B.A. Degree Examination

SELECTIONS

TAMIL

VOL. I

PUBLISHED BY THE UNIVERSITY

Madras
THE S.P.C.K. PRESS, PRINTERS TO THE UNIVERSITY

1917

CONTENTS

	பக்கம்
பத்துப்பாட்டு:—	1
IV. பெரும்பாணாற்றுப்படை	1
V. முல்லைப்பாட்டு	21
IX. பட்டினப்பாலை	28
ஐங்குறுநூறு:—	41
3. குறிஞ்சி	42
4. பாலை	43
5. முல்லை	45
பதிற்றுப்பத்து:—	48
இரண்டாம்பத்து	49
மூன்றாம்பத்து	56
கலித்தொகை:—	60
பாலை	61
குறிஞ்சி	64
புறநானூறு:—	70
திணைவிளக்கம்	71
துறைவிளக்கம்	72
புறநானூறு	74
முத்தொள்ளாயிரம்:—	127
முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்	128
ஐந்திணையைம்பது:—	133
திருக்குறள்:—	139
பழமொழி:—	230
பாரதவெண்பா:—	242
5. உத்தியோக பருவம்	243
சிலப்பதிகாரம்:—	254
பதிகம்....	255

பக்கம்

புகார்காண்டம்:—
1. மங்கலவாழ்த்துப் பாடல் 259
2. மனையறம்படுத்த காதை 262
5. இந்திரவிழவூரெடுத்த காதை 266
6. கடலாடு காதை 276
9. கனாத்திறமுரைத்த காதை 285
10. நாடுகாண் காதை 289

மணிமேகலை:— 301
பதிகம்.... 302
1. விழாவறை காதை 307
2. ஊரலருரைத்த காதை 311
3. மலர்வனம்புக்க காதை 315
4. பளிக்கறைபுக்க காதை 323
5. மணிமேகலாதெய்வம் வந்துதோன்றிய காதை 329
6. சக்கரவாளக்கோட்டமுரைத்த காதை 336
7. துயிலெழுப்பிய காதை 345

சீவக சிந்தாமணி:— 351
நாமகளிலம்பகச் செய்யுட்கள் 352

குண்டலகேசி:— 364
குண்டலகேசிச் செய்யுட்கள் 365

வளையாபதி:— 367
வளையாபதிச் செய்யுட்கள் 368

கல்லாடம் 370

புறப்பொருள் வெண்பாமாலை:— 377

திருவள்ளுவமாலை.... 384

பத்துப்பாட்டு.

IV. பெரும்பாணாற்றுப்படை.

இது, கடைச்சங்கப்புலவர்களாகிய **நக்கீரனார்** முதலிய நல்லிசைப் புலவர்களால் இயற்றப்பெற்றனவும், மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் இயற்றிய உரைவாய்ந்தனவுமாகிய **பத்துப்பாட்டுக்களுள்** நான்காவது; 500 அடிகளையுடைய அகவற்பாவால் ஆகியது. பரிசில் பெறுதற்கு எண்ணிய பாணனொருவனை அது பெற்றானொருவன், கச்சிப்பதியில் அரசுபுரிந்து வீற்றிருந்த **தொண்டைமான் இளந்திரையனென்னும்** வள்ளல்பால் ஆற்றுப்படுத்தியதாக அவ்விளந்திரையனைக் **கடியலூர் உருத்திரங்கண்ணனார்** பாடியது, இது. இதனால், தொண்டைநாட்டின் நானிலத்து ஐந்திணைவளங்களும், காஞ்சிநகரத்தின் சிறப்புக்களும், மேற்கூறிய அரசன் இயல்புகளும், பண்டைக்கால ஒழுக்கங்களும், சில சரித்திரப்பகுதிகளும், பிறவும் அறியலாகும். (ஆற்றுப்படை—வழிப்படுத்தல்.) தொல்காப்பியப் புறத்திணையியலில், "தாவி னல்லிசை" (6) என்னும் சூத்திரத்துள்ள, 'ஆற்றிடைக்காட்சி யுறழத் தோன்றிப், பெற்றபெருவளம் பெறாஅர்க்கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்' என்னும் பகுதி, இப்பாட்டிற்கு விதி. பத்துப் பாட்டுக்களிலுள்ள பாணாற்றுப்படைகள் இரண்டனுள், அடிகள் மிகுந்திருத்தல்பற்றி, இது, பெரும்பாணாற்றுப் படையெனப்பட்டது.

IV. பெரும்பாணாற்றுப்படை.

ஆசிரியப்பா.

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி
காய்சினந் திருகிய கடுந்திறல் வேனிற்
பாசிலை யொழித்த பராஅரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை * வகுத்தத
னுள்ளகம் புரையு மூட்டுறு பச்சைப்
பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை
யுருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன விருடேங்கு வறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பிற்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
றொடையமை கேள்வி யிடவயிற் றழீஇ
வெந்தெறற் கனலியொடு மதிவலந் திரிதருந்
தண்கடல் வரைப்பிற் றாங்குநர்ப் பெறாது
பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்

---

2. கான்று—தோற்றுவித்து.
6. பச்சை—தோல்.
14. மருப்பு—வீணைதண்டம்.
9—15. போர்வை, வாய், கடை, திவவு, மருப்பு, நரம்பு இவை யாழின் உறுப்புக்கள்.
16. கேள்வி—யாழ்; ஆகுபெயர்.
19. புகை—ஆவி.

* வகிர்ந்ததனென்றும் பாடம்.

புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!
பெருவறங் கூர்ந்த கானங் கல்லெனக்
கருவி வானந் துளிசொரிந் தாங்குப்
பழம்பசி கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்
டியாமவ ணின்றும் வருதும் நீயிரு
மிருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் புறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பன்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கு
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளு
மிலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி
னல்லது கடிந்த வறம்புரி செங்கோற்
பல்வேற் றிரையற் படர்குவி ராயிற்
கேளவ னிலையே; கெடுகநின் னவலம்;
அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்;
உருமு முரறா தரவுந் தப்பா;
காட்டுமாவு முறுகண் செய்யா; வேட்டாங்
கசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்
சென்மோ; இரவல! சிறக்கநின் னுள்ளம்;
கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழவி னன்ன முழுமா வுருளி

---

22. இதிலுள்ள 'பாண' என்னும் ஒருமைக்கு ஏலாதபடி இப்பாட்டினுள்ளே, பின்பு பன்மைப்பெயரும் பன்மைவினையும் வருதற்கு விதி, "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி, பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே, யாற்றுப்படை மருங்கிற் போற்றல்வேண்டும்" என்பது. (தொல். எச்ச. 66.)

23. வறம்—வறுமை.

28. சுற்றத்தாரையும் உளப்படுத்தி, 'நீயிர்' என்றான்.

28, 37. நீயிரும் படர்குவிராயின்.

30. புறங்கடை—பின்னிடத்தோன்.

37. திரையன் — தொண்டைமானிளந்திரையன். இவன் இப்பாட்டுடைத் தலைவன். (31,454.)

37, 45. படர்குவிராயின், சென்மோ.

39—43. இவ்வடிகளால், இளந்திரையனுடைய ஆக்கினைகூறப்பெற்றது.

46. ஆரம்—ஆரக்கால்.

யெழூஉப் புணர்ந்தன்ன பரூஉக்கை நோன்பார்
மாரிக் குன்ற மழைசுமந் தன்ன
வார்வை வேய்ந்த வறைவாய்ச் சகடம்
வேழங் காவலர் குரம்பை யேய்ப்பக்
கோழி சேக்குங் கூடுடைப் புதவின்
முளையெயிற் றிரும்பிடி முழந்தா ளேய்க்குந்
துளையரைச் சீறுர றூங்கத் தூக்கி
நாடக மகளி ராடுகளத் தெடுத்த
விசிவீங் கின்னியங் கடுப்பக் கயிறுபிணித்துக்
காடி வைத்த கலனுடை மூக்கின்
மகவுடை மகடூஉப் பகடுபுறந் துரப்பக்
கோட்டினர் வேம்பி னேட்டிலை மிடைந்த
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோண்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த
பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்
சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்
பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி
யெல்லிடைக் கழியுநர்க் கேம மாக
மலையவுங் கடலவு மாண்பயந் தரூஉ
மரும்பொரு ளருத்துந் திருந்துதொடை நோன்ஞா
ணடிபுதை யரண மெய்திப் படம்புக்குப்
பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள்
வரையூர் பாம்பிற் பூண்டு புடைதூங்கச்
சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்
கருவி லோச்சிய கண்ணக னெறுழ்த்தோட்
கடம்பமர் நெடுவே ளன்ன மீளி
யுடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்

---

50. ஆர்வை—ஒருவகைப் பாய்.
57. காடி—ஊறுகாய்; (310.) மூக்கு—மூக்கணை.
61. முடலையாக்கை — முறுக்குண்ட உடம்பு.
63. ஒழுகை—ஒழுங்கு.
64. சில்பதஉணவு—உப்பு. கொள்ளை—விலை.
65. உமணர்—உப்பு வாணிகர்.
69. அடிபுதை அரணம் — செருப்பு. படம் — சட்டை. (முல்லை. 66.)

தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்
தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கு
முல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவி
னீளரை யிலவத் தலங்குசினை பயந்த
..........பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற வணிலொடு கருப்பை யாடா
தியாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி *நெடுந்தக
ரீத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை
மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி
யீன்பிண வொழியப் போகி நோன்கா
ழிரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோ
லுளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
யிருநிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்புல் லடக்கிய வெண்ப லெயிற்றியர்
பார்வை யாத்த பறைத்தாள் விளவி
னீழன் முன்றி னிலவுரற் பெய்து
குறுங்கா ழுலக்கை யோச்சி நெடுங்கிணற்று
வல்லூற் றுவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி
வாரா தட்ட வாடூன் புழுக்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமக
னோடாத் தானை யொண்டொழிற் கழற்கால்

---

78. நெரியல்—மிளகு.
80. சாத்து—வணிகர் கூட்டம்.
81. உல்கு—சுங்கம். (பட். 125.) கவலை—கவர்த்த வழி.
82. இயவு—வழி.
85. கருப்பை—எலி.
88. எய்—முள்ளம்பன்றி.
90. ஈன்பிண — பிள்ளையைப் பெற்றவள்; "பெண்ணும் பிணவு மக்கட்குரிய" (தொல். மரபு. 61.)
92. மிண்டி—குத்துகையினாலே.
93. நீறு—புழுதி.
95. பார்வை—மிருகங்களைப் பிடிப்பதற்காக வளர்த்துப் பழக்கிய மிருகங்கள். பறைதல்—தேய்தல்.
100. வாராது—அரியாமல்.

* நெடுந்திடரென்றும் பாடம்.

செவ்வரை நாடன் சென்னிய மெனினே,
தெய்வ மடையிற் றேக்கிலைக் குவைஇநும்
பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர்;
மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான்மடி பொழுதி னீர்நசைஇக் குழித்த
வகழ்சூழ் பயம்பி னகத்தொளித் தொடுங்கிப்
புகழா வாகைப் பூவி னன்ன
வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கு
மரைநாள் வேட்ட மழுங்கிற் பகனாட்
பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளைஇக்
கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு
மருஞ்சுர மிறந்த வம்பர்ப் பருந்துபட
வொன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி
வைந்நுதி மழுங்கிய புலவுவா யெஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சாத்திய கணைதுஞ்சு வியனக
ரூகம் வேய்ந்த வுயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையுங் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்குங் கணைக்காற் பந்தர்த்
தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்
வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பைக்
கொடுநுகந் தழீஇய புதவிற் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயிற்
கொடுவி லெயினர் குறும்பிற் சேப்பிற்
களர்வள ரீந்தின் காழ்கண் டன்ன

---

103. 'செவ்வரை நாடன்' என்றது, திரையனை. சென்னியம் — பாணச் சாதியேம்.
103, 5. எனின், பெறுகுவிர்.
109. புகழாவாகைப்பூ—அகத்திப்பூ.
111. அழுங்கின்—ஒழிந்தால்.
112. எருக்கி—அடித்து.
116. கடறு—காடு.
117. அம்பர்—அப்பால்.
120. பலகை—கேடகம். நாண்—வில் நாண்.
122. ஊகம்— ஒருவகைப் புல்.
126. மிளை—காவற்காடு; படப்பை—பக்கம். (401.)
129. குறும்பு—அரண்.
130. ஈந்து—ஈச்சமரம். காழ்—விதை.

சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்
வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர்;
யானை தாக்கினு மரவுமேற் செலினு
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
சூன்மகண் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன *புல்லணற் காளைச்
சென்னா யன்ன கருவிற் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாளா தந்து நறவுநொடை தொலைச்சி
யில்லடு கள்ளின் றோப்பி பருகி
மல்லன் மன்றத்து †மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்பச்
சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி வலன்வளையூஉப்
பகன்மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை
‡முரண்டலை கழிந்த பின்றை மறிய
குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பி
னதளோன் றுஞ்சுங் காப்பி னுதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கு
மிடுமுள் வேலி யெருப்படு வரைப்பி
னள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரன் மத்த மொலிப்ப வாங்கி

129, 33. சேப்பின், பெறுகுவிர்.
131. சுவல்—மேட்டுநிலம்.
133. வறை—பொரியல்.
135. ஏறு—இடி.
134—6. மறக்குடிச் சிறப்பு.
141. நொடை—விலை.
142. தொப்பி—நெல்லாலாக்கியது.
143. விடை—ஆட்டுக்கிடாய்.
148. குளகு — தழை; விலங்கினுணவு. (முல்லை. 33.)
149. செற்றை—சிறுதூறு (செடி.)
151. உதள்—ஆடு.
153. துருவை—செம்மறியாடு.
156. மத்தம்—மத்து.

* புல்லணர்க் காளையென்றும் பாடம்.
† மதவிடை தெண்டியென்றும் பாடம்.
‡ முனைத்தலை யிருக்கையென்றும் பாடம்.

யாம்பி வான்முகி ழன்ன கூம்புமுகை
யுறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ
நாண்மோர் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வருங் காதிற் பணைத்தோட்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மக
ளளைவிலை யுணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளா
ளெருமை நல்லான் கருநாகு பெறாஉ
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பி
னிருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்;
தொடுதோன் மரீஇய வடுவாழ் நோனடி
விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை
யுறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்
மேம்பா லுரைத்த வோரி யோங்குமிசைக்
கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட
* பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
யொன்றம ருடுக்கைக் கூழா ரிடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
யந்து ணவிர்புகை † கமழக் கைம்முயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலி
னின்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்

---

157. ஆம்பி—குடைக்காளான்.
159. சுமடு—சும்மாடு.
160. மாறும்—விற்கும்.
166, 8. சேப்பின், பெறுகுவிர்.
172. ஓரி—ஆடவர் தலைமயிர்.
178. ஞெகிழி—கடைக்கொள்ளி.
179. தோட்ட—துளைத்த.
180. பாலை—ஒரு பண்.
183. செத்து—கருதி.

* பன்மல ரடுக்கியவென்றும், பன்மலர் மிடைந்தவென்றும் பாடம்.
† பிறப்பக்கைம் முயன்றென்றும் பாடம்.

புல்லார் வியன்புலம் போகி முள்ளுடுத்
தெழுகா டோங்கிய தொழுவுடை வரைப்பிற்
பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றிற்
களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்க்
குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டிற்
பருவ வானத்துப் * பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்

....

குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றி
புகரிணர் வேங்கை வீகண் டன்ன
வவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்
றின்சுவை மூரற் பெறுகுவிர்; ஞாங்கர்க்
குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சி
லுடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை
யரிபுகு பொழுதி னிரியல் போகி
வண்ணக் கடம்பி னறுமல ரன்ன
வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற்
கறையணற் குறும்பூழ் கட்சிச் சேக்கும்
வன்புல மிறந்த பின்றை மென்றோன்
மிதியுலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன
கவைத்தா ளலவ னளற்றளை சிதையப்
பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பிற்
காரேறு பொருத கண்ணகன் செறுவி
னுழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்
முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவிற்

---

187. திரிமரம்—வரகரைக்கும் திரிகை; [எந்திரம்.
188. சாடு—வண்டி.
191. வை—வைக்கோல்.
200. உடுப்புமுகம்—உடும்பின்முகம்.
201. துளர்—களைக்கொட்டு.
205. கட்சி—காடு.
209. சாய்—கோரை.
210. காரேறு—எருமைக்கடா.

* பாய்மழையென்றும் பாடம்.

களைஞர் தந்த கணைக்கா னெய்தற்
கட்கமழ் புதுப்பூ முனையின் முட்சினை
முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்
கொடுங்கான் மாமலர் கொய்துகொண் டவண
பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப்
புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி
யீருடை யிருந்தலை யாரச் சூடிப்
பொன்காண் கட்டளை கடுப்பச் சண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பி
னிரும்புவடித் தன்ன மடியா மென்றோற்
கருங்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்
பழஞ்சோற் றமலை முனைஇ வரம்பிற்
புதுவை வேய்ந்த கவிகுடின் முன்றி
லவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉ
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனிக்
கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன
பைதற விளைந்த பெருஞ்செந் நெல்லின்
றூம்புடைத் திரடா டுமித்த வினைஞர்
பாம்புறை மருதி னோங்குசினை நீழற்
பலிபெறு வியன்கள மலிய வேற்றிக்
கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடுந்
துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோற்
சிலம்பி வானூல் வலந்த மருங்கிற்
குழுமுநிலைப் போரின் முழுமுத றொலைச்சிப்
பகடூர் பிழிந்த பின்றைத் துகடப
வையுந் துரும்பு நீக்கிப் பைதறக்
குடகாற் றெறிந்த குப்பை வடபாற்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றுந்
தண்பணை தழீஇய தளரா விருக்கைப்
பகட்டா வீன்ற கொடுநடைக் குழவிக்

---

217. பஞ்சாய்க்கோரை—தண்டான் கோரை.
220. சண்பு—ஒருவகைக் கோரை.
229. கடுப்புடைப்பறவை—குளவி.
235. துணங்கை—ஒருவகைக்கூத்து.
236. வலந்த—சூழ்ந்த.

கவைத்தாம்பு தொடுத்த காழ்.........
ஏணி யெய்தா நீணெடு மார்பின்
முகடுதுமித் தடுக்கிய பழம்பல் லுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லிற்
றச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
வூரா நற்றே ருருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட..................
செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்
தமளித் துஞ்சு மழகுடை நல்லிற்
றொல்பசி யறியாத் துளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின், மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவா ழளகின் வாட்டொடும் பெறுகுவிர்;
மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத்
தணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்
கெந்திரஞ் சிலைக்குந் துஞ்சாக் கம்பலை
விசய மடூஉம் புகைசூ ழாலைதொறுங்
கரும்பின் றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்;
வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பைப் பறியுடை முன்றிற்
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்த
ரிளையரு முதியருங் கிளையுடன் றுவன்றிப்
புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழு
மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்
கோடை நீடினுங் குறைபட லறியாத்
தோடாழ் குளத்த கோடுகாத் திருக்குங்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பி

---

254. மடியின்—தங்கின்.
254, 6. மடியின், பெறுகுவிர்.
256. அளகு—பெட்டைக்கோழி.
260. எந்திரம்—கரும்பினாலை.
263. வேழம்—பேய்க்கரும்பு.
265. இறை—வீட்டின் இறப்பு. பறி—மீன்கள் போடப்படும் ஒருவகை ஓலைப்பெட்டி.

னவையா வரிசி யங்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவிற் புலர வாற்றிப்
பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்
பூம்புற நல்லடை யளைஇத் தேம்பட
வெல்லையு மிரவு மிருமுறை கழிப்பி
வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெந்நீ ரரியல் விரலலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்;
பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண்கொளீஇக்
கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப்
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை
நீர்நணிப் பிரம்பி னடுங்குநிழல் வெரூஉ
நீத்துடை நெடுங்கயந் தீப்பட மலர்ந்த
கடவு ளொண்பூ வடைத லோம்பி
யுறைகான் மாறிய வோங்குயர் நனந்தலை
யகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப
வரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி
முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கைக்
குறுந ரிட்ட கூம்புவிடு பன்மலர்
பெருநா ளமயத்துப் பிணையினிர் கழிமின்;
செழுங்கன் றியாத்த சிறுதாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்று
மறைகாப் பாள ருறைபதிச் சேப்பிற்
பெருநல் வானத்து வடவயின் விளங்குஞ்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட

274, 82. சேப்பின், பெறுகுவிர்.
275. துழவை—துழாவியட்ட கூழ்.
277. குரும்பி—புற்றாஞ்சோறு.
280. வழைச்சு—இளமை.
290. கடவுளொண்பூ—தாமரைப்பூ.
298. பைஞ்சேறு—கோமயம். படிவம்-தெய்வவடிவம்.
303. சிறுமீன்—அருந்ததி.

சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தஞ்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்;
வண்ட லாயமொ டுண்டுறைத் தலைஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
யிரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிந்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவன
ரோதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பையத் தோன்று
* நீர்ப்பெயற் றெல்லைப் போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉ
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்
சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பி
னெல்லுழு பகட்டொடு கறவை துன்று
வேழகத் தகரோ டெகினங் கொட்குங்
கூழுடை நல்விற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோல்
..........................நுண்டுகி லுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும்
பீலி மஞ்ஞையி னியலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய

301, 310. சேப்பின், பெறுகுவிர்.
305. பறவைப் பெயர்ப்படு வத்தம் — இராசான்ன மென்னும் நெல்.
313. சிரல்—மீன்கொத்திப் பறவை.
324. சிலதர்—ஏவல்செய்வோர்.
331. இயலி—உலாவி.

* நீர்ப்பெயர்த்தென்றும் பாடம்.

முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கி னசையின், முட்டில்
பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயிற்
செம்பூத் தூய செதுக்குடை முன்றிற்
கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய
வார்ந்துகு சின்னீர் வழிந்த குழம்பி
னீர்ஞ்சே றாடிய விரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு...........போகாது
நென்மா வல்சி தீற்றிப் பன்னாட்
குழிநிறுத் தோம்பிய குறுந்தா ளேற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்;
வான மூன்றிய மதலை போல
வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
யுரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந்
துறைபிறக் கொழியப் போகிக் கறையடிக்
குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும்
வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சண் முன்றின் மணநாறு படப்பைத்
தண்டலை யுழவர் தனிமனைச் சேப்பிற்
றாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழி றாழைக் குழவித் தீநீர்
................இரும்பிடிக் கவுண்மருப் பேய்க்குங்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழங்
திரளரைப் பெண்ணை நுங்கொடு பிறவுந்
தீம்பஃ றார முனையிற் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங் கார்குவிர்; பகற்பெயன்
மழைவீழ்ந் தன்ன மாத்தாட் கமுகின்
புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்கா
யாறுசெல் வம்பலர் காய்ப்பசி தீரச்

336, 45. அசையின், பெறுகுவிர்.
338. செதுக்கு—வாடல்.
343. தீற்றி—தின்னப்பண்ணி.
355, 62. சேப்பின், ஆர்குவிர்.
357. வீழில்தாழை—தென்னை.

சோறடு குழிசி யிளக விழூஉம்
வீயா யாணர் வளங்கெழு பாக்கத்துப்
பன்மர நீளிடைப் போகி நன்னகர்
விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தரூஉ
நாடுபல கழிந்த பின்றை நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறு படிந்தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னுங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
காரகற் கூவியன் பாகொடு பிடித்த
விழைசூழ் வட்டம் பால்கலந் தவைபோ
னிழறூழ் வார்மண னீர்முகத் துறைப்பப்
புனல்கால் கழீஇய பொழிறொறுந் திரள்காற்
சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடந் தொலைச்சி நாளும்
பெருமகி ழிருக்கை மரீஇச் சிறுகோட்டுக்
குழவித் திங்கட் கோணேர்ந் தாங்குச்
சுறவுவா யமைத்த சுரும்புசூழ் சுடர்நுத
னறவுபெயர்த் தமைத்த நல்லெழின் மழைக்கண்
மடவரன் மகளிரொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
செவ்விகொள் பவரோ டசைஇ யவ்வயி
னருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநுங்
கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்;
காழ்ோ ரிகழ்பத நோக்கிக் கீழ
நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளங்
கடுஞ்சூன் மந்தி கவருங் காவிற்
களிறுகத னடக்கிய வெளிறில் கந்திற்

---

370. வாடாவள்ளி—வள்ளிக்கூத்து.
373. இதிற்கூறிய இடம், காஞ்சீபுரத்தி லுள்ள திருவெஃகாவென்னும்திருப்பதி.
382. நீலப்பைங்குடம் — பச்சைக் குப்பி.
393. காழோர்—குத்துக்கோற்காரர்.

றிண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவிற்
படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையுங் கோளும் வழங்குநர்த் தடுத்த
வடையா வாயின் மிளைசூழ் படப்பை
நீணிற வுருவி னெடியோன் கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
சுடும ணோங்கிய *நெடுநகர் வரைப்பி
னிழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைஇய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக்கட லுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறன் மூதூ
ரவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வா
யந்தி வானத் தாடுமழை கடுப்ப
வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப
வீரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தே
ராராச் செருவி னைவர் போல
வடங்காத் தானையோ டுடன்றுமேல் வந்த
வொன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்துக்
கச்சி யோனே, கைவண் டோன்றல்;
நச்சிச் சென்றோர்க் †கேம மாகிய
வளியுந் தெறலு மெளிய வாகலின்
மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப
நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோருந்
துப்புக்கொளல் வேண்டிய துணையி லோருங்

398. தொலைபு—கெடுதல்.
405. சுடுமண்—செங்கல்.
407. கோளி—பூவாமற் காய்க்குமரம்.
412. அவ்வாய்—அழகிய இடம்.
425. நயந்திசினோர்—விரும்பியவர்.
426. துப்பு—வலி.

* நெடுமதில் வரைப்பினென்றும் பாடம்.
† ஏமமாக வென்றும் பாடம்.

கல்வீ ழருவி கடற்படர்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்ன
ரிமையோ ருறையுஞ் சிமையச் செவ்வரை
வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுட்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர்ப் போகு மிரியன் மாக்க
ளொருமரப் பாணியிற் றூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்
செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்துப்
பெருங்கை யானைக் கொடுந்தொடி படுக்குங்
கருங்கைக் கொல்ல னிரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்
திறையுறை புறவின் செங்காற் சேவ
லின்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர்க்
குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பட்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறைவேண் டுநர்க்குங் குறைவேண் டுநர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
யிடைத்தெரிந் துணரு மிருடீர் காட்சிக்
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்
துருப்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப்
பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்
புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படினு
மொன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக!
மள்ளர் மள்ள! மறவர் மறவ!
செல்வர் செல்வ! செருமேம் படுந!
வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற

---

434. தொய்யா—கெடாத.
436. தொடி—பூண்.
443. குறை—காரியம்.
447. உருப்பு—கொடுமை.

பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்குத்
தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி
வந்தேன்; பெரும! வாழிய நெடிதென
விடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கடனறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி
நின்னிலை தெரியா வளவை யந்நிலை
நாவலந் தண்பொழில் வீவின்று விளங்க
நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
யந்நிலை யணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
யாவி யன்ன வவிர்நூற் கலிங்க
மிரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோ னட்ட பல்லூன் கொழுங்குறை
யரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்
றெரிகொ ளரிசித் திரணெடும் புழுக்க
லருங்கடித் தீஞ்சுவை *யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் கரப்புடை யடிசின்
மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்
தானா விருப்பிற் றானின் றூட்டி
மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கு
மாடுவண் டிமிரா வழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
†யுரவுக்கடன் முகந்த பருவ வானத்துப்
பகற்பெயற் றுளியின் மின்னுநிமிர்ந் தாங்குப்
புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
றொடையமை மாலை விறலியர் மலைய

458. பூண்—ஆபரணம்.
468. சிதர்வை—கந்தை.
473. செத்து—ஒத்து.
476. கரப்பு—மறைதல்.
481. அழலவிர் தாமரை—பொற்றாமரை.

* அயிரொடு பிறவுமென்றும் பாடம்.
† பலவுக்கடன் முகந்தவென்றும் பாடம்.

நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைகண் டன்ன வாலுளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி
யரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலைத்
தொன்னாத் தெவ்வ ருலைவிடத் தொழிந்த
விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசி லின்சீர்க்
கின்னர முரலு மணங்குடைச் சாரல்
மஞ்ஞை யாலு மரம்பயி லிறும்பிற்
கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவின்
மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றிற்
செந்தீப் பேணிய முனிவர்வெண் கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கு
மொளிறிலங் கருவிய மலைகிழ வோனே.

வெண்பா.

கங்குலு நண்பகலுந் துஞ்சா வியல்பிற்றாய்
மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம்—வெஞ்சினவேற்
கான்பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
யான்பயந்தே னென்னுஞ் செருக்கு.

---

492. படை—சேணம். | 494. கின்னரம்—இசையறிவதோர் பறவை.
495. இறும்பு—இளமரக்காடு.

V. முல்லைப்பாட்டு.

இது, மேற்கூறிய பத்துப்பாட்டினுள் ஐந்தாவது; 103 அடிகளையுடைய அகவற்பாவாலாகியது; தலைவியின் கற்பு மேம்பாட்டை விளக்கி, முல்லைத்திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவற்றை அங்கங்கே புலப்படுத்தும் பாட்டாதலின், இஃது இப்பெயர் பெற்றது. இதனை இயற்றியவர், காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் **நப்பூதனார்** என்பவர். பகைமேற்சென்ற தலைவன் வருமளவும் அவன் வற்புறுத்திக் கூறியவண்ணம் தலைவி ஆற்றியிருந்தபொழுது, அவன் வந்ததனைக்கண்ட தோழி முதலியோர் தம்முட் கூறியதாக, இந்நூல் இயற்றப்பெற்றது. தனித்திருக்கும் தலைவியின் கற்பு மேம்பாடும், கார்காலத்தின் இயற்கையும், படைவீட்டிற் பகைவர் அடைந்த துன்பங்களும், தலைவன் வீரச்செயல் முதலியனவும், பண்டைக்கால ஒழுக்கங்கள் சிலவும் இதனால் அறியலாகும்.

V. முல்லைப்பாட்டு.

ஆசிரியப்பா.

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமர னோக்கி யாய்மக
ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன மதனா
னல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்

---

1. நன—அகலம்; உரிச்சொல். தலை—இடம்.
3. நீர்—மாவலிவார்த்த தாரைநீர். திருமால் முல்லைக்குரிய தெய்வம்; (கருப்பொருள்.)
4. பாடு—ஒலி. ஏர்பு—எழுந்து.
5, 6. பெரும்பொழுதாகிய காரும், சிறுபொழுதாகிய மாலையும் முல்லையின் காலமுதற் பொருள்கள். "காருமாலையு முல்லை." (தொல். அகத். 6.)
9. நாழி—ஓரளத்தற்கருவி.
9, 10. முல்லைப்பூ, முல்லைக் கருப்பொருள்.
11. விரிச்சி—நற்சொல்.
12–6. பசுக்கன்று, ஆய்மகள், கோவலர், பசுக்கள் இவை முல்லைக் கருப்பொருள்கள்.
15. உய்த்தர—செலுத்த.
18. வாய்ப்புள்—நற்சொல்.
20. வாய்வது—உண்மை.

பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
யுவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
யோங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதறுடைத்
தயினுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்பக்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில் லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு

---

21. பருவரல் எவ்வம் களை—மனத்தடுமாற்றத்தாலுண்டான வருத்தத்தைப் போக்குவாயாக.
22. கலுழ்சிறந்து—கலக்கம் மிகுந்து.
23. புலம்பு—தனிமை.
24. கான்யாறு, முல்லைக் கருப்பொருள். புறவு—காடு; (101.) இது முல்லையின் நிலமுதற்பொருள்.
25. சேண்நாறு—நெடுந்தூர மணக்கின்ற; பிடவம்—ஒரு செடி, இது முல்லைக் கருப்பொருள். எருக்கி—வெட்டி.
26. அருப்பம்—அரண்.
27. முட்புரிசை—முள்வேலி. ஏமுற—காவலுற.
28. பாடி—படைவீடு.
30. கவலை—நாற்சந்தி.
33. இன்குளகு—இனிய அதிமதுரத்தழை.
41. குந்தம்-எறிகோல். கிடுகு-சட்டம்.
42. வில்—வில்லையுடைய சேனை.
43. வேறுபல் பெரும்படை—பாஷை வேறுபட்ட பலதேசத்துப் பெரிய சேனை.
44. கண்டம்—நிறத்தால் வேறுபட்ட திரைச்சீலை; ஆகுபெயர்.

குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட
நெடுநா வொண்மணி *நிழற்றிய நடுநா
ளதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித் துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழப்
பொழுதளந் தறியும் பொய்யா மாக்க
டொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி
யெறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப
மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியு
ளுடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு †மிலேச்ச ருழைய ராக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅ
தெடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்

49. மாட்ட—கொளுத்த.
50. நிழற்றிய—எறிந்துவிட்ட; தொழில்களடங்கியவுடன் மணியடித்தல் இயல்பு.
51. அதிரல்—புனலிக்கொடி. படாஅர்—சிறுதூறு.
52. சிதர்—திவலை.
55. மாக்கள்—நாழிகைக் கணக்கர்.
55, 8. பொய்யாமாக்கள் இசைப்ப வென்க.
57. வெலீஇய—வெல்லுதற்கு.
58. குறுநீர்க்கன்னல்—நாழிகை வட்டில்.
60. மெய்ப்பை—சட்டை.
62. புலித்தொடர்—புலிச்சங்கிலி.
64. ஈரறை—புறவறை உள்ளறை.
68. எஃகம்—வாள்.

* மிழற்றிய வென்றும் பாடம்.

† மிலைச்சரென்றும் பாடம்.

பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலங் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறுமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்து
மொருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விர
னகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
யாசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை
யின்றுயில் வதியுநற் காணா டுயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து
மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
விடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
யின்ப விமிழிசை யோர்ப்பனள் கிடந்தோ
ளஞ்செவி நிறைய வாலின; வென்றுபிறர்
வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசய வெல்கொடி யுயரி வலனேர்பு
வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்

---

72. சோறு வாய்த்து—செஞ்சோற்றுக் கடனைக் கழித்து. தோல்துமிபு—சேணத்தை அறுத்து.
79. பாசறை—படைவீடு.
80. வதியுநன்—தங்குகின்ற கணவனை.
84. ஏஉறு—அம்பு தைத்த.
87. முடங்கு இறை—கூடுவாய் மூலை.
89. அஞ்செவி — காதின் உள்ளிடம். ஆலின—கனைத்தன. ஆலின (103) மாவென இயைக்க.
92. வயிர்—ஊதுகொம்பு. அயிர்—நுண் மணல்.
93–96, 98, 99, 101. காயா, கொன்றை, கோடல், தோன்றி, வரகு, இரலை, மான், வள்ளி இவை முல்லைக் கருப்பொருள்கள்,

தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள
வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துணைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

96. தோன்றி—செங்காந்தள்.

101. வள்ளி—வள்ளிக்கொடி. பிறக்கு= பின்.

IX. பட்டினப்பாலை.

பத்துப்பாட்டினுள், ஒன்பதாவதாகிய இது, பட்டினத்தைச் சிறப்பித்துக்கூறிய பாலைத்திணையாதலின், பட்டினப்பாலையென்று பெயர்பெற்றது. [பட்டினம்—காவிரிப்பூம் பட்டினம்; இது சோழர்களின் இராசதானி. பாலை—பிரிதலும் பிரிதல் நிமித்தமும்.] இதில் முதற்பொருளும் கருப்பொருளுமின்றிப் பிரிதல் நிமித்தமாகிய உரிப்பொருளே கூறப்பெற்றுள்ளது; இப்பாட்டு, 301 அடிகளையுடையது. இது வஞ்சிப்பாட்டென்பதும், பெரும்பாலும் ஆசிரியவடிகளும் சிறுபான்மை வெள்ளடியும் கலியடியும் இதில் வந்துள்ளனவென்பதும் யாப்பருங்கலவுரையாசிரியருடைய கொள்கை. [அடியோத்து, 9–சூ. உரை.] இதை இயற்றியவர், **கடியலூர் உருத்திரங்கண்ணனூர்**; மேற்கூறிய பெரும்பாணாற்றுப்படை ஆசிரியரும் இவரே. வேற்றுநாட்டுக்குச் செல்லத்தொடங்கிய தலைவன், தனது நெஞ்சை நோக்கி, 'நெஞ்சே! பட்டினத்தைப் பெற்றாலும் யான் தலைவியைப் பிரிந்து நின்னுடன்வாரேன்' என்று கூறுதல் முகமாகக் காவிரிப்பூம் பட்டினத்தின் வளங்களையும், சோழன் கரிகாற் பெருவளத்தானது வீரச்செயல்களையும், அவனது செங்கோலையும் பேரழகு பயப்பச் சிறப்பித்துப் பாராட்டிக் கூறும் இந்நூல். ஆசிரியர்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்து இப்பாட்டைக் கரிகாற் பெருவளவன் கொண்டான் என்பர். [கலிங்கத்துப் பரணி, இராசபாரம்பரியம், 22.]

IX. பட்டினப்பாலை.

ஆசிரியப்பா.

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்
காய்ச்செந்நெற் கதிரருந்து
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியுங்
கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ்மஞ்ச
ளினமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி
யகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கி
னேரிழை மகளி ருணங்குணக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டு
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்

---

1. வெண்மீன்—சுக்கிரன்.
4. புள்—வானம்பாடி.
6. மலை—குடகமலை.
14. முழுக்குழவி—முற்பட்டகன்று.
15. கூடு—நெற்கூடு.
16. கோள்—குலை.

23, 5. குழை விலக்குமென்க.

விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலைப் புரவியி னணைமுதற் பிணிக்குங்
கழிசூழ்படப்பைக் கலியாணர்ப்
பொழிற்புறவிற் பூந்தண்டலை
மழைநீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீ
னுருகெழுதிற லுயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
யிருகாமத் திணையேரிப்
புலிப்பொறிப் போர்க்கதவிற்
றிருத்துஞ்சுந் திண்காப்பிற்
புகழ்நிலைஇய மொழிவளர
வறநிலைஇய வகனட்டிற்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
யேறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயின் மாசூட்டுந்
தண்கேணித் தகைமுற்றத்துப்
பகட்டெருத்தின் பலசாலைத்
தவப்பள்ளித் தாழ்காவி
னவிர்சடை முனிவ ரங்கி வேட்கு

---

27. பாக்கம்—கடற்கரையூர்.
29. கொள்ளை—விலை.
30. பஃறி—படகு.
32. படப்பை—பக்கம்.
39. இணைஏரி—சோமகுண்டம், சூரிய குண்டம். (சிலப். கனாத்திற.)
40. புலிமுத்திரை சோழர்க்குரியது; (135). போர்க்கதவு-இரட்டைக் கதவு.
53. தவப்பள்ளி—சமணர்கள் பௌத்தர்களின் தவச்சாலைகள்.

மாவுதி நறும்புகை முனைஇக் குயிறம்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த்
தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கு
முதுமாத்த முரண்களரி
வரிமணலகன்றிட்டை
யிருங்கிளை யினனொக்கற்
கருந்தொழிற் கலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும்
வறளடம்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியு
நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ
திருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்
கல்லெறியுங் கவண்வெரீஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தைப்
பறழ்ப்பன்றிப் பலகோழி
யுறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாடக்
கிடுகுநிரைத் தெஃகூன்றி
நடுகல்லி னரண்போல
நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய
குறுங்கூரைக் குடிநாப்பண்
ணிலவடைந்த விருள்போல
வலைவுணங்கு மணன்முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்

---

55. ஆவுதி—ஆகுதி. முனைஇ—வெறுத்து
55, 58. குயில் சேக்கு மென்க.
62. கருந்தொழில்—வலியதொழில்.
70. கலம்—ஆயுதம்.
74. போந்தை—பனை.
79. நடுகல்—வீரக்கல்.
80. காழ்—காம்பு.
84. வீழ்—விழுது.

சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்
மடற்றாழை மலர்மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா
துவவுமடிந் துண்டாடியும்
புலவுமணற் பூங்கானன்
மாமலை யணைந்த கொண்மூப் போலவுந்
தாய்........தழுவிய குழவி போலவுந்
தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கு
மலியோதத் தொலிகூடற்
றீதுநீங்கக் கடலாடியு
மாசுபோகப் புனல்படிந்து
மலவ னாட்டியு முரவுத்திரை யுழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டு
மகலாக் காதலொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறை
......................மடமங்கையர்
பட்டுநீக்கித் துகிலுடுத்து
மட்டுநீக்கி மதுமகிழ்ந்து
மைந்தர் கண்ணி மகளிர் சூடவு
மகளிர் கோதை மைந்தர் மலையவு
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக்
கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுட ரெண்ணவும்
பாட லோர்த்து நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்றுய்த்துங்

86. நெய்தனிலமாக்கள் சுருக்கொம்பை நட்டு வருணனாக அதைப் பூசித்தல் மரபு.
97. யாறு—காவிரி.
98. கூடல்—காவிரி கடலொடு கூடுமிடம்.
101. அலவன்—நண்டு.
108. மட்டு—கள். மது—வேறுவகையான பானங்சள்.
112. திமில்—படகு.

கண்ணடைஇய கடைக்கங்குலான்
மாஅகாவிரி மணங்கூட்டும்
தூஉவெக்கர்த் துயின்மடிந்து
வாலிணர் மடற்றாழை
வேலாழி வியன்றெருவி
னல்லிறைவன் பொருள்காக்குந்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
றேர்பூண்ட மாபோல
வைகறொறு மசைவின்றி
யுல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவு
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவு
மாரிபெய்யும் பருவம் போல
நீரினின்று நிலத்தேற்றவு
நிலத்தினின்று நீர்ப்பரப்பவு
மளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி
மழையாடு சிமய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை
யேழகத் தகரோ டுகளு முன்றிற்
குறுந்தொடை நெடும்படிக்காற்

---

115. கண்ணடைஇய—துயின்ற. கடைக் கங்குலான்—இரவின் இறுதியில்.
119. வேலாழி—கரையையுடைய கடல்; வேலை—கடற்கரை.
125. உல்கு—சுங்கம்.
133. பெருங்காப்பு—பெரிய காவலை யுடைய பண்டசாலை.
137. மூடை—மூட்டை.
138. கவான்—பக்கமலை.
139. வருடை—ஒருவகை விலங்கு.
140. ஞமலியேற்றை—ஆண்நாய்.
142. தொடை—படி. படிக்கால்—ஏணி.

கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்துச்
சேவடிச் செறிகுறங்கிற்
பாசிழை......................
றாசுடைத் துகிர்மேனி
மயிலியன் மானோக்கிற்
கிளிமழலை மென்சாயலோர்
வளிநுழையும் வாய்பொருந்தி
யோங்குவரை மருங்கி னுண்டா துறைக்குங்
காந்தளங் துடுப்பிற் கவிகுலை யன்ன
செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவறு வியலாவணத்து
மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்
வருபுன றந்த வெண்மணற் கான்யாற்
றுருகெழு கரும்பி னொண்பூப் போலக்
கூழுடைக் கொழுமஞ்சிகைத்
தாழுடைத் தண்பணியத்து
வாலரிசிப் பலிசிதறிப்
பாகுகுத்த பசுமெழுக்கிற்
காழூன்றிய கவிகிடுகின்
மேலூன்றிய துகிற்கொடியும்
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரிய
ருறழ்குறித் தெடுத்த வுருகெழு கொடியும்
வெளிலிளக்குங் களிறுபோலத்

---

144. இடைகழி, ரேழியெனவழங்குவது.
151. வளிநுழையும் வாய்—சாளரம்.
155. தாஅய்—பரந்து.
163. மஞ்சிகை—ஒருவகைப் பெட்டி.
164. பணியம்—பண்டம்.
166. பாகு—பாக்கு.
171. உறழ்—வாதம்.
172. வெளில்—யானைத்தம்பம்.

தீம்புகார்த் திரைமுன்றுறைத்
தூங்குநாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பி னசைக்கொடியு
மீன்றடிந்து விடக்கறுத்
தூன்பொரிக்கு மொலிமுன்றின்
மணற்குவைஇ மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதவி
னறவுநொடைக் கொடியோடு
பிறபிறவு நனிவிரைஇப்
பல்வே றுருவிற் பதாகை நீழற்
செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பிற்
செல்லா நல்லிசை யமரர் காப்பி
னீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமு
மரியவும் பெரியவு * நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகி
னீர்நாப் பண்ணு நிலத்தின் மேலு
மேமாப்ப வினிதுதுஞ்சிக்
கிளைகலித்துப் பகைபேணாது
வலைஞர்முன்றின் மீன்பிறழவும்
விலைஞர்குரம்பை மாவீண்டவுங்
கொலைகடிந்துங் களவுநீக்கியு
மமரர்ப் பேணியு மாவுதி யருத்தியு
நல்லானொடு பகடோம்பியு
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்

---

179. புதவு—வாசல்.
180. நொடை—விலை.
185. பரிப்புரவி — செல்லுதலையுடைய குதிரை.

* நெளியவீண்டியென்றும் பாடம்.

புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக் [படாது
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறை
பல்பண்டம் பகர்ந்துவீசுந்
தொல்கொண்டித் துவன்றிருக்கைப்
பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையு
முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன்; வாழிய நெஞ்சே! கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
யருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாய மூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்
கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை புரட்டு முன்று
ளுகிருடை யடிய வோங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்

---

204. வாழ்க்கை—இல்வாழ்க்கை.
206. பகல்—நடுவிலுள்ள ஆணி.
212. கொண்டி—மிகுதி.
214. முதுவாய் ஒக்கல்—அறிவு வாய்த்த சுற்றம்.
222. பிணியகம்—காவலிடம்.
225–7. இவ்வடிகளில் கரிகாற் பெருவளத்தான், இளமைப் பருவத்திற் பகைவர்காப்பைக் கடந்து அரசாட்சி பெற்றமை கூறப்பெற்றது.
227. தாயம்—உரிமை.

பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு
.........................உழிஞை சூடிப்
பேய்க்க ணன்ன பிளிறுகடி முரச
மாக்க ணகலறை யதிர்வன முழங்க
முனைகெடச் சென்று முன்சம முருக்கித்
தலைதவச் சென்று தண்பணை யெடுப்பி
வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்
கராஅங் கலித்த கண்ணகன் பொய்கைக்
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்
செறுவும் வாவியு மயங்கி நீரற்
றறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவுங்
கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி
யந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியிற்
பருநிலை நெடுந்தூ ணொல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையவு
மருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்
முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் றீந்தொடை யோர்க்கும்
பெருவிழாக் கழிந்த பேமுதிர் மன்றத்துச்
சிறுபூ நெரிஞ்சியோ டறுகை பம்பி
யழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவு
மழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவுங்
கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇப்
பிணந்தின் யாக்கைப் பேய்மக டுவன்றவுங்
கொடுங்கான் மாடத்து நெடுங்கடைத் துவன்றி

---

243. புதவம் — அறுகம்புல். செருந்தி— ஒருவகைக் கோரை.
246. கொண்டி—கொள்ளுதல்.
249. வம்பலர்—புதியவர். கந்து—தறி.
253. கோடியர்—கூத்தர்.
255. பேம்—அச்சம்.
256. அறுகை—அறுகம்புல்.
258. ஆண்டலை—ஒருவகைப் பறவை. அது ஆண்மகனது தலைபோன்ற வடிவமுடையது; (கலிங்கத்துப் பரணி, கோயில். 16.)
259. இகுத்து—தாழ்த்து.

விருந்துண் டானாப் பெருஞ்சோற் றட்டி
லொண்சுவர் நல்லி லுயர்திணை யிருந்து
பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்த்
தொடுதோ லடியர் துடிபடக் குழீஇக்
கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட
வுணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவு
மருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற
மலையகழ்க் குவனே கடறூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலிற்
பல்லொளியர் பணிபொடுங்கத்
தொல்லருவாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் றிறல்கெடச் சீறி மன்னர்
மன்னெயில் கதுவு மதனுடை நோன்றாண்
மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணாற் செயிர்த்துநோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
விருங்கோவேண் மருங்குசாயக்
காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு * புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிறீஇப்
பொருவேமெனப் பெயர்கொடுத்

263. திணை—திண்ணை.
270. மருங்கு—குலம்.
274. ஒளியர்—ஒளிநாட்டார். பணிபு—வணங்கி.
275. அருவாள்—ஒருநாடு.
281. பொதுவர்—இடையர்.
285. உறந்தை—உறையூர்.
287. புழை—சிறுவாயில்.
288. புதை—அம்புக்கட்டு.
289. பெயர்—சபதம்.

* வழியமைத்தென்றும் பாடம்.

தொருவேமெனப் புறக்கொடாது
திருநிலைஇய பெருமன்னெயின்
மின்னொளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி
விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்கால்
பொற்றொடிப் புதல்வ ரோடி யாட..

....

செஞ்சாந்து சிதைந்த மார்பி னொண்பூ
ணரிமா வன்ன வணங்குடைத் துப்பிற்
றிருமா வளவன் றெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய, தடமென் றோளே.

வெண்பா.

முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே யளந்ததால்—செய்ச்செய்
அரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று.

---

294. பரேர்—பேரழகு.

299. திருமாவளவன்—கரிகாற் பெருவளத்தான்.

ஐங்குறுநூறு.

இந்நூல், கடைச்சங்கப் புலவர்களால் இயற்றப்பெற்று அவர்களால் தொகுக்கப்பெற்ற * எட்டுத் தொகைகளில் மூன்றாவது; கடவுள் வாழ்த்துச் செய்யுளை முதலிற் பெற்றுப் பின்பு மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லையென்னும் ஐந்திணைகளுள், ஒவ்வொன்றற்கும் உரிய ஒழுக்கம் முதலியவைகளைத் தனித்தனி நன்குவிளக்கும் நூறுநூறு அகவற்பாக்களைக் கொண்டு, முறையே ஐந்துவகையாகப் பகுக்கப் பெற்றுள்ளது; ஐந்திலக்கணங்களுள்ளே பொருளிலக்கணத்தின் பகுதியாகிய அகத்திணையின் துறைகளுக்கு இலக்கியமாக அமைந்துள்ளது. [அகமாவது அறமுதலிய நான்கனுள் இன்பத்தைப் பற்றியது.] ஒவ்வொரு நூறும் பப்பத்துச் செய்யுட்களாக அமைக்கப்பெற்ற பப்பத்துச் சிறு பிரிவுகளையுடையது. இந்நூலிலுள்ள அகவற்பாக்கள்–501; இப்பாட்டுக்கள் மூன்றடிச் சிற்றெல்லையையும், ஆறடிப் பேரெல்லையையு முடையவைகள். நற்றிணை முதலியவற்றுள்ள பாக்களைக்காட்டிலும் அடியளவிற் குறைந்த ஐந்நூறு பாடல்களை யுடைமையின், இந்நூல் இப்பெயர்பெற்றது. இதில், கடவுள் வாழ்த்துச்செய்யுள் பாரதம்பாடிய பெருந்தேவனாராலும், முதல்நூறு ஓரம்போகியாராலும், இரண்டாம்நூறு அம்மூவனாராலும், மூன்றாம்நூறு கபிலனாராலும், நான்காம்நூறு ஓதலாந்தையாராலும், ஐந்தாம்நூறு பேயனாராலும் இயற்றப்பெற்றவை. இந்நூலைத் தொகுத்தோர், புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்; தொகுப்பித்தோர், யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையார். மற்ற விவரங்களை இந்நூல் முழுப்புத்தகத்தால் அறிந்துகொள்க.

---

* எட்டுத் தொகைகளாவன: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறென்பன.

3. குறிஞ்சி.

1. அன்னாய் வாழிப்பத்து.

நேரிசையாசிரியப்பா.

202. அன்னாய்! வாழிவேண் டன்னை! நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமுங்
குடுமித் தலைய; மன்ற
நெடுமலை நாட னூர்ந்த மாவே.

என்பது: வரைதல்வேண்டித் தலைமகன் வருகின்றமைகண்ட தோழி, மகிழ்வுற்றுத் தலைமகட்குச் சொல்லியது.

'அன்னாய்' என்றது தலைவியை. வேண்டு—விரும்புவாயாக. மா—குதிரைகள்.

203. அன்னாய்! வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினு மினிய, அவர்நாட்
டுவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலுழி நீரே.

எ—து, உடன்போய் மீண்ட தலைமகள், 'நீ சென்றநாட்டு நீர் இனியவல்ல; எங்ஙனம் நுகர்ந்தாய்' எனக்கேட்ட தோழிக்குக் கூறியது.

படப்பை—தோட்டம். உவலைக்கூவல்—தழைமூடிய கிணறு.

9. கிள்ளைப்பத்து.

284. அளிய தாமே, செவ்வாய்ப் பைங்கிளி;
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்
இருவி நீள்புனங் கண்டும்
பிரித றேற்றாப் பேரன் பினவே.

எ—து, தினையை அரிந்தவிடத்துக் கிளியை நோக்கிக் கூறுவாள் போற் கூறியது.

அளிய—அன்புசெய்தற்குரியன. இருவி – தினையரிதாள். புனம்—மலையிலுள்ள கொல்லை.

4. பாலை.

2. செலவுப்பத்து.

312. அறஞ்சா லியரோ! அறஞ்சா லியரோ!
வறனுண் டாயினு மறஞ்சா லியரோ!
வாள்வனப் புற்ற வருவிக்
கோள்வ லென்னையை மறைத்த குன்றே.

எ-து, தன் தமையன்மார் தூரந்துவந்த விடத்துத் தலைவன் மறைதற்கு உதவிசெய்த மலையைத் தலைமகள் வாழ்த்தியது.

சாலியர்—மிகுக. வறன்—வறுமை. வாள்—ஒளி. என் ஐ—என் தலைவன்.

3. இடைச்சுரப்பத்து.

321. உலறுதலைப் பருந்தி னுளிவாய்ப் பேடை
அலறுதலை யோமை யங்கவட் டேறிப்
புலம்புகொள விளிக்கு நிலங்காய் கானத்து
மொழிபெயர் பன்மலை யிறப்பினும்
ஒழிதல் செல்லா தொண்டொடி குணனே.

எ-து, பிரிந்துபோகாநின்ற தலைமகன், இடைச்சுரத்துத் தலைமகள் குணநினைந்து இரங்கிச் சொல்லியது.

உலறுதலை—காய்ந்ததலை. அலறுதலை—காய்ந்ததலை. ஓமை—ஒருவகை மரம். மொழிபெயர்—பாஷை வேறுபட்ட.

5. இளவேனிற்பத்து.

341. அவரோ வாரார்; தான்வந் தன்றே;
குயிற்பெடை யின்குர லகவ
வயிர்க்கேழ் நுண்ணற னுடங்கும் பொழுதே.

எ-து, தலைமகன் பிரிந்துழிக் குறித்த இளவேனிற் பருவம் வரக் கண்ட தலைமகள் இரங்கிச் சொல்லியது. இனிவரும் பாட்டுக்கள் எட்டும் இக்கருத்தை யுடையன.

வந்தன்று—வந்தது. அகவ—கூவியழைக்க.

342. அவரோ வாரார்; தான்வந் தன்றே;
சுரும்புகளித் தாலு மிருஞ்சினைக்
கருங்கா னுணவங் கமழும் பொழுதே.

ஆலும்–ஒலிக்கும். நுணவம்–நுணாமரம்.

343. அவரோ வாரார்; தான்வந் தன்றே;
திணிநிலைக் கோங்கம் பயந்த
அணிமிகு கொழுமுகை யுடையும் பொழுதே.

கோங்கம்–கோங்கிலவமரம். முகை–அரும்பு.

344. அவரோ வாரார்; தான்வந் தன்றே;
நறும்பூங் குரவம் பயந்த
செய்யாப் பாவை கொய்யும் பொழுதே.

குரவம்–குராமரம். குரவின்பூவைப் பாவையென்றல் மரபு.

345. அவரோ வாரார்; தான்வந் தன்றே;
புதுப்பூ வதிர ருஅய்க்
கதுப்பற லணியுங் காமர் பொழுதே.

அதிரல்–புனலிக்கொடி. தாஅய்–பரந்து. கதுப்பு–கூந்தல். அறல்–கருமணல்.

346. அவரோ வாரார்; தான்வந் தன்றே;
அஞ்சினைப் பாதிரி யலர்ந்தெனச்
செங்க ணிருங்குயி லறையும் பொழுதே.

அறையும்–ஒலிக்கும்.

348. அவரோ வாரார்; தான்வந் தன்றே;
வலஞ்சுரி மராஅம் வேய்ந்துநம்
மணங்கமழ் தண்பொழின் மலரும் பொழுதே.

வலம்சுரி மராஅம்–வலமாகச்சுழித்த பூக்களையுடைய வெண்கடம்பு.

349. அவரோ வாரார்; தான்வந் தன்றே;
பொரிகான் மாஞ்சினை புதைய
எரிகா லிளந்தளி ரீனும் பொழுதே.

பொரிகால்–பொரிந்த அடி.

350. அவரோ வாரார்; தான்வந் தன்றே;
வேம்பி ெனொண்பூ வுறைப்பத்
தேம்படு கிளவியவர் தெளிக்கும் பொழுதே.

உறைப்ப—உதிர. தெளிக்கும்—தெளிவிக்கும்.

6. வரவுரைத்தபத்து.

352. விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுக லன்ன விழுப்பிணர்ப்
பெருங்கை யானை யிருஞ்சின முறைக்கும்
வெஞ்சுர மரிய வென்னார்
வந்தனர், தோழிநங் காத லோரே.

எ—து, பிரிந்த தலைமகன் வரவுணர்ந்த தோழி, தலைமகட்குச் சொல்லியது.

தொடை—அம்பு. மறவர்—பாலைநிலமாக்கள். எழுத்துடை நடுகல்—வீரக்கல். பிணர்—சருச்சரை. உறைக்கும்—மிகும்.

5. முல்லை.

4. புறவணிப்பத்து.

431. நன்றே, காதலர் சென்ற வாறே;
அணிநிற விரும்பொறை மீமிசை
மணிநிற வுருவின தோகையு முடைத்தே.

எ—து, தலைவன்சென்ற வழியின் வெம்மையை நினைந்து வருந்திய தலைமகட்கு வழி நன்றென்றுசொல்லித் தோழி ஆற்றுவித்தது. இனி வரும் பாட்டுக்கள் ஒன்பதும் இக்கருத்தையுடையன.

பொறை—மலை. மணி—நீலரத்னம்.

432. நன்றே, காதலர் சென்ற வாறே;
சுடுபொ னன்ன கொன்றை சூடிக்
கடிபுகு வநர்போன் மள்ளரு முடைத்தே.

கடி—கலியாணம்.

433. நன்றே, காதலர் சென்ற வாறே;
நீர்ப்பட வெழிலி வீசுங்
கார்ப்பெயற் கெதிரிய கானமு முடைத்தே.

எழிலி—மேகம்.

434. நன்றே, காதலர் சென்ற வாறே;
மறியுடை மான்பிணை யுகளத்
தண்பெயல் பொழிந்த வின்பமு முடைத்தே.

மறி—மான்கன்று.

435. நன்றே, காதலர் சென்ற வாறே;
நிலனணி நெய்தன் மலரப்
பொலனணி கொன்றையும் பிடவமு முடைத்தே.

நெய்தல்—ஒருவகை நீர்ப்பூ. பொலன்—பொன். பிடவம்—பிடாச்செடி.

436. நன்றே, காதலர் சென்ற வாறே;
நன்பொ னன்ன சுடரிணர்க்
கொன்றையொடு மலர்ந்த குருந்துமா ருடைத்தே.

இணர்—பூங்கொத்து.

437. நன்றே, காதலர் சென்ற வாறே;
ஆலித் தண்மழை தலைஇ
வாலிய மலர்ந்த முல்லையு முடைத்தே.

ஆலி—ஆலங்கட்டி; முழங்கியென்றுமாம். தலைஇ—பெய்துவிட்டமையால். வாலிய—வெள்ளைநிற முடையனவாய்.

438. நன்றே, காதலர் சென்ற வாறே;
பைம்புதற் பல்பூ மலர
இன்புறத் தகுந பண்புமா ருடைத்தே.

தகுந—தக்கவை.

439. நன்றே, காதலர் சென்ற வாறே;
குருந்தங் கண்ணிக் கோவலர்
பெருந்தண் ணிலைய பாக்கமு முடைத்தே.

பாக்கம்–சிற்றூர்.

440. நன்றே, காதலர் சென்ற வாறே;
தண்பெய லளித்த பொழுதின்
ஒண்சுடர்த் தோன்றியுந் தளவமு முடைத்தே.

தோன்றி–காந்தள். தளவம்—முல்லை.

பதிற்றுப்பத்து.

இந்நூல், மேற்கூறிய எட்டுத்தொகைகளில் நான்காவது; தமிழ்நாட்டில் முடியுடைவேந்தர் மூவர்களுள் ஒருவகையினராகிய சேரபரம்பரையினர் பதின்மர்கள்மீது சங்கப்புலவர் பதின்மர்களால் இயற்றப்பெற்றது; ஐந்திலக்கணங்களுள்ளே பொருளிலக்கணத்தின் பகுதியாகிய புறத்திணையின் துறைகளுக்கு இலக்கியமாக அமைந்துள்ளது. புறமாவது, அறத்தையும் பொருளையும் பற்றியது. பப்பத்து அகவற்பாக்களுள்ள பத்துப்பகுதிகளால் தொகுக்கப்பெற்றமையின், இந்நூல், இப்பெயர் பெற்றது.

பத்துப்பாட்டினுள், 10-வது பாட்டு, தன்பாலுள்ள பொருட்சிறப்பெய்திய [அடி 348.] மலைபடுகடாம் என்னும் தொடர்மொழியைத் தன்பெயராகக்கொண்டு வழங்கப்பட்டு வருவதுபோல இந்நூலிலுள்ள பாடல்களெல்லாம் தம்மிடத்தில், முன்னுவது பின்னுவது ஈரிடத்துமாவதுள்ள அடைமொழிச் சிறப்பாதல் பொருட்பொலிவாதல் பெற்ற தொடர்மொழிகளையே தம்பெயர்களாகக் கொண்டு பண்டைக்காலந் தொடங்கி வழங்கப்பெற்று வருகின்றன. இங்கே கூறிய தொடர்மொழிகள் அவ்வச் செய்யுட்களில் தடித்த எழுத்தாலறியப்படும்.

தமிழ்நாட்டின் பண்டைக்கால நிலைமையும், சில சேரர்கள் சில குறுநில மன்னர்களுடைய வரலாறுகளும், அவர்களுடைய அரசாட்சி, வீரம், கொடை, அவர்கள் புலவர்களை ஆதரித்துவந்த அருமை முதலியனவும், பிறவும் இந்நூலால் அறியலாகும். இதற்குப் பழைய உரையொன்றுண்டு. இதன் கடவுள்வாழ்த்தும் முதற்பத்தும் பத்தாம்பத்தும் அவற்றின் உரைகளும் கிடைக்கவில்லை. மற்ற விவரங்களை இந்நூல் முழுப்புத்தகத்தால் அறிந்துகொள்க.

பதிற்றுப்பத்து.

இரண்டாம்பத்து.

இப்பத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியது.

அகவற்பா.

(11). வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூல்
நளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
அணங்குடை யவுண ரேமம் புணர்க்கும்
சூருடை முழுமுத றடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்குச்
செவ்வா யெஃகம் விலங்குந ரறுப்ப
அருநிறந் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற விருங்கழி நீர்நிறம் பெயர்ந்து
மனாலக் கலவை போல வரண்கொன்று
முரண்மிகு சிறப்பி னுயர்ந்த வூக்கலை;
பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுத றுமிய வேஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவி னார மார்பிற்
போரடு தானைச் சேர லாத!
மார்புமலி பைந்தா ரோடையொடு விளங்கும்
வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி யெருத்த மேல்கொண்டு பொலிந்தநின்
பலர்புகழ் செல்வ மினிதுகண் டிகுமே;
கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி

---

(11). 1. பிசிர்—திவலை.
5. சூர் உடை முழுமுதல்—சூரவன்மன் தனக்கு அரணாகவுடைய மாவின் அடியை. (திருமுருகு, 60 உரையைப்பார்க்க.)
6. வேள்—முருகக்கடவுள்.
10. மனாலம்—குங்குமம்.
11. ஊக்கலை—மேற்கோளையுடையாய்.
12. மொசிந்து—நெருங்கி, கடம்பு—சேரர்களின் பகைவருடைய காவன்மரம்.
13. ஏஎய்—ஏவி.
14. பணை—முரசு.
20. கண்டிகும்—கண்டேம்.
21. கவிர்—முருக்கமரம்.

பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே.

(12). வயவர் வீழ வாளரின் மயக்கி
இடங்கவர் கடும்பி னரசு தலைபனிப்பக்
கடம்புமுத றடிந்த கடுஞ்சின வேந்தே!
தாரணி யெருத்தின் வாரல் வள்ளுகிர்
அரிமான் வழங்குஞ் சாரற் பிறமான்
தோடுகொ ளினநிரை நெஞ்சதிர்ந் தாங்கு
முரசுமுழங்கு நெடுநக ராசுதுயி லீயாது
மாதிரம் பனிக்கு மறம்வீங்கு பல்புகழ்
கேட்டற் கினிதுநின் செல்வங் கேட்டொறும்
காண்டல் விருப்பொடு கமழுங் குளவி
வாடாப் பைம்மயி ரிளைய வாடுநடை
அண்ணன் மழகளி றரிஞிமி றோப்பும்
கன்றுபுணர் பிடிய குன்றுபல நீந்தி
வந்தவ ணிறுத்த விரும்பே ரொக்கல்
தொல்பசி யுழந்த பழங்கண் வீழ
எஃகுபோழ்ந் தறுத்த வானிணக் கொழுங்குறை
மையூன் பெய்த வெண்ணெல் வெண்சோறு
நனையமை கள்ளின் றேறலொடு மாந்தி
நீர்ப்படு பருந்தி னிருஞ்சிற கன்ன
நிலந்தின் சிதாஅர் களைந்த பின்றை
நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ
வணரிருங் கதுப்பின் வாங்கமை மென்றோள்

---

22. நரந்தம்—நரந்தப்புல். கனவும்—கனுக்காணும்.
23. ஆரியர் — ஒருவகையரசர்; முனிவருமாம்.
25. கடந்து (14) பணைசெய்தவென்க.

(12). 1. வாள்அரில்—வாளின் பிணக்கத்தையுடைய போர்.
2. கடும்பு—சுற்றம்.
4. தார்—சிங்கத்தின் பிடரிமயிர். வாரல்—நீளுதல்.
6. தோடு—கூட்டம்.
7. துயிலீயாது—தூங்காமல்.
10. குளவி — மலைமல்லிகை. குளவியால் (12) ஒப்பும்.
14. ஒக்கல்—சுற்றம்.
16. எஃகு—வாள்.
18. நனை அமை கள்—பூவாற் சமைத்த கள்.
20. சிதாஅர்—கந்தைத்துணி.
21. நூலா கலிங்கம்—பட்டாடை.

வசையின் மகளிர் வயங்கிழை யணிய
அமர்புமெய் யார்த்த சுற்றமொடு
நுகர்தற் கினிதுநின் பெருங்கலி மகிழ்வே.

(13). தொறுத்தவய லாரல்பிறழ்நவும்
ஏறுபொருதசெறு வுழாதுவித்துநவும்
கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்க ணெருமையி னிரைதடுக் குநவும்
கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்
வளைதலை மூதா வாம்ப லார்நவும்
ஒலிதெங்கி னிமிழ்மருதிற்
புனல்வாயிற் பூம்பொய்கைப்
பாடல் சான்ற பயங்கெழு வைப்பின்
நாடு கவினழிய நாமந் தோற்றிக்
கூற்றடூஉ நின்ற யாக்கை போல
நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்,
விரிபூங் கரும்பின் கழனி புல்லெனத்
திரிகாய் விடத்தரொடு காருடை போகிக்
கவைத்தலைப் பேய்மகள் கழுதூர்ந் தியங்க
ஊரிய நெரிஞ்சி நீறுடு பறந்தலைத்
தாதெரு மறுத்த கலியழி மன்றத்
துள்ள மழிய வூக்குநர் மிடறபுத்
துள்ளுநர் பனிக்கும் பாழா யினவே;
காடே, கடவுண் மேன; புறவே,
ஒள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன;
ஆறே, அவ்வனைத் தன்றியு ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்
குடிபுறந் தருநர் பார மோம்பி
அழல்சென்ற மருங்கின் வெள்ளி யோடாது
மழைவேண்டு புலத்து மாரி நிற்ப

---

24. அமர்பு—விரும்பி.
25. கலி—ஆரவாரம்.
(13). 1. தொறுத்த—பசுக்கிடைவைத்த.
பிறழ்ந—பிறழுமிடங்கள்.
5. துணங்கை—ஒருவகைக்கூத்து.
6. மூதா—முதியபசுக்கள்.
12. பாக்கம் — பகையரசரிருப்பிடங்கள்.
14. விடத்தர் — விடத்தேரை மரம்.
உடை—உடைமரம்.
18. ஊக்குநர்—மேற்கொண்டவர்.
20. மேன = மேவின — பொருந்தின; [முற்று.
25. வெள்ளி—சுக்கிரன்.

நோயொடு பசியிகந் தொரீஇப்
பூத்தன்று, பெருமநீ காத்த நாடே.

(14). நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரியையே;
நாள்கோ டிங்கண் ஞாயிறு கனையழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை;
போர்தலை மிகுத்த வீரைம் பதின்மரொடு
துப்புத்துறை போகிய துணிவுடை யாண்மை
அக்குர னனைய கைவண் மையையே;
அமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர்பீ டழித்த செருப்புகன் முன்ப!
கூற்றுவெகுண்டு வரினு மாற்றுமாற் றலையே;
எழுமுடி கெழீஇய திருஞெமி ரகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை!
வானுறை மகளிர் நலனிகல் கொள்ளும்
வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பின்
ஒடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ!
பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்
படையே ருழவ! பாடினி வேந்தே!
இலங்குமணி மிடைந்த பொலங்கலத் திகிரிக்
கடலக வரைப்பினிப் பொழின்முழு தாண்டநின்
முன்றிணை முதல்வர் போல நின்றுநீ
கெடாஅ நல்லிசை நிலைஇத்
தவாஅலிய ரோவிவ் வுலகமோ டுடனே.

(15). யாண்டுதலைப் பெயர வேண்டுபுலத் திறுத்து
முனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்றமொடு

---

28. பூத்தன்று—பொலிவுபெற்றது.

(14). 3. கோளென்றது, செவ்வாய் முதலிய ஐவரை.

7. அக்குரன்—இடையெழு வள்ளல்களில் ஒருவன்.

9. முன்பு—வலி.

11. எழுமுடி—பகைவரெழுவருடைய முடிகளாற் செய்யப்பட்ட ஆரம்; (சிலப். 28. 169). ஞெமிர்தல்—பரத்தல்; ஞெமர்தலெனவும் வழங்கும்.

12. சான்றோர் — அமைதியையுடைய வீரர். மெய்ம்மறை—கவசம்.

17. பாடினி—பாடுபவள்.

20. முன்றிணை முதல்வர்-குலமுதல்வர்.

22. தவாஅலியர்—கெடா திருப்பாயாக.

(15). 1. யாண்டுதலைப் பெயர—வருடங்கள் கழிய.

2. 'முனை யெரிபரப்பிய' என்றது எரிபரந் தெடுத்தலென்னுந் துறையை.

மழைதவழ்பு தலைஇய மதின்மா முருக்கி
நிரைகளி றொழுகிய நிரைய வெள்ளம்
பரந்தாடு கழங்கழி மன்மருங் கறுப்பக்
கொடிவிடு குரூஉப்புகை பிசிரக் கால்பொர
அழல்கவர் மருங்கி னுருவறக் கெடுத்துத்
தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பின்
வெண்பூ வேளையொடு பைஞ்சுரை கலித்துப்
பீரிவர்பு பரந்த நீரறு நிறைமுதற்
சிவந்த காந்தண் முதல்சிதை மூதிற்
புலவுவில் லுழவிற் புல்லாள் வழங்கும்
புல்லிலை வைப்பிற் புலஞ்சிதை யரம்பின்
அறியா மையான் மறந்துதுப் பெதிர்ந்தநின்
பகைவர் நாடுங் கண்டுவந் திசினே;
கடலவுங் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழவிமிழ் மூதூர்க்
கொடிநிழற் பட்ட பொன்னுடை நியமத்துச்
சீர்பெறு கலிமகி ழியம்பு முரசின்
வயவர் வேந்தே! பரிசிலர் வெறுக்கை!
தாரணிந் தெழிலிய தொடிசிதை மருப்பிற்
போர்வல் யானைச் சேர லாத!
நீவா ழியரிவ் வுலகத் தோர்க்கென
உண்டுரை மாறிய மழலை நாவின்

---

3. மதின்மரம் — கோட்டைவாயிற் கதவுக்கு வலியாக இட்ட கணை யமரங்கள்.

4. நிரைய வெள்ளம்—நரக பாலரைப் போலப் பகைவரை வருத்தும் மிக்க சேனை.

5. கழங்கு அழி மன் மருங்கு—அளவு கடந்த அரசபரம்பரை; கழங்கு-கழற்காய்; கழற்காயா லெண்ணுதல் மலைநாட்டு வழக்கம்.

6. பிசிர—சிறிது சிறிதாகச் சிதர.

7. கெடுத்து—கெடுக்க.

9. கலித்து—செழித்து.

10. பீர்—பீர்க்கு.

11. காந்தள் முதல்—காந்தட் கிழங்கு.

12. புல் ஆள் — புல்லிய தொழிலையுடைய ஆறலை கள்வர்.

13. இலைவைப்பு—இலைகளாலே வேய்ந்த குடில்களையுடைய ஊர். அரம்பு—தீய செயல்.

15. வந்திசின் — வந்தேன்; இசின்—அசை.

18. அறுபு—நீங்குதல்.

19. நியமம்—கடைத்தெரு.

22. எழிலிய—அழகுபெற்ற.

24. உலகத்தோர்க்கு — உலகத்தோருடைய நன்மையின்பொருட்டு.

மென்சொற் கலப்பையர் திருந்துதொடை வாழ்த்த
வெய்துற வறியாது நந்திய வாழ்க்கைச்
செய்த மேவ லமர்ந்த சுற்றமோ
டொன்றுமொழிந் தடங்கிய கொள்கை யென்றும்
பதிபிழைப் பறியாது துய்த்த லெய்தி
நிரைய மொரீஇய வேட்கைப் புரையோர்
மேயின ருறையும் பலர்புகழ் பண்பின்
நீபுறந் தருதலி னோயிகந் தொரீஇய
யாணர் நன்னாடுங் கண்டுமதி மருண்டனென்;
மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க் கெஞ்சா
தீத்துக்கை தண்டாக் கைகடுந் துப்பிற்
புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி
ஏம மாகிய சீர்கெழு விழவின்
நெடியோ னன்ன நல்லிசை
ஒடியா மைந்தநின் பண்புபல நயந்தே.

(17). புரைவது நினைப்பிற் புரைவதோ வின்றே;
பெரிய தப்புந ராயினும் பகைவர்
பணிந்து திறைபகரக் கொள்ளுநை யாதலின்,
துளங்கு பிசிருடைய மாக்கட னீக்கிக்
கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை
ஆடுநர் பெயர்ந்துவந் தரும்பலி தூஉய்க்
கடிப்புக் கண்ணுறாஉந் தொடித்தோ ளியவர்
அரணங் காணாது மாதிரந் துழைஇய
நனந்தலைப் பஞ்ஞிலம் வருகவிந் நிழலென
ஞாயிறு புகன்ற தீதுதீர் சிறப்பின்
அமிழ்துதிகழ் கருவிய கணமழை தலைஇக்
கடுங்கால் கொட்கு நன்பெரும் பரப்பின்
விசும்புதோய் வெண்குடை நுவலும்
பசும்பூண் மார்ப! பாடினி வேந்தே.

---

26. கலப்பையர் — வாத்தியப்பைகளை யுடையோர்.
36. கைதண்டா — கையோயாத.
37. புரை—கோயில்.
39. நெடியோன்—திருமால்.

(17). 5. வலம்—வெற்றி.
7. கடிப்பு—குறுந்தடி.
9. பஞ்ஞிலம்—மக்கட் கூட்டம்.
11. அமிழ்து—நீர். கருவி—தொகுதி; மின்னல் முதலியவை.

(20). நுங்கோ யாரென வினவி னெங்கோ,
இருமுந்நீர்த் துருத்தியுண்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்புமுத றடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேர லாதன்; வாழ்கவன் கண்ணி;
வாய்ப்பறி யலனே; வெயிற்றுக ளனைத்து
மாற்றோர் தேஎத்து மாறிய வினையே,
கண்ணி னுவந்து நெஞ்சவிழ் பறியா
நண்ணார் தேஎத்தும் பொய்ப்பறி யலனே;
கனவினும், ஒன்னார் தேய வோங்கி நடந்து
படியோர்த் தேய்த்து வடிமணி யிரட்டும்
கடாஅ யானைக் கணநிரை யலற
வியலிரும் பரப்பின் மாநிலங் கடந்து
புலவ ரேத்த வோங்குபுகழ் நிறீஇ
விரியுளை மாவுங் களிறுந் தேரும்
வயிரியர் கண்ணுளர்க் கோம்பாது வீசிக்
கடிமிளைக் குண்டுகிடங்கின்
நெடுமதி னிலைஞாயில்
அம்புடை யாரெயி லுள்ளழித் துண்ட
அடாஅ வடுபுகை யட்டுமலர் மார்பன்,
எமர்க்கும் பிறர்க்கும் யாவ ராயினும்
பரிசின் மாக்கள் வல்லா ராயினும்
கொடைக்கட னமர்ந்த கோடா நெஞ்சினன்,
மன்னுயி ரழிய யாண்டுபல மாறித்
தண்ணிய லெழிலி தலையா தாயினும்
வயிறு பசிகூர வீயலன்;
வயிறு மாசிலீய ரவனீன்ற தாயே.

---

(20). 2. துருத்தி—தீவு.
3. தலைச்சென்று—முடிவிலே சென்று; முடித்து.
5. வாழ்க அவன் கண்ணியென்க; கண்ணி—மாலை; கண்ணிவாழ்க வென்றல் மரபு.
6. வெயில் துகள்—வெயிலிற் காணப்படும் அணு.
8. நெஞ்சு அவிழ்பு—மன மிளகி.
11. படியோர்—வணங்காதவர். இரட்டும்—மாறியொலிக்கும்.
16. வயிரியர்—பாடுபவர். கண்ணுளர்—கூத்தர்.
20. அடாஅ அடுபுகை — ஊர் சுடு புகை.
22. வல்லார் — வல்லமையில்லாதவர்.
27. வயிறு மாசிலீயர்—வயிறு விளங்குவாளாக.

மூன்றாம்பத்து.

இப்பத்து, இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்புகழ்க் குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடியது.

(21). சொற்பெயர் நாட்டங் கேள்வி நெஞ்சமென்
றைந்துடன் போற்றி யவைதுணை யாக
எவ்வஞ் சூழாது விளங்கிய கொள்கைக்
காலை யன்ன சீர்சால் வாய்மொழி
உருகெழு மரபிற் கடவுட் பேணியர்
கொண்ட தீயின் சுடரெழு தோறும்
விரும்புமெய் பரந்த பெரும்பெய ராவுதி
வருநர் வரையார் வார வேண்டி
விருந்து கண்மாறா துணீஇய பாசவர்
ஊனத் தழித்த வானிணக் கொழுங்குறை
குய்யிடு தோறு மானா தார்ப்பக்
கடலொலி கொண்டு செழுநகர் நடுவண்
அடுமை யெழுந்த வடுநேய் யாவுதி
இரண்டுடன் கமழு நாற்றமொடு வானத்து
நிலைபெறு கடவுளும் விழைதகப் பேணி
ஆர்வளம் பழுனிய வையந்தீர் சிறப்பின்
மாரியங் கள்ளின் போர்வல் யானைப்
போர்ப்புறு முரசங் கறங்க வார்ப்புச்சிறந்து
நன்கலந் தரூஉ மண்படு மார்ப!
முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்
மிதியற் செருப்பிற் பூழியர் கோவே!

---

(21). 1. சொல்—சொல்லிலக்கண நூல். பெயர்—பொருளிலக்கண நூல். நாட்டம்—சோதிட நூல். கேள்வி—வேதம்.
3. எவ்வம்—வருத்தம்.
4. காலை—சூரியன்.
5. பேணியர்—பேண.
8. வார—கைக்கொள்ள.
9. உணீஇய—உண்ண. பாசவர்—ஆட்டுவாணிகர்.
10. ஊனம் — இறைச்சி கொத்தும் குறடு.
13. அடு மை—அடுத்த மேகம்.
23. செருப்பு—ஒருமலை. பூழி—ஒரு நாடு.

குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை!
பல்பயந் தழீஇய பயங்கெழு நெடுங்கோட்டு
நீரறன் மருங்கு வழிப்படாப் பாகுடிப்
பார்வற் கொக்கின் பரிவேட் பஞ்சாச்
சீருடைத் தேஎத்த முனைகெட விலங்கிய
நேருயர் நெடுவரை அயிரைப் பொருந!
யாண்டுபிழைப் பறியாது பயமழை சுரந்து
நோயின் மாந்தர்க் கூழி யாக
மண்ணா வாயின் மணங்கமழ் கொண்டு
கார்மலர் கமழுந் தாழிருங் கூந்தல்
ஒரீஇயின போல விரவுமலர் நின்று
திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்கண்
அலங்கிய காந்த ளிலங்குநீ ரழுவத்து
வேயுறழ் பணைத்தோ ளிவளோ
டாயிர வெள்ளம் வாழிய, பலவே.

(23) அலந்தலை யுன்னத் தங்கவடு பொருந்திச்
சிதடி கரையப் பெருவறங் கூர்ந்து
நிலம்பை தற்ற புலங்கெடு காலையும்
வாங்குபு தகைத்த கலப்பைய ராங்கண்
மன்றம் போந்து மறுகுசிறை பாடும்
வயிரிய மாக்கள் கடும்பசி நீங்கப்
பொன்செய் புனையிழை யொலிப்பப் பெரிதுவந்து
நெஞ்சுமலி யுவகைய ருண்டுமலிந் தாடச்
சிறுமகி ழானும் பெருங்கலம் வீசும்
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!
நின்னயந்து வருவேங் கண்டனம், புன்மிக்கு
வழங்குந ரற்றென மருங்குகெடத் தூர்ந்து
பெருங்கவி னழிந்த வாற்ற வேறுபுணர்ந்

24. மழவர்—ஒருவகை வீரர்.
26. பாகுடி—கூட்டம்.
27. பார்வல்—பார்த்தல். பரிவேட்பு—வட்டமிடுதல்.
29. அயிரை—ஒருமலை.
31. ஊழி—வாழ்நாள்.
36. நீரழுவம்—ஆறு.

(23). 1. அலந்தலை = அலந்த தலை—உலர்ந்த தலை. உன்னம்—ஒருவகை மரம்.
2. சிதடி—ஒருவகை வண்டு.
3. பைது அற்ற—பசுமையற்ற.
5. மறுகுசிறை — வீதியின் இருபக்கம்.

தண்ணன் மரையா வமர்ந்தினி துறையும்
விண்ணுயர் வைப்பின காடா யினநின்
மைந்துமலி பெரும்புக ழறியார் மலைந்த
போரெதிர் வேந்தர் தாரழிந் தொராலின்
மருதிமிழ்ந் தோங்கிய நளியிரும் பரப்பின்
மணன்மலி பெருந்துறைத் ததைந்த காஞ்சியொடு
முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புற ழடைகரை
நந்து நாரையொடு செவ்வரி யுகளுங்
கழனி வாயிற் பழனப் படப்பை
யழன்மருள் பூவின் றாமரை வளைமகள்
குறாஅது மலர்ந்த வாம்ப
லறாஅ யாணர வகன்றலை நாடே.

(24) நெடுவயி னொளிறு மின்னுப் பரந்தாங்குப்
புலியுறை கழித்த புலவுவா யெஃகம்
ஏவ லாடவர் வலனுயர்த் தேந்தி
ஆரரண் கடந்த தாரருந் தகைப்பிற்
பீடுகொண் மாலைப் பெரும்படைத் தலைவ!
ஓதல் வேட்ட லவைபிறர்ச் செய்தல்
ஈத லேற்றலென் றாறுபுரிந் தொழுகும்
அறம்புரி யந்தணர் வழிமொழிந் தொழுகி
ஞால நின்வழி யொழுகப் பாடல்சான்று
நாடுடன் விளங்கு நாடா நல்லிசைத்
திருந்திய வியன்மொழித் திருந்திழை கணவ!
குலையிழி பறியாச் சாபத்து வயவர்
அம்புகளை வறியாத் தூங்குதுளங் கிருக்கை
இடாஅ வேணி யியலறைக் குருசில்!
நீர்நிலந் தீவளி விசும்போ டைந்தும்
அளந்து கடையறியினு மளப்பருங் குரையைநின்

---

14. மரையா—ஒருவகை மிருகம்.
16. மைந்து—வலி.
17. தார் — முன்படை. ஓராலின்— நீங்குதலால்.
19. ததைந்த—சிதைந்த.
21. செவ்வரி—செவ்வரி நாரை.
23. மருள்—உவமவுருபு.
24. குறாஅது—பறியாமையால்.

(24). 2. புலியுறை—புலித்தோலாற்செய் [தகூடு.
4. தகைப்பு—படைவகுப்பு.
5. மாலை—இயல்பு.
6. செய்தல்—செய்வித்தல்.
12. குலை—வில்லின் குதை.
13. களைவு—களைதல்.
14. இடா ஏணி — அளவிடப்படாத எல்லை. அறை—பாசறை.

வளம்வீங்கு பெருக்க மினிதுகண் டிகுமே,
உண்மருந் தின்மரும் வரைகோ ளறியாது
குரைத்தொடி மழுகிய வுலக்கை வயின்றோ
றடைச்சேம் பெழுந்த வாடுறு மடாவின்
எஃகுறச் சிவந்த வூனத் தியாவரும்
கண்டு மதிமருளும் வாடாச் சொன்றி
வயங்குகதிர் விரிந்து வானகஞ் சுடர்வர
வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி
பயங்கெழு பொழுதோ டாநிய நிற்பக்
கலுழுங் கருவியொடு கையுற வணங்கி
மன்னுயிர் புரைஇய வலனேர் பிரங்குங்
கொண்டற் றண்டளிக் கமஞ்சூன் மாமழை
காரெதிர் பருவ மறப்பினும்
பேரா யாணர்த்தால்; வாழ்கநின் வளனே.

---

17. கண்டிகும்—கண்டேம்.
18. உண்மர் — உண்போர். வரை கோள்—அளவுகொள்ளுதல்.
19. தொடி—பூண்.
20. மடா—ஒருவகைப் பாண்டம்.
24. வறிது—சிறிது.
25. ஆநியம்—நாள்.
26. வணங்கி—தாழ்ந்து.
27. புரைஇய—உயரவேண்டி.
30. யாணர்த்து — புது வருவாயை யுடையது.

கலித்தொகை.

எட்டுத் தொகையுள் ஒன்றாகிய இந்நூல் கலிப்பாட்டால் தொகுத்திருத்தலின் இப்பெயர் பெற்றது. அகப்பொருளைந்திணையும் விளக்கும் இந்நூலிலுள்ள கலிப்பாக்கள், கடவுள் வாழ்த்து, பாலை—35, குறிஞ்சி—29, மருதம்—35, முல்லை—17, நெய்தல்—33 ஆக 150.

மற்றத் தொகைநூல்களிற்போல் அவ்வப் பாவின்கீழ் அவ்வதனை இயற்றிய ஆசிரியர் பெயர் இதில் குறித்திலாமையால், இந்நூலை இயற்றினார் பலரோ ஒருவரோ என்பது ஐயநிகழ்ச்சிக்கு இடமாக இருக்கின்றது. கடவுள் வாழ்த்தின் உரையில் "ஈண்டுப் பாலைத்திணையும் திணையாக ஆசிரியர் நல்லந்துவனார் கோத்தார்" என்றும், "பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தலெனவும் கோத்தார்" என்றும், நெய்தற்கலி 25—வது பாவின் உரையில் "சொல்லெச்சமும் குறிப்பெச்சமுமாகத் தம்பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட் செய்தார்" என்றும் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலால், இந்நூலை இயற்றினவரும் தொகுத்தவரும் நல்லந்துவனாரே என்பது பெறப்படும்.

பல நீதிகளை உவமைகளாக அமைத்திருப்பதும், இறைச்சிப்பொருள் தோன்ற உரைப்பதும், உள்ளுறையுவமங் கொள்ளக்கிடப்பதும், சில நுட்பங்கள் குறிப்பெச்சமாகப் புலப்படுவதும், இந்நூலில் பெரும்பான்மையான பொருட்பொலிவு. நல்ல இலக்கணப் பிரயோகங்கள் அமைந்திருப்பது இந்நூலிற் கண்ட சொற்பொலிவு. நூலுக்கு அழகென்பவையெல்லாம் இதில் முற்றும் உண்டு.

கலித்தொகை.

பாலை

8. நடுவிகந் தொரீஇ நயனில்லான்[1] வினைவாங்கக்
கொடிதோர்த்த[2] மன்னவன் கோல்போல[3], ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலின்[4],
உறலூறு கமழ்கடாத் தொல்கிய[5] எழில்வேழம்
வற[6]னுழு நாஞ்சில்[7]போல் மருப்பூன்றி நிலஞ்சேர,
விறன்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்[8]
சொல்லா திறப்பத் துணிந்தனிர்க் கொருபொருள்
சொல்லுவ துடையேன்: கேண்மின்மற் றைஇய!

வீழுநர்க்[9] கிறைச்சி[10]யாய் விரல்கவர்[11] பிசைக்குங்கோல்
ஏழுந்தம் பயன்கெட இடைநின்ற நரம்பறூஉம்
யாழினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ?

மரீஇத்தாம் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது
பிரியுங்கால் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாறும்
திரு[12]வினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ?

புரைதவப் பயனோக்கார் தம்மாக்க முயல்வாரை
வரைவின்றிச் செறும்பொழுதிற் கண்ணோடா துயிர்வௌவும்
அரைசினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ?

எனவாங்கு

நச்சல் கூடாது பெரும! இச்செல
வொழிதல் வேண்டுவல்[13] சூழிற் பழியின்று.
மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித்
தன்னகர் விழையக் கூடின்
இன்னுறல் வியன்மார்ப! அதுமனும் பொருளே.

இது, சொல்லாது பிரியலுற்ற தலைவன் குறிப்பறிந்து, தோழி, பொருளது நிலையாமைகூறி, அவளோடு கூடிச் செல்கின்ற இல்வாழ்க்கைச் செலவே பொருளென அவன் செலவழுங்கக் கூறியது.

---

1 அருளில்லாத அமைச்சன்.
2 சூழ்ந்த.
3 கொடுங்கோல் சுடுமாறுபோல.
4 சுடுகையினால்.
5 கெட்ட.
6 ஈரமற்ற நிலம்.
7 கலப்பை.
8 காடு.
9 விரும்புவார்.
10 நேயம்.
11 விரலாலே வாசிக்கப்பட்டு.
12 திருமகள்.
13 விரும்புகின்றேன்.

9. "எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரக[1]மும் உரைசான்ற முக்கோலும்[2]
நெறிப்படச் சுவலசைஇ[3] வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளை[4]நடை அந்தணீர்!
வெவ்விடைச்[5] செலன்மாலை[6] ஒழுக்கத்தீர்! இவ்விடை
என்மக ளொருத்தியும் பிறள்மக னொருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ? பெரும!"
"காணே மல்லேம், கண்டனம் கடத்திடை.
ஆணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவரல் தாயிர்நீர் போறிர்.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்[7] கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே:

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே:

ஏழ்[8]புணர் இன்னிசை முரல்பவர்க்[9] கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே:

எனவாங்கு
இறந்த கற்பினாட்[10] கெவ்வம் படரன்மின்[11].
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்;
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே."[12]

இஃது, உடன்போய தலைவிபின் சென்ற செவிலி, இடைச்சுரத்து முக்கோற் பகவரைக் கண்டு, "இவ்வகைப்பட்டாரை ஆண்டுக் காணீரோ?" என வினவியாட்கு, "அவரைக் கண்டு அஃதறமெனவே கருதிப் போந்தேம்; நீரும் அவர் திறத்து எவ்வம்பட வேண்டா" என எடுத்துக்காட்டி, அவர் தெருட்டியது.

[1] கமண்டலம்.
[2] திரிதண்டம். அரி அயன் அரனென்னும் மூவரும் ஒருவரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக்கோல்.
[3] தோளிலே வைத்து.
[4] ஐம்பொறியும் தமக்கு ஏவல்செய்தலை இயல்பாகவுடைய கோட்பாடு.
[5] வெவ்விய காட்டிடம்.
[6] போதலை இயல்பாக உடைய.
[7] மெய்ப்படுப்பார்.
[8] ஏழுநரம்பு.
[9] பாடுவார்.
[10] மிக்க கற்பினையுடையாள்.
[11] வருத்தமுறுதே கொள்ளுமின்.
[12] மறுமையில் இவ்விருவரும் நீங்காமல் சுவர்க்கத்திலே செல்லும் வழியும் அவ்வழிபாடே.

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன்[1] மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
ஐவரென் றுலகேத்தும் அரசர்கள் அகத்தராக்
கைபுனை[2] அரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக்,
களிதிகழ் கடாஅத்த கடுங்களி றகத்தவா
முளிகழை[3] யுயர்மலை முற்றிய[4] முழங்கழல்[5],
ஒள்ளுரு வரக்கில்லை வளிமகன்[6] உடைத்துத்தன்
உள்ளத்துக் கிளைகளோ டுய்ப்போகு வான்[7]போல,
எழுவுறழ் தடக்கையின் இனங்காக்கும் எழில்வேழம்
அழுவஞ்[8]சூழ் புகையழல் அதர்பட[9] மிதித்துத்தம்
குழுவொடு புணர்ந்துபோம் குன்றழல் வெஞ்சுரம்
இறத்திரால் ஐய! மற் றிவணிலைமை கேட்டீமின்.

மணக்குங்கால் மலரன்ன தகையவாய்ச் சிறிதுநீ
தணக்குங்கால் கலுழ்பானாக்[10] கண்ணெனவும் உளவன்றோ?
சிறப்புச்செய் துழையராப் புகழ்பெற்றி மற்றவர்
புறக்கொடை[11]யே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்.

ஈங்குநீர் அளிக்குங்கால் இறைசிறந் தொருநாணீர்
நீங்குங்கால் நெகிழ்போகும்[12] வளையெனவும் உளவன்றோ?
செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவர்
ஒல்கிடத் துலப்பிலா உணர்விலார் தொடர்புபோல்.

ஒருநாணீர் அளிக்குங்கால் ஒளிசிறந் தொருநாணீர்
பாராட்டாக் காற்பசக்கும் நுதலெனவு முளவன்றோ?
பொருந்திய கேண்மையின் மறை[13]யுணர்ந் தம்மறை
பிரிந்தக்கால் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல்.

---

[1] வயக்குறு...முகத்தவன் = வடமொழிப் பெயர்பெற்ற வயக்குறு மண்டிலம் போலும் முகத்தவன். ஆதித்தரில் பகனென்னும் வடமொழிப் பெயரைப் பெற்ற விளங்குதலுறும் ஆதித்தனைப்போலும் முகத்தையுடையவன். அவன் தான் குருடாயினமையின் பிறரைக் காணாதவாறுபோல, இவனும் பிறரைக் காணாத முகத்தை யுடையவன். திருதராஷ்டிரன். இனி, விளக்கமுற்ற கண்ணாடியின் பெயரை வடசொல்லாகிய பெயராற் பெற்ற முகத்தவன் என்றலுமாம். அது பிறரைத் தான் காணாதவாறுபோல இவனும் பிறரைக் காணான் என்றதாம்.

[2] கையால் புனையப்பட்ட.

[3] உலர்ந்த மூங்கில்.

[4] சூழ்ந்த.

[5] முழங்குகின்ற தீ.

[6] வாயுகுமாரன்—வீமசேனன்.

[7] பிழைக்கப்போகின்றவன்,

[8] காட்டுப்பரப்பு.

[9] அதர்படும்படி—வழியுண்டாகும்படி.

[10] அழுதலமையாத.

[11] எழுந்த அளவில்.

[12] கழன்றுபோம்.

[13] இரகசியம்.

எனவாங்கு

யாநிற் கூறுவ தெவனுண் டெம்மினும்
நீநற் கறிந்தனை நெடுந்தகை! வானம்
துளிமாறு பொழுதினிவ் வுலகம் போலுநின்
அளிமாறு பொழுதினிவ் ஆயிழை கவினே.

இது, பிரிவுணர்த்தப்பட்ட தோழி, 'நீ பிரிந்தால் பீடிலார் தொடர்பு போல நம்மை அவர் தூற்றுவன இவ்வகைப்பட்டன சிலவுள' எனத் தலைவி ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்தது.

அரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்கு, மலைமுற்றிய முழங்கழலை, இனங்காக்கும் வேழமானது, அரக்கில்லை உடைத்து வளிமகன் கிளைகளோடே போவான் போல, அதர்பட மிதித்துக் குழுவொடு புணர்ந்துபோம் சுரம் என்று முடிந்தது.

கேட்டிமின் (கேண்மின்)—கேட்பீராக.

இறத்திரால் — (இதில் ஆல் என்பது ஆயில் என்பதன் விகாரம்.)—இறத்திராயின்—கடந்து செல்வீராயின்.

குறிஞ்சி

38. "இமயவில் வாங்கிய[1] ஈர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை[2] இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிபொலி தடக்கையின் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன்[3] போல,
உறுபுலி உருவேய்ப்ப[4]ப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதல்[5] குத்திய மதயானை
நீடிரு விடாகம் சிலம்ப[6]க் கூய்[7]த்தன்
கோடுபுய்க் கல்லா[8] துழக்கு நாட!கேள்.

ஆரிடை யென்னுய்[9]நீ அரவஞ்சாய் வந்தக்கால்,
நீரற்ற புலமேபோல் புல்லென்றாள், வைகறை
கார்பெற்ற புலமேபோல் கவின்பெறும். அக்கவின்
தீராமற் காப்பதோர் திறனுண்டேல் உரைத்தைக்[10]காண்.

---

1 வளைத்த.
2 கயிலைமலை.
3 வருந்துகின்றவன்.
4 ஏய்ப்ப—ஒப்ப.
5 அடியிலே
6 ஒலிப்ப.
7 கூப்பிட்டு.
8 வாங்கமாட்டாதே.
9 என்று கருதாயாய்.
10 கூறிக்காண்.

இருளிடை யென்னுய்நீ இரவஞ்சாய் வந்தக்கால்,
பொருளில்லான் இளமைபோல் புல்லென்ருள், வைகறை
அருள்வல்லான் ஆக்கம்[1]போல் அணிபெறும். அவ்வணி
தெருளாமற் காப்ப[2]தோர் திறனுண்டேல் உரைத்தைக்காண்.

மறந்திருந்தா[3] ரென்னுய்நீ மலையிடை வந்தக்கால்,
அறஞ்சாரான் மூப்பேபோல் அழிதக்காள், வைகறை
திறஞ்சேர்ந்தான் ஆக்கம்போல் திருத்தகும்[4]. அத்திருப்
புறங்கூற்றுத்[5] தீர்ப்பதோர் பொருளுண்டேல் உரைத்தைக்
[காண்."

எனவாங்கு

நின்னுறு விழுமம்[6] கூறக் கேட்டு,
வருமே தோழி! நன்மலை நாடன்,
வேங்கை விரிவிட நோக்கி[7],
வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே.

இஃது, இரவுக்குறி வந்து நீங்கும் தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி, தலைவியது நிலைமை கூறி அவனை வரைவுகடாவ, அவன் வரையவருகின்றமை தோழி தலைவிக்கு வரைவு மலிந்து கூறியது.

தரவில் நச்சினர்க்கினியர் உள்ளுறையுவமம் அமைத்துக் காட்டுவதைப் பழையவுரையில் காணலாம். (பக்கம் 111, கலித்தொகையுரை—சி—வை—தாமோதரம்பிள்ளை அச்சிட்டது.)

'நாட! உரைத்தைக்காண்' என நின் விழுமங் கூறக்கேட்டு, 'தோழி! நன்மலை நாடன் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கு வேங்கை விரிவிட நோக்கி வருமே' என்று முடித்துக்கொள்ளலாம்.

41. பாடுகம்[8] வாவாழி தோழி! வயக்களிற்றுக்
கோடு[9]லக்கை யாகநற் சேம்பின் இலைசுளகா
ஆடுகழை நெல்[10]லை அறையுரலுள் பெய்திருவாம்[11]
பாடுகம் வாவாழி தோழிநற் ருேழிபா டுற்று.

---

1 அருளுதலை வல்லவனுக்கு உண்டாய ஆக்கம்.
2 அவ்வணி தெருளாமல் காப்பது = அங்ஙனம் பெற்ற அழகு பிறரான் வந்த அழகென்று புறஞ்சொல்லுதலைப் போக்குவது.
3 கொலைத்தொழிலில் குறைவின்றித் திருந்திய கானவர்.
4 அழகுபெறும்.
5 அங்ஙனம் பெற்ற அழகால் அயலவர் கூறத்தக்க புறங்கூற்று.
6 வருத்தம்.
7 வேங்கை அலர்கின்ற காலத்தைப் பார்த்து.
8 பாடுவோம்.
9 வலியினையுடைய யானைக்கொம்பு.
10 மூங்கிலினது நெல். அறையுரல்—பாறையாகிய உரல்.
11 இருவேமும்—நாம் இருவரும்.
இந்நான்குவரிகளில் இறைச்சிப்பொருட் புறத்தாய் நின்றவாறு நச்சினர்க்கினியர் விளக்கியிருக்கின்றனர்.

இடியுமிழ்[1] பிரங்கிய[2] விரவுப்பெயல்[3] நடுநாள்
கொடிவிடு[4] பிருளிய மின்னுச்செய் விளக்கத்துப்
பிடியொடு மேயும் செய்புன் யானை
அடியொதுங் கியக்கங் கேட்ட கானவன்
நெடுவரை ஆசினிப்[5] பணவை[6] யேறிக்
கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலின்,
இறுவரை வேங்கையின் ஒள்வீ[7] சிதறி,
ஆசினி மென்பழம் அழிந்தவை உதிராத்,
தேன்செய் இறாஅல்[8] துளைபடப் போகி,
நறுவடி மா[9]வின் பைந்துணர் உழக்கிக்,
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்,
பலவின் பழத்திற் றங்கு மலைகெழு வெற்பனைப்
பாடுகம் வாவாழி தோழிநற் றோழிபா டுற்று.

இலங்கு மருவித் திலங்கு மருவித்தே,
வானி[10] னிலங்கும் அருவித்தே, தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை:

பொய்த்தற் குரியனோ பொய்த்தற் குரியனோ
அஞ்சலோம் பென்றாரைப் பொய்த்தற்[11] குரியனோ?
குன்றகல் நன்னாடன் வாய்மையிற் பொய்தோன்றின்
திங்களுள் தீத்தோன்றி யற்று:

இளமழை யாடும்; இளமழை யாடும்;
இளமழை வைகலும் ஆடுமென் முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று:

---

1 உமிழ்பு—நெருப்பை உமிழ்ந்து.
2 ஒலிக்கும்.
3 விரவுப்பெயல்—எங்கும் கலந்த பெயல்.
4 ஒழுங்குவிட்டு. விளக்கத்து—ஒளியிலே. செய்புன்—புன்செய். புன்செய்யிலே மேயும் யானை.
5 ஆசினிப்பலா.
6 பரண்.
7 ஒள்ளிய பூக்கள்.
8 தேனினம் வைத்த இறால். இறால்—தேன்கூண்டு. போகி—ஊடுருவி.
9 நறிய வடுவை வயுடைய மா.
ஐந்தாவது வரியிலிருந்து இதுவரையில் நச்சினார்க்கினியர் உள்ளுறையுவமம் அமைத்துக் காட்டுகின்றனர்.
10 மழை பெய்தலால்.
11 நீ அஞ்சுதலைப் பரிகரியென்று தான் சொல்லப்பட்ட மகளிரைப் பாதுகாவாது விடுதற்கு.

வாரா தமைவானே, வாரா தமைவானே?
வாரா தமைகுவா னல்லன் மலைநாடன்.
ஈரத்துள் இன்னவை தோன்றின்[1] நிழற்கயத்துள்
நீருட் குவளைவெந் தற்று:

மணி[2]போலத் தோன்றும், மணிபோலத் தோன்றும்,
மண்ணா மணிபோலத் தோன்றும்;என் மேனியைத்
துன்னான் துறந்தான் மலை:

துறக்குவ னல்லன் துறக்குவ னல்லன்;
தொடர்வரை வெற்பன் துறக்குவ னல்லன்.
தொடர்புள்[3] இனையவை தோன்றின் விசும்பில்
சுடருள் இருள்தோன்றி யற்று.

எனவாங்கு

நன்றா கின்றால்; தோழிநம் வள்ளையுள்
ஒன்றிநாம் பாட மறைநின்று கேட்டருளி
மென்றோட் கிழவனும் வந்தனன். உந்தையும்
மன்றல் வேங்கைக் கீழிருந்து
மணநயந் தனன்நம் மலைகிழ வோற்கே.

இஃது, தலைவியும் தோழியும் இவ்வகையாற் பாடிய வள்ளைப்பாட்டுத் தலைவன் சிறப்புறமாகக் கேட்டு, வரைவு வேண்டிவிடத், தந்தையர் வரைவுடம்பட்டமை தோழி தலைவிக்கு உரைத்தது.

"நீருட் குவளை வெந்தற்று" என்றதும், "சுடருள் இருள் தோன்றியற்று" என்றதும், மருட்கையுவமம்.

65. திருந்திழாய்! கேளாய்நம் ஊர்க்கெல்லாஞ் சாலும்[4]:
பெருநகை அல்கல்[5] நிகழ்ந்த தொருநிலையே[6].
மன்பதை யெல்லாம் மடிந்த[7] இருங்கங்குல்
அந்துகிற் போர்வை அணிபெறத் தைஇ[8]நம்

---

[1] (அம்மலைநாடனுடைய) அருளிடத்தே இத்தன்மையவாகிய கொடியவை தோன்றுமாயின்.
[2] நீலமணி.
[3] (அவனோடு கொண்ட) உறவின் கண்ணே.
[4] கொண்டாடுதற்கு அமைந்திருக்கும்.
[5] இராக்காலத்தே.
[6] சேர.
[7] துயில்கொண்ட.
[8] உடுத்து.

இன்சாயல்[1] மார்பன் குறிநின்றேன்[2] யானகத்,
தீரத் தறைந்த[3] தலையுந்தன் கம்ப[4]லும்
காரக் குறைந்து கறைப்பட்டு[5] வந்துநம்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானைத்
தோழிநீ போற்றுதி[6] யென்றி[7]. அவனுங்கே
பாராக் குறழாப் பணியாப் பொழுதன்றி
யாரிவண் நின்றி யெனக்கூறிப் பையென,
வை[8]காண் முதுபகட்டின் பக்கத்திற் போகாது,
"தையால் தம்பலம்[9] தின்றியோ?" என்றுதன்
பைக்கழித்துக் கொண்டீ[10] யெனத்தரலும், யாதொன்றும்
வாய்வாளேன்[11] நிற்பக், கடிதகன்று கைமாறிக்[12],
"கைப்படுக்கப் பட்டாய் சிறுமிநீ; மற்றியான்
ஏனைப் பிசாசருள்[13]. என்னை நலிதரின்
இவ்வூர்ப் பலி[14]நீ பெறுமற்கொள் வே"னெனப்
பலவுந்[15] தாங்காது வாய்பாடி[16] நிற்ப,
முதுபார்ப்பான் அஞ்சின னாதல் அறிந்தியான்
எஞ்சா தொருவகை மணற்கொண்டு மேற்றூவக்,
கண்டே கடிதரற்றிப் பூசல்தொடங் கினனுங்கே.
ஒடுங்கா வயத்[17]திற் கொடுங்கேழ்க்[18] கடுங்கண்[19]
இரும்புலி கொண்மார்[20] நிறுத்த வலையுளோர்

---

1 மென்மையினிய மார்பையுடையவன் (சாயல்—மென்மை. "கண்ணகன்ற சாயல்" என நாலடியிலும், "பெண்மை நாண் வனப்புச்சாயல்" எனச் சீவக சிந்தாமணியிலும் வருவது காண்க. "சாயனமென்மை" என்ற உரியியல் சூத்திரத்தைச் "சாயன் மேன்மை" என்றும் கொள்கின்றனர். அதனல் கண்ணகன்ற சாயல் என்பதற்குச் சிறப்பு என்று பொருள் கொள்கின்றனர். நச்சினார்க்கினியர் "சாயன்மென்மை" என்று கொண்டவரே.)

2 குறியை உற்றுநின்றேன். குறி இங்கே இரவுக்குறி.

3 மயிர் நீங்குதலால் தட்டையான.

4 படாம்.

5 கருங்குட்டத்தாலே காலுங்கையுங் குறைந்து கடமைத்துறைப்பட்டு.

6 பேணுவாயாக.

7 என்று கூறுவை.

8 வைக்கோல்.

9 தாம்பூலம். ஓ—அசை.

10 எடுத்துக்கொள்.

11 வாய்திறந்து சொல்லேனாய்.

12 ஒழுக்கத்தைக் கைவிட்டு.

13 நின்னையொழிந்த ஆண்பாற் பசாசு: எனக்கு அருள்.

14 இவ்வூரில் நீ பெறும் பலி.

15 பல வார்த்தைகளும்.

16 வாயாற் சொல்லி.

17 (ஒன்றற்கும்) கெடாதவலி.

18 வளைந்த வரி.

19 தறுகண்மை.

20 கொள்ளுதற்கு.

ஏதில் குறுநரி[1] பட்டற்றால்; காதலன்
காட்சி யழுங்க[2], நம்மூர்க் கெலாஅம்,
ஆகுல[3] மாகி விளைந்ததை; என்றுந்தன்
வாழ்க்கை அதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து[4].

இஃது, இரவுக்குறி அலராமென் றஞ்சித் தலைவனை நீக்கி நிறுத்தக் கருதிய தோழி, அவன் செய்த குறிப்பறிதற்குப் புறத்துச் சென்றவழி, ஆண்டுப் பிறந்ததோர் செய்தியாக ஒரு பொய்யை நாடகவழக்கும் உலகி யல் வழக்குமாகப் புனைந்துரைவகையாற் படைத்துக்கொண்டு, பிற்றை ஞான்று தலைவன் சிறைப்புறமாகத் தலைவிக்குக் கூறியது.

ஆங்கே கடிதாற்றி நம்மூர்க்கெலாம் பூச ஞெருடங்கினன் என மாறுக.

காரக்குறைந்த அக்குச்சாரியை.

---

1 அதன் (புலியின்) தொழிற்கு வேறாகி யதோர் குறுநரி.

2 காதலர் நம்மைக் குறியிடத்து வந்து காணும் காட்சி கெடும்படியாக.

3 வருத்தம்.

4 விரும்புதலையுடைய பெரிய தண்ணிய நாடகம்.

புறநானூறு.

இந்நூல், (மேற்கூறிய) எட்டுத் தொகைகளில் எட்டாவது. இது கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலிய 400–அகவற்பாக்களையுடையது; அவற்றுள், கடவுள் வாழ்த்துப் பாரதம்பாடிய பெருந்தேவனாராலும், மற்றவை முரஞ்சியூர் முடிநாகராயர் முதற் கோவூர் கிழார் இறுதியாகவுள்ள புலவர் பலராலும் இயற்றப்பெற்றவை. இந்நூலைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னா ரின்னாரென்று தெரியவில்லை; இதன் பாக்களுடைய அடிகளின் சிறுமை பெருமைகளும் விளங்கவில்லை. இது பொருளால் தொகுக்கப்பெற்றது. இங்கே பொருளென்றது, அறத்தையும் பொருளையும். புறத்திணைகளுக்குரிய துறைப்பொருள்களமைந்த 400–அகவற்பாக்களை உடைமையின், இது புறநானூறென்று பெயர்பெற்றது. சில பாக்களின் இடை இடையே வஞ்சியடி கலந்து வருதலுமுண்டு. (திணை–ஒழுக்கம்.) அது வெட்சித்திணை முதலிய பன்னிரண்டு பகுதிகளையுடையது. (துறை–மக்களும் விலங்குகள் முதலியனவும் சென்று நீருண்ணும் துறைபோலப் பலவகைப்பட்ட பொருள்களும் ஒருவகைப்பட்டு இயங்குதற்குரிய வழி.) திணை, துறைகளின் விவரணங்கள் இதன் அடுத்தபக்கம் முதலியவற்றில் உள்ளன. இது, புறப்பாட்டெனவும் புறமெனவும் வழங்கும். இதற்குப் பழையதோருரையுண்டு.

இந்நூலால், பண்டைக்காலத்து இத்தமிழ்நாட்டிலிருந்த சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை வேந்தர், சிற்றரசர், சேனைத்தலைவர், அமைச்சர், வீரரென்கிற பலருடைய சரித்திரங்களும், கடையெழு வள்ளல்களின் சரித்திரங்களும், கடைச்சங்கப் புலவருடைய சரித்திரங்களும் அக்காலத்துள்ளாருடைய நடை முதலியனவும் இன்னும் பற்பலவும் நன்கு புலப்படும். இந்நூற் செய்யுட்களாற் பாடப்பட்டவர்கள் ஒருகாலத்தாரல்லர்; ஒருகுலத்தாரல்லர்; ஒரு சாதியாரல்லர்; ஓரிடத்தாருமல்லர். பாடியவர்களும் இத்தன்மையரே. இவர்களில் அந்தணர் சிலர்; அரசர் பலர்; வணிகர் பலர்; வேளாளர் பலர். பாடியவர்களுள் பெண்பாலாருமுளர். மற்ற விவரங்களை இந்நூல் முழுப்புத்தகத்தா லுணர்க.

திணைவிளக்கம்.

கடவுள் வாழ்த்தாவது:—தெய்வத்தைத் துதிப்பது.

காஞ்சித்திணையாவது:—பகையரசன் போர்க்கு வந்துவிட, ஓரா சன் காஞ்சிப்பூவைச் சூடித் தன்னிடத்தைப் பாதுகாப்பது.

தும்பைத்திணையாவது: — பகைவரோடு போர்செய்தலை நினைந்து தும்பைப்பூவைச் சூடுவது.

பாடாண்டிணையாவது: — ஒருவனுடைய கீர்த்தியும் வலியும் கொடையும் அளியும் ஆகிய இவற்றைத் தெரிந்து சொல்லுவது.

பொதுவியலாவது:—புறத்திணைகட் கெல்லாம் பொதுவாயுள்ளனவும் அவற்றிற்கூறு தொழிந்தனவுமாகிய இவற்றைக் கூறுவது.

வஞ்சித்திணையாவது:—அரசன் வஞ்சிப்பூவைத் தலையிலே சூடிப் பகைவருடைய பூமியைக் கைக்கொள்ளக் கருதுவது.

வாகைத்திணையாவது:—வாகைப்பூவைத் தலையிலே சூடிப் பகைவரைக் கொன்று ஆரவாரிப்பது.

துறைவிளக்கம்.

அரசவாகையாவது:—அரசனது இயல்பைக் கூறுதல்.

இயன்மொழியாவது:—தலைவ னெதிர்சென்றேறி அவன் செய்தியையும் அவன் குலத்தோர் செய்தியையும் அவன்மேலே ஏற்றிப்புகழ்த லென்பர் நச்சினார்க்கினியர்.

இயன்மொழி வாழ்த்தாவது: —'இன்னோர் இன்னது கொடுத்தார்; அவர்கள்போல நீயும் எமக்குக் கொடுப்பாயாக' என்று சொல்லுவது.

உடனிலையாவது:—உடனிருந்த இருவரைப் பாடுதல்.

உவகைக்கலுழ்ச்சியாவது: — வாட்புண் மிகுந்த உடம்பை யுடைய கணவனைக்கண்டு மனைவி மகிழ்ந்து கண்ணீர் வீழ்த்தல்.

எருமை மறமாவது:—முதுகிட்ட தன் சேனைக்குப்பின் பகைவர் சேனையை நோக்கி அஞ்சாது மிகுந்த கோபங்கொண்டு நிற்றல்; மற்போர் செய்தலையும் இத்துறையென்று கூறுதலுண்டு.

கையறு நிலையாவது:—அரசனிறப்ப அவனைச் சேர்ந்தோர் அவன் இறந்ததைச் சொல்லி ஒழுக்கந்தளர்தல்.

கொற்றவள்ளையாவது: — அரசனுடைய கீர்த்தியைச் சொல்லி அவன் பகைவர்தேசங் கெடுதற்கு வருந்துதல்.

செவியறிவுறூஉவாவது: — மாற்சரியமும் கெடுதலுமில்லாத பெரிய எண்ணத்தை அரசனுக்குச் சொல்லுதல்.

துணைவஞ்சியாவது: — பிறரை வெல்லவாவது கொல்லவாவது துணிந்து நிற்கின்றானொருவனைச் சில கூறிச் சந்தி செய்வித்தல்.

நல்லிசைவஞ்சியாவது: — பகைவருடைய இடங்கள் கெடும்படி சென்றுவிட்ட வீரனுடைய வெற்றியைச் சொல்லுதல்.

பரிசில் கடாநிலையாவது:—பரிசிலரை நீங்குதலமையாது நெடிது கொண்டொழுகிய தலைவனுக்குப் பரிசில்வேட்டோன் தன் சுற்றத்தினது இடும்பை முதலியன கூறித் தான் குறித்த பொருண்மையினைச் செலுத்திக் கடாவின நிலை.

பரிசில் விடையாவது:—அரசன் தன் புகழைக் கூறினோர்க்குப் பரிசில் வழங்கி இன்பமிகும்படி அவர்களுக்கு விடைகொடுத்தல்.

பூவை நிலையாவது: — திருமாலின் திருவுருவோடு உவமித்துக் கூறும் காயாம்பூவைப் புகழ்தல்.

பொருண் மொழிக்காஞ்சியாவது:—முனிவர் தெளிந்த பொருளைச் சொல்லுதல்.

மழபுலவஞ்சியாவது:—பகைவருடைய வேற்றுப் புலத்தைக் கொள்ளையூட்டி அவர்கள் வீடுகள் பாழ்படக்கவர்ந்த தொழிலைச் சொல்லுதல்.

முதுமொழிக்காஞ்சியாவது: — அறிவுடையோர் குற்றம் நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம்பொருளின்பங்களை அறியச் சொல்லுதல்.

மூதின் முல்லையாவது: — வீரர்க்கல்லாமல் அவர் குடியிற்பிறந்த மகளிர்க்கும் கோபமுண்டாதலை மிகுத்துச் சொல்லுதல்.

வஞ்சினக்காஞ்சியாவது: — அரசன் பகைவரைத் தாழ்வித்தற் பொருட்டு இவ்வாறு செய்வேனெனச் சொல்லிய கூறுபாட்டைச் சொல்லுதல்.

வாழ்த்தியலாவது:—தலைவனை வாழ்த்துதல்.

விறலியாற்றுப்படையாவது:—அரசனுடைய கீர்த்தியைப் பாடும் பாடினியை வழிப்படுத்தல்.

புறநானூறு.

(1). கண்ணி கார்நறுங் கொன்றை; காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை;
ஊர்தி வால்வெள் ளேறே; சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப;
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே;
பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்;
பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே;
எல்லா வுயிர்க்கு மேம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே.

கடவுள் வாழ்த்து.
பாரதம்பாடிய பெருந்தேவனார் பாடியது.

(2). மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும், என்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போலப்

---

(1). 1. கண்ணி—ஆடவர் தலையிற் சூடுதற்குரிய மாலை.
2. தார்—மார்பின் மாலை.
3. ஊர்தி—ஏறப்படும் வாகனம்.
5. கறை—நஞ்சின் கறுப்பு; அணியலும் அணிந்தன்று—அழகுசெய்தலையும் செய்தது.
7. பெண்—உமாதேவி. திறன்—பக்கம்.
11. ஏமம்—பாதுகாப்பு.
12. அறவு—அற்றுப்போதல்.

(2). 1. மண்—நில அணு.
3. தைவருதல்—தடவுதல்.
4. தலைஇய—கலந்த.

போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு முடையோய்!
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந!
வான வரம்பனை! நீயோ, பெரும!
அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!
பாஅல்புளிப்பினும் பகலிருளினும்
நாஅல்வேத நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி *நிலியரோ வத்தை; அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி யந்தண ரருங்கட னிறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே.

திணை—பாடாண்டிணை: துறை—செவியறிவுறூஉ; வாழ்த்தியலுமாம்.

சேரமான்பெருஞ்சோற்று உதியன்சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது.

---

7. சூழ்ச்சி—ஆலோசித்தல்.
8. தெறல்—அழித்தல்.
1–8. பொறுத்தற்கு நிலமும், சூழ்ச்சியின் பரப்பிற்கு ஆகாயமும், மனவலி முதலியவற்றிற்குக் காற்றும், தெறலுக்குத் தீயும், அளிக்கு நீரும் உவ[மைகள்.
11. யாணர்—புது வருவாய்.
12. வானவரம்பன்—சேரன்; தனது ஆட்சிக்கு வானுலகத்தை எல்லையாக வுடையவனென்பது பொருள்; ஐ, முன்னிலையை விளக்கிநின்றது. நீயோ: ஓ, அசைநிலை.
13. உளை—குதிரையின் தலையிற்கட்டும் சாமரை: ஐவர்—பஞ்சபாண்டவர்; தொகைக்குறிப்பு. சினைஇ—கோபித்து.
14. பொலம்—பொன். தும்பைமாலை—போர்செய்வோர் அணிந்துகொள்ளுதற்குரியது; அது பொன்னாற் செய்யப்படுவதுமுண்டு.
15. ஈரைம்பதின்மர்—துரியோதனன் முதலிய நூற்றுவர்.
16. பதம்—உணவு.
19. சுற்றம்—மந்திரிச்சுற்றம். சேண்—நெடுங்காலம்.
20. நிலியர்—நிற்பாயாக. அத்தை, அசைநிலை.
21. சிறுதலை நவ்வி—மான்குட்டி.
(24) போன்று (20) நடுக்கின்றி நிலியரெனக் கூட்டுக.

* நிலையரோவென்றும் பாடம்.

(3). உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணக நிழற்ற
ஏம முரச மிழுமென முழங்க
நேமி யுய்த்த நேஎ நெஞ்சிற்
றவிரா வீகைக் கவுரியர் மருக!
செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ!
பொன்னோடைப் புகரணிநுதற்
றுன்னருந்திறற் கமழ்கடாஅத்
தெயிறு படையாக வெயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானை யிரும்பிடர்த் தலையிருந்து
மருந்தில் கூற்றத் தருந்தொழில் *சாயாக்
கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி!
நிலம்பெயரினு நின்சொற்பெயரல்;
பொலங்கழற்காற் புலர்சாந்தின்
விலங்ககன்ற வியன்மார்ப!
ஊரில்ல வுயவரிய
நீரில்ல நீளிடைய
பார்வ லிருக்கைக் கவிகண் ணோக்கிற்
செந்தொடை பிழையா வன்க ணாடவர்
அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்

---

(3). 1. உவவு=உவா—பௌர்ணமி.
2. நிலவு—நிலைபெறுதல்.
3. ஏமமுரசம்—வீரமுரசம்.
4. நேமி—ஆஞ்ஞாசக்கரம். நேம்—அன்பு.
5. கவுரியர்—பாண்டியர். மருகன்—பரம்பரையி லுதித்தவன்.
6. செயிர்தீர் கற்பு—அறக்கற்பு.
7. ஓடை—நெற்றிப்பட்டம்.
9. இடா—குத்தி
12. மருந்து—பரிகாரம்.
16. விலங்கு—குறுக்கு.
17. உயவு அரிய—பொறுத்தற்கரிய துன்பத்தை உடையன.
19. பார்வல் இருக்கை—பார்த்திருக்கும் இருப்பு.
20. தொடை—தொடுத்தல். வன்கண்—அஞ்சாமை.
21. வம்பப்பதுக்கை—புதிய சறகுவியல்.
22. உயவும்—வருந்தும்.

* சாவா என்றும் பாடம்.

உன்ன மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையி னிரவலர் வருவதை;
முன்ன முகத்தி னுணர்ந்தவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதியை இரும்பிடர்த்தலையார் பாடியது.

(4). வாள், வலந்தர மறுப்பட்டன,
செவ்வானத்து வனப்புப்போன்றன;
தாள், களங்கொளக் கழல்பறைந்தன,
கொல்லேற்றின் மருப்புப் போன்றன;
தோல், துவைத்தம்பிற் றுளைதோன்றுவ,
நிலைக்கொராஅ விலக்கம்போன்றன;
மாவே, எறிபதத்தா னிடங்காட்டக்
கறுழ்பொருத செவ்வாயான்
எருத்துவவ்விய புலிபோன்றன;
களிறே, கதவெறியாச் சிவந்துராஅய்,
நுதிமழுங்கிய வெண்கோட்டான்
உயிருண்ணுங் கூற்றுப்போன்றன;
நீயே, அலங்குளைப் பரீஇயிவுளிப்
பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி
மாக்கட னிவந்தெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ;

---

23. உன்னமரம்—இலவு; மலைநாட்டு வழக்கு. கவலை—கவர்த்தவழி.
25. முன்னம்—குறிப்பு.

(4). 1. வலம்—வெற்றி. மறு—கறை.
3. பறைந்தன—தேய்ந்தவை.
4. மருப்பு—கொம்பு.
5. தோல்—கேடகம். துவைத்து—ஒலித்து.
6. இலக்கம்—லக்ஷ்யம்.
7. மா—குதிரை. பதம்—காலம்.
8. கறுழ்—கடிவாளம்.
9. எருத்து—கழுத்து.
10. உராய்—உலாவி.
13. பரி—நடை. இவுளி—குதிரை.
14. தோன்றி—தோன்றுதலால்.
16. கவினை—அழகையுடையாய்.

அனையை யாகன் மாறே தாயில்
தூவாக் குழவி போல
ஓவாது கூஉநின் னுடற்றியோர் நாடே.

திணை-வஞ்சி; துறை-கொற்றவள்ளை.
சோழன் உருவப்பஃறேரிளஞ் சேட்சென்னியைப் பரணர் பாடியது.

(5). எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய முன்பிற்
கானக நாடனை; நீயோ பெரும!
நீயோ ராகலி னின்னொன்று மொழிவல்;
அருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது, காவல்,
குழவி கொள்பவரி னோம்புமதி;
அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே.

திணை-பாடாண்டிணை; துறை-செவியறிவுறூஉ; பொருண்மொழிக் காஞ்சியுமாம்.

சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேர லிரும்பொறையைக்கண்டஞான்று நின் உடம்புபெறுவாயாகென அவனைச் சென்று கண்டு தம்முடம்புபெற்று நின்ற நரிவெரூஉத்தலையார் பாடியது.

(6). வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅ துருகெழு குமரியின் றெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்

---

17. ஆகன்மாறு—ஆதலால்; மாறு, ஏதுப்பொருள் படுவதோரிடைச்சொல்.
18. தூவாக்குழவி—உண்ணாத குழந்தை.
19. கூஉம்—கூப்பிடும்.
இச்செய்யுளில், வாள், தாள், தோல், மாவே, களிறே, நீயே என்பன கூன்கள்.

(5). 2. ஆனில்—பசுவைப்போல. முன்பு—வலி.
3. நாடனை—நாட்டினையுடையாய்; ஐ—முன்னிலைக்கண் வந்தது. நீயோ: ஓ—அசைநிலை; வினாவுமாம்.
4. ஓர், அசைநிலை.
5. அருள்—ஒன்றின் துயர்கண்டாற் காரணமின்றித் தோன்றுமிரக்கம். அன்பு—தன்னாற் பாதுகாக்கப்படுவார்மேல் உள்ள விருப்பம்.
6. நிரயம்—நரகம். காவல்—காக்கப்படும் தேயம்; ஆகுபெயர்.
7. மதி, முன்னிலையசை.
8. பெறல் அருங் குரைத்து—பெறுதற்கரியது; குரை—அசை.

(6). 2. உரு—அச்சம். குமரி—கன்னியாகுமரியாறு.
3. குணாது—கீழ்த்திசைக்கண்ணது. தொடுகடல்—சகரரால் தோண்டப்பட்ட கடல்.
4. குடக்கு—மேற்கு.

கிழது, முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழு மேல
தானிலை யுலகத் தானு மானு
துருவும் புகழு மாகி விரிசீர்த்
*தெரிகோன் ஞமனன் போல வொருதிறம்
பற்ற லியரோ; நிற்றிறஞ் சிறக்க;
செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி யடர்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதி †னேவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்
தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கிப்
‡பணியிய ரத்தைநின் குடையே, முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே;
இறைஞ்சுக பெருமநின் சென்னி, சிறந்த
நான்மறை §முனிவ ரேந்துகை யெதிரே;
வாடுக ‖விறைவநின் கண்ணி, ஒன்னார்

---

5. முப்புணர்—பூமி, ஆகாயம், சுவர்க்கம். முதற்கட்டு—முதலின் கண்ணது. இன், சாரியை.
6. நீர்நிலை நிவப்பு—பூமி.
5–6. முதலின்கண்ணதாகிய நீர்நிலை நிவப்பென்க.
7. ஆனிலை உலகத்தானும்—கோலோகத்தின் கண்ணும்.
8. ஆகி—ஆகுக; வியங்கோள். சீர்—கனமான பொருள்கள்.
9. தெரிகோல்—ஆராயும் துலாக்கோல். ஞமன்—சமமான இடம் (துலைநா).
9–10. ஒருதிறம் பற்றலியர்—ஒருபாற் கோடாதொழிக.
10. திறம்—படை, குடி முதலிய கூறுபாடுகள்.
11. வினை—போர்த்தொழில்.
12. மண்டி—மிக்குச்சென்று. புகர்—புள்ளி.
14. அவல் படப்பை—விளைநிலப்பக்கம்.
15–6. பகைவருடைய அரண்களிற்கொண்ட ஆபரணங்களைப் பரிசிலர்க்குக் கொடுத்தல் மரபு.
17. பணியியர்—தாழ்க.
18. முக்கட் செல்வர்நகர்—சிவாலயம்.
20. ஏந்துகை—ஆசிகூறுகையில் எடுக்கும் கை.

* தெரிகோற்சமனென்றும் பாடம்.
† ஏஎயென்றும் பாடம்.
‡ பணீஇயரத்தையென்றும் பாடம்.
§ முதல்வரென்றும் பாடம்.
‖ இயவுணியென்றும் பாடம்.

நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே;
* சேலிய ரத்தைநின் வெகுளி, வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத் தெதிரே;
ஆங்க, வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா வீகைத் தகைமாண் குடுமி!
தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னுக, பெருமநீ நிலமிசை யானே.

திணை—பாடாண்டிணை; துறை.—செவியறிவுறூஉ; வாழ்த்தியலுமாம்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைக் காரிகிழார் பாடியது.

(7). களிறு கடைஇயதாட்
கழலுரீஇய திருந்தடிக்
† கணைபொருது கவிவண்கையாற்
கண்ணொளிர்வரூஉங் கவின்சாபத்து
மாமறுத்த மலர்மார்பிற்
றோல்பெயரிய வெறுழ்முன்பின்
எல்லையு மிரவு ‡மெண்ணாய் பகைவர்
ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை; ஆகலி னல்ல
இல்ல வாகுபவால், இயறேர் வளவ!

---

22. பகைவர் நாட்டு ஊர்களைச்சுடுவது எரிபரந்தெடுத்தலென்னும் துறையென்பர்.
23. சேலியர்—நீங்குக. அத்தை, அசைநிலை.
24. துனித்த—பிணங்கிய.
27–9. ஆசந்திரார்க்க ஸ்தாயியாக வாழ்கவென்றல் மரபு.

(7). 1. கடைஇய—செலுத்திய.
2. உரீஇய—உரிஞ்சிய.
3. கையான்—கையுடனே.
4. சாபம்—வில்.
6. தோல்பெயரிய—யானையைப்பெயர்த்த.
7. எல்லை—பகல்.
9. மேவலை—விரும்புதலுடையாய். நல்ல—நல்ல பொருள்கள்.
10. இல்ல ஆகுப—இல்லாதனவாகின்றன. வளவனென்றது கரிகாற் பெருவளவனை.

* சொலிகவத்தையென்றும் பாடம்.
† கணைக்கால் பொருதவென்றும் பாடம்.
‡ என்னுயென்றும் பாடம்.

தண்புனல் பரந்த பூசன் மண்மறுத்து
மீனிற் செறுக்கும் யாணர்ப்
பயன்றிகழ் வைப்பிற்பிற ரகன்றலை நாடே.

திணை-வஞ்சி; துறை-கொற்றவள்ளை; மழபுலவஞ்சியுமாம்.
சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடியது.

(8). வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ
திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப
ஓடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்கன மொத்தியோ? வீங்குசெலன் மண்டிலம்!
பொழுதென வரைதி; புறக்கொடுத் திறத்தி;
மாறி வருதி; மலைமறைந் தொளித்தி;
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியால்; பல்கதிர் விரித்தே.

திணை-பாடாண்டிணை; துறை-இயன்மொழி; பூவைநிலையுமாம்.
சேரமான் கடுங்கோவாழியாதனைக் கபிலர் பாடியது.

(9). "ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும்; நும்மரண் சேர்மி"னென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்

---

11. பூசல்—ஓசையையுடைய உடைப்பு. 'தாள்' முதல், 'முன்பு' இறுதியாக உள்ளனவற்றை வளவனுக்கு அடையாக்குக. (13) நாடு (10) இல்லவாகுப வெனக்கூட்டுக.

(8). 1. வழிமொழிந்து—வழிபாடுசொல்லி.
2. போகம்—அரசர்க்குரிய செல்வ இன்பங்கள். பொதுச்சொல்—பூமி பிற வேந்தர்க்கும் பொதுவென்னும் சொல்.
4. ஓம்பாவீகை—பொருளைப் பாதுகாவாமல் வழங்கும் கொடை.
5. கடந்துஅடு—வஞ்சியாமல் எதிர்நின்று கொல்லும்.
6. மண்டிலம்—சூரிய மண்டிலமே; சந்திரமண்டிலமுமாம்.
7. வரைதி—பிரித்து எல்லைப்படுத்துவாய். இறத்தி—போவாய்.

(9). 3. தென்புலவாழ்நர்—பிதிரர்.
6. பூட்கை—மேற்கோள். மறம்—வீரம்.

எங்கோ வாழிய, குடுமி; தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

(10). வழிபடு வோரை வல்லறி தீயே;
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே;
நீமெய் கண்ட தீமை காணின்,
ஒப்ப நாடி யத்தக வொறுத்தி;
வந்தடி பொருந்தி முந்தை நிற்பிற்
றண்டமுந் தணிதிநீ, பண்டையிற் பெரிதே;
அமிழ்தட் டானாக் கமழ்குய் யடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை,
... ...
... ...
செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்
நெய்தலங் கான னெடியோய்!
எய்தவந் தனம்யா மேத்துகம் பலவே.

திணையும் துறையும் அவை.

சோழன் * நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடியது.

---

9. வயிரியர்—கூத்தர்.
10. முந்நீர் விழவு—கடற்றெய்வத்திற்கு எடுத்த திருவிழா. நெடியோன்—வடிம்பலம்ப நின்ற பாண்டியன்.
11. பஃறுளி—ஓராறு.

(10). 1. வல்அறிதீ—விரைய அறிந்து அருள்செய்வாய்.
2. தேறலை—தெளியாய்.
4. ஒப்ப—தகுதியாக. அத்தக—அதற்குத்தக. ஒறுத்தி—தண்டிப்பாய்.
6. தண்டம்—தண்டித்தல்.
7. அட்டு—வென்று. குய்—தாளிப்பு.
11. சேண்—நெடுந்தூரம்.
12. நெய்தலங்கானல்—ஓரூர்.

* நெய்தலங்காலையென்றும் பிரதிபேதமுண்டு.

(11). அரிமயிர்த் திரண்முன்கை
வாலிழை மடமங்கையர்
வரிமணற் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து
தண்பொருநைப் புனல்பாயும்
விண்பொருபுகழ் விறல்வஞ்சிப்
பாடல்சான்ற விறல்வேந்தனும்மே
வெப்புடைய வரண்கடந்து
துப்புறுவர் புறம்பெற்றிசினே;
புறம்பெற்ற வயவேந்தன்
மறம்பாடிய பாடினியும்மே
ஏருடைய விழுக்கழஞ்சிற்
சீருடைய விழைபெற்றிசினே;
இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவல்பாண்மகனும்மே, எனவாங்
கொள்ளழற் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே.

திணை—பாடாண்டிணை: துறை—பரிசில்கடாநிலை.

சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோவைப் *பேய்மகள் இளவெயினி பாடியது.

(12). பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்

(11.) 1. அரி—மென்மை.
2. வான்மை—தூய்மை. மடமங்கையர்—பேதைப் பருவப் பெண்கள்.
3. வரிமணல்—மணலிற்செய்த சிற்றில்.
4. குலவுச்சினை—வளைந்த மரக்கிளை.
5. பொருநை—ஆன்பொருந்தமென்னும் நதி.
6. வஞ்சி—கருவூர்.
6–7. வஞ்சிவேந்தன்—சேரன்.
7. விறல்—வெற்றி.
9. துப்பு உறுவர்—வலியோடெதிர்ந்த பகைவர். பெற்றிசின்—பெற்றான்.
11. மறம்—வீரம். பாடினி—பாடுபவள்; விறலி.
13. பெற்றிசின்—பெற்றாள்.
16. அழற்புரிந்த தாமரை—பொற்றாமரை. யான் ஒன்றும் பெற்றிலேனென்பது குறிப்பு.

(12). 1. மலையவும்—சூடவும்.

* பேய்மகள் இளவினியென்றும் பிரதிபேதமுண்டு.

அறனே மற்றிது விறன்மாண் குடுமி!
இன்னா வாகப் பிறர்மண்கொண்
டினிய செய்திநின் னார்வலர் முகத்தே.

திணை—பாடாண்டிணை; துறை—இயன்மொழிவாழ்த்து.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

(13). இவனியா ரென்குவை யாயின், இவனே,
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே;
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீ னாப்பட் டிங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே;
நோயில னாகிப் பெயர்கதி லம்ம!
பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே.

திணை—பாடாண்டிணை; துறை—வாழ்த்தியல்.

சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி கருவூரிடஞ்செல்வானைக் கண்டு சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையோடு வேண்மாடத்து மேலிருந்து உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

... ...

(15). கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்;
புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்

---

4. இன்னா—துன்பம்.
5. முகம்—இடம்.
(13). 2. புலிநிறக் கவசம்—புலித்தோலாற் செய்யப்பட்ட கவசம். பொறி—மூட்டுவாய்.
8. மரீஇயோர்—பாகர். மைந்து—மதம்.
11. சூட்டு—நெல்லரி.
13. நாடுகிழவோன் (9) நோயிலனாகிப் பெயர்க.
(15.) 1. ஞெள்ளல்—தெரு.

வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத்
தேர்வழங் கினைநின் றெவ்வர் தேஎத்து;
துளங்கியலாற் பணையெருத்திற்
பாவடியாற் செறனோக்கின்
ஒளிறுமருப்பிற் களிறவர
காப்புடைய கயம்படியினை;
அன்ன சீற்றத் தனையை யாகலின்
விளங்குபொன் னெறிந்த நலங்கிளர் பலகையொடு
நிழல்படு நெடுவே லேந்தி யொன்னார்
ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்
நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல்? புரையில்
நற்பனுவ னால்வேதத்
தருஞ்சீர்த்திப் பெருங்கணுறை
நெய்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பலகொல்?
யாபல கொல்லோ? பெரும! வாருற்று
விசிபிணிக் கொண்ட மண்கனை முழவிற்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல் சான்ற மைந்தினோய்! நினக்கே.

திணையுந் துறையும் அவை.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

---

5. கலி—செருக்கு. உகள—தாவ.
8. செறல்—கோபித்தல்.
10. படியினை—ஆடுவித்தாய்.
12. பொன்—இரும்பு. எறிந்த—அறைந்த. பலகை—கேடகம்.
14. தார்—முன்படை. கொண்மார்—கொள்ள; மார்—வினையெச்சவிகுதி.
15. பிறக்கு—பின்.
17. நற்பனுவல்—தருமநூல்.
18. கண்உறை—மேலே இடப்படும் பொருள்.
19. ஆவுதி—ஆகுதி.
20. சிறப்பு—தலைமை.
21. யூபம்—யாகத்தம்பம்.
24. வஞ்சி—பகைமேற் செல்லுவதைக் குறித்துப் பாடும்பாட்டு.

(16). வினைமாட்சிய விரைபுரவியொடு
மழையுருவின தோல்பரப்பி
முனைமுருங்கத் தலைச்சென்றவர்
விளைவயல் கவர்பூட்டி
மனைமாம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறுபடீஇ
எல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்றப்
புலங்கெட விறுக்கும் வரம்பி றானைத்
துணைவேண்டாச் செருவென்றிப்
புலவுவாட் புலர்சாந்தின்
முருகற் சீற்றத் துருகெழு குரிசில்!
மயங்குவள்ளை மலராம்பற்
பனிப்பகன்றைக் கனிப்பாகற்
கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக
ஏம நன்னா டொள்ளெரி யூட்டினை;
நாம நல்லமர் செய்ய
வோராங்கு மலைந்தன, பெருமநின் களிறே.

திணை-வஞ்சி; துறை-மழபுலவஞ்சி.

சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியைப் பாண்டரங்கண்ணனார் பாடியது.

(17). தென்குமரி வடபெருங்கற்
குணகுடகட லாவெல்லை
குன்றுமலை காடுநா

---

(16). 3. முனை—போர்செய்யுமிடம்.
4. கவர்பு—கவர்தல்.
6. கடிதுறை—காவற்பொய்கை. படீஇ—குளிப்பாட்டி.
7. எல்—விளக்கம்.
9. புலம்—இடம்.
13. வள்ளை—வள்ளைக்கொடி.
14. பகன்றை—சிவதைக்கொடி.
18. நாம்—அச்சம்.
19. ஓராங்கு—ஒரு பெற்றிப்பட.
(17). 1. வடபெருங்கல்—இமயமலை.
2. எல்லையாவென்க.
3. குன்று முதலியவை, இடவாகு பெயர்.

டொன்றுபட்டு வழிமொழியக்
கொடிதுகடிந்து கோறிருத்திப்
படுவதுண்டு பகலாற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல!
குலையிறைஞ்சிய கோட்டாழை
அகல்வயன் மலைவேலி
நிலவுமணல் வியன்கானற்
றெண்கழிமிசைச் சுடர்ப்பூவிற்
றண்டொண்டியோ ரடுபொருந!
மாப்பயம்பின் பொறைபோற்றாது
நீடுகுழி யகப்பட்ட
பீடுடைய வெறுழ்முன்பிற்
கோடுமுற்றிய கொல்களிறு
நிலைகலங்கக் குழிகொன்று
கிளைபுகலத் தலைக்கூடியாங்கு
நீபட்ட வருமுன்பிற்
பெருந்தளர்ச்சி பலருவப்பப்
பிறிதுசென்று மலர்தாயத்துப்
பலர்நாப்பண் மீக்கூறலின்
உண்டாகிய வுயர்மண்ணும்
சென்றுபட்ட விழுக்கலனும்
பெறல்கூடு மிவனெஞ் சுறப்பெறி னெனவும்
ஏந்துகொடி யிறைப்புரிசை
வீங்குசிறை வியலருப்பம்

4. வழிமொழிய—வழிபாடுகூற.
5. கொடிது—தீத்தொழில்.
6. பகல்—நடுவிலைமை.
9. கோள்—கொள்ளுதல்.
12. சுடர்ப்பூ—தீயைப்போலும் தாமரைப்பூ.
13. தொண்டி—சேரனுட்டதோர் ஊர்; இது கடற்கரைப் பட்டினம்.
14. பயம்பு—யானையை அகப்படுத்தும் குழி. பொறை—மேற்பரப்பு.
18. குழிகொன்று—குழியைத்தூர்த்து.
19. புகல—விரும்ப.
20–21. பட்டதளர்ச்சி.
22. பிறிதுசென்று—வேறொரு சூழ்ச்சியாற்போய். தாயம்—உரிமை.
27. இறை—உயர்ச்சி.
28. சிறை—காவல். அருப்பம்—அரண்.

இழந்துவைகுதும், இனிநாமிவன்
உடன்றுநோக்கினன் பெரிதெனவும்
வேற்றரசு பணிதொடங்குநின்
ஆற்றலொடு புகழேத்திக்
காண்கு வந்திசிற் பெரும! ஈண்டிய
மழையென மருளும் பஃறோன் மலையெனத்
தேனிறை கொள்ளு மிரும்பல் யானை
உடலுந ருட்க வீங்கிக் கடலென
வானீர்க் கூக்குந் தானை யானது
கடுவொடுங் கெயிற்ற வரவுத் தலைபனிப்ப
இடியென முழங்கு முரசின்
வரையா வீகைக் குடவர் கோவே.

திணை–வாகை; துறை–அரசவாகை; இயன்மொழியுமாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற் பிணியிருந்த யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை வலிதிற் போய்க்கட்டிலேய்தினானைக் *குறுங்கோழியூர்கிழார் பாடியது.

(18). முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்து பட்ட வியன்ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
ஒருதா மாகிய வுரவோ ரும்பல்!
ஒன்றுபத் தடுக்கிய கோடிகடை யிரீஇய
பெருமைத் தாக, நின் னாயு டானே;
நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉ மினவாளை

---

31. பணி—ஏவல்செய்தல்.
33. காண்குவந்திசின்—காண்பேனாக வந்தேன்.
34. மழை—மேகம்.
36. வீங்கி—பெருத்தலால்.
37. வான்—மேகம். நீர்க்கு—நீரைமுகத்தற்கு. ஊக்கும்—மேற்கொள்ளும்.
40. குடவர்—குடநாட்டுள்ளார்.

(18). 3. தாள்—முயற்சி.
4. உம்பல்—வழித்தோன்றியவனே.
5. இரீஇய—இருத்திய.
7. காஞ்சி—ஒருவகை மரம்.
8. கதூஉம் = கதுவும்—கவரும்.

* குறுங்கோளியூர்கிழாரென்றும் பிரதிபேதமுண்டு.

நுண்ணாரற் பருவாரற்
*குரூஉக்கெடிற்ற குண்டகழி
வானுட்கும் வடிநீண்மதின்
மல்லன்மூதூர் வயவேந்தே!
செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினுஞ் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
தகுதி கேளினி, மிகுதி யாள!
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே;
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்;
உணவெனப் படுவது, நிலத்தொடு நீரே;
நீரு நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே;
வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினு நண்ணி யாளும்
இறைவன் றாட்குத வாதே; அதனால்,
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம, விவட்டட் டோரே;
தள்ளா தோரிவட் டள்ளா தோரே.

திணை—பொதுவியல்; துறை—முதுமொழிக்காஞ்சி.

பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடியது.

---

9. ஆரல்—ஒருவகை மீன்.
10. கெடிறு—ஒருவகை மீன்.
17. தகுதி—தக்கசெய்கை.
20. முதற்று—முதலாக உடையது. உணவின் பிண்டம்—உடம்பு.
22. புணரியோர்—சேர்த்தவர்கள்.
23. படைத்திசினோர்—உண்டாக்கியவர்.
24, 6. புலம் உதவாது.
28. நெளிமருங்கு—குழிந்த இடம்.
29. தட்டோர்—தடுத்தவர்.

* குரூஉக்கெடிற்றுக் குண்டகழியென்றும் பாடம்.

(19). இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையுங் கூற்றத் தொருமையும்
நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய!
இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய
பெருங்கல் லடாரும் போன்மென விரும்பி
முயங்கினே னல்லனோ? யானே, மயங்கிக்
குன்றத் திறுத்த குரீஇயினம் போல
அம்புசென் றிறுத்த வரும்புண் யானைத்
தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து
நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள
எறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்தர்
எந்தையொடு கிடந்தோரெம் புன்றலைப் புதல்வர்
இன்ன விறலு முளகொ னமக்கென
மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை
எழுவர் நல்வலங் கடந்தோய்நின்
கழூஉவிளங் காரங் கவைஇய மார்பே.

திணை—வாகை; துறை—அரசவாகை.

அவனை அவர் பாடியது.

---

(19). 1. வளைஇய—சூழப்பட்ட. கிடக்கை—பூமி.
2. தமிழ்—தமிழ்ப்படை. தலை—அசைநிலை, இடமுமாம். தலையாலங் கானம்—தலையாலங்காடு. இது சோழநாட்டிலுள்ளதோரூர்.
4. வென்—வென்றி.
5. பொறி—யந்திரம்.
6. கல்அடார்—கல்லாற் செய்விக்கப்பட்டதொரு பொறி.
8. குரீஇ—குருவி.
10. துமிந்து—துணிந்து.
11. நாஞ்சில்—கலப்பை.
13. எந்தை—எம்தலைவன்.
15. மூதில்—முதியமறக்குடி. கசிந்து—இன்புற்று.
16. பறந்தலை—போர்க்களம்.
17. எழுவர் — சேரன், செம்பியனென்னும் முடியுடை வேந்தரிருவரும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநனென்னும் ஐம்பெருவேளிரும்.
18. கவைஇய—சூழ்ந்த.
(18). மார்பை (7) முயங்கினேனல்லனோ.

(20). இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும், என்றாங்
கவையளந் தறியினு மளத்தற் கரியை;
அறிவு மீரமும் பெருங்க ணோட்டமும்.
சோறுபடுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார்நின் னிழல்வாழ் வோரே;
திருவில் லல்லது கொலைவில் லறியார்;
நாஞ்சி லல்லது படையு மறியார்;
திறனறி வயவரொடு தெவ்வர் தேயப்
பிறர்மண் ணுண்ணுஞ் செம்மனின் னாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது
பகைவ ருண்ணா வருமண் ணினையே;
அம்புதுஞ்சுங் கடியரணால்
அறந்துஞ்சுஞ் செங்கோலையே;
புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை;
அனையை யாகன் மாறே,
மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே.

திணையும் துறையும் அவை.

சேரமான்யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறையைக் குறுங்கோழியூர்கிழார் பாடியது.

---

(20). 1. குட்டம்—ஆழம்.
4. வறிது—வடிவமில்லாமல்.
8. தெறல்—வெம்மை.
10. திருவில்—இந்திரவில்.
12. திறன்—கூறுபாடு.
14. வயவு—கருப்பத்தாலுண்டாகும் வேட்கைநோய்.
17. கோலை—செங்கோலையுடையாய்.
18. ஓரரசனுடைய நாட்டில் அயல் நாட்டிலிருந்து புதுப்பறவைகள் வருதலும் அவனாட்டிருந்த பழம் பறவைகள் வேறுநாடு செல்லுதலும் தீங்கு பயக்கும் குறியென்பர்.
19. விதுப்பு—நடுக்கம்; விதிர்ப்பெனவும் வழங்கும்.
20. ஆகன்மாறு—ஆகலால்.
21. உயிர்கள், நின்னுடைய இன்பதுன்பங்களையே தம்முடைய இன்பதுன்பங்களாக நினைக்கின்றனவென்பது இவ்வடியின் கருத்து.

(21). புலவரை யிறந்த புகழ்சா றோன்றல்!
நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி,
வான்றோய் வன்ன புரிசை, விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவ ஞாயில்,
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை,
அருங்குறும் புடுத்த கானப்பே ரெயில்
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்பு ணீரினு மீட்டற் கரிதென
வேங்கை மார்ப னிரங்க வைகலும்
ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே!
இகழுந ரிசையொடு மாயப்
புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே.

திணையும் துறையும் அவை.

கானப்பேரெயில்கடந்த உக்கிரப்பெருவழுதியை ஐயூர்மூலங்கிழார் பாடியது.

(22). தூங்குகையா னோங்குநடைய,
உறழ்மணியா னுயர்மருப்பின,
பிறைநுதலாற் செறனோக்கின,
பாவடியாற் பணையெருத்தின,
தேன்சிதைந்த வரைபோல
மிஞிறார்க்குங் கமழ்கடாத்
தயறுசோரு மிருஞ்சென்னிய,
மைந்துமலிந்த மழகளிறு

---

(21). 1. புலம்வரை—அறிவின் எல்லை.
2. குண்டு—ஆழம்.
4. ஞாயில்—மதிலின்மீதுள்ள சூட்டென்னும் சிற்றுறுப்பு.
5. கதிர்—வெயில். கடிமிளை—காவற்காடு.
6. குறும்பு—சிற்றரண். கானப்பேரென்பது காளையார் கோயிலென வழங்கப்படுகின்றது.
9. வேங்கைமார்பன்—கானப்பேரெயிலுக்குத் தலைவனான ஒரு சிற்றரசன்.
10. ஆடு—வெற்றி.
11. துறை—தும்பைத் திணைத்துறைகள்.

(22). 2. உறழ்மணியான்—மாறுபட்டொலிக்கு மணியுடனே.
1–4. ஆன்கள், உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தன.
6. மிஞிறு—தேனீ.
7. அயறு—அங்குசத்தாலுண்டாகிய புண்; அசடென வழங்கும்.

கந்துசேர்பு நிலைஇவழங்கப்
பாஅனின்று கதிர்சோரும்
வானுறையும் மதிபோலும்
மாலைவெண் குடைநிழலான்
வாண்மருங்கிலோர் காப்புறங்க,
அலங்குசெந்நெற் கதிர்வேய்ந்த
வாய்கரும்பின் கொடிக்கூரை
சாறுகொண்ட களம்போல
வேறுவேறு பொலிவுதோன்றக்
குற்றுணு வுலக்கையாற்
கலிச்சும்மை வியலாங்கட்
பொலந்தோட்டுப் பைந்தும்பை
மிசையலங் குளைய பனைப்போழ் செரீஇச்
சினமாந்தர் வெறிக்குரவை
ஓத நீரிற் பெயர்பு பொங்க
வாய்கா வாது பரந்து பட்ட
வியன்பாசறைக் காப்பாள!
வேந்துதந்த பணிதிறையாற்
சேர்ந்தவர் *கடும்பார்த்தும்
ஓங்குகொல்லியோ ரடுபொருந!
வேழ நோக்கின் விறல்வெஞ் சேஎய்!
வாழிய; பெருமநின் வரம்பில் படைப்பே;
நிற்பாடிய வலங்குசெந்நாப்

---

9. கந்து—யானைக்கம்பம். நிலைஇ—நின்று.
10. பாஅல்=பால்—பக்கம்.
12. நிழலான்—நிழற்கண்ணே.
13. மருங்கு வாளில்லோர்.
15. கொடி—ஒழுங்கு.
16. சாறு—விழா.
20–21. புறத்திணைமாலையோடு அடையாளமாலையையும் அணிதல் மரபு.
22. குரவை—ஒருவகைக்கூத்து.
26. வேந்து—பகையரசர்.
27. கடும்பு—சுற்றம்.
28. கொல்லிமலை, சேரர்களுக்குரியது.
30. படைப்பு—செல்வம்; படைக்கப் படுவதென்றபடி.
31–2. 223–ம் திருக்குறள் இங்கே அறிதற்பாலது.

* கடும்பருத்து மென்றும் பாடம்.

பிறரிசை நுவலாமை
ஓம்பா தீயு மாற்ற லெங்கோ!
மாந்தரஞ் சேர லிரும்பொறை யோம்பிய நாடே,
புத்தே ளுலகத் தற்றெனக் கேட்டுவந்
தினிது கண்டிசிற் பெரும! முனிவிலை,
வேறுபுலத் திறுக்குந் தானையொடு
சோறுபட நடத்திநீ, துஞ்சாய் மாறே.

திணையும் துறையும் அவை; துறை—இயன்மொழியுமாம்.

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையைக் குறுங்கோழியூர்கிழார் பாடியது.

(23). வெளிறி னோன்காழ்ப் பணைநிலை முனைஇக்
களிறுபடிந் துண்டெனக் கலங்கிய துறையும்
கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியற்
சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின்
கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்
கொள்வது கொண்டு கொள்ளா மிச்சில்
கொள்பத மொழிய வீசிய புலனும்
வடிநவில் நவியம் பாய்தலி னூர்தொறும்
கடிமரந் துளங்கிய காவு நெடுநகர்
வினைபுனை நல்லில் வெவ்வெரி யினைப்பக்
கனையெரி யுரறிய மருங்கு நோக்கி
நண்ணார் நாண நாடொறுந் தலைச்சென்
றின்னு மின்னபல செய்குவன், யாவரும்
துன்னல் போகிய துணிவி னோனென,
ஞால நெளிய வீண்டிய வியன்படை
ஆலங் கானத் தமர்கடந் தட்ட

---

35. 386-ம் திருக்குறளின் விசேடவுரையைப் பார்க்க.
36. கண்டிசின்—கண்டேன். முனிவிலை—வெறுப்பில்லாயாகி.
38. துஞ்சாய்மாறு—சோம்பாதிருப்பாயாதலால்.

(23). 1. நோன்காழ்—வலிய வயிரத்தம்பம்.
5. கூளியர்—மறவர்.
6. மிச்சில்—மிஞ்சியபொருள்.
8. நவியம் — கோடாலி. நவியம் பாய்தலென்பது கருவி கருத்தாவாய் நின்றது.
9. கடிமரம்—காவல்மரம்.
10. வெவ்வெரி—விரும்பப்படும் மடைப்பள்ளித்தீ. இனைப்ப—கெடுப்ப.
11. உரறிய—முழங்கிய.

கால முன்பநிற் கண்டனென் வருவல்;
அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
... ...
வேளை வெண்பூக் கறிக்கு
மாளி லத்த மாகிய காடே.

திணையும் துறையும் அவை; துறை-நல்லிசைவஞ்சியுமாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கல்லாடனர் பாடியது.

(24). நெல்லரியு மிருந்தொழுவர்
செஞ்ஞாயிற்று வெயின்முனையிற்
றெண்கடற்றிரை மிசைப்பாயுந்து,
திண்டிமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர்தூங்குந்து,
*தூவற் கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து,
வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானன்
முண்டகக் கோதை யொண்டொடி மகளிர்
இரும்பனையின் குரும்பைநீரும்
பூங்கரும்பின் றீஞ்சாறும்

---

17. வருவலென்பது வந்தேனென இறந்தகாலப் பொருட்டாய் நின்றது.
18. கலை—ஆண்மான்.
18–22. கலைபட்டெனப் பிணை பூக்கறிக்குமென்பது, இவன் பகைவரைக்கொன்றவழி, அவர் பெண்டிர் தம்புதல்வரை ஓம்புதற் பொருட்டு இறந்துபடாமல் அடகுதின்று உயிர்வாழ்கின்றாரென்பதோர் பொருள் தோன்ற நின்றது.

(24). 1. தொழுவர்—உழவர்.
3. பாயுந்து—பாயும்; பெயரெச்சவினைத் திரிசொல். பின்வரும் தூங்குந்து, தரூஉந்து என்பனவும் இவ்விலக்கணம் பெற்றவை.
4. பரதவர்—நுளையர்.
6. சீர்—தாளம். தூங்குந்து—ஆடும்.
7. தூவல்—திவலை.
9. தரூஉந்து—தரும்.
11. முண்டகக்கோதை—கழிமுள்ளிப்பூமாலை.
12. பனையின்குரும்பை—நுங்கு.

* திவலையிற்கலித்தவெனவும் பாடம்.

ஓங்குமணற் குவவுத்தாழைத்
தீநீரோ டுடன்விராஅய்
முந்நீ ருண்டு முந்நீர்ப் பாயுந்
தாங்கா வுறையு ணல்லூர் கெழீஇய
ஓம்பா வீகை மாவே ளெவ்வி
புனலம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை போரிற் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய!
நின்று நிலையியர்நின் னாண்மீன், நில்லாது
படாஅச் செலீயர்நின் பகைவர் மீனே;
நின்னொடு, தொன்று மூத்த வுயிரினு முயிரொடு
நின்று மூத்த யாக்கை யன்னநின்
ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த
வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
இரவன் மாக்க ளீகை நுவல
ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி, பெரும! ஆங்கது
வல்லுநர் வாழ்ந்தோ ரென்ப; தொல்லிசை
மலர்தலை யுலகத்துத் தோன்றிப்
பலர்செலச் செல்லாது நின்றுவிளிந் தோரே.

திணை-பொதுவியல்; துறை-பொருண்மொழிக்காஞ்சி.
அவனை மாங்குடிகிழார் பாடியது.

---

14. தாழை—தென்னை.
18. எவ்வி—ஒரு சிற்றரசன்.
19. புதவு—வாய்த்தலை. மிழலை—மிழலைக்கூற்றம்.
3, 6, 9, 19. பாயும், தூங்கும், தரூஉமென்னும் பெயரெச்சங்கள் மிழலையென்னும் பெயர்கொண்டன. கூற்றமென்பது ஒரு நாட்டின் சிறுபிரிவு; பண்டைக்கால வழக்கு.
21. தொன்முதிர்வேளிர்—அகத்திய முனிவராற் கொண்டுவரப்பட்ட பழமை [முதிர்ந்தவேளிர்.
22. முத்தூறு—முத்தூற்றுக்கூற்றம்.
24. நாண்மீன்—சன்ம நக்ஷத்திரம்.
28. ஆடு—வெற்றி.
29–32. இவ்வடிகளால் முறையே பொருள், அறம், இன்பமென்பவை கூறப்பட்டன.

(25). மீன்றிகழ் விசும்பிற் பாயிரு ளகல
ஈண்டுசெலன் மரபிற் றன்னியல் வழாஅ
துரவுச்சினந் திருகிய வுருகெழு ஞாயிறு
நிலவுத்திகழ் மதியமொடு நிலஞ்சேர்ந் தாஅங்
குடலருந் துப்பி னொன்றுமொழி வேந்தரை
அணங்கரும் பறந்தலை யுணங்கப் பண்ணிப்
பிணியுறு முரசங் கொண்ட காலை
நிலைதிரி பெறியத் திண்மடை கலங்கிச்
சிதைதலுய்ந் தன்றோ நின்வேல், செழிய!
... ...
மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்
ஒண்ணுதன் மகளிர் கைம்மை கூர
அவிரறல் கடுக்கு மம்மென்
குவையிருங் கூந்தல் கொய்தல் கண்டே.

திணை—வாகை; துறை அரசவாகை.
அவனைக் கல்லாடனார் பாடியது.

(26). நளிகட லிருங்குட்டத்து
வளிபுடைத்த கலம்போலக்
களிறுசென்று களனகற்றவும்
களனகற்றிய வியலாங்கண்
ஒளிறிலைய வெஃகேந்தி
அரசுபட வமருழக்கி
உரைசெல முரசுவெளவி

---

(25). 3. சினம்—வெம்மை.
3–4. ஞாயிறும் மதியமும் முறையே சேரனுக்கும் சோழனுக்கும் உவமைகள்.
5. வேந்தர்—சேரனும் சோழனும்.
6. உணங்க—இறக்க.
7. வென்றோர் தோற்றோருடைய முரசைக் கவர்தல் மரபு.
8. திரிபு எறிய. மடை—மூட்டுவாய்.
9. உய்ந்தன்று—தப்பியது; ஒ, அசை. செழிய—பாண்டிய.
11. மெய்—அறிவு. பூசல்—அழுகை ஆரவாரம்.
12. கைம்மை—வைதவ்ய விரதம்.
(14) கண்டு (9) வேல் சிதைத லுய்ந்தன்றெனக் கூட்டுக.
பகைவருடைய மனைவியர் கூந்தல் களைதலைக்கண்டு இரங்கி இவன் போர்செய்தலைத் தவிர்ந்தானென்பது கருத்து.

(26). 1. நளி—பெருமை. குட்டம்—ஆழம்.
3. அகற்ற—விசாலிக்கச்செய்ய; உம்மை, அசைநிலை.
5. ஒளிறுதல்—விளங்குதல்.

முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியின்
அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய!
ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்ற மாக
மன்ன ரேவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே!
நோற்றோர்; மன்றநின் பகைவர், நின்னொடு
மாற்றா ரென்னும் பெயர்பெற்
றாற்றா ராயினு மாண்டுவாழ் வோரே.

திணையும் துறையும் அவை.
அவனை மாங்குடிகிழார் பாடியது.

(27). சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்
நூற்றித ழலரி னிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை,
உரையும் பாட்டு முடையோர் சிலரே;
மரையிலை போல மாய்ந்திசி னோர் பலரே;
புலவர் பாடும் புகழுடையோர், விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
எய்துப வென்பதஞ் செய்வினை முடித்தெனக்
கேட்பல், எந்தை! சேட்சென்னி! நலங்கிள்ளி!

---

10. தொடி—வீரவளை. துடுப்பு—சட்டுவமென்னுங் கருவி. வல்சி—உணவு.
11. களம்வேட்ட—களவேள்விசெய்த.
12. கொள்கை—விரதம்.
13–5. அந்தணன் வேட்பித்ததும், அரசன் வேட்டதும் இவ்வடிகளால் அறியப்படுகின்றன வென்பர் நச்சினார்க்கினியர்.
11–8. செழிய, வேந்தே, ஆற்றாராயினும், ஆண்டுவாழ்வோராகிய நின்பகைவர் மாற்றாரென்னும் பெயர்பெற்று நோற்றோரெனக் கூட்டுக.
18. ஆண்டு—அவ்விடத்து; தேவலோகத்தில்.

(27). 2. அலரின்நிரை—பூவின் வரிசை.
3. விழுத்திணை—சிறந்தகுடி.
4. வீற்றிருத்தல்—கவலையின்றியிருத்தல்.
5. உரை—புகழ்.
6. மரை—தாமரை.
8. வானவூர்தி—விமானம்.
9. எய்துப—அடைவார்.
10. கேட்பல்—கேட்பேன்.

தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரு முலகத்து
வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை யாகுமதி; அருளிலர்,
கொடாமை வல்ல ராகுக;
கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே.

திணை—பொதுவியல்; துறை—முதுமொழிக்காஞ்சி.

சோழன்நலங்கிள்ளியை உறையூர்முதுகண்ணன்சாத்தனார் பாடியது.

(28). சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமும்
கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
மாவு மருளு முளப்பட வாழ்நர்க்
கெண்பே ரெச்ச மென்றிவை யெல்லாம்
பேதைமை யல்ல தூதிய மில்லென
முன்னு மறிந்தோர் கூறினர்; இன்னும்
அதன்றிற மத்தையா னுரைக்க வந்தது;
வட்ட வரிய செம்பொறிச் சேவல்
ஏனல் காப்போ ருணர்த்திய கூஉம்
கானத் தோர்நின் றெவ்வர்; நீயே,
புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை, தாமரைப்

---

15. வல்லார்—வல்லமையில்லார்.

17-9. அருளையும் ஈகையையும் உடையோர் வெல்வர்; அவை இல்லார் தோற்பரென்பது இவற்றின் கருத்து.

(28). 1. சிதடு—குருடு. பிண்டம்—கட்டைபோலப் பிறப்பது.

2. குறள்—குறிய உருவம். ஊம்—ஊமை.

3. மா—விலங்கு வடிவாகப் பிறப்பது. மருள்—அறிவின்றியே மயங்கியிருப்பது.

4. எச்சம்—உறுப்புக்குறைந்தது.

5. ஊதியம்—பயன்; என்றது அறம்பொருளின்பங்களை.

7. அத்தை, அசை.

8. சேவல்—காட்டுக்கோழிச்சேவல்.

9. ஏனல்—தினை. உணர்த்திய—துயிலெழுப்ப.

11. புறஞ்சிறை—வேலிப்புறம்.

12. புய்த்தெறி—பிடுங்கி எறிகின்ற. கழை—கோல்.

பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்த
ராடுகளங் கடுக்கு மகநாட் டையே;
அதனால், அறனும் பொருளு மின்பமு மூன்றும்
ஆற்றும், பெருமநின் செல்வம்;
ஆற்றா மைந்நிற் போற்றா மையே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

(30). செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்றும்
இனைத்தென் போரு முளரே; அனைத்தும்
அறிவறி வாராச் செறிவினை யாகிக்
களிறு கவுளடுத்த வெறிகற் போல
ஒளித்த துப்பினை யாதலில் வெளிப்பட
யாங்ஙனம் பாடுவர், புலவர்; கூம்பொடு
மிசைப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியுங்
கடற்பஃ றாரத்த நாடுகிழ வோயே.

திணை-பாடாண்டிணை; துறை-இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

---

14. அகநாடு—உள்நாடு. நாட்டை—நாட்டையுடையாய்.
16. ஆற்றும்—செய்வதற்குதவும்.
17. ஆற்றாமை—உதவாமை.

(30). 1. செலவு—வீதி.
2. பரிப்பு—நடை. மண்டிலம்—பூமியின் வட்டம்.
6. இனைத்து—இவ்வளவினது.
7. செறிவினை—அடக்கமுடையாய்.
8. கவுள்—கன்னம்.
9. துப்பு—வலி.
8–9. ஒருவன் எறிந்தகல்லை யானை தன்னுடைய கன்னத்தினுள்ளே மறைத்து வைத்திருக்கும்.
10. கூம்பு—பாய்மரம்.
11. பரம்—பாரம்.
12. புகார்—ஆற்றின்முகம். தகார்—தகுதியில்லாதோர்.
14. தாரம்—பண்டம்.

(31). சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல
இருகுடை பின்பட வோங்கிய வொருகுடை
உருகெழு மதியி னிவந்துசேண் விளங்க,
நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீயொல் லாயே;
நுதிமுக மழுங்க மண்டி யொன்னார்
கடிமதில் பாயுநின் களிறடங் கலவே;
போரெனிற் புகலும் புனைகழன் மறவர்,
காடிடைக் கிடந்த நாடுநனி சேய
செல்வே மல்லே மென்னார், கல்லென்
விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்
குணகடல் பின்ன தாகக் குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப
வலமுறை வருதலு முண்டென் றலம்வந்து
நெஞ்சநடுங் கவலம் பாயத்
துஞ்சாக் கண்ண, வடபுலத் தரசே.

திணை—வாகை; துறை—அரசவாகை; மழபுலவஞ்சியுமாம்.
அவனைக் கோவூர்கிழார் பாடியது.

(34). ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்

---

(31). 1. மரபு—முறைமை.
2. வழி—பின்.
3. இருகுடை—சேரபாண்டியருடைய குடைகள்.
5. இசைவேட்டம்—புகழ்வேட்கை.
6. பாசறை—பகைமேற் சென்றோருறைவிடம்.
9. புகலும்—விரும்பும்.
12. வேற்றுப்புலம்—பகைப்புலம்.
14. புணரி—அலை.
16. அவலம்—சோர்வு.
இச்செய்யுள், தலைவனது வெற்றியைக் கூறலின், அரசவாகையும் பகைவர் நாட்டை அவன் அழித்தமைகூறலின் மழபுலவஞ்சியுமாயிற்று.

(34). 2. கரு—கருப்பம்.
3. தப்பிய—பிழைத்த.
1–3. கோவதை முதலாயின வாக்காற்சொல்லவும் படாவாகலின், இங்ஙனம் கூறப்பட்டன,

வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
*அறம்பா டிற்றே, ஆயிழை கணவ!
காலை யந்தியு மாலை யந்தியும்
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கந் தேனொடு மயக்கிக்
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த வொக்கலொ
டிரத்தி நீடிய வகன்றலை மன்றத்துக்
கரப்பி லுள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
அமலைக் கொழுஞ்சோ றார்ந்த பாணர்க்
ககலாச் செல்வ முழுவதுஞ் செய்தோன்
எங்கோன் வளவன் வாழ்க வென்றுநின்
பீடுகெழு நோன்றாள் பாடே னாயிற்
படுபறி யலனே, பல்கதிர்ச் செல்வன்;
யானோ தஞ்சம்; பெருமவிவ் வுலகத்துச்
சான்றோர் செய்த நன்றுண் டாயின்,
இமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக்
கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும் வாழிய, பலவே.

திணை-பாடாண்டிணை; துறை-இயன்மொழி.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர்கிழார் பாடியது.

---

4. வழுவாய் மருங்கின் — வழுவை ஆராயுமிடத்து. கழுவாய் — பிராயச் சித்தம்.
6. செய்தி—செய்தநன்றி. கொன்றோர்—மறந்தோர். உய்தி—பிழைத்தல். இவ்வடியின்பொருளோடு 110-ஆம் திருக்குறளை ஒப்பிடுக.
8. அந்தி—இரவும் பகலும், பகலும் இரவும் சந்திக்குங்காலம்.
10. புன்கம்—சோறு.
11. சூடு—சுடுதலையுடைய இறைச்சி. கிழித்த—கிழித்துண்ட.
12. இரத்தி—இலந்தைமரம்.
13. பயிற்றி—பலகாற்கூறி.
14. அமலை—திரளை.
16. வளவன்—சோழன்.
17. பீடு—பெருமை. தாள்—முயற்சி; பாதமுமாம்.
18. படுபு—தோன்றுதல்.
19. தஞ்சம்—எளியன்; ஆகுபெயர்.
22. கொண்டல்—கீழ்காற்று.

* அறம்பாடின்றேயெனவும் பாடம்.

(35). **ந**ளியிரு முந்நீ ரேணி யாக
வளியிடை வழங்கா வானஞ் சூடிய
மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
அரசெனப் படுவது, நினதே, பெரும!
அலங்குகதிர்க் கனலி நால்வயிற் றோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்து கவர்பூட்டத்
தோடுகொள் வேலின் றோற்றம் போல
*ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது, நினதே யத்தை; ஆங்க
நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே!
நினவ கூறுவல், எனவ கேண்மதி;
அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே;
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பி னடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை,
வெயின்மறைக் கொண்டன்றோ? அன்றே, வருந்திய
குடிமறைப் பதுவே, கூர்வேல் வளவ!
வெளிற்றுப்பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்

---

(35). 1. நளி—செறிவு. ஏணி—எல்லை.
4. மூவர்—சேரசோழபாண்டியர்.
6. கனலி—சூரியன்.
7. வெள்ளி—சுக்கிரன்.
8. கவர்பு—பிரிந்துசென்று.
9. தோடு—தொகுதி.
10. கண்—கணு.
11. அத்தை, ஆங்க, அசைநிலைகள்.
13. நினவ—நினக்குரியன.
14. அறம்—அறக்கடவுள். நாட்டம்—ஆராய்ச்சி.
15. முறை—நீதி. பதன்—சமயம்.
16. உறை—நீர்த்துளி.
17. கொண்மூ—மேகம்; நீரைக்கொள்ளுவது.
20. கொண்டன்றோ—கொண்டதோ?
22. வெளிறு—இளமை. வீறு—வேறு.

* ஆடுகழைக்கரும்பென்றும் பாடம்.

களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை
யூன்றுசால் மருங்கி னீன்றதன் பயனே;
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
*இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்;
அதுநற் கறிந்தனை யாயி னீயும்
நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவர், அடங்கா தோரே.

திணை—அது; துறை—செவியறிவுறூஉ.

அவனை வெள்ளைக்குடிநாகனார்பாடிப் பழஞ்செய்க்கடன் வீடு கொண்டது.

(36). அடுநை யாயினும் விடுநை யாயினும்
நீயளந் தறிதிநின் புரைமை, வார்கோற்
செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடுந்
தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்ல னரஞ்செ யவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலி னிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறுங்

25. உழுபடை—கலப்பை.
27. வாரி—விளைவு.
30. நற்கு—நன்கு.
31. நொதுமலாளர்—அயலார். பொதுமொழி—உறுதியில்லாத வார்த்தை.
32. பகடு—எருமைக்கடா. புறந்தருநர்—பாதுகாப்போர்.

(36). 1. அடுநை—கொல்வாய்.
2. புரைமை—உயர்ச்சி.
3. அரி - சிலம்பின் உள்ளிடும் பருக்கைக்கல்.
2–3. வார்கோற் குறுந்தொடி—நீண்டகோற்றொழிலாற் செய்யப்பட்ட குறியவளை.
4. கழங்கு—கழற்காய். தெற்றி—திண்ணைபோல உயர்ந்த மணல்மேடு.
5. ஆன்பொருனை—ஆன்பொருந்தமென்னும் ஆறு.
7. கை—காம்பு.
8. வீ—மலர். புலம்ப—தனிப்ப. காவு—சோலை.

* இயற்கையல்லதென்றும் பாடம்.

கடிமரந் தடியு மோசை, தன்னூர்
நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப,
ஆங்கினி திருந்த வேந்தனொ டீங்குநின்
சிலைத்தார் முரசங் கறங்க
மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே.

திணை—வஞ்சி; துறை—துணைவஞ்சி.
அவன் கருவூர் முற்றியிருந்தானை ஆலத்தூர்கிழார் பாடியது.

(37). நஞ்சுடை வாலெயிற் றைந்தலை சுமந்த
வேக வெந்திற னாகம் புக்கென
விசும்புதீப் பிறப்பத் திருகிப் பசுங்கொடிப்
பெருமலை விடரகத் துருமெறிந் தாங்குப்
புள்ளுறு புன்கண் டீர்த்த வெள்வேற்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக!
கராஅங் கலித்த குண்டுகண் ணகழி
இடங்கருங் குட்டத் துடன்றொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉங்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மன் மூதூர்
வம்பணி யானை வேந்தகத் துண்மையின்
நல்ல வென்னாது சிதைத்தல்
வல்லையா னெடுந்தகை செருவத் தானே.

---

9. கடிமரம்—காவன்மரம். தடியும்—வெட்டுகின்ற. ஊர்—இங்கே கருவூர்.
10. கடிமனை—அரண்மனை; காவலையுடைய வீடு.
11. இனிதிருந்தவென்பது குறிப்புமொழி. வேந்தன்—சேரன்.
12. சிலை—இந்திரவில்.
போரை ஒழியவேண்டுமென்பது இப்பாட்டின் கருத்து.

(37). 1. ஐந்தலை—ஐந்துபடம் பொருந்தியதலை.
2. வேகம்—கோபம். திறல்—வல்லமை. புக்கென—புகுந்ததாக.
4. விடரகத்து—குகையில். உருமு—இடி.
5. புள்—இங்கே புறா.
6. செம்பியன்—சிபிசக்கரவர்த்தியின் மரபிற் பிறந்தவன்.
7. கராம்—ஒருசாதி முதலை.
8. இடம் கரு குட்டத்து—இடங்கரிதாகிய ஆழத்தின்கண்.
9. யாமம் கொள்பவர்—இடையாமத்து ஊர்காப்பவர்.
10. இலஞ்சி—மடு.
11. புரிசை—மதில். செம்மல்—தலைமை.
12. வம்பு—கச்சு.
(4) உருமெறிந்தாங்குச் (13) சிதைத்தல்.
14. செருவத்தான்—போரின்கண்.

* திணை—வாகை; துறை—அரசவாகை.
அவனை † மாறோக்கத்துநப்பசலையார் பாடியது.

....

(51). நீர்மிகிற் சிறையு மில்லை, தீமிகின்
மன்னுயிர் நிழற்று நிழலு மில்லை,
வளிமிகின் வலியு மில்லை; ஒளிமிக்
கவற்றோ ரன்ன சினப்போர் வழுதி,
தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன் போரெதிர்ந்து
கொண்டி வேண்டுவ னாயிற் கொள்கெனக்
கொடுத்த மன்னர் நடுக்கற் றனரே;
அளியரோ வளியரவ னளியிழந் தோரே;
நுண்பல் சிதலை யரிதுமுயன் றெடுத்த
செம்புற் றீயல் போல
ஒருபகல் வாழ்க்கைக் குலம்வரு வோரே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதியை ‡ ஐயூர்முடவனார் பாடியது.

....

(53). முதிர்வா ரிப்பி முத்த வார்மணற்
கதிர்விடு மணியிற் கண்பொரு மாடத்
திலங்குவளை மகளிர் தெற்றி யாடும்
விளங்குசீர் விளங்கில் விழுமங் கொன்ற
களங்கொள் யானைக் கடுமான் பொறைய!
விரிப்பி னகலுந் தொகுப்பி னெஞ்சும்,

---

(51). 1. சிறை—காவல்.
4. அவற்றோரன்ன—அவற்றை ஒத்த; ஓர்—அசை.
5. தமிழ்—தமிழ்நாடு.
6. கொண்டி—திறை.
8. அளியரோ அளியர்—மிக இரங்கத்தக்கார்; இது இரங்கற்குறிப்புத்தோன்ற அடுக்கி நின்றது. அளி—அருள்.
9. சிதலை—கறையான்.
10. ஈயல்—ஈசல்.
11. உலம்வருவோர்—சுழலுவோர்.
(53). 1. இப்பி—சிப்பி.
3. தெற்றி ஆடும்—திண்ணையில் விளையாடும்; தெற்றி—கைகோத்தென்றுமாம்.
4. விளங்கில்—ஒரூர். விழுமம்—துன்பம்.
5. போர்க்களம் வென்றவர்க்குரியது. பொறைய—சேர.

* திணை—உழிஞை; துறை—குற்றுழிஞையென்றும் பிரதிபேதமுண்டு.
† மாறோகமென்றும் பிரதிபேதமுண்டு.
‡ ஐயூர்கிழாரென்றும் பிரதிபேதமுண்டு.

மம்மர் நெஞ்சத் * தெம்மனோர்க் கொருதலை
கைம்முற் றலநின் புகழே; என்றும்
ஒளியோர் பிறந்தவிம் மலர்தலை யுலகத்து
வாழே மென்றலு மரிதே, தாழாது
செறுத்த † செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயி னன்றும னென்றநின்
ஆடுகொள் வரிசைக் ‡ கொப்பப்
பாடுவன் மன்னாற் பகைவரைக் கடப்பே.

திணையும் துறையும் அவை.

சேரன் மாந்தரஞ்சேர லிரும்பொறையைப் பெருந்திலிளங்கீரனர் பாடியது.

(54). எங்கோ னிருந்த கம்பலை மூதூர்
உடையோர் போல விடையின்று குறுகிச
செம்ம லுளவை யுண்ணுந்து புகுதல்
எம்மன வாழ்க்கை யிரவலர்க் கெளிதே;
இரவலர்க் கெண்மை யல்லது புரவெதிர்ந்து
வான நாண வரையாது சென்றோர்க்
கானு தீயுங் கவிகை வண்மைக்
கடுமான் கோதை துப்பெதிர்ந் தெழுந்த

7. மம்மர்—மயக்கம். ஒருதலை—நிச்சயமாக.
8. கைம்முற்றல—முடியா.
9. ஒளியோரென்றது, கபிலர் முதலாயினோரை.
11. செறுத்த—பலபொருளையு மடக்கிய.
12. வெறுத்த கேள்வி—மிக்க கேள்வி.
10–13. இவ்வடிகளால் கபிலரது கல்விச்சிறப்பும் அரசன் அவரிடத்து வைத்திருந்த மதிப்பு முதலியனவும் நன்கு விளங்குகின்றன.
14. ஆடு—வெற்றி.
15. கடப்பு—வெல்லுதல்.
(54). 1. கம்பலை—ஓசை.
2. இடை இன்று குறுகி—சமயம்பாராமலே அணுகி.
4. எம்அன்ன—எம்மைப்போன்ற.
5. எண்மை—எளிமை. புரவு எதிர்ந்து—பாதுகாத்தலை ஏற்றுக்கொண்டு.
7. கவிகை ஆனுதாயும் வண்மை எனக்கூட்டுக; கவிகை—இடக்கவிந்த கையால்.
8. கோதை துப்பு எதிர்ந்து—சேரனது வலியோடு மாறுபட்டு.

* எமக்கோவொருநிலையென்றும் பாடம்.
† செய்யுட்செய்த செந்நாவென்றும் பாடம்.
‡ ஏற்பவென்றும் பாடம்.

நெடுமொழி மன்னர் நினைக்குங் காலைப்
பாசிலைத் தொடுத்த வுவலைக் கண்ணி
மாசு ணுடுக்கை மடிவா யிடையன்
சிறுதலை யாயமொடு குறுகல் செல்லாப்
புலிதுஞ்சு வியன்புலத் தற்றே,
வலிதுஞ்சு தடக்கை யவனுடை நாடே.

திணையும் துறையும் அவை.

சேரமான் குட்டுவன்கோதையைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரன் பாடியது.

(55). ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றிப்
பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கு மொருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற!
கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகன்மறவருமென
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்;
அதனால், நமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணங்கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையு மூன்றும்

---

10. உவலைக்கண்ணி—தழைக்கண்ணி.
12. சிறுதலை ஆயம்—ஆட்டுக்கூட்டம்.
13, 14. துஞ்சுதல்—தங்குதல்.
(55). 1. ஞாண்—நாண். கொளீஇ—பொருத்தி.
2. மூவெயில்—மூன்றுமதில்; திரிபுரம்.
4. காமர்—அழகு.
8. கதழ்பரிய—விரைந்த செலவினையுடைய.
10. நெஞ்சு—மனவலி. புகல்மறவர்—போரைவிரும்பும் வீரர்.
16. சாயல்—மென்மை.
17. வானம்—மேகம்.

உடையை யாகி யில்லோர் கையற
நீ நீடு வாழிய; நெடுந்தகை! தாழ்நீர்
வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
நெடுவே ணிலைஇய காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவா ழெக்கர் மணலினும் பலவே.

திணை—பாடாண்டிணை; துறை—செவியறிவுறூஉ.

பாண்டியன் இலவந்திப் பள்ளித்துஞ்சிய நன்மாறனை மதுரை மருதனிளநாகனார் பாடியது.

....

(57). வல்லா ராயினும் வல்லுந ராயினும்
புகழ்த லுற்றோர்க்கு மாயோ னன்ன
உரைசால் சிறப்பிற் புகழ்சான் மாற!
நின்னொன்று கூறுவ துடையே னென்னெனிற்
பிறர்நாடு கொள்ளுங் காலை யவர்நாட்
டிறங்குகதிர்க் கழனிநின் னிளையருங் கவர்க;
நனந்தலைப் பேரூ ரெரியு நக்க;
மின்னுநிமிர்ந் தன்னநின் னொளிறிலங்கு நெடுவேல்
ஒன்னார்ச் செகுப்பினுஞ் செகுப்ப வென்னதூஉம்
கடிமரந் தடித லோம்புநின்
நெடுநல் யானைக்குக் கந்தாற் றாவே.

திணை—வஞ்சி; துறை—*துணைவஞ்சி.

அவனைக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

(58). நீயே, தண்புனற் காவிரிக் கிழவனை; இவனே,
முழுமுத றொலைந்த கோளி யாலத்துக்

---

18. கையற—இல்லையாக.
19. தாழ்நீர்—தாழ்ந்த நீரையுடைய கடல்.
23. வடுஆழ்—வடுஅழுந்தின.

(57). 3. சிறப்பு—தலைமை.
4. நின்ஒன்று—நினது காரியமொன்றை.
6. இறங்குகதிர்—வளைந்தகதிர். இளையர்—வீரர்.
7. நனந்தலை—அகன்ற இடம். எரியும்நக்க—தீயும் சுடுக.
10, 11. கடிமரங்களை இப்பொழுது வெட்டாவிடின் அவை பின்பு யானைக்கந் துக்கு உதவுமென்றபடி.

(58). 2. கோளி—பூவாது காய்க்குமரம். ஆலம்—ஆலமரம்.

* இச்செய்யுள் கொற்றவள்ளையென்பர் நச்சினார்க்கினியர் [தொல். பொரு. புறத்திணையியல், 34-ஆம் சூத்திரவுரை].

கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ
இளைய தாயினுங் கிளையரா வெறியும்
அருநரை யுருமிற் பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவ ரேறே; நீயே,
அறந்துஞ் சுறந்தைப் பொருநனை; இவனே,
நெல்லு நீரு மெல்லார்க்கு *மெளிய
வரைய சாந்தமுந் திரைய முத்தமும்
இமிழ்குரன் முரச மூன்றுட னாளுந்
தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே;
பானிற வுருவிற் பனைக்கொடி யோனும்
நீனிற வுருவி னேமி யோனுமென்
றிருபெருந் தெய்வமு முடனின் றாஅங்
குருகெழு தோற்றமோ டுட்குவர விளங்கி
இன்னீ ராகலி னினியவு முளவோ
இன்னுங் கேண்மினும் மிசைவா ழியவே;
ஒருவீ ரொருவீர்க் காற்றுதிர்; இருவீரும்
உடனிலை திரியீ ராயி னிமிழ்திரைப்
பௌவ முடுத்தவிப் பயங்கெழு மாநிலங்
கையகப் படுவது பொய்யா காதே;
அதனால், நல்ல போலவு நயவ போலவும்

---

3. வீழ் பொறுத்தாங்கு—விழுதுதாங்கினாற்போல.
4. துளங்கல் செல்லாது—தளராது.
7. அரு நரை உருமின்—பொறுத்தற்கரிய வெள்ளிய இடிபோல. பொருநர்—பகைவர்.
8. பஞ்சவர்—பாண்டியர்.
9. உறந்தைப் பொருநனை—உறையூரரசனாகவுள்ளாய்; ஐ, முன்னிலை விளக்க வந்தது.
11. சாந்தம்—சந்தனம்.
14. பனைக்கொடியோன்—பலராமன்.
15. நேமியோன்—கண்ணபிரான்.
17. உரு, உட்கு—அச்சம்.
19. நும்இசை—உமது கீர்த்தி.
20. ஆற்றுதிர்—உதவுவீராக.
21. திரியீர்—வேறுபடீர்.
21–2. இமிழ்திரைப்பௌவம்—ஒலிக்கும் அலைகளையுடைய கடல்.
24. நயவ—நியாயத்தையுடையன.

* எளியவெனவென்றும் பாடம்.

தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காத னெஞ்சினும் மிடைபுகற் கலமரும்
ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளா
தின்றே போல்கநும் புணர்ச்சி, வென்றுவென்
றடுகளத் துயர்கநும் வேலே, கொடுவரிக்
கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே.

திணை–பாடாண்டிணை; துறை–உடனிலை.

சோழன்குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தாரைக் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

(59). ஆரந் தாழ்ந்த வணிகிளர் மார்பிற்
றாடோய் தடக்கைத் தகைமாண் வழுதி!
வல்லை மன்ற, நீநயந் தளித்தல்;
தேற்றாய், பெரும! பொய்யே; என்றும்
காய்சினந் தவிராது கடலூர் பெழுதரும்
ஞாயி றனையைநின் பகைவர்க்கு,
திங்க ளனையை; எம்ம னோர்க்கே.

திணை–அது; துறை–பூவை நிலை.

பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறனை மதுரைக்கூல வாணிகன் சீத்தலைச்சாத்தனார் பாடியது.

....

(63). எனைப்பல் யானையு மம்பொடுதுளங்கி
விளைக்கும்வினை யின்றிப் படையொழிந் தனவே;
விறற்புகழ் மாண்ட புரவி யெல்லாம்
மறத்தகை மைந்தரொ டாண்டுப்பட் டனவே;
தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்

---

25. நெறிய—ஒழுக்கமுடையன.
26. நும்மிடைபுகற்கு—நும் இடையே புகுவதற்கு.
27. பொதுமொழி—சிறப்பில்லாத சொல்.
30. கோள்மா—புலி.
(59). 3. வல்லை—வல்லாய்.
4. தேற்றாய்—தெளியாய்.
ஞாயிற்றோடும் திங்களோடும் உவமித்தமையின், இது பூவைநிலை.
(63). 1. துளங்கி—கலங்கி.
2. வினை—போர்.
5. சான்றோர்—போரிற்கு அமைந்த வீரர்.

தோல்கண் மறைப்ப வொருங்குமாய்ந் தனரே;
விசித்துவினை மாண்ட மயிர்க்கண் முரசம்
பொறுக்குந ரின்மையி னிருந்துவிளிந் தனவே;
சாந்தமை மார்பி னெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தனர்; இனியே
என்னா வதுகொ றானே, கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவன் முக்கித் தண்புனற் பாயும்
யாண ரறாஅ வைப்பிற்
காமர் கிடக்கையவ ரகன்றலை நாடே.

திணை—தும்பை; துறை—தொகைநிலை.

சேரமான் குடக்கோநெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருதுவீழ்ந்தாரைப் பரணர் பாடியது.

(64). நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லா மோதில்; சில்வளை விறலி!
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
* விசும்பா டெருவை பசுந்தடி தடுப்பப்
பகைப்புல மரீஇய தகைப்பெருஞ் சிறப்பிற்
குடுமிக் கோமாற் கண்டு
நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே.

திணை—பாடாண்டிணை; துறை—விறலியாற்றுப்படை.

பாண்டியன் பல்யாகசாலைமுதுகுடுமிப் பெருவழுதியை நெடும்பல்லியத்தனார் பாடியது.

(65). மண்முழா மறப்பப் பண்யாழ் மறப்ப,
இருங்கட் குழிசி கவிழ்ந்திழுது மறப்ப,
சுரும்பார் தேறல் சுற்ற மறப்ப,
உழவ ரோதை மறப்ப, விழவும்

---

12. ஆம்பல் வள்ளி தொடி—ஆம்பற்கொடியின்தண்டாற் செய்தவளை.
13. முக்கி—வாய்நிரம்ப உண்டு.
(15) நாடு (11) என்னாவதுகொல்.
(64). 1. ஆகுளி—சிறுபறை. பதலை—ஒருதலைமாக்கிணை யென்னும்பறை.
2. செல்லாமோ—செல்வேம்; தில், விழைவின்கண் வந்த இடைச்சொல்.
4. எருவை—தலைவெளுத்து உடல் சிவந்திருக்கும் பருந்து. தடி—மாம்ஸம்.
7. புற்கை—புல்லரிசிக்கூழ்.
(65). 1. முழாமண்ணை மறப்ப என்க.
2. குழிசி—பானை. இழுது—நெய்.

* விசும்போடெருவையென்றும் பாடம்.

அகலு ளாங்கட் சீறூர் மறப்ப,
உவவுத் தலைவந்த பெருநா ளமயத்
திருசுடர் தம்மு ணோக்கி யொருசுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்குத்
தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
புறப்புண் ணாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தன னீங்கு
நாள்போற் கழியல, ஞாயிற்றுப் பகலே.

திணை-பொதுவியல்; துறை-கையறுநிலை.
சேரமான் * பெருஞ்சேரலாதன் சோழன் கரிகாற்பெருவளத்தானோடு பொருது புறப்புண்ணாணி வடக்கிருந்தானைக் கழாத்தலையார் பாடியது.

(66). நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக!
களியியல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர்க் கடந்தநின் னாற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினு நல்ல னன்றே?
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே.

திணை-வாகை; துறை-அரசவாகை.
சோழன் கரிகாற்பெருவளத்தானைவெண்ணிக்குயத்தியார் பாடியது.

(67). அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
ஆடுகொள் வென்றி யடுபோ ரண்ணல்
நாடுதலை யளிக்கு மொண்முகம் போலக்
கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கும்
மையன் மாலையாங் கையறு பினையக்

---

11. வடக்கிருத்தல்—துறவுள்ளத்தோடு நியமமுற்று புண்ணியதிசையாகிய வடக்கே சென்றிருத்தல்.
(66). 2. வளி—காற்று. ஒரு சோழன் காற்றை ஏவல்கொண்டமை, கலிங்கத்துப் பரணி, இராச பாரம்பரியம், 16–ஆம் கண்ணியாலும் விளங்கும்.
6. வெண்ணி—சோழநாட்டில் உள்ள ஓரூர்.
(67). 1. சேவல், விளி.
2. ஆடு—கொல்லுதல்.
5. கையறுபு—செயலற்று.

* பெருந்தோளாதனென்றும் பிரதிபேதமுண்டு.

குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயி னிடையது
சோழநன் னாட்டுப் படினே, கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருங்கோக் கிள்ளி கேட்க பிசிரோ
ராந்தை யடியுறை யெனினே, மாண்டநின்
இன்புறு பேடை யணியத்தன்
அன்புறு நன்கல நல்குவ னினக்கே.

திணை—பாடாண்டிணை; துறை—இயன்மொழி.
கோப்பெருஞ்சோழனைப் பிசிராந்தையார் பாடியது.

....

(71). மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப, அவரை
ஆரம ரலறத் தாக்கித் தேரோ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக;
அறனிலை திரிபா வன்பி னவையத்துத்
திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக; மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனும் மன்னெயி லாந்தையும் உரைசால்
அந்துவஞ் சாத்தனும் ஆத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறரும்

---

6. குமரி—கன்னியாகுமரி. அயிரை—ஒருமீன்.
7. வடமலை—இமயமலை.
8. கோழி—உறையூர்.
9. குறும்பறை—குறிய இறகையுடைய பேடையோடு.
10. வாயில்விடாது — வாயில்காவலர்க்குச் சொல்லிவிடாமல். வாயில், ஆகுபெயர்.
11. பிசிர்—ஒரூர்.
12. அடியுறை—அடியேனென்பதுபோன்ற வணக்கமொழி.
(71). 1. மடங்கல்—சிங்கம்.
9. மெலிகோல்—கொடுங்கோல்; 'ஆகுக' என்பதைப் பின்னும் கூட்டுக.
11. மையல்—ஒரூர்.
12, எயில்—ஒரூர்,

கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை யிழுக்கியா னொன்றோ,
மன்பதை காக்கு நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.

திணை—காஞ்சி; துறை—வஞ்சினக்காஞ்சி.
ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன்பாட்டு.

(72). **ந**குதக் கனரே நாடுமீக் கூறுநர்,
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக;
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை;
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

---

16. ஒன்றோ, எண்ணிடைச்சொல்; இதை முன்னும் பின்னுங் கூட்டுக.
19. பிறக்கு—பிறப்பேனாகுக.
(72). 1. நகுதக்கனர்—நம்மாற் சிரிக்கத்தக்கார்.
2. உளைய—வெறுப்ப.
3. இரட்டும்—மாறிஒலிக்கும்.
6. செருக்கி—பெருகி.
10. செல்நிழல்.
12. குடி—குடிமக்கள்.
14. மாங்குடிமருதன் — ஒரு சங்கப்புலவர்; இவர் மதுரைக்காஞ்சி யாசிரியர்.
17. புரப்போர்—பாதுகாக்கப்படுவோர்.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் பாட்டு.

....

(74). குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்,
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே.

திணை—பொதுவியல்; துறை—முதுமொழிக்காஞ்சி.

சேரமான்கணைக்காலிரும்பொறை சோழன்செங்கணானொடு போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற்கோட்டத்துச் சிறையிற்கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப்பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சியபாட்டு.

(75). மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
பாறர வந்த பழவிறற் றாயம்
எய்தின மாயி னெய்தினஞ் சிறப்பெனக்
குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று, மன்னே;
மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்றாள்
விழுமியோன் பெறுகுவ னாயி னாழ்நீர்
அறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்று

---

(74). 1. இறப்பினும் — வயிற்றிலே இறந்து பிறந்தாலும். ஊன்தடி — தசைப் பிண்டம்.
3. தொடர்—சங்கிலி. ஞமலி—நாய். இரீஇய—இருத்திய.
4. கேளல் கேளிர்—சிறைக்கோட்டம் காவலர். சிறுபதம்—தண்ணீர்.
5. மதுகை—வலி.
6. அளவை—அளவையுடையார்.
7. ஈன்மரோ—பெறுவாரோ?

(75). 1. உய்த்தென—கொண்டுபோயிற்றாக.
2. பால்—விதி. தாயம்—அரசுரிமை.
4. கூர்—மிகுதி.
5. சிறந்தன்று—கனத்தது. மன், ஆக்கப்பொருளில்வந்த இடைச்சொல்.
6. மதன்—மன எழுச்சி.
8. கிடை—நெட்டி.
9. என்றூழ்—வெயில். வறல்—வற்றியசுள்ளி.

நொய்தா லம்ம, தானே; மையற்று
விசும்புற வோங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்த ரரசுகெழு திருவே.

திணை–அது; துறை–பொருண்மொழிக்காஞ்சி.
சோழன் நலங்கிள்ளிபாட்டு.

(76). ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை;
இன்றி னூங்கோ கேளலம்; திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை யொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி
ஒலியன் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்டக
நாடுகெழு திருவிற் பசும்பூட் செழியன்
பீடுஞ் செம்மலு மறியார் கூடிப்
பொருது மென்று தன்றலை வந்த
புனைகழ லெழுவர் நல்வல மடங்க,
ஒருதா னாகிப் பொருதுகளத் தடலே.

திணை–வாகை; துறை–அரசவாகை.
பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர்கிழார் பாடியது.

(77). கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பி னொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்,

---

10. நொய்து—கனமில்லாதது. அம்ம, அசைநிலை.
(76). 1. தொலைதல்—தோற்றல்.
3. ஊங்கு—முன்.
5. உழிஞைப்பவர்—ஒருவகைக் கொடி; இதன் பூ பகைவருடைய கோட்டையைச் சூழ்வோர் அணிந்துகொள்வது.
8. பாடு—ஓசை. கிணை—போர்ப்பறை.
10. செம்மல்—தலைமை.
12. எழுவர்—எழரசர்.
(77). 3. நெடுங்கொடியாகிய உழிஞை.
4. சாபம்—வில்.

யார்கொல்? வாழ்கவவன் கண்ணி; தார்பூண்டு
தாலி களைந்தன்று மிலனே, பால்விட்
டயினியு மின்றயின் றனனே, வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே, அவரை
அழுந்தப் பற்றி யகல்விசும் பார்ப்பெழக்
கவிழ்ந்து நிலஞ்சேர வட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினு மிலனே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

(78). வணங்குதொடைப் பொலிந்த * வலிகெழு நோன்றாள்
அணங்கருங் கடுந்திற லென்னை முணங்குநிமிர்ந்
தளைச்செறி யுழுவை யிரைக்குவந் தன்ன
மலைப்பரு மகல மதியார் சிலைத்தெழுந்து
விழுமியம் பெரியம் யாமே நம்மிற்
பொருநனு மிளையன் கொண்டியும் பெரிதென
எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
ஈண்டவ ரடுதலு மொல்லா னாண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூ ராங்கட்
டெண்கிணை கறங்கச்சென் றாண்டட் டனனே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

(79). மூதூர் வாயிற் பனிக்கய மண்ணி
மன்ற வேம்பி னொண்குழை மலைந்து

---

7. தாலி—ஐம்படைத்தாலியென்னும் ஆபரணம்.
13. மலிந்தன்று—மிகுத்தது.
(78). 1. தொடை—சந்து.
2. என் ஐ—எனது தலைவன்.
6. பொருநன்—பொருபவன். கொண்டி—கொள்ளை.
7. வம்பமள்ளர்—நிலையில்லாத வீரர்.
11. தந்தையென்பது, பன்மையில் ஒருமைவந்த வழுவமைதி.
(79). 1. கயம்—குளம். மண்ணி—முழுகி.
2. குழை—தளிர்.

* மதனுடை நோன்றாளென்றும் பாடம்.

தெண்கிணை முன்னர்க் களிற்றி னியலி
வெம்போர்ச் செழியனும் வந்தனன்; எதிர்ந்த
வம்ப மள்ளரோ பலரே;
எஞ்சுவர் கொல்லோ பகறவச் சிறிதே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் **பாடியது.**

(80). **இ**ன்கடுங் கள்ளி னாமூ ராங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகான் மார்பொதுங் கின்றே யொருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே;
நல்கினு நல்கா னாயினும் வெல்போர்ப்
போராருந் தித்தன் காண்கதி லம்ம!
பசித்துப் பணைமுயலும் யானை போல
இருதலை யொசிய வெற்றிக்
களம்புகு மல்லற் கடந்தடு நிலையே.

திணை—தும்பை; துறை—எருமைமறம்.

சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி முக்காவனாட்டு ஆமூர் மல்லனைப் பொருது அட்டு நின்றானைச் சாத்தந்தையார் பாடியது.

....

(106). **ந**ல்லவுந் தீயவு மல்ல, குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு முடையவை
கடவுள் பேணே மென்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினுங்
கடவன் பாரி கைவண் மையே.

திணை—பாடாண்டிணை; துறை—இயன்மொழி.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

(107). **பா**ரி பாரி யென்றுபல வேத்தி

---

3. இயலி—நடந்து
6. பகல்—பகற்பொழுது
(80). 1. கடுங்கள்—அழன்றகள்.
2. மதவலி—மிக்கவலி.
3. ஒதுங்கின்று—ஒதுங்கியது.
6. தித்தன்—உறையூரிலிருந்த ஒரு சோழன்.
7. பணை—மூங்கில்.
(106). 2. எருக்கம்—எருக்கம்பூ.
3. பேணேம்—விரும்பேம்.
4. மடவர்—அறிவிலார். மெல்லியர்—அற்பகுணமுடையவர்.
5. பாரி—கடையெழுவள்ளல்களில் ஒருவன்,

ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்;
பாரி யொருவனு மல்லன்,
மாரியு முண்டீண் டுலகு புரப்பதுவே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

....

(121). ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர், பரிசின் மாக்கள்;
வரிசை யறிதலோ வரிதே, பெரிதும்
ஈத லெளிதே, மாவண் டோன்றல்!
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி, புலவர் மாட்டே.

திணை–பொதுவியல்; துறை–பொருண்மொழிக்காஞ்சி.
மலையமான் திருமுடிக்காரியை அவர் பாடியது.

....

(124). நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குவ ரல்லர், நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே.

திணை–பாடாண்டிணை; துறை–இயன்மொழி.
அவனை அவர் பாடியது.

....

(130). விளங்குமணிக் கொடும்பூ ணாஅய்! நின்னாட்
டிளம்பிடி யொருசூல் பத்தீ னும்மோ?
நின்னுநின் மலையும் பாடி வருநர்க்
கின்முகங் கரவா துவந்துநீ யளித்த
அண்ணல் யானை யெண்ணிற் கொங்கர்க்
குடகட லோட்டிய ஞான்றைத்
தலைபெயர்த் திட்ட வேலினும் பலவே.

---

(121). 3. வரிசை—தரம்.
4. மாவண்டோன்றல்—பெரியகைவண்மையுடைய தலைவ!
5. நற்கு அறிந்தனையாயின்—நன்றாக அறிந்தாயாயின்.

(124). 1. தட்ப—தடுக்க.
2. பதன்—சமயம்.
4. பாடு ஆன்று—ஓசைநிறைந்து.

(130). 1. ஆய்—கடையெழுவள்ளல்களில் ஒருவன்.
5. கொங்கர்—கொங்குநாட்டினரை.

திணையும் துறையும் அவை.
ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

(131). மழைக்கணஞ் சேக்கு மாமலைக் கிழவன்,
வழைப்பூங் கண்ணி வாய்வா ளண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ?
களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

....

(134). இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வாணிகன் ஆயலன், பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

....

(142). அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே.

திணையும் துறையும் அவை.
வையாவிக்கோப் பெரும்பேகனைப் பரணர் பாடியது.

....

(149.) நள்ளி! வாழியோ; நள்ளி! நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி

---

(131). 1. சேக்கும்—உறங்கும்.
2. வழை—சுரபுன்னை. அண்டிரனென்பது, ஆயின்பெயர்.

(134). 2. அறவிலை வாணிகன்—பொருளை விலையாகக்கொடுத்து அதற்கு அறங்கொள்ளும் வாணிகன்.

(142). 4. கடாஅயானை—மதயானை. பேகன்—கடையெழுவள்ளல்களில் ஒருவன்.
6. படைமடம்—வீரரல்லாதார்மேலும், முதுகிட்டார்மேலும், புண்பட்டார்மேலும், மூத்தார்மேலும், இளையார்மேலும் செல்லுதல்.

(149). 1. நள்ளி—கடையெழுவள்ளல்களில் ஒருவன்.
2. மருதம்—காலைப்பண்.
3. கைவழி—யாழ். செவ்வழி—மாலைப்பண்.

வரவெமர் மறந்தனர்; அதுநீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே.

திணையும் துறையும் அவை.
* கண்டிரக்கோப் † பெருநள்ளியை வன்பரணர் பாடியது.

....

(162). இரவலர் புரவலை நீயு மல்லை;
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்;
இரவல ருண்மையுங் காணினி; இரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி; நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்;
கடுமான் றோன்றல்! செல்வல்; யானே.

திணை—பாடாண்டிணை; துறை—பரிசில்விடைப்பாற்பட்டது.

பெருஞ்சித்திரனுர் வெளிமானுழைச் சென்றாக்கு வெளிமான் துஞ்சுவான் தம்பியைப் பரிசில் கொடுவென, அவன் சிறிதுகொடுப்பக் கொள்ளாதுபோய்க் குமணனைப்பாடிக் குமணன் பகடுகொடுப்பக் கொணர்ந்து நின்று வெளிமானூர்க்கடிமரத்து யாத்துச்சென்று அவர் சொல்லியது.

(163). நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி; மனைகிழ வோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமண னல்கிய வளனே.

திணை—அது; துறை—பரிசிற்பாற்பட்டது.

பெருஞ்சித்திரனுர் குமணனைப்பாடிப் பரிசில் கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது.

....

---

* கண்டிற்கோவென்றும் பிரதிபேதமுண்டு.
† பெருநற்கிள்ளியென்றும் பிரதிபேதமுண்டு.

(162). 1. புரவலை—காத்தலையுடையாய்.
(163). 3. கடும்பு—சுற்றம். யாழ, அசைநிலை.
4. குறியெதிர்ப்பை—கைம்மாற்று.
6. வல்லாங்கு—வல்லபடி.
8. முதிரம்—குமணன்மலை.
9. குமணன்—ஓர் உபகாரி.

(182). உண்டா லம்மவிவ் வுலகம்; இந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே, முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர், பழியெனின்,
உலகுடன் பெறினுங் கொள்ளலர், அயர்விலர்,
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.

திணை—பொதுவியல்; துறை—பொருண்மொழிக்காஞ்சி.
கடலுண்மாய்ந்த இளம்பெரு வழுதிபாட்டு.

(183). உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே;
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயு மனந்திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.

திணையும் துறையும் அவை.
பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாட்டு.

(184). காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்;
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே

---

(182). This poem was composed by a Pāṇḍiyan Prince of Madura whose title was Iḷam-Peru-Vaṛuthi. Of this young Prince no other trace is to be found, except a tradition that he was drowned in the sea. The poem in Tamil is exceedingly beautiful.—*Dr. Pope.*

1. இந்திரர்—தேவர்.
(9) உண்மையான் (1) இவ்வுலகம் உண்டென்க.

(183). 2. பிற்றைநிலை—வழிபாட்டுநிலை.
8. நாற்பால்—நாற்குலம்.

கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே.

திணையும் துறையும் அவை.
அறிவுடை நம்பியுழைச்சென்ற **பிசிராந்தையார் பாடியது.**

....

(186). நெல்லு முயிரன்றே, நீரு முயிரன்றே,
மன்ன னுயிர்த்தே, மலர்தலை யுலகம்;
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.

திணையும் துறையும் அவை.
மோசிகீரனார் பாடியது.

(187). நாடா கொன்றோ, காடா கொன்றோ,
அவலா கொன்றோ, மிசையா கொன்றோ,
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை; வாழிய நிலனே.

திணையும் துறையும் அவை.
ஔவையார் பாடியது.

(188). படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே.

திணையும் துறையும் அவை.
பாண்டியன் அறிவுடை **நம்பிபாட்டு.**

(189). தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி

---

(184). 9. பரிவுதப—அன்புகெட. பிண்டம்—பொருளின் தொகுதி.
(187). 2. அவல்—பள்ளம். 4. நல்லை—நல்லாய்.
(188). 1. படைப்பு—படைக்கப்படுஞ் செல்வம்.
" 7. பயக்குறை—பிரயோசனமாகிய முடிக்கப்படும் பொருள்.
(189). 1. கடல்வளாகம்—பூமி.

வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பன நாழி, உடுப்பன விரண்டே;
பிறவு மெல்லா மோரொக் கும்மே;
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே.

திணையும் துறையும் அவை.

மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரர் பாடியது.

....

(191). யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்,
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்;
யான்கண் டனையரென் னிளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

திணையும் துறையும் அவை.

கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தானுழைச்சென்ற பிசிராந்தையாரை, 'கேட்குங்காலம் பலவாலோ? நரை நுமக்கில்லையாலோ?' என்ற சான்றோர்க்கு அவர் **சொற்றது.**

(192). யாது மூரே, யாவருங் கேளிர்,
தீது நன்றும் பிறர்தர வாரா;
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன;
சாதலும் புதுவ தன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே, முனிவின்
இன்னா தென்றலு மிலமே, மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின், மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே;
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

---

(192). 10. முறை—ஊழ்.

திணையும் துறையும் அவை.
கணியன் பூங்குன்றன் பாட்டு.

....

(278). நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்,
படையழிந்து மாறின னென்றுபலர் கூற,
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள், சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

திணை—தும்பை; துறை—உவகைக்கலுழ்ச்சி.
காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடியது.

....

(312). ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே;
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

திணை—வாகை; துறை—மூதின்முல்லை.
பொன் முடியார்.

முத்தொள்ளாயிர

முகவுரை.

முத்தொள்ளாயிரமென்பது, சேரர் பாண்டியர் சோழரென்னும் தமிழ் நாட்டு முடியுடைவேந்தர் மூவரையும் அறம்பொருளின்பம்பற்றிப் புகழ்ந் துள்ள ஈராயிரத்தெழுநூறு வெண்பாக்களாலாகியதொரு பழையநூல்; மேற்கூறிய மூவேந்தரையும் தனித்தனியே சிறப்பிக்கும் மூன்று தொள்ளா யிரம் செய்யுட்களை யுடைமையின், இந்நூல் இப் பெயர்பெற்றது. அவ் வரசர்களுடைய நாடு, நகர், சேனை, யானை, குதிரை, போர்க்களம், வெற்றி, கொடை, புகழ் முதலியவற்றை இது சிறப்பித்துக்கூறும். பேரா சிரியர் முதலிய பண்டையுரையாசிரியர்களால், தத்தம் உரைகளில் இதன் வெண்பாக்கள் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன. நூலாசிரியர் பெயர் இன்னதென்று தெரியவில்லை.

இந்நூல் பூர்த்தியாக இப்பொழுது கிடைக்கவில்லை. ஆயினும், தா னெடுத்துக்காட்டும் செய்யுட்களின் தலைப்பில் அவ்வந்நூற்பெயரை எழுதி விளக்கும் புறத்திரட்டென்னும் நூலொன்றில், இதன் வெண்பாவிற் சில காணப்படுகின்றன.

இதன் செய்யுட்கள் 105—அடங்கிய புத்தகமொன்று, மதுரைச் செந் தமிழ்ப் பிரசுரம் 14—வதாக 1905—ஆம் வருடத்தில் வெளியாயிருக்கின்றது.

முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்.

கடவுள் வாழ்த்து.

1 மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
ஆதிரையா னாதிரையா னென்றென் றயர்வுறுமீ
ளூர்திரைநீர் வேலி யுலகு.

நாடு.

2 அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தம்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு.

3 நந்தி னிளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்
பந்த ரிளங்கமுகின் பாளையும்—சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்றுஞ் செம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையா னாடு.

4 காவ லுழவர் களத்தகத்துப் போரேறி
நாவலோஒ வென்றிசைக்கு நாளோதை—காவலன்றன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு.

பகைப்புலம் பழித்தல்.

5 கரிபரந் தெங்குங் கடுமுள்ளி பம்பி
நரிபரந்து நாற்றிசையுங் கூடி—எரிபரந்த
பைங்கண்மால் யானைப் பகையடுதோட் கோதையைச்
செங்கண் சிவப்பித்தார் நாடு.

---

1. ஆதிரை—திருவாதிரை நக்ஷத்திரம்; சிவபெருமானை இதற்குரிய தெய்வமென்பர்.
2. அரக்காம்பல்—செவ்வாம்பல். வெரீஇ—அஞ்சி. பார்ப்பு—குஞ்சுகள். உடைத்து—உடையது; அரோ, அசை. கோதை—சேரமான். உடைத்து நாடென்க.
3. செம்மற்று—தலைமையையுடையது. தென்னன்—பாண்டியன்.
4. போர்—நெற்போர். நாவலோவென்பது நெற்போரை மிதிக்கும் மாடுகளை ஒட்டுவதோர் சொல். கூற்று—சொல். கிள்ளி—சோழன்.
5. முள்ளி—ஒருவகைச் செடி. நாடுகள் எரிபரந்தன வென்க.

6 வேறுகை பம்பிச் சுரைபடர்ந்து வேளைபூத்
தூரறிய லாகா கிடந்தனவே;—போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிரியார் கோமான்
நகையிலைவேல் காய்த்தினர் நாடு.

7 இரியன் மகளி ரிலைஞெமலு ளீன்ற
வரியிளஞ் செங்காற் குழவி—அரையிரவில்
ஊமன்பா ராட்ட வுறங்குமே; செம்பியன்றன்
நாமம்பா ராட்டாதார் நாடு.

8 வாகை வனமாலை சூடி யரசுறையும்
ஓகை யுயர்மாடத் துள்ளிருந்து—கூகை
படுபேய்க்குப் பாட்டயரும் பண்பிற்றே; தென்னன்
விடுமாற்றங் கொள்ளாதார் நாடு.

திறை.

9 பல்யானை மன்னர் படுதிறை தந்துய்ம்மின்;
மல்ல னெடுமதில் வாங்குவிற் பூட்டுமின்;
வள்ளிதழ் வாடாத வானேரும் வானவன்
வில்லெழுதி வாழ்வர், விசும்பு.

10 நேமி நிமிர்தோ ணிலவுதார்த் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவலன் ஆணையால்,
ஏம மணிப்பூ ணிமையார் திருந்தடி
பூமி மிதியாப் பொருள்.

11 நிறைமதிபோல் யானைமே னீலத்தார் மாறன்
குடைதோன்ற ஞாலத் தரசர்—திறைகொள்
இறையோ வெனவந் திடம்பெறுத லின்றி
முறையோ வெனநின்றார், மொய்த்து.

12 நின்றமைமின் மன்னீர், நெருநற் றிறைகொணர்ந்து
முன்றந்த மன்னர் முடிதாக்க—இன்றுந்
திருந்தடி புண்ணாகிச் செவ்வி யிலனே;
பெருந்தண் ணுறந்தையார் கோ.

---

6. அறுகை—அறுகம்புல். முசிரி—சேரநாட்டிலுள்ள பழைய துறைமுகப் பட்டினம்; இது முசிறியெனவும் வழங்கும்.
7. ஞெமல்—சருகு. ஊமன்—கோட்டான்.
8. விடுமாற்றம்—சொல்லிவிட்ட வார்த்தை.
10. நேமி—வாகுவலயம்.

எயில் கோடல்.

13 செருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாறன்
உருமி னிடிமுர சார்ப்ப—அரவுறழ்ந்
தாமா வுகளு மணிவரையி னப்புறம்போய்
வேமால், வயிறெரிய வேந்து.

யானைமறம்.

14 வீறுசான் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற வெறிந்த பரிசயத்தால்—தேறாது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கண்மே னீட்டுந்தன் கை.

15 அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாற்றல்சான் மன்னர்
எயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற்—பனிக்கடலுட்
பாய்சேர்ந்த நாவாய்போற் றோன்றுமே; எங்கோமான்
காய்சினவேற் கிள்ளி களிறு.

16 மருப்பூசி யாக மறங்கனல்வேன் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே;
மொய்யிலைவேன் மாறன் களிறு.

17 உருவத்தார்த் தென்னவ னோங்கெழில் வேழத்
திருகோடுஞ் செய்தொழில் வேறால்—ஒருகோடு
வேற்றா ரகல முழுமே, ஒருகோடு
மாற்றார் மதிறிறக்கு மால்.

18 கொடிமதில் பாய்ந்திற்ற கோடு மாசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே;
கல்லார்தோட் கிள்ளி களிறு.

---

13. வேந்து வயிறு எரிய வேமென்க.
14. பரிசயம்—பழக்கம்.
16. ஊசி—எழுத்தாணி
17. வேற்றார்—பகைவர்.
18. பொல்லாமை—அழகின்மை.

19 கச்சி யொருகான் மிதியா வொருகாலாற்
றத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப்—பிற்றையும்
ஈழ மொருகான் மிதியா வருமேநம்
கோழியர்கோன் கிள்ளி களிறு.

20 பாற்றின மார்ப்பப் பருந்து வழிப்படா
நாற்றிசையு மோடி நரிகதிப்ப—வாற்ற
அலங்கலம் பேய்மகளி ராட வருமே;
இலங்கிலைவேற் கிள்ளி களிறு.

21 தோற்ற மலைகட லோசை புயல்கடாஅம்
காற்றி னிமிர்ந்த செலவிற்றுய்க்—கூற்றும்
குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே, எங்கோன்
எறிகதிர்வேன் மாறன் களிறு.

22 அடுமதில் பாய வழிந்ததன் கோட்டைப்
பிடிமுன் பழகழித ஞணி—முடியுடை
மன்னர் குடையான் மறைக்குமே, செங்கனல்வேற்
றென்னவர் கோமான் களிறு.

களம்.

23 ஏனைய பெண்டி ரெரிமூழ்கக் கண்டுதன்
தானையாற் கண்புதைத்தான், தார்வழுதி—யானையெலாம்
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே;
பல்வாயார் பட்ட களத்து.

வென்றி.

24 தொழிறேற்றுப் பாலகனை முன்னிறீஇப் பின்னின்
றழலிலைவேல் காய்த்தினுர் பெண்டிர்—கழலடைந்து
மண்ணிரத்த லென்ப; வயங்குதார் மாமாறன்
கண்ணிரத்தந் தீர்க்கு மருந்து.

---

19. கச்சி — காஞ்சீபுரம். மிதியா—மிதித்து. உஞ்சை — உச்சயினிநகர். ஈழம்—சிங்களநாடு. கோழி—உறையூர்.
20. பாறு—கழுகு. கதிப்ப, ஆற்ற—மிக.
21. கடாம்—மதம். புயல்—மேகம். களிறு, தோற்றத்தால் மலை; ஓசையாற் கடல்; கடாத்தாற் புயல்.
22. கோட்டை—கொம்பினை. களிறு, தன் கோட்டைக் குடையால் மறைக்கும்.
23, பல்வாயார்—வீரர்,

புகழ்.

25 மடங்கா மயிலூர்தி மைந்தனை நாளும்
கடம்பம்பூக் கொண்டேத்தி யற்றால்;—தொடங்கமருள்
நின்றிலங்கு வென்றி நிறைகதிர்வேன் மாறனை
இன்றமிழால் யாம்பாடும் பாட்டு.

26 செங்க ணெடியான்மேற் றேர்விசய னேற்றியபூப்
பைங்கண்வெள் ளேற்றான்பாற் கண்டற்றால்;—எங்கும்
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாறன்
அடிமிசையே காணப் படும்.

27 வானிற்கு வையகம் போன்றது; வானத்து
மீனிற் கனையார், மறமன்னர்;—வானத்து
மீன்சேர் மதியனையன், விண்ணுயர் கொல்லியர்
கோன்சேரன் கோதையென் பான்.

28 மந்தரங் காம்பா மணிவிசும் போலையாத்
திங்க ளதற்கோர் திலகமா—வெங்கணு
முற்றுநீர் வைய முழுது நிழற்றுமே;
கொற்றப்போர்க் கிள்ளி குடை.

29 பார்படுப செம்பொன், பதிபடுப முத்தமிழ்நூல்,
நீர்படுப வெண்சங்கும் நித்திலமும்,—சாரல்
மலைபடுப யானை, வயமாறன் கூர்வேல்
தலைபடுப தார்வேந்தர் மார்பு.

30 அருமணி யைந்தலை யாடரவம் வானத்
துருமேற்றை யஞ்சி யொளிக்கும்;—செருமிகுதோட்
செங்கண்மா மாறன் சினவேல் கனவுமே;
அங்கண்மா ஞாலத் தரசு.

---

25. மயிலூர்திமைந்தன்—முருகக்கடவுள்.
27. வானிற்கு—வானினை; வேற்றுமை மயக்கம்,

ஐந்திணையைம்பது.

அகப்பொருளைந்திணைகளைப் பப்பத்து வெண்பாவால் விளக்கிய இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று; மாறன்பொறையனார் என்பவர் இயற்றியது. இந்நூலின் சிறப்பை

பண்புள்ளி நின்ற பெரியார் பயன்றெரிய
வண்புள்ளி மாறன் பொறையன்—புணர்த்தியாத்த
ஐந்திணை யைம்பதும் ஆர்வத்தி னோதாதார்
செந்தமிழ் சேரா தவர்

என்னும் இந்நூற் பாயிரத்தால் அறியலாம்.

அகப்பொருள்விளக்க உரைகாரரும் நச்சினார்க்கினியரும் இந்நூலினின்று சில மேற்கோள்கள் காட்டுகின்றனர்.

ஐந்திணையைம்பது.

முல்லை.

தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.

மல்லர்க் கடந்தா[1] னிறம்போன் றிருண்டெழுந்து,
செல்வக் கடம்பமர்ந்தான்[2] வேன்மின்னி,—நல்லாய்!
இயங்கெயி லெய்தவன்[3] றார்[4]பூப்ப, ஈதோ
மயங்கி வலனேருங்[5] கார்.

[1] திருமால். [2] முருகன். [3] சிவன். [4] கொன்றைமாலை. [5] எழாநின்றது.

பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

அணிநிற மஞ்ஞை யகவ[1] இரங்கி[2]
மணிநிற மாமலைமேல் தாழ்ந்து[3]—பணிமொழி!
கார்நீர்மை[4] கொண்ட கலிவானம்[5] காண்டொறும்
பீர்நீர்மை[6] கொண்டன தோள்.

[1] அழைக்க. [2] முழங்கி. [3] படிந்து. [4] கார்காலத்துத்தன்மை. [5] மிக்க முகில் களை. [6] பீர்க்கம்பூவின் தன்மை.

பருவங் கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

மின்னு முழக்கு மிடியுமற் றின்ன
கொலைப்படை சாலப் பரப்பிய,[1]—முல்லை
முகைவென்ற பல்லினாய்! இல்லையோ மற்று
நமர்சென்ற நாட்டு[2]ளிக் கார்.

[1] பரப்புதற்கு. [2] நாட்டின்கண். இக்கொலைப்படைகளை நிரம்பப் பரப்பு தற்கு இக்கார் இல்லையோ.

வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

நூனவின்ற[1] பாக! தேர் நொவ்விதா[2]ச் சென்றீக.[3]
தேனவின்ற கானத் தெழிலேறக்கித்—தானவின்ற
கற்புத்தாள் வீழ்த்து[4]க் கவுண்மிசைக் கையூன்றி
நிற்பாள் நிலையுணர்கம் யாம்.[5]

[1] நூல் பயின்ற. [2] கடிதாக. [3] செல்வதாக. [4] கற்பென்னுநின்ற தாளினைச் செறித்து. [5] உணர்கம் யாம்—நாம் சென்று அறிவோம்,

குறிஞ்சி.

பகற்குறிவந்து பெயர்கின்ற தலைமகனைக் கண்ணுற்றுத் தோழி செறிப்பறிவுறீஇயது.

மால்வரை[1] வெற்ப! வணங்கு குரலேனல்[2]
காவலியற்கை ஒழிந்தேம் யாம்.—தூவருவி
பூக்கண் கழூஉம்[3] புற[4]விற்றாய்ப் பொன்விளையும்
பாக்க மிதுவெம் மிடம்.

[1] peak. [2] வளைந்த கதிர்களையுடைய பசுந்தினை. [3] கண்ணைக் கழுவுகின்ற. [4] காடு. இப்பாக்கம் எம்முடைய இடமாதலான், நீ இங்கே வரக்கூடின் வருவாயாக என்பதாம்.

இரவுக்குறிவந்து பெயருந் தலைமகனைக் கண்ணுற்றுநின்ற தோழி வரைவுகடாயது.

கொடுவரி வேங்கை பிழைத்துக்கோட் பட்டு[1]
மடிசெவி வேழம் இரீஇ[2]—அடியோசை
அஞ்சி[3] யொதுங்கும் அதருள்ளி,[4] ஆரிருள்
துஞ்சா[5] சுடர்த்தொடி கண்.

[1] கொள்ளப்பட்டுப் பிழைத்து. [2] இரிந்து. [3] (கேட்குமென்று) அஞ்சி. [4] வழியை நினைந்து. [5] துயிலா.

தோழி செறிப்பறிவுறீஇத் தலைமகனை வரைவுகடாயது.

எறிந்[1]தெமர் தாமுழுத ஈர்ங்குர லேனல்
மறந்துங் கிளியினமும் வாரா.—கறங்கருவி
மாமலை நாட! மடமொழி தன்கேண்மை[2]
நீமறவல்[3] நெஞ்சத்துக் கொண்டு.

[1] காடெறிந்து. [2] மடமொழியோடு நீ கொண்ட கேண்மையை. [3] மறவாயாக.

தோழி இரவுக்குறியின்கண் நேறிவிலக்கி வரைவுகடாயது.

நெடுமலை நன்னாட! நீள்வே றுணையாக்
கடுவிசை வாலருவி நீந்தி—நடுவிருள்
இன்னா வதர்வர,[1] ஈர்ங்கோதை மாதராள்
என்னாவா ளென்னு[2]மென் நெஞ்சு.

[1] வழியின்கண் நீ வர. [2] எப்பெற்றி யாவாளோ என்று தமோரூநிற்கும்.

தலைமகள் தோழிக்கு அறத்தோடுநின்று வெறிவிலக்கவேண்டும் உள்ளத்தாளாய்ச் சொல்லியது.

வெறிகமழ் வெற்பனென் மெய்ந்நீர்மை கொண்ட[1]
தறியாண்மற் றன்னோ[2] அணங்கணங்கிற்[3] றென்று,
மறியீர்த் துதிரந்தூய்[4] வேலற் றரீஇ[5]
வெறியோ டலம்வரும்[6] யாய்.

[1] வெற்பன் எனது மெய்யின்கண் உள்ள நீர்மையைக் கொண்டது. [2] அந்தோ. [3] தெய்வம் என்னை வருத்திற்று. [4] மறியை அறுத்து உதிரத்தைத் தூவி. [5] வேலனைத் தந்து. [6] வருந்தாநின்றான்.

மருதம்.

பாணற்குத் தலைமகள் வாயின் மறுத்தது.

கொண்டுழிப் பண்டம் விலைபொரீஇ[1]க் கொற்சேரி
நுண்டுளைத் துன்னூசி விற்பாரின்—ஒன்றானும்
வேறல்லை பாண! வியலூரன் வாய்மொழியைத்
தேற எமக்குரைப்பாய் நீ[2].

[1] வேறுபடுத்து. [2] எமக்கு உரைக்கின்ற நீ.

இதுவுமது.

யாண[1] ரகல்வய லூர னருளுதல்
பாண! பரிந்துரைக்க வேண்டுமோ?—மாண
அறிவ தறியு மறிவினார் கேண்மை[2]
நெறியே[3] உரையாதோ மற்று.

[1] வளமை. [2] நட்புநெறியை. [3] அவரருளுடைமையே.

பாலை.

தலைமகன் பொருள்வயிற் பிரிந்தகாலத்து ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவலென்பதுபட மொழிந்தது.

கொடுவி லெயினர்தம் கொல்படையால் வீழ்ந்த
தடிநிணம்[1] மாந்திய பேஎய்—நடுகல்[2]
விரிநிழல்[3] கண்படுக்கும்[4] வெங்கான மென்பர்,
பொருள்புரிந்தார்[5] போய சுரம்.

[1] தசையையும் நிணத்தையும். [2] போரின்கட் பட்டார்பெயர் பொறித்து நட்ட கல். [3] நிழலில். [4] துயிலும், [5] விரும்பினர்.

தலைமகன் பொருள்வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.

மடவைகாண்[1] நன்னெஞ்சே! மாண்பொருண்மாட் டோடல்.
புடைபெயர் போழ்தத்தும் ஆற்றுள்,—படர்கூர்ந்து[2]
விம்மி யுயிர்க்கும் விளங்கிழையாள், ஆற்றுமோ
நம்மிற் பிரிந்த விடத்து?

[1] அறியாய்காண். [2] துன்பமிகுந்து.

இ து வு ம து.

இன்றல்கல்[1] ஈர்ம்படையுள்[2] ஈர்ங்கோதை தோடுணையா
நன்கு வதிந்தனை நன்னெஞ்சே! நாளைநாம்
குன்றத ரத்தம்[3] இறந்து தமியமாய்[4]
என்கொலோ சேக்கு மிடம்[5].

[1] இன்றிரவின்கண். [2] குளிர்ந்த சேக்கையுள். [3] மலைவழி. (அதர்—வழி. அத்தம்—அருநெறி). [4] தமியேமாய். [5] தங்குமிடம்.

நெய்தல்.

காமமிக்க கழிபடர் கிளவி.

கொடுந்தா ளலவ[1]! குறை[2]யாம் இரப்பேம்.
ஒடுங்கா வொலிகடற் சேர்ப்பன்—நெடுந்தேர்
கடந்த வழியையெம் கண்ணாரக் காண[3]
நடந்து சிதையாதி[4] நீ.

[1] வளைந்த தாளினையுடைய அலவனே (ஞெண்டே). [2] ஒரு காரியம். [3] காணும் வகை. [4] அழியாதொழிவாயாக.

இதுவுமது.

பொரிப்புறப் [1]பல்லிச் சினை[2]யீன்ற புன்னை
வரிப்புற வார்மணன்[3]மே லேறித்—தெரிப்புறத்
தாழ்கடற் றண்சேர்ப்பன் தாரகல நல்குமேல்
ஆழி[4]யாற் காணுமோ யாம்.

[1] பொரிந்த புறத்தையுடைய. [2] பல்லி முட்டை (போன்ற) அரும்பினை. [3] வரிப்பட்ட புறத்தினையுடைய உயர்ந்த மணற்குன்று. [4] கூடல் இழைப்பு. "கூடலாவது வட்டமாகக் கோட்டைக் கீறி அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ் சுழித்து இவ்விரண்டு சுழியாகக் கூட்டினால், இரட்டைப்பட்டாற் கூடுகை: ஒற்றைப்பட்டாற் கூடாமையென்று ஸங்கேதம்,"

பகற்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்துமொழி கிளவியால் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் செறிப்பறிவுறீஇ வரைவுகடாயது.

கொண்கன் பிரிந்த குளிர்பூம் பொழில்நோக்கி,
உண்கண் சிவப்ப அழுதேன். ஒளிமுகம்
கண்டன்னை எவ்வம்[1]யா தென்னக் கடல்வந்தென்
வண்டல்[2] சிதைத்ததென் றேன்.

[1] துன்பம். [2] விளையாட்டுச் சிற்றில்.

தலைமகனைத் தோழி வரைவுகடாயது.

எக்க ரிடுமணன்மேல் ஓதம் தரவந்த
நித்திலம் நின்றிமைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப!
மிக்க மிகுபுகழ் தாங்குபவோ தற்சேர்ந்தார்
ஒற்கம்[1] கடைப்பிடியா தார்[2].

[1] தளர்ச்சி. [2] கடைப்பிடித்துத் தீராதார்.

திருக்குறள்.

ஒப்பதும் மிக்கது மில்லாத இத் தமிழ்ப்பெரு நீதிநூலை **அருளிச்** செய்தவர் தெய்வப்புலமைத் **திருவள்ளுவர்.** இவர் அவதரித்த குலம் வள்ளுவக்குடியாகும். வள்ளுவரென்பார் யானைமேலேறிப் பறையறைந்து அரசாணையைச் சாற்றும் ஒருவகையினர்: "என்புழி வள்ளுவர் யானை மீமிசை, நன்பறை யறைந்தனர்" (**திருவவதாரப் படலம்**—116) என்னுங் கம்பர் செய்யுளிலும் வள்ளுவர் இவரென்றதனைக் காண்க. வள்ளுவர்: வண்மை—ஈகையாகக்கொண்டு, வேறு பொருளுங் கூறுவர். இவர், **பகவன்** என்னும் அந்தணனுக்கு **ஆதி** என்பவளிடம் அவதரித்தவர் எனவும், **யாளிதத்தன்** என்னும் பார்ப்பனனுக்குப் பிறந்த மக்கள் எழுவரில் ஒருவர் எனவும் கூறுவர்.

திருக்குறள் என்னும் இவ் வரிய பெரியநூல் குறள் வெண்பாவினால் செய்யப்பெற்றமையின் இப்பெயர்பெற்றது. அன்றியும், வாமனனது குறளுருவினுள் உலகளந்த திரிவிக்கிரமனது நெடிய உருவம் மறைந்திருந்தமையேபோலக் குறுகிய பாட்டினுள் பெருகிய பொருள் அடங்கியிருக்கின்றமையின் குறள் என்னும் பெயர்பெற்றது எனவும் கூறுவர்: "கடுகைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்," (**இடைக்காடர்.**) "மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான், ஞால முழுது நயந்தளந்தான்—வாலறிவின்—வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார், உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து," (**பரணர்.**) "கானின்ற தொங்கலாய் காசிபனார் தந்ததுமுன், கூநின் றளந்த குறளென்ப—நூன் முறையான்—வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனார், தாநின் றளந்த குறள்" (**பொன்முடியார்.**) என்பன காண்க. திரு—சிறப்புணர்த்துவதோர் உரிச்சொல்.

திருக்குறள், அறம் பொருள் இன்பம் வீடு எனப்படும் புருடார்த்தம் நான்கனுள் முன்னைய மூன்றையும் வெளிப்படையாகக் கூறுவது; அதனால் இது **முப்பால்** எனவும் பெயர் பெறும்.

இந்நூலின் பாலியலதிகாரவகை:

I. அறத்துப்பால்:

	அதிகாரம்.
(1) பாயிரம்	4
(2) இல்லறவியல்	20
(3) துறவறவியல்	13
(4) ஊழ்	1
ஆக	38

II. பொருட்பால்:

(1) அரசியல்	....	25
(2) அங்கவியல் = அமைச்சு 10, நாடு 1, அரண் 1, பொருள் 1, படை 2, நட்பு 17	....	32
(3) ஒழிபியல்	....	13
	ஆக	70

III. காமத்துப்பால்:

(1) களவியல்	....	7
(2) கற்பியல்	....	18
	ஆக	25
ஆக மொத்தம் அதிகாரம்	....	133.
பாட்டு	....	1330.

இந்நூல், "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப், பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்—இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென் பவே—கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு" என்றவாறு பதினெண்கீழ்க் கணக்கிலொன்றும்.

இத்திருக்குறளிற் கூறப்பெற்றுள்ள விஷயங்கள் பல தேயத்தா ரும் பல மதத்தாரும் போற்றிக்கொள்ளற் குரியனவாயிருத்தலால், இந்நூல் அந்நிய பாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது. அன்றியும், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்பவற்றில் அரியவும் பெரியவு மான இலக்கணங்கட்கெல்லாம் இலக்கியமாகுஞ் சிறப்புடையதாய், தமி ழுலகுய்யத் தோன்றி நிரம்பிய புலமைத்திறம் படைத்த மதுரைக் கூல வாணிகன் சாத்தனார் (மணிமேகலை யாசிரியர்) கம்பர் முதலிய நூலாசிரி யர்களாலும், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களாலும், ஸ்ரீவைஷ் ணவ சமயாசாரியர்களான ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப் பிரபந்தங் கட்கு வியாக்கியானஞ் செய்தருளிய பேராசிரியர்களாலும், திருக்கைலாய ஞானவுலாவினும் திருக்களிற்றுப்படியாரினும் நெஞ்சுவிடுதூதினும் சைவ சமயாசாரியர்களாலும் எடுத்தாளப்பெறும் பெருமை வாய்ந்துள்ளது.

இந்நூலிற்கு, வேறு பலர் உரைசெய்துள்ளன ரெனினும், அவ் வுரைகளெல்லாவற்றினும் பரிமேலழகர் செய்துள்ள உரையே பல்லாற் றானும் சிறப்புடையது என எல்லாரானும் போற்றிக்கொள்ளப்பெற்று வழங்கிவருகின்றது.

மற்றும், இந்நூலின் விசேஷங்களைப் பரந்தநூல்களிற் காண்க.

திருக்குறள்.

அறத்துப்பால்.

பாயிரம்.

1-ம் அதிகாரம்.—கடவுள் வாழ்த்து.

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

3. * மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

5. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. † பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

8. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
‡ பிறவாழி நீந்த லரிது.

---

* 'மலர்மிசையேகினான்' என்பதனோடு—"மலர்மிசை நடந்த மலரடி யல்ல தென், தலைமிசை யுச்சி தானணிப் பொறாது" என்னும் சிலப்பதிகாரவடிகளும், "எரியாய தாமரைமே வியங்கி னாரு மிடைமருது மேவியவெம் மீச னாரே" என்னும் அப்பர் வாக்கும், "தண்டா மரைசுமக்கும் பாதப் பெருமானை" என்னுந் திருவாய்மொழியும் ஒப்பிடத்தக்கவை.

† பொறிவாயில் ஐந்து—ஐம்பொறிகளை வழியாகவுடைய ஐந்து அவா; "மெய் வாய் கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற, ஐவாய வேட்கை யவா" என்பது நாலடியார்—59.

‡ பிறவாழி—அறத்தின் வேறாய கடல்; அஃதாவது—பொருளின்பங்களாகிய கடல் என்பர் பரிமேலழகர்; "அருளோ டெழுமற வாழியப் பாபிற வாழியிற்பா, யிருளோ வியகரை யேறவுய்ப்பாய்" என்பது திருநூற்றந்தாதி. இனி, பிறவாழி—பிறவியாகிய கடலுமாம்; "பெருந்தகை பிறவினோ டிறவு மாயினான்" என்ற

9. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

10. * பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

2-ம் அதி.—வான் சிறப்பு.

அஃதாவது – மழையினது சிறப்புக்கூறுதல்.

11. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

14. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

15. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

16. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

17. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

18. † சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

19. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு ‡.

தேவாரப் பகுதியுள்ளும், "சார்படைத்த சிறத்தோனைக் கைதொழுவார் பிறவாழிக் கரைகண் டாரே" என்ற வில்லி பாரதத்துள்ளும், பிறவு–பிறவிச்கு வழங்கல் காண்க.

* பிறவிப் பெருங்கடனீந்துவர்: இங்கு, 'சேர்ந்தார்' என்பது சொல்லெச்சம்.

† சிறப்பு–ஈண்டு, விழா.

‡ ஒழுக்கு – மக்களொழுக்கமுமாம்.

3-ம் அதி.—நீத்தார் பெருமை.

அஃதாவது – துறந்தவரது மேன்மை.

21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

23. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

24. * உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

25. † ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

27. சுவையொளி யூறோசை நாற்றமென் ‡ றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

28. § நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

29. ‖ குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

30. ¶ அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

---

* உரன்–திண்மை; ஈண்டு அறிவு. தோட்டியைக் குறித்து இடைக்காடர் கேட்டபோது, திருவள்ளுவர் இக்குறளை எடுத்துரைத்தார் என்பர்.

† ஐந்தவித்தான்–ஈண்டு, கௌதமமுனிவர்.

‡ ஐந்தின் வகை–25 தத்துவங்கள்; அவற்றை, "பொங்கைம் புலனும் பொறியைந்துங் கருமேந் திரிய மைம்பூதம், இங்கிவ் வுயிரேய் பிரகிருதி மானாங் காரமனங்களே" என்னுந் திருவாய்மொழியுட் காண்க,

§ "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப" என்றார் தொல்காப்பியனார். (செய்யுளியல்–179.)

‖ குணம்–சாதியொருமை.

¶ 'அந்தணர்' என்பதற்கு, அழகிய தட்பத்தினையுடையார் எனப் பரிமேலழகரும், அந்தத்தை (வேதமுடிவை) அணவுவார் (பார்ப்பார்) என நச்சினார்க்கினியரும் பொருள் கூறுவர். இவ்விருபொருளும், "அந்தண்மை பூண்ட வருமறையந்தத்துச், சிந்தைசெய் யந்தணர்" என்னுந் திருமூலர் திருமந்திரத்துட் பயிலுதல் காண்க. (அந்தணரொழுக்கம். 11.)

4-ம் அதி.—அறன்வலியுறுத்தல்.

அஃதாவது—தருமத்தினது வன்மையைச் சொல்லுதல்.

31. * சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

32. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

33. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
† செல்லும்வா யெல்லாஞ் செயல்.

34. மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
‡ னாகுல நீர பிற.

35. அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

36. அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

37. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

38. § வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

39. || அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

40. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

பாயிரம் முற்றும்.

---

* சிறப்பு—ஈண்டு வீடு; "சிறப்பென்னுஞ் செம்பொருள்" என்பர் பின்னும். (குறள்—358.) "சிறந்தது பயிற்றல்" என்பதில், வீட்டைச் 'சிறந்தது' என்றார், தொல்காப்பியனாரும். (தொ—கற்பி—51;) இதனையே, 'சிரேயஸ்' என உபநிடதம் கூறும்; (கடம்: அத்—1—வல்லி—2, மந். 1—2.)

† செல்லும்வாய்—மனம் வாக்குக் காயம் என்பன. ‡ ஆகுலம்—இடம்பம்.

§ நக்கீரர் ஒரு கல்லையெடுத்துக் காட்டி அதனைக் குறித்துக் கேட்டபோது, நாயனார் இக்குறளை யெடுத்துரைத்தனர் என்பர்.

Comp: Browning, *Old Pictures in Florence*, XXI.

|| அறத்தான்—அறத்தோடு பொருந்தி.

இல்லறவியல்.

கற்புடைய மனையாளொடுசெய்யும் அறத்தினதுதன்மை.

5-ம் அதி.—இல்வாழ்க்கை.

அஃதாவது – இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு.

41. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு*
நல்லாற்றி னின்ற துணை.

42. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

43. †தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை.

44. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

45. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

46. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்‡
போஒய்ப் பெறுவ தெவன்.

47. இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
§முயல்வாரு ளெல்லாந் தலை.

48. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

49. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

6-ம் அதி.—வாழ்க்கைத் துணைநலம்.

அஃதாவது—இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது நன்மை.

51. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

---

* மூவர்—பிரமசரிய, கிருகஸ்த, வானப்பிரஸ்த ஆசிரமிகள்.

† இதனால், ஆறிலொருபகுதி அரசர்க்குரியதாயிற்று.

‡ புறத்தாறு—இல்லைவிட்டு வனத்துச்செல்லும் நிலை.

§ முயல்வார்—மூன்றாம் நிலையினர்.

52. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

53. *இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை.

54. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

55. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.†

56. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

57. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
‡நிறைகாக்குங் காப்பே தலை.

58. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

59. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை.

60. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு.

7–ம் அதி.—புதல்வரைப் பெறுதல்.

அஃதாவது – நன்மக்களைப் பெறுதல்.

61. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

62. §எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

---

* "இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை" என்பது ஔவையார் பாடல்; (மூதுரை.)

† "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப், பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்" என இக் குறள் சீத்தலைச் சாத்தனாரால் எடுத்துப் புகழப்பட்டுளது. (மணிமேகலை–22–சிறைசெய் காதை, 59–61–அடிகள்.)

‡ நிறை–நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தல்.

§ எழுபிறப்பு–தேவர், மானுடர், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, நாற்கால், தாவரம் என்பன.

63. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

64. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
* சிறுகை யளாவிய கூழ்.

65. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

66. † குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்.

67. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

68. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

69. ‡ ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

70. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
§ யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

8-ம் அதி.—அன்புடைமை.

71. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் ‖ பூச றரும்.

72. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
¶ ரென்பு முரியர் பிறர்க்கு.

73. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

74. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

---

* சிறுகையளாவுதல்–"இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும், நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தல்"; (புறநானூறு.–188.)

† இக்குறள், "பயந்ததஞ் சேயார் சொலுமொழி, குழலினு மியாழினு மழ கிதா மதுபோல்" என்ற பட்டினத்தடிகள் வாக்கிற் பயின்றுவந்தமை காண்க. (திருக்கழுமல மும்மணிக்கோவை.)

‡ Compare Wordsworth—*The Excursion*, Book VII lines 640—645.

§ "என்னநோன்பு நோற்றாள்கொலோ விவனைப்பெற்ற வயிறுடையாள்." (பெரியாழ்வார் திருமொழி–2–ம் பத்து, 2–ம் திருமொழி, 6–ம் பாசுரம்.)

‖ பூசல்தரும்–அறியத்தூற்றும்.

¶ 'என்புமுரியர்' ஆயினோர் ததீசி, சிபி முதலியோர்.

75. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.

76. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
* மறத்திற்கு மஃதே துணை.

77. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

78. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பார்†க்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

79. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

80. அன்பின் வழிய ‡துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

9-ம் அதி.—விருந்தோம்பல்.

அஃதாவது - விருந்தினரை உபசரித்தல்.

81. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

83. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
§ பருவந்து பாழ்படுத லின்று.

84. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

85. ‖ வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

86. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

---

* மறம் — தறுகண்மை; அன்பு, அறத்திற்கேயன்றித் தறுகண்மைக்கும் சார்பாமென்பது, "பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா, லூராண்மை மற்றத னெஃகு" (குறள்-773.) என்புழிக்காண்க. மறத்தை நீக்குதற்குந் துணையாம் என்பர் பரிமேலழகர்.

† 'வன்பால்' என்பதும் பாடம். ‡ உயிர்நிலை—உடம்பு. § பருவந்து—வருந்தி.

‖ "வித்து மிடவேண்டுங் கொல்லோ விடையடர்த்த, பத்தி யுழவன் பழம்புனத்து;" (திருமழிசையாழ்வார்-நான்முகன் திருவந்தாதி-23.)

87. * இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

88. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

89. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை † மடவார்க ணுண்டு.

90. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

10-ம் அதி.—இனியவை கூறல்.

91. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

92. ‡ அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

93. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மின்சொ லினதே யறம்.

94. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

95. பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

96. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

97. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

---

* இக்குறளின் பொருளை, "தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்" (அறன்வலி யுறுத்தல்–8.) என்னும் நாலடியாருள்ளும், "உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே" (வேள்விப்படலம்-35.) என்னும் கம்பர் செய்யுளுள்ளும் காண்க.

† மடவார்–அறிவிலார்.

‡ இக்குறளின் பொருள், "நகையுடை முகத்தை யாகி யின்னுரை நல்கு நாவால்" (கிட்கிந்தா காண்டம், அரசியற்படலம்–29.) என்னும் கம்பர் வாக்கினுட் பயின்று வந்தது.

98. சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

99. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

100. * இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

11-ம் அதி.—செய்ந்நன்றியறிதல்.

அஃதாவது — தனக்குப் பிறர்செய்த நன்மையை மறவாமை.

101. † செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

102. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

103. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

105. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

106. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

107. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
‡ விழுமந் துடைத்தவர் நட்பு.

---

* 'இனிய கனி என்றது, ஔவையுண்ட நெல்லிக்கனிபோலமிழ்தானவற்றை' என்பர் பரிமேலழகர்; ஔவையார், அதிகமானெடுமானஞ்சிபால் நெல்லிக்கனி பெற்ற செய்தி, "தொன்னிலைப்—பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட, சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா, தாத னின்னகத் தடக்கிச், சாத னீங்க வெமக்கீத் தனையே" (ஔவையார் பாடியது: புறநானூறு—91.) என்னும் அடிகளாலும், "மால் வரைக்—கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி, யமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த, உரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல், லரவக் கடற்றானை யதிகனும்" (சிறுபாணாற்றுப்படை, 99–103.) என்னுமடிகளாலும் அறியப் பெறும்.

† இக்குறளின் பொருள், "உதவாம லொருவன் செய்த வுதவிக்குக் கைம்மாறாக, மதவானை யனைய மைந்த மற்றுமுண் டாக வற்றோ" (கிட்கிந்தைப் படலம்—69.) என்னும் கம்பர் செய்யுளிற் பயின்று வந்தது.

‡ விழுமம்—துன்பம்.

108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

109. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

110. * எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

12-ம் அதி.—நடுவுநிலைமை.

அஃதாவது—எல்லார்க்கும் பொதுவாய் நிற்கும் நிலைமை.

111. தகுதி யெனவொன்று நன்றே † பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

112. செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
‡ யெச்சத்திற் கேமாப் புடைத்து.

113. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

114. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

115. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

116. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

117. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

118. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

---

* "மாயா – உதவிகொன் றார்க்கொன் றேனு மொழிக்கலா முபாய முண்டோ" எனக் கம்பரால் இக்குறட்கருத்து எடுத்தாளப்பெற்றது; (கிட்கிந்தைப்படலம்–62.) "எந்நன்றி செய்தாரா வேதிலோர் தெய்வத்தை யேத்துகின்றீர், செய்ந்நன்றி குன்றேன்மின் தொண்டர்கா ளண்டனையே யேத்தீர்களே" என்பது திருமங்கை மன்னன் பாசுரம்; (பெரிய திருமொழி–11–ம் பத்து, 6–ம் பதிகம்–1.)

† பகுதி–பகைவர், அயலார், நட்பினர் என்னும் வகை.

‡ எச்சம் – வமிசம். ஏமாப்பு – வலி.

119. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

120. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

13-ம் அதி.—அடக்கமுடைமை.

121. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு * ளுய்த்து விடும்.

122. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூங் கில்லை யுயிர்க்கு.

123. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

124. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.

125. எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

126. † ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

127. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

128. ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகா தாகி விடும்.

129. ‡ தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.

130. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

---

* இருள்—ஒரு நரகம்; 'அந்ததாமிஸ்ரம்' என்ப வடநூலார்.

† இதனை, "ஒருமையு ளாமைபோ லுள்ளைந் தடக்கி" என்னுந் திருமூலர் திருமந்திரத்தோடு ஒப்பிடுக.

‡ 'தீயும் வெவ்வுரையும் சுடுதற்றொழிலான் ஒக்குமாயினும், ஆறுமையாற் றீயினும் வெவ்வுரை கொடிதென்பது போதரலின், இது குறிப்பான் வந்த வேற்றுமை யலங்காரம்' என்பது பரிமேலழகர் விசேடவுரை.

14-ம் அதி.—ஒழுக்கமுடைமை.

அஃதாவது – தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல்.

131. * ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

132. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

133. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

134. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

135. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

136. ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.

137. † ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

138. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

139. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் ‡ சொலல்.

140. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

---

* இக்குறள், "ஊண்டிற முவந்தனை யொழுக்கம் பாழ்பட, மாண்டிலை" (மீட்சிப்படலம்-62.) எனவும், "அடைப்பரைம் புலன்களை யொழுக்க மாணியாய்ச், சடைப்பரந் தகைந்ததோர் தகைவின் மாதவம், படைப்பர்வந் திடையொரு பழிவந் தாலது, துடைப்பர்தம் முயிரோடுங் குலத்திற் றோகைமார்" (மீட்சிப்படலம்-67.) எனவும் கம்பரால் போற்றிக்கொள்ளப்பெற்றது.

† இக்குறள், "வினையி னால்வரு மேன்மையுங் கீழ்மையும்" எனக் கம்பரால் போற்றிக்கொள்ளப்பெற்றது. (வாலிவதைப்படலம்-115.)

‡ 'சொல் எனவே அமைந்திருக்க, வாயால் எனவேண்டாது கூறினார், நல்ல சொற்பயின்றதெனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு; இதனை வடநூலார் தாற்பரியமென்ப' என்பது பரிமேலழகர் விசேடவுரை.

16-ம் அதி.—பொறையுடைமை.

அஃதாவது – தமக்குத் தீமைசெய்தாரிடத்துத் தாமும் அதனைச் செய்யாது பொறுத்தலையுடையராதல்.

141. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

142. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

143. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

144. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

145. ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

146. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

147. * திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.

148. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.

149. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர்.

150. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின்.

17-ம் அதி.—அழுக்காறாமை.

அஃதாவது – பொறாமைப்படாமை.

151. ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

152. † விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

---

* "உம்மை – எரிவாய் நரகத்து வீழ்வர்கொ லென்று, பரிவதூஉஞ் சான்றோர் கடன்" என்னும் நாலடியார் இதுபற்றிவந்தது. (துறவு–8.)

† விழுப்பேறு–சிறந்த நன்மை,

153. அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்.

154. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

155. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

156. *கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

157. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
†டவ்வையைக் காட்டி விடும்.

158. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

159. அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

160. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

18-ம் அதி.—வெஃகாமை.

அஃதாவது – பிறர்க்குரிய பொருளைக் கவரக் கருதாமை.

161. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

162. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

163. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

164. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

165. அஃகி யகன்ற வறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

166. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

---

* இக்குறளின் சொல்லும் பொருளும், "கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்ற–முடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடு கின்றாய்" எனக் கம்பரால் போற்றிக்கொள்ளப்பெற்றன. (வேள்விப்படலம்–33.) † தவ்வை–மூதேவி,

167. வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

168. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

169. அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு.

170. இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

19-ம் அதி.—புறங்கூறாமை.

அஃதாவது – காணாத இடத்து ஒருவரை இகழாமை.

171. அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது.

172. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

173. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்.

174. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

175. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

176. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்.

177. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்றா தவர்.

178. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினா
*ரென்னைகொ லேதிலார் மாட்டு.

179. அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

180. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

---

* 'என்னர்கொல்' என்பதும் பாடம்.

20-ம் அதி.—பயனில சொல்லாமை.

அஃதாவது — பயனற்ற சொற்களைச் சொல்லாமை.

181. பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

182. பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

183. நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

184. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

185. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

186. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனன்
மக்கட் பதடி யெனல்.*

187. நயனில சொல்லினுஞ் † சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

188. அரும்பய னாயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

189. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்.

190. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

21-ம் அதி.—தீவினையச்சம்.

அஃதாவது — பாவங்களாவனவற்றைச் செய்தற்கு அஞ்சுதல்.

191. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

192. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

193. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

---

* அல்விகுதி யிரண்டனுள், முன்னது எதிர்மறை, பின்னது உடன்பாடு.

† சொல்லினும்: உம்மையால் சொல்லாமை பெறப்பட்டது; "மறப்பினு மோத்துக் கொளலாகும்" என்பழிப் போல; (குறள்-134.)

194. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

195. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.

196. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.

197. எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
* வீயாது பின்சென் றடும்.

198. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

199. தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

200. † அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

22-ம் அதி.—ஒப்புரவறிதல்.

அஃதாவது – உலக நடையை அறிந்து செய்தல்.

201. ‡ கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

202. § தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

203. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

204. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

---

* வீயாது – நீங்காது.

† அருங்கேடன் – கேடில்லாதவன்.

‡ இக்குறளை, "மாரியை நோக்கிக் கைம்மா றியற்றுமோ வைய மென்றான்" எனக் கம்பர் போற்றிக்கொண்டனர். (நாகபாசப்படலம்–271.)

§ தாள்–முயற்சி. வேளாண்மை–உபசரித்தல்.

205. * ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

206. * பயன்மா முள்ளூர்ப் பழுத்தற்றுற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

207. மருந்தாகித் தப்பா மாத்தற்றுற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

208. † இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

209. நயனுடையா னல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

210. ஒப்புரவி னுல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

23-ம் அதி.—ஈகை.

211. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
‡ குறியெதிர்ப்பை நீர துடைத்து.

212. § நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

213. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

214. இன்னு திரக்கப் படுத விரந்தவ
ரின்முகங் காணு மளவு.

215. ஆற்றுவா ராற்றல் ‖ பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

216. அற்று ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றுன் பொருள்வைப் புழி.

---

* "ஊருணி நிறையவு முதவு மாடுயர்—பார்கெழு பழுமரம் பழுத்தற் றுசவும்" என்னும் கம்பர் செய்யுள் இக்குறள்களைப்பற்றி வந்ததாம். (மந்திரப்படலம்–82.)

† இடன் – செல்வம்.

‡ குறியெதிர்ப்பையாவது—அளவுகுறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர் கொடுப்பது.

§ இதனைக் கம்பர், "கொள்ளுத றீது கொடுப்பது நன்றுல்" எனப் போற்றிக் கொண்டனர். (வேள்விப்படலம்–29.)

‖ 'ஆற்றுவார்க்காற்றல்' என்பதும் பாடம்.

217. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

218. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

219. இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

220. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை.

24-ம் அதி.—புகழ்.

221. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

222. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.

223. ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்.

224. * நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு.

225. † நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

226. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

227. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்.

---

* "புலவர்பாடும் புகழுடையோர் விசும்பின், வலவ னேவா வான வூர்தி, யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து" என்னும் புறநானூற்றுச் செய்யுளை இக்குறளோடு ஒப்பிடுக. (புறநா–27.)

† ஈண்டு, 'போல்' என்பது உரையசை. நத்தமாகும்கேடு அரிது, உளதாகும் சாக்காடு அரிது என அநுவயித்துக்கொள்க. நத்தம்—பெருக்கம். நத்தமாகும் கேடு–புகழுடம்பு செல்வமடைதற்குப் பூதவுடம்பு வறுமைப்படல்; உளதாகும் சாக்காடு–புகழுடம்பு நிலைபெறுதற்குப் பூதவுடம்பு அழிதல். நிலையற்ற உடம்பை வருத்தியும் நீக்கியும் நிலையான புகழை வளர்த்தலும் நிறுத்தலும் அறிவுடையார்க் கன்றிப் பிறர்க்கு இயலா என்பது கருத்தாம்,

228. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறாஅ விடின்.

229. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

230. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

இல்லறவியல் முற்றும்.

துறவறவியல்.

மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராய்த் துறந்தார்க்கு உரிய அறத்தின் தன்மை.

25-ம் அதி.—அருளுடைமை.

அஃதாவது – இயல்பாக எல்லா உயிர்கள்மேலும் செல்வதாய கருணையை உடையராதல்.

231. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

232. நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு மஃதே துணை.

233. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னா வுலகம் புகல்.

234. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

235. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

236. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.

237. அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

238. பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
ரற்றார்மற் றாத லரிது.

239. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி
னருளாதான் செய்யு மறம்.

240. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

26-ம் அதி.—புலான் மறுத்தல்.

அஃதாவது – மாமிசமுண்பதை ஒழித்தல்.

241. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

242. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

243. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

244. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

245. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு.*

246. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

247. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

248. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணா
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.

249. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

250. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

27-ம் அதி.—தவம்.

251. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

252. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

253. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்.

---

* அளறு—நரகம். இக்குறள், தாப்பிசைப் பொருள்கோளுக்கு உதாரண மாகக் காட்டப்பெற்றது நன்னூலுரையுள்.

254. ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

255. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

256. தவஞ்செய்வார் * தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

257. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

258. தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

259. † கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு.

260. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

28-ம் அதி.—கூடாவொழுக்கம்.

அஃதாவது – தவத்தோடு பொருந்தாததாகிய தீயவொழுக்கம்.

261. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

262. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

263. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

264. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் ‡ தற்று.

---

* "நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித், தலையாயார் தங் கருமஞ் செய்வார்" என்பது நாலடியார்.

† "உலையா முயற்சி களைகணா வூழின், வலிசிந்தும் வன்மையு முண்டே, உலகறியப்–பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த, கான்முளையே சாலுங் கரி" என்னும் நீதிநெறிவிளக்கச் செய்யுள் இக்குறள்பற்றி வந்ததாம்.

‡ சிமிழ்த்தல் – பிணித்தல்.

265. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

266. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்.

267. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் * கரியா ருடைத்து.

268. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

269. கணைகொடி தியாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

270. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

29-ம் அதி.—கள்ளாமை.

அஃதாவது — பிறருடைமையைத் திருடாமை.

271. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

272. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் † கொள்வே மெனல்.

273. களவினா லாகிய வாக்க மளவிறந் ‡
தாவது போலக் கெடும்.

274. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

275. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

276. அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர்.

277. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

---

* கருமை—அறியாமையை உணர்த்திற்று; "கூழின் மலிமனம் போன்றிருளா நின்ற கோகிலமே" (திருச்சிற்றம்பலக்கோவையார்–322.) என்று மேற்கோள் காட்டினர் பரிமேலழகர். † 'கள்வேமெனல்' எனவும் பாடம்.

‡ 'அளவறிந்து' என்பதும் பாடம்.

278. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

279. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ரு தவர்.

280. கள்வார்க்குத் * தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

30–ம் அதி. — வாய்மை.

அஃதாவது — மெய்ம்மையினது தன்மை.

281. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

282. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

283. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும். †

284. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

285. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

286. பொய்யாமை யன்ன புகழில்லை ‡ யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

287. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

288. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

289. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

290. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

---

* தள்ளும்—தவறும்.

† இக்குறளை, "கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார், தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள், நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினு மறிபவர், நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை" என்பதனேடு ஒப்பிடுக. (கலித்தொகை—நெய்தல்—8.)

‡ எய்யாமை—வருந்தாமல்.

31-ம் அதி.—வெகுளாமை.

அஃதாவது – கோபியாமை.

291. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.

292. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற.

293. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்.

294. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

295. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே * கொல்லுஞ் சினம்.

296. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்.

297. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

298. இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

299. உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

300. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

32-ம் அதி.—இன்னாசெய்யாமை.

அஃதாவது – பிறவுயிர்க்குத் துன்பஞ்செய்யாமை.

301. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

302. கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

---

* கொல்லும்–துன்பப்படுத்தும்; "சொல்லச்சுரப்பதாங்கீழ்" என்புழிப்போல: (நாலடியார்–ஈயாமை–9.) "கொல்லப்பயன்படுங்கீழ்" என்புழியும் காண்க. (குறள்–1078.)

303. செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபி
னுய்யா விழுமந் தரும்.

304. இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

305. அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.

306. இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்.

307. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணாசெய் யாமை தலை.

308. தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

309. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.

310. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

33-ம் அதி.—கொல்லாமை.

311. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

312. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

313. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

314. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

315. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.

316. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண் ணுங் கூற்று.

317. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

318. நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.

319. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

320. உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

34-ம் அதி.—நிலையாமை.

அஃதாவது – தோற்றமுடையன யாவும் நிலையுதலில்லாமை.

321. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

322. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

323. * அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல்.

324. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

325. நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

326. நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

327. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

328. † குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

329. உறங்கு வதுபோலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

330. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

---

* அற்கா, அற்குதலென்னு மிரண்டுந் திரிபு. அல்குதல்–தங்குதல், நிலையுதல்.

† குடம்பை–முட்டை என்பர் பரிமேலழகர்; 'குடம்பை முட்டையுங் கூடு மாகும்'–பிங்கலந்தை.

35–ம் அதி.—துறவு.

அஃதாவது – உடல் பொருள்களின் பற்றினை விடுதல்.

331. யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்.

332. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

333. அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

334. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

335. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை.

336. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

337. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

338. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

339. * பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

340. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

36–ம் அதி.—மெய்யுணர்தல்.

அஃதாவது – பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் உண்மையானுணர்தல்.

341. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு.

342. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

343. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

---

* "அற்றது பற்றெனி—லுற்றது வீடு" என்பதும் அது. (திருவாய்மொழி, 1-ம் பத்து, 2-ம் திருவா, 5-ம் பாசுரம்.)

344. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

345. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

346. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

347. ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

348. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் *சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

349. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

350. காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்.

37-ம் அதி.—அவாவறுத்தல்.

அஃதாவது – புலன்கண்மேற்செல்லும் ஆசையை ஒழித்தல்.

351. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

352. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

353. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

354. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

355. அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றாக வற்ற திலர்.

356. அஞ்சுவ †தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப †தோரு மவா.

357. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

---

* சிறப்பு—இங்கு வீடு. † ஒரும்—அசைநிலை.

358. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றவாஅது மேன்மேல் வரும்.

359. இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

360. * ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
† பேரா வியற்கை தரும்.

38-ம் அதி.—ஊழ்.

அஃதாவது – இருவினைப்பயன், செய்தவனையே சென்றடைதற் கேதுவாய நியதி; விதியென்பதும் இதுவே.

361. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.

362. பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை.

363. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.

364. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

365. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

366. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம.

367. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

368. துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின்.

---

* இக்குறளின் பொருளை, "ஒன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா ழுலப்பி லதனை யுணர்ந்துணர்ந்து, சென்றாங் கின்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால், அன்றே யப்போ தேவீடு" என்னும் பாசுரத்தினுட் காண்க. (திருவாய்மொழி, 8–ம் பத்து, 8–ம் திருவா, 6–ம் பாசுரம்.)

† பேராவியற்கை—வீடு,

369. நன்றுங்கா னல்லவாக் காண்பவ ரன்றுங்கா
லல்லற் படுவ தெவன்.

370. * ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

அறத்துப்பால் முற்றும்.

பொருட்பால்.

அரசியல்.

39-ம் அதி.—இறைமாட்சி.

அஃதாவது – அரசனது நற்குண நற்செய்கைகள்.

371. படைகுடி கூழமைச்சு நட்பா ரணாறு
முடையா னரசரு ளேறு.

372. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

373. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு.

374. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

375. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

376. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

377. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றான்கண் டனைத்திவ் வுலகு.

378. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

* "சூழ்வினை நான்முகத் தொருவர்ச் சூழினும், ஊழ்வினை யொருவரா லொழிக்கிற் பாலதோ" என்னும் கம்பர் செய்யுள் இக்குறளை ஒட்டி வந்தது. (நகர்நீங்கு படலம்–163.)

379. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

380. கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானாம் வேந்தர்க் கொளி.

40-ம் அதி.—கல்வி.

381. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

382. * எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

383. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

384. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

385. † உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

386. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

387. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

388. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு ‡ மேமாப் புடைத்து.

389. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

390. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

---

* "எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்" என்றார் ஔவையார்.

† "கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு, செல்வமுஞ் செல்வ மெனப்படும்—இல்லார்—குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந், தலைவணங் கித் தாழப் பெறின்" என்னும் நீதிநெறிவிளக்கச் செய்யுள் இக்குறளைத் தழுவிவந் தது. 'கடையர்' என்றதனால், அதற்கு மறுதலையாய 'தலையர்' என்பதை வருவித் துக்கொள்க. ஏக்கற்று—ஆசையால் தாழ்ந்து.

‡ ஏமாப்பு—உதவுதல்.

41-ம் அதி.—கல்லாமை.

391. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

392. * கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

393. கல்லாதா னொட்பங் கழியநன் ருயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

394. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

395. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

396. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று.

397. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்ட திரு.

398. † மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்று ரனைத்திலர் பாடு.

399. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

42-ம் அதி.—கேள்வி.

அஃதாவது — நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்.

400. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

401. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

---

* "கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங், கொற்கமின் றாத்தைவா யங்காத்தல்-மற்றுத்தம்—வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை, புல்லுரு வஞ்சுவ போல்" என்னும் நீதிநெறிவிளக்கச் செய்யுள் இதனைத் தழுவிவந்தது.

† "நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன், கற்றில னாயிற் கீழிருப் பவனே" என்றார் அதிவீரராமபாண்டியர்; (நறுந்தொகை.)

402. செவியுணவிற் கேள்வி யுடையா *ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து.

403. † கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

404. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

405. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

406. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

407. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

408. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

409. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

43-ம் அதி.—அறிவுடைமை.

410. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்.

411. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

412. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

413. எண்பொருள் வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

414. உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

---

* அவியுணவு—தேவர்க்கு வேள்வியிற் கொடுக்கப்படும் உணவு.

† "உணற்கினிய வின்னீர் பிறிதுழியில் லென்னுங், கிணற்றகத்துத் தேரைபோ லாகார்—கணக்கினை—முற்றப் பகலு முனியா தினிதோதிக், கற்றலிற் கேட்டலே நன்று" என்னும் பழமொழி இக்கருத்துப்பற்றி வந்தது.

415. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

416. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

417. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

418. எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

419. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

44-ம் அதி.—குற்றங்கடிதல்.

அஃதாவது — காமம் முதலிய குற்றங்களை நீக்குதல்.

420. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

421. இவறலு மாண்பிறந்த மானமு மாணா
வுவகையு மேத மிறைக்கு.

422. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

423. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தரூஉம் பகை.

424. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
* வைத்தூறு போலக் கெடும்.

425. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

426. செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்.

427. பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று.

---

* வைத்தூறு—வைக்கோற்போர்.

428. வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

429. காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்.

45–ம் அதி.—பெரியாரைத் துணைக்கோடல்.

430. அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

431. உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

432. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

433. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

434. சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

435. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

436. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

437. இடிப்பாரை யில்லாத *வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

438. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

439. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

46–ம் அதி.—சிற்றினஞ்சேராமை.

அஃதாவது – சிறியவரது கூட்டத்தைச் சேராமை.

440. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

* ஏமரா—காவலற்ற.

441. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

442. மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா
மின்னா னெனப்படுஞ் சொல்.

443. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

444. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும்.

445. மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை.

446. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்.

447. மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

448. மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.

449. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

47-ம் அதி.—தெரிந்துசெயல்வகை.

450. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

451. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

452. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

453. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

454. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

455. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

456. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

457. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

458. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

459. எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

48–ம் அதி.—வலியறிதல்.

460. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

461. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

462. உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

463. அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

464. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

465. நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

466. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

467. ஆகா றளவிட்டி* தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

468. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றாக் கெடும்.

469. உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

---

* இட்டிது—சிறியது; "இட்டிடைச்சிதை" (நாலாயிர திவ்யப் பிரபந்தம்)
"இட்டிடை யிருக்குந் தன்மை"—(கம்பர்.)

49-ம் அதி.—காலமறிதல்.

470. * பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

471. பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

472. அருவினை யென்ப வுளவோ † கருவியாற்
கால மறிந்து செயின்.

473. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

474. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

475. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

476. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

477. செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் ‡ கிழக்காந் தலை.

478. எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

479. § கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

---

* இக்கருத்தை, "இடத்தொடு பொழுது நாடி யெவ்வினைக் கண்ணு மஞ்சார், மடப்பட லின்றிச் சூழு மதிவல்லார்க் கரிய துண்டோ, தடத்திடைக் காகை யொன் றே யாயிரங் கோடி கூகை, இடத்திடை யழுங்கச் சென்றுங் கின்னுயிர் செகுத்த தன்றே" என்னும் செய்யுளிற் காண்க. (சீவக சிந்தாமணி, விமலையாரிலம்பகம்—39.). இச்செய்யுளின் உரையில் இக்குறளையே யெடுத்து மேற்கோள்காட்டினர் நச்சினார்க்கினியர்.

† கருவி—அறிவு, ஆண்மை, பெருமை என்னும் மூவகையாற்றலும், சாமம், தானம், பேதம், தண்டம் என்னும் நால்வகை யுபாயமுமாம்.

‡ கிழக்காம்—கீழாகும்.

§ "அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக், கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்—ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும், வாடி யிருக்குமாங் கொக்கு" என்னும் ஔவையார் பாடல் இதுபற்றி வந்ததாம். (மூதுரை.)

50-ம் அதி.—இடனறிதல்.

480. தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது.

481. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும்.

482. ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின்.

483. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

484. நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற.

485. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

486. அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

487. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும்.

488. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

489. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

51-ம் அதி.—தெரிந்து தெளிதல்.

அஃதாவது – அமைச்சர் முதலாயினரை அரசன் ஆராய்ந்து தெளிதல்.

490. அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
றிறந்தெரிந்து தேறப் படும்.

491. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

492. அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.*

---

* வெளிறு—வெண்மை; அஃதாவது, அறியாமை.

493. குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

494. * பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

495. அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி.

496. காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்.

497. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

498. தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள்.

499. தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

52-ம் அதி.—தெரிந்துவினையாடல்.

அஃதாவது – தன்னால் தெளியப்பட்ட அமைச்சர் முதலானவர்கள் வினைகளை அரசன் அறிந்து ஆளுந்திறம்.

500. நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா னாளப் படும்.

501. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
யாராய்வான் செய்க வினை.

502. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

503. † எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர்.

---

* "தருமம் பற்றிய தக்க வர்க்கெலாம், கருமங் கட்டளை யென்றல் கட்டதோ" என்னுங் கம்பர் செய்யுள் இக்குறளைத் தழுவி வந்தது. (கிட்கிந்,–அரசியற்படலம்–16.)

† 'கட்டியங்காரன்போல அரசவின்பத்தினை வெஃகி விகாரப்படுவதல்லது, அதனைக் குற்றமென்றொழித்துத் தம்மியல்பினிற்பார் அரியராகலின், "வேறாகுமாந்தர் பலர்" என்றார்' என்பது பரிமேலழகர் விசேடவுரை. (கட்டியங்கார னென்பான், சீவகசிந்தாமணியிற் கூறப்படும் சச்சந்தனது மந்திரி.)

504. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

505. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

506. இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்.

507. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்.

508. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு.

509. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

53-ம் அதி.—சுற்றந்தழால்.

அஃதாவது – உறவினரைத் தன்னின் நீங்காது அணைத்துக்கொள்ளுதல்.

510. * பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

511. விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
வாக்கம் பலவுந் தரும்.

512. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

513. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

514. கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

515. பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

516. காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள.

---

* "அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோ, லுற்றுழித் தீர்வா ருறவல்லர்—அக்குளத் திற்—கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே, ஒட்டி யுறுவா ருறவு" என்னும் ஔவையார் (மூதுரை) பாடலை இதனோடு ஒப்பிடுக.

517. * பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

518. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

519. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

54-ம் அதி.—பொச்சாவாமை.

அஃதாவது – மறவாமை.

520. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

521. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
† நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

522. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானூ லோர்க்குந் துணிவு.

523. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

524. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

525. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னஃதொப்ப தில்.

526. அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் ‡ போற்றிச் செயின்.

527. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

---

* "ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப், பலரும் வருவர் பரிசின் மாக்கள், வரிசை யறிதலோ வரிதே பெரிதும், ஈத லெளிதே மாவண் டோன்றல், அதுநற் கறிந் தனை யாயிற், பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே" என்னும் செய்யுள் ஈண்டறி யத்தக்கது; (புறநானூறு–121.)

† 'நிச்சநிரப்பு–நாடோறும் இரவான் வருந்தித் தன்வயிறு நிறைத்தல்' (பரிமேலழகர்.) நிரம்பாமையை 'நிரப்பு' என்றது எதிர்மறை யிலக்கணையாம்; 'அழுக்காறு' என்பதுபோல.

‡ பொச்சாவாக்கருவி: இதனை, பொச்சாவாதகருவி என விரிப்பர் பரிமேலழகர். பொச்சாவாமையாகிய கருவி என்பது சேனாவரையர் கருத்து. (தொல்–வினையியல்–37.) கருவி–ஈண்டு, அந்தக்கரணமாகிய மனம்.

528\. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

529\. உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

55-ம் அதி.—செங்கோன்மை.

530\. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

531\. * வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

532\. † அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

533\. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

534\. இயல்புளிக் ‡ கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

535\. § வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

536\. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு ‖ முட்டாச் செயின்.

---

* "கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலையின், பானோக்கி வாழுங் குழவிகள்—வானத் — துளிநோக்கி வாழு முலக முலகின், விளிநோக்கி யின்புறூஉங் கூற்று" என்னும் நான்மணிக்கடிகைச் செய்யுள் ஈண்டறியத்தக்கது.

† "மாதவர் நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவ லின்றெனி னின்றாம்" (மணிமேகலை, சிறைவைத்தகாதை) என்பதும், "தவமும், அரசிலா ரில் வழி யில்லை" (நான்மணிக்கடிகை—47) என்பதும் ஈண்டறியத்தக்கவை.

‡ உளி—மூன்றாம் வேற்றுமைப் பொருள்படுவதோர் இடைச்சொல். (பரிமே.)

§ "மாண்ட, அறநெறி முதற்றே யரசின் கொற்றம்" என்பது இக்கருத்துப் பற்றி வந்தது. (புறநானூறு—55.)

‖ 'முட்டாமல்—தடையுறாமல். இதனுரையில், 'முட்டாமற் செலுத்தியவாறு, மகனை முறைசெய்தான் கண்ணும், தன்கை குறைத்தான் கண்ணும் காண்க' என்றார் பரிமேலழகர். (மகனை முறைசெய்தான்—மனுமுறைகண்ட சோழன். தன்கை குறைத்தான்—பொற்கைப் பாண்டியன்.) இவர்கள் செங்கோன்மையை முறையே, "ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான், தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன், மருமந்தன் தேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன், அரு மந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்" என்னும் பெரியபுராணச் செய்யுளும், "எனக்குத் தகவன்றா லென்பதே நோக்கித், தனக்குக் கரியாவான் தானாய்த் தவற்றை,

537. *எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் றானே கெடும்.

538. † குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்.

539. † கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

56-ம் அதி.—கொடுங்கோன்மை.

540. கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து.

541. வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு.

542. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்.

543. கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

544. ‡ அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

545. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி.

546. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு.

547. இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

வினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனுங் காணு, ரெனச்செய்யார் மாணு வினை''
என்னும் பழமொழிச் செய்யுளும் விளக்குதல் காண்க.

* எண்பதத்தான்—எளிய செவ்வி உடையனாய். தண்பதம்—தாழ்ந்த நிலை.

† இவற்றின் பொருள், "நாயக னல்ல னம்மை நனிபயந் தெடுத்து நல்குந், தாயென வினிது பேணத் தாங்குதி தாங்கு வாரை, ஆயது தன்மை யேனு மறவரம் பிகவா வண்ணம், தீயன வந்த போது சுடுதியாற் றீமை யோரை'' எனக் கம்பர் செய்யுளில் வந்தது. (கிட்கி.—அரசியற்படலம்—34.)

‡ "மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம், மனமுற மறுகிநின் றழுத கண்ணீர், முறையுறத் தேவர் மூவர் காப்பினும், வழிவழி யீர்வதோர் வாளா கும்மே''
என்னும் அதிவீரராம பாண்டியர் நறுந்தொகையும் இக்கருத்துப்பற்றி வந்தது.

548. முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.

549. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

57-ம் அதி.—வெருவந்த செய்யாமை.

அஃதாவது – அஞ்சத்தக்க செயல்களைச் செய்யாமை.

550. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து.

551. கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர்.

552. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
* னொருவந்த மொல்லைக் கெடும்.

553. இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்.

554. அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

555. கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

556. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் † வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்.

557. இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு.

558. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

559. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.

---

* ஒருவந்தம்–ஒருதலை; நிச்சயம்.

† கையிகந்த தண்டம்–குற்றத்தின் மிக்க தண்டம். இக்குறளில், 'அரம்' என்றதற்கேற்ப, முரணை இரும்பு என்னுமையின், இஃது ஏகதேசவுருவகம்.

58-ம் அதி.—கண்ணோட்டம்.

அஃதாவது – தன்னோடு பழகினவரிடத்துத் தாக்ஷிண்யமுடைமை; அது கண்ணோடியவழி உண்டாதலின் இப்பெயர்பெற்றது.

560. கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.

561 கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை.

562. பண்ணென்னாம் பாடற் கியைபின்றேற் கண்ணென்னாங்
கண்ணோட்ட மில்லாத கண்.

563. உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்
கண்ணோட்ட மில்லாத கண்.

564. * கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

565. † மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.

566. கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில்.

567. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

568. ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

569. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
‡ நாகரிகம் வேண்டு பவர்.

---

* "கண்ணுக்கணிகலங் கண்ணோட்டம்" என்பது திரிகடுகம்.

† 'மரமுங் கண்ணோ டியைந்த கண்ணோடாமையின், இது தொழிலுவமம்; "மரக்கண் – மரத்தின்கணு. "வரக்கண்டு நாணாதே வல்லையா னெஞ்சே, மரக் கண்ணோ மண்ணாள்வார் கண்ணென் – றிரக்கண்டாய் – வாளுழுவை வெல்கொடி யான் வண்புனனீர் நாடற்கென், றோளழுவந் தோன்றத் தொழுது" என்னும் முத் தொள்ளாயிரச் செய்யுளை ஈண்டு நினைக்க.

‡ நாகரிகம்–ஈண்டுக் கண்ணோட்டம்; "செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார், நயத்தகு நாகரிக மென்னும்" என்னும் நீதிநெறிவிளக்கச் செய்யுளையும் நோக்குக. "முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சுமுண்பர் நனிநா கரிகர்" என்பதனை இக்குறளோ டொப்பிடுக. (நற்றிணை–355.)

59-ம் அதி.—ஒற்றாடல்.

அஃதாவது – வேவுகாரரை வைத்து ஆளுதல்.

570. ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்.

571. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.

572. ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

573. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று.

574. * கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

575. துறந்தார் † படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று.

576. மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று.

577. ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினா லொற்றிக் கொளல்.

578. ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்.

579. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை.

60-ம் அதி.—ஊக்கமுடைமை.

அஃதாவது – வினைசெய்தலில் உள்ளக்கிளர்ச்சி யுடையராதல்.

580. உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று.

581. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

---

* கடாஅ–சந்தேகிக்கப்படாத. சந்தேகிக்கப்படாத உரு பார்ப்பார் வணிகர் முதலாயினோர்வடிவு. கடா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; 'கடுக்கும்' என்பது உடன்பாடு.

† படிவத்தர்—விரதவொழுக்கினர் (பரிமே.); இனி, துறந்தார் படிவத்தர்—துறந்தவரது வேடத்தர் என்பதுமொன்று; படிவம்—வேடம்.

582. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் *கைத்துடை யார்.

583. ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை.

584. † வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்த
முள்ளத் தனைய துயர்வு.

585. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

586. சிதைவிடத் தொல்கா ருரவோர் ‡ புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு.

587. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

588. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

589. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

61-ம் அதி.—மடியின்மை.

அஃதாவது – சோம்புதல் இல்லாமை.

590. குடியென்னுங் குன்றா விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும்.

591. மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

592. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து.

593. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

594. நெடுநீர் மறவி மடிதுயி லுன்குங்
கெடுநீரார் காமக் கலன்.

---

* கைத்து—கையகத்தாய பொருள்.

† Compare Wordsworth—*The Excursion* Book V, lines 562-569.

‡ புதை—அம்புக்கட்டு.

595. படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது.

596. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர்.

597. மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும்.

598. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

599. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு.

62-ம் அதி.—ஆள்வினையுடைமை.

அஃதாவது – மெய்ம்முயற்சி யுடைமை.

600. அருமை யுடைத்தென் * றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

601. வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை †
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

602. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

603. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
‡ வாளாண்மை போலக் கெடும்.

604. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் § தூண்.

605. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

606. மடியுளாண் மாமுகடி ‖ யென்ப மடியிலான்
றாளுளா டாமரையி னாள்.

---

* அசாவாமை—தளராமை.

† குறை—இன்றியமையாப் பொருள்: "பயக்குறையில்லைத் தாம்வாழுநாளே" என்புழிப்போல. (புறநானூறு–188.)

‡ வாளாண்மை—வாளை ஆளுதற்றன்மை; இனி, வாளாற்செய்யும் ஆண்மையுமாம்.

§ ஊன்றுதல்—தாங்குதல்.

‖ முகடி—மூதேவி.

607. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.

608. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

609. ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். *

63-ம் அதி.—இடுக்கணழியாமை.

அஃதாவது – துன்பத்தினால் கலங்காமை.

610. இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

611. வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

612. இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

613. மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

614. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

615. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர்.

616. † இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல்.

617. இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன்.

---

* இக்குறளின் உண்மையை மார்க்கண்டன் முதலியோர் சரித்திரத்தால் அறிக.

Also compare Tennyson-*Locksley Hall—Sixty Years After*—" Follow Light, and do the Right—for man can half-control his doom."

† "இடும்பைக் கிடும்பை யியலுடம்பு" என்பது நல்வழி.

618. இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்.

619. இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையுஞ் சிறப்பு.

அரசியல் முற்றும்.

அங்கவியல்.

அஃதாவது—படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் அங்கங்களின் இலக்கணம்.

64-ம் அதி.—அமைச்சு.

அஃதாவது—மந்திரியினது தன்மை.

620. * கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு.

621. வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

622. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.

623. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

624. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை.

625. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

626. செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்.

627. அறிகொன் றறியா னெனினு முறுதி
† யுழையிருந்தான் கூறல் கடன்.

* கருவிகள்—தானையும் பொருளும்.

† உழையிருந்தான்—சமீபத்திலிருப்பவன்; அமாத்தியன் என்னும் வடசொல்லின் பொருள்பற்றி வந்தது; அமா—ஸமீபம்; அமைச்சன் என்பதும் அது.

628. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
*ரெழுபது கோடி யுறும்.

629. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

65-ம் அதி.—சொல்வன்மை.

630. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று.

631. ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

632. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

633. திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

634. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

635. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றார் கோள்.

636. சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

637. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

638. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்.

639. இணருழ்த்து † நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

66-ம் அதி.—வினைத்தூய்மை.

அஃதாவது – செய்யப்படும் வினைகள் நல்லனவாதல்.

640. துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்.

---

* 'எழுபது கூறு தலை' என்பதும் பாடம். † ஊழ்த்தல்—மலர்தல்.

641. என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

642. * ஓஒதல் வேண்டு † மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.

643. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

644. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று.

645. ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

646. பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

647. கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும்.

648. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.

649. ‡ சலத்தாற் பொருள்செய்தே மாத்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

67–ம் அதி.—வினைத்திட்பம்.

அஃதாவது – வினைமுடிப்பானுக்கு வேண்டிய மனத்திண்மை.

650. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற.

651. ஊறொரா லுற்றபி னொல்காமை யிவ்விரண்டி
னாறென்ப ராய்ந்தவர் கோள்.

652. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி
னெற்றா விழுமந் தரும்.

653. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

---

* ஓதல்–தவிர்தல். † ஒளி–தாமுளகாலத்து எல்லாராலும் நன்கு மதிக்கப் படுதல் என்பர் பரிமேலழகர்.

‡ சலம் – வடசொற்றிரிபு; அகத்திலொன்றும் புறத்திலொன்றுமாயிருத்தல். ‘ஏமார்த்தல்’ என்பதும் பாடம்.

654. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுள்ளப் படும்.

655. எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

656. * உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.

657. கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
† தூக்கங் கடிந்து செயல்.

658. துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

659. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

68-ம் அதி.—வினைசெயல்வகை.

660. சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத றீது.

661. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

662. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

663. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்.

664. பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்து
மிருடீர வெண்ணிச் செயல்.

665. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

---

* இதன்பொருள், "சிறியரென் றிகழ்ந்து நொய்வு செய்வன செய்யல்" என்னும் கம்பர் பாடலில் அமைந்துள்ளமை காண்க. (கிட்கி. அரசியற்–32.) "பலசற்றோரும் யாமென்று தற்புகழ வேண்டா, அலர்கதிர் ஞாயிற்றைக் கைக் குடையுங் காக்கும், சிலகற்றார் கண்ணு முளவாம் பலகற்றார்க், கச்சாணி யன்ன தோர் சொல்" (பழமொழி.), "உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக், கடலின் பெருமை கடவார்." (நன்னெறி.), "மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம், உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா" (மூதுரை.) என்பன காண்க.

† தூக்கம் – தாமதம்.

666. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

667. வினையான் வினையாக்கிக் கோட னனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

668. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல்.

669. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

69-ம் அதி.—தூது.

670. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

671. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.

672. நூலாரு ணூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

673. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

674. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

675. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது.

676. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

677. தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

678. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

679. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

---

* "தடுமாற்ற மின்றித் தகைசான்ற சொல்லான், வடுமாற்றம் வாய்சோரா னாகி—விடுமாற்றம்—எஞ்சாது கூறி யிகல்வேந்தன் சீறுங்கால், அஞ்சா தமைவது தூது."—பாரத வெண்பா.

70-ம் அதி.—மன்னரைச் சேர்ந்தொழுகல்.

680. * அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

681. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்.

682. போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது.

683. † செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து.

684. ‡ எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை.

685. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

686. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

687. § இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.

688. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

689. ‖ பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.

---

* "தீண்டி னூர்தமைத் தீச்சுடு மன்னர்தீ, ஈண்டு தங்கிளை யோடு மெரித்திடும்" என்பது சீவகசிந்தாமணி.

† "பிறரொடு மந்திரங் கொள்ளா ரிறைவனைச், சாரார் செவியோரார் சாரிற் பிறிதொன்று, தேரார்போ னிற்க திரிந்து" என்பது ஆசாரக்கோவை.

‡ "பெருந்தக்கார், சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டிடுக மீட்டும், வினவற்க சொல்லொழிந்தக் கால்." (ஆசாரக்கோவை.)

§ "உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி, கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால், இறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந், தறங்கள் வெளவ வதன்புறங் காக்கலார்" என்னும் சீவகசிந்தாமணி இதுபற்றி வந்தது. (நாமகளிலம்பகம்—219.)

‖ "பழைமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார், கிழமை பிறிதொன்றுங் கொள்ளார் – வெகுளின்மற்—காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரும், ஆர்வலரு மில்லை யவர்க்கு" என்பது நீதிநெறிவிளக்கம்.

71-ம் அதி.—குறிப்பறிதல்.

அஃதாவது – அரசன் கருதியதை அவன் கூறாமல் அறிதல்.

690. கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக் கணி.

691. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

692. குறிப்பிற் குறிப்புணர் வாரை *யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

693. குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு.

694. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண்.

695. † அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

696. முகத்தின் ‡ முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்.

697. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்.

698. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.

699. நுண்ணிய மென்பா § ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.

72-ம் அதி.—அவையறிதல்.

அஃதாவது – அரசனோடிருந்த சபையினது இயல்பை அறிதல்.

700. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்.

---

* உறுப்பு—பொருளும் நாடும் யானை குதிரைகளும் முதலியன. குறிப்பிற் குறிப்புணர்வாரை—தங்குறிப்பு நிகழுமாறறிந்து அதனாற் பிறர் குறிப்பறியுந் தன்மையாரை: (பரிமே.); இனி, பிறர்முகக்குறிப்பானே அவர் மனக்குறிப்பறிவாரை என்பதுமொன்று.

† "தூக்கின், அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு மெல்லாம், முகம்போல முன்னுரைப்ப தில்" என்பது நான்மணிக்கடிகை.

‡ முதுக்குறைந்தது—அறிவுமிக்கது. § 'அலைக்குங்கோல்' என்பது பிறர் பாடம்.

701. * இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.

702. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில்.

703. ஒளியார்முன் னொள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்.

704. நன்றென் றவற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு.

705. ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

706. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

707. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று.

708. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

709. அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

73–ம் அதி.—அவையஞ்சாமை.

அஃதாவது – சபைக்குப் பயப்படாமை.

710. வகையறிந்து † வல்லவை வாய்சோரார் சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்.

711. கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

712. பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்.

713. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

---

* இடை.–செவ்வி; அஃதாவது–கேட்டற்கண் விருப்புடைமை.

† வல்லவை–கற்றுவல்ல அவை; இனி, தாங்கற்றுவல்ல நூற்பொருள்கள் என்பது பிறருரை.

714. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

715. வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்
னுண்ணவை யஞ்சு பவர்க்கு.

716. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்.

717. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.

718. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

719. உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

அங்கவியலில் அமைச்சியல் முற்றும்.

74-ம் அதி.—நாடு.

720. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. *

721. பெரும்பொருளாற் † பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு.

722. பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு.

723. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு.

724. பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு.

725. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை.

726. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

* "நற்ற வஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய் வார்க்கு மஃதிடம்" என்பது சீவக சிந்தாமணி; (நாமகளிலம்பகம்–48.)

† பெட்டக்கது—விரும்பத்தக்கது.

727. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

728. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

729. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

75-ம் அதி.—அரண்.

730. ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.

731. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

732. உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல்.

733. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்.

734. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.

735. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண்.

736. முற்றியு முற்று தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

737. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண்.

738. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.

739. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்.

76-ம் அதி.—பொருள்செயல்வகை.

740. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

741. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

742. பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

743. * அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

744. அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

745. உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

746. † அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

747. குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

748. ‡ செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில்.

749. ஒண்பொருள் § காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு.

77-ம் அதி.—படைமாட்சி.

அஃதாவது – சேனையினது பெருமை.

750. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
|| வெறுக்கையு ளெல்லாந் தலை.

751. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது.

---

* "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண தெய்த விருதலையு மெய்தும்" என்பது நாலடியார். "அம்மூன்றும், ஆராயிற் றானே யறம்பொரு ளின்பமென், றாரா ரிவற்றி னிடையதனை யெய்துவார், சீரா ரிருதலையு மெய்துவர்" என்பது திருமங்கை மன்னன் பாசுரம்; (சிறிய திருமடல்.)

† அருள்–தொடர்புபற்றாது, வருத்தமுற்றார்மேற் செல்லும் மனநெகிழ்ச்சி; அன்பு–தொடர்புடையார்மேற் செல்வது; (பரிமேலழகர்.)

‡ "செய்கபொருள் யாருஞ் செறுவாரைச் செறுகிற்கும், எஃகுபிறி தில்லை யிருந்தே யுயிருமுண்ணும், ஐயமில்லை யின்ப மறனோ டவையு மாக்கும், பொய்யில் பொரு ளேபொருண்மற் றல்லபிற பொருளே" என்பது சீவகசிந்தாமணி; (காந்தருவதத்தையாரிலம்பகம்–5.)

§ காழ்த்தல்–முதிர்தல்; மிகுதல். || வெறுக்கை–செல்வம்.

752. * ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

753. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

754. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை.

755. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

756. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து.

757. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும்.

758. சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை.

759. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில்.

78-ம் அதி.—படைச்செருக்கு.

அஃதாவது – படையினது வீரத்தின் மிகுதி.

760. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று † கன்னின் றவர்.

761. ‡ கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது.

762. பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
§ லூராண்மை மற்றத னெஃகு.

---

* "எலியெலா மிப்படை யரவம் யானென, ஒலியுலாஞ் சேனையை யுவந்து கூவினன்" என்னும் கம்பர் செய்யுள் இக்குறள்பற்றி வந்ததாம். (குகப்படலம்–10.)

† கல்–நடுகல்: அஃதாவது–போரில் வீரங்காட்டி இறந்த மறவனைக் கல்லுரு வில் நட்டுச் சிறப்புச் செய்தல். (தொல்–புற–சூ. 5.)

‡ இதனை, "நரிமா வுளங்கிழித்த வம்பினிற் றீதோ, அரிமாப் பிழைப்பெய்த கோல்" என்பதனோடு ஒப்பிடுக; (நாலடியார், மேன்மக்கள்–2.)

§ 'ஊராண்மை–உபகாரியாந் தன்மை; அஃதாவது–இலங்கையர் வேந்தன் போரிடைத் தன்தானை முழுதும்படத் தனியனா யகப்பட்டானது நிலைமைநோக்கி அயோத்தியரிறை மேற்செல்லாது "இன்றுபோய்நாளை நின் றானையொடு வா" என விட் டாற்போல்வது' என்பது பரிமேலழகரது விசேடவுரை: ஈண்டு, "ஆனை யாவனக்

763. * கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

764. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னொட்டன்றோ வன்க ணவர்க்கு.

765. † விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து.

766. சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

767. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்.

768. ‡ இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்.

769. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

79–ம் அதி.—நட்பு.

770. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

771. § நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

772. நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

773. நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

கமைந்தன மாருத மறைந்த, பூளை யாயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு, நாளை வாவென நல்கின னிளங் கமுகின், வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்'' என்னும் கம்பர் செய்யுளை யுணர்க; (உயுத்தகாண்டம், முதற்போர்ப் படலம்–256.) இது தழிஞ்சித் துறையாம்; அஃதாவது—தோற்றவர்மேற் போர்க்குச் செல்லாமை.

* களிற்றொடுபோக்கல்–களிற்றினது உயிரைக் கொடுபோமாறு விடுதல்.

† விழுப்புண்–முகத்தினும் மார்பினும் பட்ட புண்.

‡ இழைத்தல்–இன்னது செய்யேனாயின் இன்னனாகுகவெனத் தான் வகுத்தல்.

§ "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும்–வரிசையால்–வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே, தானே சிறியார் தொடர்பு" என்பது நாலடியார்.

774. *புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்.

775. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

776. அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு.

777. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.

778. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை.

779. இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு.

80-ம் அதி.—நட்பாராய்தல்.

அஃதாவது – நட்பினராவாரை ஆராயுந்திறம்.

780. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

781. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

782. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு.

783. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

784. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்.

785. கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

786. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்.

---

* இதனுரையில், பிசிராந்தையார் என்ற புலவர்க்கும் கோப்பெருஞ் சோழன் என்ற அரசனுக்குமிருந்த நட்பின் சிறப்பை எடுத்துக்காட்டினர் பரிமேலழகர்; அது, புறநானூறு, 212, 215–இச்செய்யுட்களால் நன்கு விளங்கும்.

787. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணாற்றறுப்பார் நட்பு.

788. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்.

789. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு.

81-ம் அதி.—**பழமை.**

அஃதாவது—நட்புடையார் பழையராந்தன்மைபற்றி அவர் பிழையைப் பொறுத்தல்.

790. பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

791. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன்.

792. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

793. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

794. பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

795. எல்லைக்க ணின்றார் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்றார் தொடர்பு.

796. அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

797. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின்.

798. *கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு.

799. விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

---

* 'கெடார்' என்பதும் சிலர் பாடம்,

82-ம் அதி.—தீநட்பு.

அஃதாவது – தீக்குணத்தாரோடு உண்டாகிய சிநேகம்.

800. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற வினிது.

801. உறினட் டறினொரூஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென்.

802. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர். *

803. அமாகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார்
தமரிற் றனிமை தலை.

804. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று.

805. பேதை பெருங்கெழீஇ † நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும்.

806. நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும்.

807. ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

808. கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

809. எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு.

83-ம் அதி.—கூடாநட்பு.

அஃதாவது – அகத்தாற்கூடாது புறத்தாற்கூடி யொழுகுவாரது நட்பு.

810. ‡ சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

811. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

---

* இக்குறளில், 'நேர்' என்பதை எடுத்து, முதனிலைத் தனிவினையும் வினைமுற்றாய் வருமென்று, "வினைமுற்றே வினையெச்சமாகலும்" என்னும் சூத்திரவுரையில் காட்டினர் நன்னூலுரையாசிரியர். † 'பெருங்கழிநட்பு' என்பது சிலர் பாடம்.

‡ 'தீர்விடம்' என்னும் பாடத்திற்கு முடிவிடம் என்பது பொருள்.

812. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணார்க் கரிது.

813. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும்.*

814. மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று.

815. நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும்.

816. சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான்.

817. †தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
ரழுதகண் ணீரு மனைத்து.

818. மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் ‡சாப்புல்லற் பாற்று.

819. பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல்.

84-ம் அதி.—பேதைமை.

அஃதாவது – யாதுமறியாமை.

820. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல்.

821. பேதை மையுளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

822. நாணாமை நாடாமை §நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

823. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

---

* அஞ்சப்படும்–ஒருவகை வியங்கோள்.

† 'தொழுததங் கையி னுள்ளுந் தறுமுடி யகத்துஞ் சோர, அழுதகண் ணீரி னுள்ளு மணிகலத் தகத்து மாய்ந்து, பழுதுகண் ணரிந்து கொல்லும் படையுட னொடுங்கும் பற்றா, தொழிகயார் கண்ணுந் தேற்றந் தெளிகுற்றார் விளிகுற் றாரே' என்பது சீவக சிந்தாமணி. இதனுரையில், இக்குறளை யெடுத்து மேற்கோள் காட்டினர் நச்சினார்க்கினியர். ‡ 'சாவ' என்பது 'சா' என விகாரத்தால் தொக்கது.

§ நாரின்மை–தாக்ஷிண்யமற்ற சொற்செயலுடைமை.

824. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு.

825. பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

826. ஏதிலா ரார்த் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.

827. மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்.

828. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

829. * கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

85-ம் அதி.—புல்லறிவாண்மை.

அஃதாவது – தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து,
உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொற்கொள்ளாமை.

830. † அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு.

831. அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம்.

832. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

833. ‡ வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு.

834. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்.

835. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி.

---

* கழாஅக்கால்—கழுவாக்கால்; இடக்கரடக்கு.

† "நண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்" என்பது நாலடியார்.

‡ வெண்மை – அறிவு முதிராமை.

836. அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

837. * ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்.

838. காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு.

839. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

86-ம் அதி.—இகல்.

அஃதாவது – இருவர் தம்முட்பொருது வலிதொலைதற்கேதுவாய மாறுபாடு.

840. இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்.

841. பகல்கருதிப் † பற்றா செயினு மிகல்கருதி
யின்னாசெய் யாமை தலை.

842. இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும்.

843. இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

844. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

845. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து.

846. மிகன்மேவன் மெய்ப்பொருள் காணா ரிகன்மேவ
லின்னா வறிவி னவர்.

847. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு.

---

* இக்குறளை, செறலினால்வந்த திணைவழுவமைதிக்கு உதாரணமாகக் காட்டினர் நன்னூலுரையாசிரியர்.

† பற்றா–பற்றாத (வினையாலணையும் பெயர்) என்பதன் விகாரம்; வெறுப்பன என்பது பொருள்.

848. இகல்காணு னாக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு.

849. இகலானு மின்னாத வெல்லா நகலானு
நன்னய மென்னுஞ் செருக்கு.

87–ம் அதி.—பகைமாட்சி.

அஃதாவது – பகையை மாட்சிப்படுத்தல்.

850. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் * மேக பகை.

851. அன்பில னான்ற துணையிலன் றான்றுவ்வா †
னென்பரியு மேதிலான் றுப்பு.

852. அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு.

853. நீங்கான் வெகுளி ‡ நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது.

854. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

855. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும்.

856. கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.

857. குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனா மேமாப் புடைத்து.

858. செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின்.

859. கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லானை யொல்லா தொளி.

---

* மேக–விரும்புக. † துவ்வான்–வலியைச் செய்யான்: வலியிலான்.
‡ நிறை–மறைபிறரறியாமை (பரிமே.)

88–ம் அதி.—பகைத்திறந்தெரிதல்.

அஃதாவது – பகையது திறமும் பகையிடத்துச் செய்யும் திறமும் ஆகிய இவற்றை ஆராய்தல்.

860. பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று.

861. வில்லே ருழவர் பகைகொளினும் * கொள்ளற்க
† சொல்லே ருழவர் பகை.

862. ஏமுற் றவரினு மேழை தமியனுப்
பல்லார் பகைகொள் பவன்.

863. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு.

864. தன்றுணை யின்றாற் பகையிரண்டாற் றானொருவ
னின்றுணையாக் கொள்கவற்றி னொன்று.

865. தேறினுந் தேறா விடினு மழிவின்கட்
டேறான் பகாஅன் விடல்.

866. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

867. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

868. இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

869. உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
‡ செம்மல் சிதைக்கலா தார்.

89–ம் அதி.—உட்பகை.

அஃதாவது – உள்ளாய் நிற்கும் பகை.

870. நிழனீரு மின்னாத வின்னா தமர்நீரு
மின்னாவா மின்னா செயின்.

871. வாள்போற் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போற் பகைவர் தொடர்பு.

---

* உம்மை எதிர்மறை குறித்தது.

† சொல்லேருழவர்–அமைச்சர்; இக்குறள் உருவக விசேட வணி.

‡ செம்மல்–தருக்கு; கர்வம்.

872. உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
* மட்பகையின் மாணத் தெறும்.

873. மனமாணா வுட்பகை தோன்றி னினமாணா
வேதம் பலவுந் தரும்.

874. உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவுந் தரும்.

875. ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்ற லரிது.

876. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

877. அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி.

878. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு.

879. உடம்பா டிலாதவர் வாழ்க்கை † குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று.

90-ம் அதி.—பெரியாரைப் பிழையாமை.

அஃதாவது – தவத்தாற் பெரியராய முனிவரையும் ஆற்றலாற் பெரியராய அரசரையும் அவமதித்தொழுகாமை.

880. ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை.

881. பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும்.

882. கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னாற்று பவர்க ணிழுக்கு.

883. கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல்.

884. யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

---

* மட்பகை—மட்கலத்தை யறுக்குங்கருவி; இதனை 'ஊசி' என்பர் குலாலர்.
† குடங்கர்—குடில்; 'குடங்கம்' என்னும் வடசொற்றிரிபு.

885. எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

886. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னுந்
தகைமாண்ட தக்கார் செறின்.

887. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

888. ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
* வேந்தனும் வேந்து கெடும்.

889. † இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

91-ம் அதி.—பெண்வழிச்சேறல்.

அஃதாவது – தன்வழி ஒழுகற்குரிய மனையாளின்வழித் தான் செல்லுதல்.

890. மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது.

891. பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.

892. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும்.

893. மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.

894. ‡ இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்.

895. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர்.

896. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து.

897. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்.

---

* வேந்தன்—ஈண்டு இந்திரன்; இக்குறள், நகுஷன் இந்திரபதம்பெற்று இழந்தமையை யுட்கொண்டது.

† இதனுரையில் திரிபுரமழிந்த கதையைக் குறித்தார் பரிமேலழகர்.

‡ "இல்லாளை யஞ்சி விருந்தின்முகங் கொன்ற நெஞ்சிற், புல்லாளனாக" என்பது சீவகசிந்தாமணி, (மண்மகளிலம்பகம்–217.)

898. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்.

899. எண்சேர்ந்த நெஞ்சத் * திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

93-ம் அதி.—கள்ளுண்ணாமை.

அஃதாவது – கள்ளைக்குடியாதிருத்தலின் சிறப்பு.

900. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்.

901. உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
னெண்ணப் படவேண்டா தார்.

902. ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

903. நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

904. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

905. துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

906. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் † கண்சாய் பவர்.

907. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்.

908. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் ‡ தீத்துரீஇ யற்று.

909. கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு.

94-ம் அதி.—சூது.

அஃதாவது – சூதாடலின் இயல்பு.

910. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
§ தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

---

* இடன்–செல்வம்; (குறள்–218. பார்க்க.) † ஒற்றி–மறைந்துண்டு.

‡ தீ துரீஇ அற்று–விளக்கினால் தேடினாற்போலும்.

§ தூண்டிற்பொன்–தூண்டிலிரும்பு; பொன்–கரும்பொன். See நைடதம், சூதாடுபடலம்–22.

911. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு.

912. உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

913. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

914. * கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார்.

915. அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார்.

916. பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

917. பொருள்கெடுத்துப் † பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது.

918. உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்.

919. இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர்.

95-ம் அதி.—மருந்து.

அஃதாவது – பிணிகளைத் தீர்க்கும் மருந்தின் திறம்.

920. மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

921. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

922. அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
‡ பெற்றா னெடிதுய்க்கு மாறு.

923. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

---

* இக்குறளினுரையில், பாண்டவர் சூதாடி நாடிழந்து காடடைந்த செய்தியை எடுத்துரைத்தார் பரிமேலழகர்.

† 'பொருள்கொடுத்து' என்பதும் பாடம்.

‡ 'பெற்றால்' என்பதும் பாடம்.

924. மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு.

925. இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே * ரிரையான்க ணோய்.

926. † தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப் படும்.

927. நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

928. உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல்.

929. உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே ‡ மருந்து.

அங்கவியல் முற்றும்.

ஒ ழி பி ய ல்.

அரசவியலினும் அங்கவியலினும் அடங்கா தொழிந்தவற்றின் இயல்பு.

96-ம் அதி.—குடிமை.

அஃதாவது – உயர்குடிப்பிறந்தாரது தன்மை.

930. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

931. ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார்.

932. நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

933. அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த விலர்.

934. § வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

---

* இரையை அளவின்றி யெடுத்து, அதனுன் வருந்தும் விலங்கோடொத்தலின், 'இரையான்' என்றார் என்பது பரிமேலழகருரை. இரை—விலங்குகொள் உணவு.

† தீ—ஜாடராக்நி. ‡ கூற்று—'கூற்றது' என்பது விகாரமாயிற்று.

§ "உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணுங், குடிபிறப் பாளர்தங் கொள்கை யிற் குன்றார்" என்பது நாலடியார்.

935. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்து மென்பார்.

936. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

937. நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும்.*

938. நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

939. நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

97-ம் அதி.—மானம்.

அஃதாவது – தம் நிலையிற் றாழாமையும் தெய்வத்தால் தாழ்வுவந்தழி
உயிர் வாழாமையுமாம்.

940. இன்றி †யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்.

941. சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

942. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு.

943. ‡தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

944. குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

945. புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.

946. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று.

947. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

---

* 'ஐயப்படல்' என்பதும் பாடம்.

† அமையாமை—இறத்தல்.

‡ "ஸ்தாநப்ரஷ்டா நசோபந்தே தந்தா꞉கேசா நகா நரா꞉" என வடநூலிற் கூறப்பெற்றுளது,

948. *மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின்.

949. இளிவரின் வாழாத மான முடையா
†ரொளிதொழு தேத்து முலகு.

98-ம் அதி.—பெருமை.

அஃதாவது – நற்குணங்களாற் பெரியாரது தன்மை.

950. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல்.

951. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

952. மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்.

953. ‡ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.

954. பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல்.

955. சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு.

956. இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

957. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

958. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்.

959. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

---

* "மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்" என்பது கம்பர் பாடல் (மந்திரப்படலம்–7.)

† ஒளி–இங்கு புகழ்வடிவு; 'ஒளியாவது தானுளனாய காலத்து மிக்குத் தோன்றத்திடைமை' என்பர்.

‡ ஒருமைமகளிர்–கவர்படாத மனத்தினையுடைய மகளிர்.

99-ம் அதி.—சான்றாண்மை.

அஃதாவது – பல நற்குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளுந் தன்மை.

960. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

961. குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று.

962. அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண்.

963. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

964. ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

965. சால்பிற்குக் *கட்டளை யாதெனிற் றோல்வி
†துலையல்லார் கண்ணுங் கொளல்.

966. இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
‡லென்ன பயத்ததோ சால்பு.

967. இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

968. §ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

969. சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்
றாங்காது மன்னோ பொறை.

100-ம் அதி.—பண்புடைமை.

அஃதாவது – எல்லாரியல்புகளுமறிந்து ஒத்தொழுகுதல்.

970. எண்பதத்தா ||லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

971. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

---

* கட்டளை—உரைகல். † துலை—ஒப்பு.

‡ வினா எதிர்மறைப்பொருட்டு.

§ இக்குறள் ஏகதேச வுருவகம். ஆழி—கரை. || பதம்—சமயம்,

972\. உறுப்பொத்தன் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு.

973\. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

974\. நகையுள்ளு மின்னு திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

975\. * பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்.

976\. அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

977\. நண்பாற்று ராகி † நயமில செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை.

978\. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். ‡

979\. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.

101-ம் அதி.—நன்றியில் செல்வம்.

அஃதாவது – சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினியல்பு

980\. வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

981\. பொருளானா மெல்லாமென் றீயா திவறு
மருளானா மாணாப் பிறப்பு.

982\. ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

983\. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா
னச்சப் படாஅ தவன்.

984\. கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்.

985\. ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீத லியல்பிலா தான்.

---

* Compare Pura Nanūṛu–182, page 123.

† நயமில—ஈரமில்லாதன; பகைமை. ‡ 'பாழ்பட்டன்றிருள்' என்பதும் பாடம்.

986. * நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று.

987. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர்.

988. சீருடைச் செல்வர் சிறுதுனி † மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

102-ம் அதி.—நாணுடைமை.

அஃதாவது - குணங்களானுயர்ந்தோர் தமக்கொவ்வாத கருமங்களில் நாணுதலுடையராந்தன்மை.

989. கருமத்தா னாணுத னாணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற.

990. ஊணுடை ‡ யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

991. § ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.

992. அணியன்றோ ‖ நாணுடைமை சான்றோர்க்கஃ தின்றேற்
பிணியன்றோ ‖ பீடு நடை.

993. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு.

994. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

995. நாணு லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
னாண்டுறவார் நாணாள் பவர்.

996. பிறர்நாணத் தக்கது தானாணா னாயி
னறநாணத் தக்க துடைத்து.

---

* "நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க, படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார், குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள், இடுகாட்டு ளேற்றுப் பனை" என்னும் நாலடியார் சிறிது மாறி வந்தது.

† துனி—வெறுப்பு: இங்கு அதனைச் செய்யும் வறுமை.

‡ எச்சம்—ஒழிந்தன: ஊக்கமும் அச்சமும் காமமும். 'அச்சம்' என்பது சிலர் பாடம்.

§ 'ஊனைக்குறித்த' என்பது சிலர்க்குப் பாடம்.

‖ ஓகாரம்—எதிர்மறை.

997. * குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை.

998. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர் மருட்டி யற்று.

103-ம் அதி.—**குடிசெயல்வகை.**

அஃதாவது – ஒருவன் தான் பிறந்தகுடியை உயரச்செய்தலின் திறம்.

999. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

1000. ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி.

1001. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் † தான்முந் துறும்.

1002. சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.

1003. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு.

1004. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்.

1005. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை.

1006. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

1007. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற ‡ மறைப்பா னுடம்பு.

1008. § இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி.

---

* "நல்லார், நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது, கொள்கை யழிந்தக் கடை" என்பது நான்மணிக்கடிகை. † தற்றுதல்—இறுகவுடுத்தல்.

‡ மறைத்தல்—காத்தல்; இக்குறளில், 'இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ' என்றது குறிப்புமொழி.

§ இக்குறள் குறிப்புருவகம், 'அடுத்தூன்றும்' என்னுங் குறிப்பால் இடுக்கண் கோடரியாகவும், குடி மரமாகவும் உருவகஞ் செய்யப்பட்டன: "தூங்குசிறை வாவ லுறை தொன்மரங்க ளென்ன, ஓங்குகுல நையவத னுட்பிறந்த வீரர், தாங்கல்கட

104-ம் அதி.—உழவு.

அஃதாவது – உழுதற்றொழில்.

1009. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை.

1010. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து. *

1011. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

1012. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
†ரலகுடை நீழ லவர்.

1013. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

1014. உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

1015. ‡தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

1016. ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.

1017. இலமென் றசைஇ §யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்.

105-ம் அதி.—நல்குரவு.

அஃதாவது – அனுபவிக்கப்படுவன யாவும் இல்லாமை.

1018. இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது.

ணுகுந்தலை சாய்ப்பவரு தீச்சொ, னீங்கன்மட வார்கள்கட னென்றெழுந்து போந் தான்'' என்னுஞ் சிந்தாமணியை இக்குறளோடு ஒப்பிடுக; (காந்தருவதத்தை யாரிலம்பகம்–6.)

* "அஃதாற்றார் தொழுவாரை யெல்லாம் பொறுத்து'' என்பது சிலர் பாடம்.

† அலகு–கதிர்; இங்கு நெல்லுக்கு ஆகுபெயர். குடைநீழல்–பூமிக்கு ஆகு பெயர். "ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே;'' (புறநானூறு–35.) "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும், உழவிடை விளைப்போர்'' (சிலப்பதிகாரம், நாடு காண் காதை, அடி–149.) என்பன ஈண்டறியற்பாலன.

‡ தொடி–ஒருபலம். கஃசு–காற்பலம்.

§ 'இரப்பாரை' என்பது சிலர் பாடம். அசைஇ–சோம்பி.

1019. இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

1020. தொல்வரவுந் * தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை.

1021. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

1022. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத் †
துன்பங்கள் சென்று படும்.

1023. ‡ நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

1024. § அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

1025. இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு.

1026. நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.

1027. துப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.

106–ம் அதி.—இரவு.

அஃதாவது – யாசித்தல்.

1028. இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று.

---

* தோல்—இங்கு, மெல்லென்ற நற்சொல்: "இழுமென் மொழியான் விழுமி யது நுவலினும், பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினும், தோலென மொழிப தொன்மொழிப் புலவர்" என்பது தொல்காப்பியம்: (செய்யுளியல்–239.) "குடிப் பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்" என்பது மணிமேகலை, (பாத்திரம்பெற்ற காதை, அடி–76.)

† குரை—இசைநிறை யிடைச்சொல்.

‡ "எனைத்துணைய வேனு மிலம்பாட்டார் கல்வி, தினைத்துணையுஞ் சேர்ப்பா டில வாம்" என்பது நீதிநெறிவிளக்கம்.

§ "தாயும் பகைகொண்ட பெண்டிர் பெரும்பகை தன்னுடைய, சேயும் பகை யுற வோரும் பகையிச் செகமும்பகை, ஆயும் பொழுதி லருஞ்செல்வ நீங்கில்" என் றார் பட்டினத்தார்.

1029. இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை *
துன்ப முறூஉ வரின்.

1030. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து.

1031. இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

1032. கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது.

1033. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும்.

1034. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து.

1035. இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று.

1036. ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண்
† மேவா ரிலாஅக் கடை.

1037. இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.

107-ம் அதி.—இரவச்சம்.

அஃதாவது – மானங்கெடவரும் இரத்தலுக்கு அஞ்சுதல் .

1038. ‡ கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும்.

1039. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

1040. இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் § வன்பாட்ட தில்.

1041. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு.

---

* 'இரந்தவர்' என்று சிலர் பாடமோதுவர்.

† மேவார்–'மேவுவார்' என்பது விகாரமாயிற்று.

‡ "தோழனுயினு மேழைமைபேசேல்" என்றார் ஔவையார்.

§ வன்பாடு–முருட்டுத்தன்மை; அஃதாவது–ஆராயாது செய்து நிற்றல்.

1042. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்.

1043. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

1044. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று.

1045. * இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

1046. † இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும்.

1047. ‡ கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்.

108–ம் அதி.—கயமை.

அஃதாவது – கீழோரது தன்மை.

1048. மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பா ரியாங்கண்ட தில்.

1049. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர் §
நெஞ்சத் தவல மிலர்.

1050. ‖ தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

1051. அகப்பட்டி ¶ யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

---

* இக்குறள் அவயவவுருவகம்; அஃதாவது—உறுப்பியை நீக்கி உறுப்புக்களை மட்டும் உருவகஞ்செய்வது: இங்கு, 'வறுமை' என்னும் அவயவி நீக்கப்பட்டது; 'இரவு' 'கரவு' என்னும் அவயவங்கள் முறையே தோணியாகவும் பாராகவும் உருவகஞ் செய்யப்பட்டன.

† "இரவினை, உள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ, கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு'' என்பது நாலடியார்; (இரவச்சம்–5.)

‡ அங்கிலேயே, மாயானோ மாற்றிவிடின்'' என்பது நாலடியார்; (இரவச்சம்–8.)

§ 'கயவர் திருவுடையர்' என்றது குறிப்பாலிகழ்ந்ததாம்.

‖ கயவரைப் புகழ்வதுபோன்று பழித்தவாறும்.

¶ பட்டி—பட்டிபோன்று வேண்டியவாறே ஒழுகலால் 'பட்டி' எனப்பட்டது; பட்டியாவாரை என்றது மனவடக்கமில்லாதவரை.

1052. அச்சமே கீழ்கள தாசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

1053. அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

1054. * ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

1055. † சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

1056. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

1057. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

ஒழிபியல் முற்றும்.

பொருட்பால் முற்றும்.

---

* 'எச்சிற்கையால் காக்கையோட்டார்' என்பது உலகவழக்குரை. "தளிர் மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா, வுளிநீரார் மாதோ கயவர்—அளிநீரார்க்—கென்னானுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே, இன்னாங்கு செய்வார்ப் பெறின்" என்னும் நாலடியாரும், "பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகி, லுற்றா ருகந்தா ரென வேண்டா—மற்றோர்—இரணங் கொடுத்தா விடுவ ரிடாரே, சரணங் கொடுத்தானுந் தான்" என்னும் நல்வழியும் ஈண்டு அறியற்பாலன.

† "இரவலர் கன்றாக வீவாரா வாக, விரகிற் சுரப்பதாம் வண்மை—விரகின்றி—வல்லவ ரூன்ற வடியாபோல் வாய்வைத்துக், கொல்லச் சுரப்பதாங் கீழ்" என்னும் நாலடியாரை ஈண்டறிக; (ஈயாமை—9.) 'மயிலே மயிலே யிறகு கொடு என்றாற் கொடுக்குமோ?' என்பது ஓர் உலகவழக்குரை,

பழமொழி.

சிறப்புப்பாயிரம்

பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறுங்—கொண்டினிதா
முன்றுறை மன்னவ னன்கடியுஞ் செய்தமைத்த
இன்றுறை வெண்பா விவை.

இச்சிறப்புப்பாயிரத்திலிருந்து இந்நூல் செய்தவர் முன்றுறை மன்னவ னென்பதும், இவர் ஜைனரென்பதும் தெரியவருகிறது. இன்னும், 'பழமொழி' என்னும் சொல்லுக்கு 'பழமொழிகொண்டு தொடுக்கப்பட்ட செய்யுள்' என்பது பொருளெனவும் விளங்குகின்றது. இந்நூல் பதினெண் கீழ்க் கணக்குகளில் ஒன்றென்பது பின்வரும் பாட்டால் விளங்கும்:—

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

இந்நூல், கடைச்சங்கத்து நூல்களில் ஒன்ருக எடுத்துக் காட்டப்பட்டிருப்பதால், இந்நூலாசிரியர், குறளாசிரியர்காலத்தி லிருந்திருக்க வேண்டுமெனத் துணியப்படுகின்றது.

This collection of verses forms one of the series of classics edited after the dissolution of the Madura Sangam. Of the verses which composed this work but three hundred and ninety have survived, and it is quite possible that a portion of these is not genuine. They are, however, exceedingly interesting, and, as each ends with a proverb, the book, all taken together, throws considerable light upon the thoughts and habits of the ancient Tamilians.

As a storehouse of old words *Paramoṛi* is invaluable. The author, of whom I believe nothing is known, is seen by the invocation to have been a Jain. It seems that he first collected his proverbs, and then composed a quatrain to illustrate each.

He is called *Munthuri Mannavan*, 'the chieftain of the nearer ford.' Where this ford was situated is quite uncertain. It must have been on the river, near the sea-coast, not far from Madura. The language is that of the Pandyan land.

The present work is of great antiquity, although the precise date of its composition cannot be ascertained. It is included in the list of the eighteen minor poems (கீழ்க் கணக்கு) of the latter Madura College. The question of date, however, is not very important, but it may be safely assumed to be somewhat earlier than the *Kurral*, and in style and language it corresponds very much with the *Nāladiyār*. The peculiar feature of the book is that each quatrain contains some practical teaching emphasized by a proverb, or Old-word, and hence its title. These Old-words are often mere hints or catch-words, and are presumably of very high antiquity, since in presumably the eighth century of the Christian era they were already old.

I have always had a great respect and affection for what may be called the Gnomic poetry of the south, and feel convinced that it is most desirable that it should be well taught. It is an invaluable treasure the Tamil people possess in this mass of didactic verse.—*Dr. Pope.* *

* Dr. Pope's manuscript of this work with translations forming three volumes of bound sheets, written legibly in his own hand, was secured through the kindness of his son, Mr. Van Someren Pope. I have made use of these manuscript volumes in the preparation of this portion of the Madras University Selections.—EDITOR.

பழமொழி.

எய்ப்பினில் வைப்பு.

1. வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து[1] வழங்கி யிருபாலும்—அத்தகத்
தக்குழி நோக்கி யறஞ்செய்யி னஃதன்றோ
எய்ப்பினில் வைப்[2]பென் பது.

இல்வாழ்க்கை.

2. சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்
இல்லாளே வந்த விருந்தோம்பிச்—செல்வத்
திடரின்றி யேமாந் திருந்தாரே நாளும்
கடவுட் டுலாம்[3]பண் ணினார்.

இனியவை கூறல்.

3. புன்சொல்லு நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ
புன்சொ லிடர்ப்படுப்ப தல்லா லொருவனை
இன்சொ லிடர்ப்படுப்ப தில்.

செங்கோன்மை.

4. முறைதெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந் தவர்[4]க்கும்
இறைதிரியா னேரொக்கல் வேண்டும்—முறைதிரிந்து
நேரொழுகா னாயி னதுவா மொருபக்கம்
நீரொழுகிப் பாலொழுகு மாறு.

இன்னாச்சொல்.

5. பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்
மணலுண் முழுகி மறைந்து கிடக்கும்
நுண[5]லுந்தன் வாயாற் கெடும்.

---

[1] நுகர்ந்து. [2] தளர்ந்தகாலத்துதவும் நிதி. [3] ஏற்றம். [4] வறியவர். [5] தவளை.

பயனோக்கிய ஈகை.

6. பயனோக்கா தாற்றவும் பாத்தறிவொன் றின்றி
இசை[1]நோக்கி யீகின்றா ரீகை—வயமா[2]ப்போல்
ஆலித்து[3]ப் பாயு மலைகடற் றண்சேர்ப்ப
கூலிக்குச் செய்துண்ணு மாறு.

ஈகை.

7. மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்துப்
பாரி மடமகள் பாண்மகற்கு—நீருலையுள்
பொன்றிறந்து கொண்டு புகா[4]வாக நல்கினாள்
ஒன்றுறா முன்றிலோ இல்.[5]

8. இரப்பவர்க் கீயக் குறைபடுமென் றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ—பரப்பில்
துறைத்தோணி நின்றுலாந் தூங்கு[6]நீர்ச் சேர்ப்ப
இறைத்தோறு[7] மூறுங் கிணறு.

பொறை.

9. கறுத்தாற்றி[8]த் தம்மைக் கடிய[9] செய்தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால்—ஒறுத்தாற்றில்
வானோங்கு மால்வரை வெற்ப பயமின்றே
தானோன் றிட[10]வருஞ் சால்பு.

ஊழ்.

10. முற்[11]பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார்
பிற்பெரிய செல்வம் பெறலாமோ—வைப்போ[12]
டிகலிப் பொருள்செய்ய வெண்ணியக்கா லென்னும்
முதலிலார்க் கூதியம் இல்.

---

1 புகழ். 2 புலி. 3 ஒலித்துக்கொண்டு. 4 சோறு.

5 This is one of the many legends current about Pari's daughters. It was a time of scarcity. The minstrel, presumably Kapilar, came, but there was no rice; so the lady poured into the pot (உலை) on the fire her store of gold which became food for the bard. One is reminded of the Hebrew prophets.—*Dr. Pope.*

6 செறிந்த. 7 இறைக்குந்தோறும். 8 கோபத்தின் கணமிக்கு. ஆற்றி என்பது துணைவினையாய் மிகுதிகுறித்து நின்றது. 9 கொடுமை. 10 பொறுக்க. 11 முன்னைப்பிறப்பு. 12 பிறர்வைத்த (ஈட்டிய) நிதி.

11. பண்டுருத்[1]துச் செய்த பழவினை வந்தெம்மை
இன்றுறூ[2]க் கின்ற தெனநினையார்—துன்புறுக்கும்
மேவலரை நோவதென் மின்னேர் மருங்குலாய்
ஏவலா ளூருஞ் சுடும்.

இறைமாட்சி.

12. மறு[3]மனத்த னல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த[4] னாகி யொழுகிற்—செறுமனத்தார்[5]
பாயிரங்[6] கூறிப் படைதொக்கா லென்செய்ப
ஆயிரங் காக்கைக்கோர் கல்.

கல்வி.

13. ஆற்று மிளமைக்கட் கற்கலான் மூப்பின்கட்
போற்று மெனவும் புணருமோ—ஆற்றச்
சுரம்போக்[7]கி யுல்கு[8]கொண்டா ரில்லையே யில்லை
மரம்போக்கி[9]க் கூலிகொண் டார்.

கல்லாமை.

14. கல்லாதான் கண்ட கழிநுட்பங்[10] கற்றார்முற்
சொல்லுங்காற் சோர்வு படுதலால்—நல்லாய்
வினாமுந் துறாத வுரை[11]யில்லை யில்லை
கனாமுந் துறாத வினை.[12]

15. கற்றானுங் கற்றார்வாய்க் கேட்டானு மல்லாதார்
தெற்ற[13] வுணரார் பொருள்களை—எற்றே
அறிவிலார் மெய்[14]தலைப் பாடு[15] பிறிதில்லை
நாவற்கீழ்ப் பெற்ற கனி.

16. கற்றாற்று வாரைக் கறுப்பித்துக் கல்லாதார்
சொற்றாற்றுக்[16] கொண்டு சுனைத்[17]தெழுதல்—எற்றெனில்
தானு நடவான் முடவன் பிடிப்பூணி[18]
யானையோ டாட லுறவு.

---

[1] பிறந்து. [2] வருத்துகின்றது. [3] குற்றம். [4] எல்லார்மேலும் அன்புற்ற மனத்தன். [5] பகைவர். [6] முகவுரை. [7] சுரத்துவழியைக் கடந்துபோகவிட்டு. [8] சுங்கம். [9] ஓடத்தினின்றும் கரையேறவிட்டு. [10] மிக்க நுண்மை. [11] விடை. [12] நிகழ்ச்சி. [13]தெளிய. [14] உண்மைப்பொருள். [15] தலைப்படுதல், காணுதல். [16] தாற்றுக்கொண்டு – கொழித்துக்கொண்டு. [17] மனவெழுச்சியான் மிக்கெழுதல். [18] கைப்பாணிகொண்டு தவழ்வான்.

ஊக்கமுடைமை.

17. எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாந்தெரிதல் வேண்டா
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோமற் றில்லை
தமக்கு மருத்துவர்[1] தாம்.

இயற்கை யறிவின்மை.

18. நற்[2]கறி வில்லாரை நாட்டவு மாகாதே
சொற்குறி கொண்டு துடிபண் ணுறுத்துவபோல்
வெற்பறை[3]மேற் றாழ்[4]ம் விலங்கருவி நன்னாட
கற்றறிவு போகா கடை.

பெரியாரைத் துணைக்கோடல்.

19. பொலந்தா ரிராமன் றுணையாகத் தான்போந்
திலங்கைக் கிழவற் கிளையான்[5]—இலங்கைக்கே
பேர்ந்திறை யாயதூஉம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழீஇயிலா ரில்.

20. கற்றார் பலரைத்தங் கண்ணாக வில்லாதான்
உற்றிடர்ப் பட்ட பொழுதின்கட் டேற்றம்[6]
மரையா துணைபயிரு[7] மாமலை நாட
சுரையாழ்[8] நரம்பறுத் தற்று.

சிற்றினஞ்சேராமை.

21. தக்காரோ டொன்றித் தமரா யொழுகினார்
மிக்காரா லென்று சிறியாரைத் தாந்தேறார்
கொக்[9]கார் வளவய லூர தினலாமோ
அக்கார[10]ஞ் சேர்ந்த மணல்.

பண்புடைமை.

22. பெரிய குடிப்பிறந் தாருந் தமக்குச்
சிறியா ரினமாகச் சேரல்—எறியிலை
வேலொடு நேரொக்குங் கண்ணா யலைதன்றோ
பூவொடு நாரியைக்கு மாறு.

---

1 வைத்தியர். 2 நன்கு (விகாரம்). 3 அறை—பாறை. 4 விழும். 5 விபீஷணன். 6 துணிவு. 7 அழைக்கும். 8 ஒரு நரம்பையுடைய யாழ். 9 கொக்கு—மாமரம். 10 பாகு, சர்க்கரை.

தெரிந்து செயல் வகை.

23. எனைப்பலவே யாயினுஞ் சேய்த்தா[1]ப் பெறலில்
தினைத்துணையே யானும் அணிக்கோடல்[2]—நன்றே
இனக்கலை[3] தேன்கிழிக்கு மே[4]கல்சூழ் வெற்ப
பனைப்பதித்[5] துண்ணார் பழம்.

24. தற்றூக்கித் தன்றுணையுந் தூக்கிப் பயன்றூக்கி
மற்றது கொள்வர் மதிவல்லார்—அற்றன்றி
யாதானு மொன்றுகொண் டியாதானுஞ் செய்தக்கால்
யாதானு மாகி விடும்.

தெரிந்து வினையாடல்.

25. உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை[6]
அடக்கமி லுள்ளத்த னாகி—நடக்கையின்[7]
ஒள்ளிய[8] னல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

சுற்றந்தழால்.

26. தன்னை மதித்துத் தமரென்று கொண்டக்கால்
என்ன படினு மவர்செய்வ செய்வதே
இன்னொலி வெற்ப விடரென்னை துன்னூசி
போம்வழி போகு மிழை.

ஆள்வினையுடைமை

27. கற்றதொன் றின்றி விடினுங் கருமத்தை
அற்ற முடிப்பா னறிவுடையான்—உற்றியம்பும்
நீத்தநீர்ச் சேர்ப்ப வினையானே யாயினும்
மூத்தானே யாடு மகன்.

குறிப்பறிதல்.

28. வெள்ளம் வருங்காலை யீரம்பட் டஃதேபோல்
கள்ள முடையாரைக் கண்டே யறியலாம்
ஒள்ளமர்க் கண்ணா யொளிப்பினு முள்ளம்
படர்ந்ததே[9] கூறு முகம்.

---

1 நெடுங்காலஞ் சென்று. 2 அணித்தாகப் பெற்றுக்கொள்ளல். 3 கலை—முசு. 4 பிறங்கிய கல்; ஏ—பெருக்கம். 5 பதித்து—நட்டு. 6 பெருஞ்செல்வத்தான்வரும் உயர்ந்த முதன்மையை. 7 ஒழுக்கத்தால். 8 நல்லவன். 9 நினைந்தது.

அவை யறிதல்.

29. நெறி[1]யா லுணராது நீர்மை[2]யு மின்றிச்
சிறியா ரெளியரா லென்று—பெரியாரைத்
தங்கணோர் வைத்துத் தகவல்ல கூறுதல்[3]
திங்களை நாய்குரைத் தற்று.

நட்பு.

30. உற்ற விறைவற் குடம்பு கொடுக்கிற்பான்
மற்றவற் கொன்னாரோ டொன்றுமோ—தெற்ற
முரண்கொண்டு மாறாய வுண்ணுமோ வுண்ணா
இரண்டே றொருதுறையு ணீர்.

நட்பிற் பிழைபொறுத்தல்.

31. தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை யென்றே யுணர்வார்தாம்—அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப
ஒருவர் பொறையிருவர் நட்பு.

தீநட்பு.

32. பெரியநட் டார்க்கும் பகைவர்க்குஞ் சென்று
திரிவி[4]ன்றித் தீர்ந்தார்[5]போற் சொல்லி யவருள்
ஒருவரோ டொன்றி யொருப்படா தாரே
இருதலைக் கொள்ளியென் பார்.

பேதைமை.

33. பெரியார்க்குச் செய்யுஞ் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமே லிசைமுரலு மூர வதுவன்றே
நாய்மேற் றவிசிடு மாறு.

---

[1] முறைமை. [2] தகுதி.

[3] சிறியார் பெரியாரை எளியராலென்று தங்கணோர்வைத்துத் தகவல்ல கூறு தல் என்றியைக்க. [4] வேறுபாடு. [5] பெருநட்பினர்,

புல்லறிவாண்மை.

34. செய்த கருமஞ் சிறிதானுங் கைகூடா
மெய்யா வுணரவுந் தாம்படார்—எய்த[1]
நலத்[2]தகத் தம்மைப் புகழ்தல் புலத்தகத்துப்
புள்[3]ளரைக்கால் விற்பே மெனல்.

35. ஊக்கி[4] யுழந்தொருவ ரீட்டிய வொண்பொருளை
நோக்கீமி[5] னென்றிகழ்ந்து நொவ்வியார்[6] கைவிடுதல்
போக்கினீர் தூஉம் பொருகழித் தண்சேர்ப்ப
காக்கையைக் காப்பிட்ட சோறு.

பகைத்திறந் தெரிதல்.

36. கொடையு மொழுக்கமுங் கோளு[7]ள் ளுணர்வும்
உடைய ரெனப்பட் டொழுகிப் பகைவர்
உடையமேற் செல்கிற்கு மூற்றமில் லாதார்
படையிற் படைத்தகைமை[8] நன்று.

இன்னாசெய்யாமை.

37. பூவுட்கும்[9] கண்ணாய் பொறுப்ப ரெனக்கருதி
யாவர்க்கே யாயினு மின்னா செயல்வேண்டா
தேவர்க்குங் கைகூடாத் திண்ணன்பி னார்க்கேயும்
நோவச்செய் நோயின்மை யில்.

பெரியாரைப் பிழையாமை.

38. ஆற்றப் பெரியார் பகைவேண்டிக் கொள்ளற்க
போற்றாது கொண்டரக்கன்[10] போரி னகப்பட்டான்
நோற்ற பெருமை யுடையாருங் கூற்றின்
புறங்[11]கொம்மை கொட்[12]டினா ரில்.

---

1 நிரம்ப. 2 நன்மை. 3 புலத்தகத்துப் புள்—கைக்கு அகப்படாது புலத்தின் கண் நிற்கின்ற பறவை. 4 முயன்று. 5 நோக்கி ஈமின். 6 கீழ்மக்கள். 7 கொள்ளப்படுதல். 8 படையைப் பொலிவுடையதாகப் பண்ணிப் பாதுகாத்திருத்தல். 9 தாமரைப்பூ அஞ்சும். 10 அரக்கன்—இராவணன். 11 முதுகு. 12 கையைக் குவித்துத் தட்டல்.

துடிமை.

39. இறப்பச் சிறியவ ரின்னு செயினும்
பிறப்பினுன் மாண்டார் வெகுளார்—திறத்துள்ளி[1]
நல்ல விறகி னடினு நனிவெந்நீர்
இல்லஞ் சுடுகலா வாறு.

வலியுடைமை.

40. கூற்ற முயிர்கொள்ளும் போழ்து குறிப்பறிந்து
மாற்ற[2] முடையாரை யாராயா—தாற்றவு
முல்லை புரையு முறுவலாய் செய்வதென்
வல்லை யரசாட் கொளின்.

வலியின்மை.

41. தன்னின் வலியானைத் தானுடைய னல்லாதான்
என்ன குறை[3]ய னிளைஞால்—மன்னும்
புலியிற் பெருந்திறல வாயினும் பூசை
எலியில் வழிப்பெறு பால்.

பெருமை.

42. மாட மழிந்தக்கான் மற்று மெடுப்பதோர்
கூட மாத்திற்குத் துப்பாகு[4] மஃதேபோல்
பீடி[5]ல்லாக் கண்ணும் பெரியார் பெருந்தகையர்
ஈடி[6]ல் லதற்கில்லை பாடு[7].

43. நாடறியப் பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வட்குப[8]வோ—வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்த தில்.

அடக்கம்.

44. கற்றறிந்தார் கண்ட[9] தடக்க மறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர்—தெற்ற
அறைக லருவி யணிமலை நாட
நிறைகுட நீர்துளும்ப வில்.

---

[1] உள்ளி—ஆராய்ந்து. [2] வார்த்தை. [3] காரியம். [4] கூடத்துக்கு மரம் தப்பாகும் என்று பிடித்துக் கூட்டுக. துப்பு—உதவி. [5] செல்வம். [6] ஈடு—வலி. [7] பெருமை. [8] (பிறருக்குத்) தாழ்வார். [9] Observe the use of கண்டது.

அறிவுடைமை.

45. புல[1]மிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின் கால்.

46. நயவர்[2] நட்டொழுகு வாருந்தாங் கேட்ட
துயவா[3] தொழிவா ரொருவரு மில்லை
புயலமை கூந்தற் பொலந்தொடி சான்றோர்
கயவர்க் குரையார் மறை.

பழவினை.

47. உரை[4]சான்ற சான்றோ ரொடுங்கி யுறைய
நிரையுள ரல்லார் நிமிர்ந்து பெருகல்
வரைதா ழிலங்கருவி வெற்ப வதுவே
சுரையாழ வம்மி மிதப்பு.

நன்றியில் செல்வம்.

48. விரும்பி யடைந்தார்க்குஞ் சுற்றத் தவர்க்கும்
வருந்தும் பசிகளையார் வம்பர்க்[5] குதவல்
இரும்பனைவில் வென்ற புருவத்தா யாற்றக்
கரும்பனை யன்ன துடைத்து.[6]

கொடைமடம்.

49. முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையும்[7]
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப
அறிமடமுஞ் சான்றோர்க் கணி.

---

[1] புலம்—அறிவு. [2] அன்புபட. [3] உசாவாது, ஆராயாது. [4] புகழ். [5] புதிய வயலார். [6] வித்திட்டாக்கினர்க்கு உறுங்காலத்துதவாது நெடுங்காலஞ்சென்றால் பிறர்க்குப் பயன்படுங் கரும்பனைபோலுந்தன்மையை உடைத்து.

[7] முல்லைக்குத் தேரளித்தவன்பாரி; மயிலுக்குப் போர்வையளித்தவன் பேகன்—சிறுபாணாற்றுப்படை—அடி 84–92; புறநானூறு, 200, 201, 141, 145.

The enthusiasm that carries earnest men into extremes of act or speech is often not only more amiable, but more profoundly wise than the cool apathetic prudence of less imaginative minds. The traditions here referred to will be found in the *Pura Nánúru*, song 142. The chiefs referred to are Pāri and Pégan celebrated by the grateful Kapilar.—*Dr. Pope.*

கயமை.

50. முதுமக்க[1] ளன்றி முனிதக்கா ராய
பொதுமக்கள் பொல்லா வொழுக்கம்—அதுமன்னும்
குன்றத்து வீழுங் கொடியருவி[2] நன்னாட
மன்றத்து[3] மையல்சேர்ந் தற்று.

---

[1] அறிவால் நிரம்பிய மக்கள். [2] கொடிபோல நுடங்குமருவி. [3] மன்றம்—சபை.

பாரதவெண்பா.

இந்நூல், கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராகிய பெருந்தேவனாரென்பவரால் இயற்றப்பெற்றது; இதிலுள்ள செய்யுட்கள் பன்னீராயிரமென்பர். இவற்றை,

> ''சீருறும் பாடல்பன் னீரா யிரமுஞ் செழுந்தமிழ்க்கு
> வீரர்தஞ் சங்கப் பலகையி லேற்றிய வித்தகனார்
> பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண்
> மாருதம் பூவின் மணம்வீ சிடுந்தொண்டை மண்டலமே.''

என்னும் தொண்டைமண்டல சதகச் செய்யுளாலுணர்க. இதனாற் பெருந்தேவனார்பாரதமெனவும், உரைநடையும் பாடல்களும் கலந்திருத்தல்பற்றி உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுளெனவும் இந்நூற்பெயர் வழங்கும்.

''தொன்மைதானே, உரையொடு புணர்ந்த பழமை மேற்றே'' என்னும் தோல்காப்பியச் செய்யுளியற் சூத்திரவுரையில், தொன்மையென்னும் வனப்பிற்கு இந்நூலை மேற்கோளாகக் காட்டினர், **பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்.**

அகவல் முதலியன இடையிடையே இதனில் விரவியிருந்தும் வெண்பாக்களே மிகுதியாக அமைந்திருத்தல்பற்றி, இது பாரதவெண்பா வென வழங்கலாயிற்று.

இந்நூற் செய்யுட்கள், தொல்காப்பியப் பொருளதிகார வுரையிலும் யாப்பருங்கலவிருத்தி முதலியவற்றிலும் மேற்கோள்களாக எடுத்தாளப் பட்டுள்ளன.

இதுவரையிற் பரீக்ஷைக்குப் பாடமாக ஏற்படுத்தப்பட்ட புத்தகங்களிலெல்லாம் காணப்படும் இந்நூற் பாடல்கள் ஆயிரத்திற்கு உட்பட்டவையே. இராசாங்கத்துப் புத்தகசாலையிலுள்ள கையெழுத்துப் பிரதியிலும் இவ்வளவு பாடல்களே யுள்ளன; எஞ்சிய பகுதிகள் கிடைக்கவில்லை.

உத்தியோகபருவப் பகுதியில் இடையிடையே உள்ளனவாய உரைநடைகள் சுத்தபாடமாகத் தோற்றுமையால், கிடைத்த வெண்பாக்கள் மட்டுமே ஒப்புநோக்கி ஒருவாறு ஆராய்ந்து பதிப்பிக்கப்பெற்றன.

5. உத்தியோக பருவம்.

இந்திரன் செய்கை.

1. வண்டமர்தார் வானவர்கோ னங்கர்கோன் றன்னுடைய
குண்டலங்கைக் கொண்டவன்கை வேல்கொடுத்தே-இண்டன்
ஒருவரைக் கொன்மென் றுரைத்துரைத்துப் போனான்
இருவிசும்பிற் றேவர்கோ னேர்ந்து.

கண்ணபிரான் குந்திதேவிக்குக் கூறல்.

2. இந்திரன் போக வெழிற்குந் தியையழைத்துச்
சுந்தரத்தோண் மாயோனுஞ் சொல்லுவான்—மைந்தனெனும்
அங்கர்கோன் பாற்சென் றரவிருகா லெய்யாமல்
மங்கைநீ வேண்டாய் வரம்.

குந்திதேவி கன்னனிடம் செல்லுதல்.

3. விண்ணவர்கோன் வேல்கொடுத்துப் போக வியன்குந்தி
மண்ணகத்தை யாள்வான் வரம்வேண்டித்—திண்ணம்
வரங்கொள்வா னங்கர்கோன் மாளிகைவாய்ச் சென்றாள்
தருங்கண்ணி னீர்சோரத் தான்.

கன்னனுடைய அரண்மனைவாயில்காப்போனுக்குக் குந்திதேவி கூறல்.

4. அண்டத் தலர்கதிரோன் புத்திரனு யாடரவத்
துண்டத் துகிற்கொடியோன் றோழனுமாய்—எண்டிசையும்
வண்மையான் மிக்குயர்ந்த மன்னவனுக் கென்வரவு
திண்மையாய்ச் சென்றறியச் செப்பு.

வாயில்காப்போன் கன்னனுக்குக் கூறல்.

5. கண்டத்தி விட்ட களங்கத்தாள் கால்வருந்த
மண்ட நடந்து மனம்வாடிக்—கொண்டனிகர்
கையானே யுன்றன் கடைத்தலைநின் றாளென்றான்
மெய்யானைக் கண்டு விரைந்து.

---

1. இண்டன்—இவ்விடத்து; அன், சாரியை; 'ஈண்டன்' என்பது முதல் குறுகியது. கொன்மென்று—கொல்லுமென்று. ஏர்ந்து—எழுந்து.

2. அங்கர்கோன்—கன்னன். அரவு—நாகாத்திரம்.

4. அரவக்கொடியோன்—துரியோதனன்.

5. 'கண்டத்திவிட்ட களங்கம்' என்றது, மாங்கலியமின்மையை.

6. சந்தார் திரடோட் டருமற்குந் தம்பியர்க்கும்
கொந்தார் விசயற்குங் கோமாதா—வந்தாள்
திருமாது தான்புல்குந் திண்ணியபொற் றோளாய்
வருமாறு செப்பாய் மகிழ்ந்து.

கன்னன் செய்கை.

7. மன்னர் குருநாடர் மாதாவு மென்பக்கல்
என்ன வெழுந்தருளி வந்தாரே—சென்னி
செருப்படுதோ ளாயந்தச் சேவடியைக் காண
ஒருப்படுவே னென்று னுவந்து.

8. வருக வரவிடுதி வந்தென்னைக் காண
ஒருதனியிக் கோயிற் புறத்தே—திருவனைய
குந்திதனைக் காணு வெதிரெழுந்து கைதொழுதான்
முந்தியவள் காண்பதற்கு முன்.

9. குறைந்தாழ்ந்த சிந்தையளாய்க் குந்திசென் றெய்த
இறைஞ்சா முடியோ னிறைஞ்சச்—சிறந்த
முலைக்கண்கள் பாலரும்ப நின்றாண் முகத்து
மலர்க்கண்க ணீரரும்ப வந்து.

கன்னன் கூறுதல்.

10. செம்மையான் மண்ணாண்ட தேர்வேந்தன் மாதேவி
வண்மை யுடைத்தருமன் மாதாவே—அம்மே
திருந்தியநின் பொற்பாதச் செம்மலர்க ளேவ
வருந்திமிக வந்தவா மற்று.

11. சீரடிக ளேவச் சிவந்து மிகத்துவண்டு
போரடருஞ் சோலைப் புனனூர் மாதாவே
என்னடைந்த வாறின் றெனக்குரைமி னென்றுரைத்தான்,
மின்னடைந்த வேலான் வியந்து.

---

6. சந்து—சந்தனம். கொந்து—பூங்கொத்து; மாலை.

7. மாதாவும், உம்மை உயர்வுசிறப்பு. சென்னி—தலை. என் சென்னி அவள் சேவடியைக் காணவென்க; யான்வணங்க வென்றபடி.

8. வரவிடுதியென்றுசொல்லி என ஒரு சொல்வருவிக்க.

10. தேர்வேந்தன்—பாண்டு. வந்தவா—வந்தது என்னவியப்பு.

11. போர்—நெற்போர்,

12. ஆராத வன்பி னடிக ளடியேன்பால்
வாராதீர் வந்தவா றென்கொலோ—சீராரும்
பாண்டவர்க ளேவலோ பாரளந்தா னேவலோ
ஆண்டிருந்து போந்த தருகு.

குந்திதேவி கூறுதல்.

13. ஒற்றைத் திகிரி யொளியோற்குத் தான்பயந்த
கொற்றக் குலக்குமர னாமாறும்—மற்றவடான்
மாலுரைத்த வண்ணமுமம் மைந்தற் கெடுத்துரைத்தாள்
பாலுரைத்த சொல்லாள் பரிந்து.

கன்னன் கூறுதல்.

14. என்னை வருவித் துணரா வகைதெரிந்திட்
டின்ன பிறப்புணர்த்தி யேந்திழையாய்—முன்னே
இதுவெலா மாய னெனக்குரைத்தான் கண்டாய்
மதுவுலாந் தாரினான் வந்து.

15. பொய்யுரைத்தே னல்லேன் புவிபுரந்த பாண்டுவின்றன்
செய்ய திருத்தேவி செப்பக்கேள்—ஐவர்
தமக்குத்தா யானாற் றடங்கண்ணாய் மற்றும்
எனக்குத்தாய் வேறுண்டோ வின்று.

16. அன்னையென வந்தென்னை யைவர்க்கு முன்றோன்றல்
என்னுமிது மெய்யாக வெண்ணுவரோ—மின்னும்
துடியிடையாய் வேண்டுவது சொல்லிக்கே ளென்றான்
படிபுகழு மங்கர்கோன் பார்த்து.

17. என்னுடைய தாய்மா ரெனச்சொல்லி வந்தவர்கள்
தம்மென்பு தாங்கினார் தாமில்லை—என்னுடைய
தாயேய் படாம்போர்க்கின் மற்றென்னைப் பெற்றெடுத்த
தாயேநீ யென்றுரைத்தான் றான்.

---

12. ஆராத—தெவிட்டாத. பாரளந்தான்—திருமால்; கண்ணபிரான்.

13. திகிரி—தேருருளை. ஒளியோன்—சூரியன்.

16. அன்னை யெனவந்து—நீர் எனது தாயென்று சொல்லிக்கொண்டுவந்து. துடி—உடுக்கை.

17. என்னுடையதாய் ஏய் படாம்.

18. இக்கிடந்த மாதரைப்போ னீரு மிதுபோர்த்துத்
தொக்க வுடம்பிழந்து சோராதே—மிக்கதுதான்
வேண்டிக்கொண் டும்முடைய வீடே நடவுமென்றான்
தூண்டிடுதேர் வல்லான் றொடர்ந்து.

குந்திதேவியின் செய்கை.

19. பெற்றவுடம் பன்றாயி னென்னுடலைத் தின்னுகவென்
றுற்ற படாத்துக் குறவுரைத்து—மற்றதனைச்
சென்றெடுத்துப் போர்த்திருந்தா டேர்வேந்தன் றன்முன்னே
நன்றெடுத்த சொல்லா ணயந்து.

குந்திதேவியைத் தன் தாயென்று கன்னனறிந்ததும் அவள் செய்கையும்.

20. தன்னுடைய முன்னே படாம்போர்ப்பத் தார்வேந்தன்
என்னுடைய மாதா விவளென்னு—நன்னுதலாள்
பொன்னடிமேல் வீழ்ந்தானைப் பொற்றடக்கை யாற்றழுவித்
தன்மடிமேல் வைத்தா டளர்ந்து.

குந்திதேவி கூறல்.

21. உனக்கினிய தம்பிமா ரைவரையு மொன்றி
வனக்கிரிசூழ் மண்ணாள வேண்டி—உனக்கிதனைச்
சொல்லுவான் வந்தேன் சுடர்வேலாய் போதென்றாள்
வில்லுலாம் வாணுதலாண் மீட்டு.

22. மண்ணெலாங் காத்தளித்த மன்னரெலாம் வந்திறைஞ்சக்
கண்ணெலாங் காதற் களிகூரப்—பண்ணுலாம்
பொற்றேரிற் போந்தேறிப் போர்வேந்த ரைவரையும்
குற்றேவல் கொள்ளாய் குறித்து.

கன்னன் கூறுதல்.

23. ஆவி யனையார்க ளைவர்க்கு முன்றோன்றல்
மேவி யனைய வினையேனைப்—பாவியேன்
முன்செய்த தீவினையான் முன்னுரையா தின்றுரைத்தீர்
என்செய்வேன் சொல்வீ ரினி.

---

21. போது—வருவாய்.
22. கொள்ளாய்—கொள்.
23. தோன்றல்—பிறத்தல். 'மேவிய' என்பது, 'மேவி' என்றாயிற்று.

24. இன்னு னெனவறியா வென்னை முடிகவித்து
மன்னர் வணங்க வாசியற்றிப்—பின்னையும்
தன்னெச்சி லுண்ணுத் தகைமையான் ருனுண்டான்
என்னெச்சி லென்னே டினிது.

25. கொன்னவிலுங் தேர்ப்பாக னென்னுக் குலம்பேசி
என்னைப் பலரு மிகழ்ந்துரைப்பப்—பின்னையுந்தான்
என்னெச்சி லென்னேடு முண்டானை யெங்ஙனே
உன்னச் சிறப்பே னுரை.

26. மருவார்வண் டாரான் மணிமுடியான் செய்த
அருடா னறியாதா ரில்லை—தெருளா
அழிகொடா வாறே யடுகளிற்ருர்க் காக்கிற்
பழிகடாஞ் சாலப் பல.

27. மதமா மழகளிற்ருன் மற்றெனக்குச் செய்த
உதவி யுலகறியு மன்றே—உதவிதனை
நன்றுசெய்தோர் தங்களுக்கு நானிலத்தி னல்லோர்கள்
குன்றுவரோ செய்ந்நன்றி கூறு.

28. பன்மணிகள் சிந்திப் பரந்து கிடந்ததுகண்
டின்மணிக் கென்புகுந்த தென்னுமல்—நன்மணியைக்
கோக்கோ பொறுக்கோ வெனவுரைத்தாற் கென்னுயிரைப்
போக்கா தொழிவனே புக்கு.

29. மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை யான்பிடிப்ப
அற்று விழுந்த, அருமணிதாம்.—மற்றவற்றைக்
கோக்கேனே வென்றுரைத்த கொற்றவற்கென் னுருயிரைப்
போக்கேனே வெஞ்சமத்துப் புக்கு.

30. நுந்தமது புத்திரர்க்கா நல்லீராய் வந்தீர்நீர்
இன்றென்மே லாசை யிலையுமக்—கன்று
வடுவஞ்சிப் போகவிட்டீர் மாண்டேனே லின்று
நடவென்பீர் யாரை நயந்து.

---

26. அழிகொடாவாறு—நான் அழித்தல் செய்யாமல்.
28. கோக்கோ—கோப்பேனே. பொறுக்கோ—பொறுக்கி எடுப்பேனே.

31. நன்றாக மன்ன னெனக்கிந்த நாடறியக்
குன்றாத நன்மை பலகொடுத்தான்—என்றானும்
ஈண்டவன் செய்த வுதவிதனை யான்மறந்தால்
தீண்டுவளோ தாமரையாள் சேர்ந்து.

குந்திதேவி கூறல்.

32. உம்பரிக லேறுபோ லுற்றெதிர்ந்த வஞ்ஞான்று
தம்பியரைக் கொல்கை தவிரென்றாள்—நம்பி
இயலாரும் வேலங்க நீணாடன் றன்னைக்
குயிலாரு மென்மொழியாள் கூர்ந்து.

கன்னன் கூறல்.

33. பார்த்தனையான் கோற லவன்கைப் படுதலெனும்
வார்த்தையுரை செய்தேன் மனமகிழ்ந்து—வேர்க்கப்
பொருவெஞ் சமர்க்களத்தப் போதெதிர்ந்தான் மற்றாங்
கொருவருந் தாமில்லை யெதிர்.

குந்திதேவி கூறல்.

34. வெஞ்சரங்கோத் தெய்து விறலழிக்கு நன்மகனே
பஞ்சவருட் பார்த்த னுடன்மலைந்தால்—அஞ்சுதலை
நாக மிருகாற் றொடாதொழிக வென்றுரைத்தாள்
ஆக முறத்தழீஇ யாங்கு.

35. வம்பவிழ்தார் மன்னா மணிநெடுந்தேர் மேலேறி
உம்பியரைக் கொண்டேநீ நில்லாயேல்—அம்பொன்
றிருகாற் றொடாயாக வேண்டுவனா னென்றாள்
செருகாற் றடங்கண்ணா டோர்ந்து.

36. என்மக்க ளைவர்க்கு மூத்தா யெழிலுறையும்
மின்னொக்கும் பைம்பூண் விறல்வீரா—வன்மைக்கண்
வெந்திறன்மா நாக மிரண்டாவ தெய்யாமல்
இந்தவரம் வேண்டுவனா னின்று.

---

31. என்றானும்—என்றைக்காவது.
32. உம்பர்—மேல்.
35. கொண்டு—துணையாகக்கொண்டு.

கன்னன் கூறல்.

37. இரவலர்க்கு மந்தணர்க்கும் வேண்டுவ தீவேன்
அரவிருகா லெய்யாமை வேண்டிற்—குரவர்
பணிமாறு கொள்வேனே கோவேந்தன் பாரி
தணியாது செல்கென்றான் றான்.

38. நாக மிருகாற் றொடாதொழிய வேண்டுமென்
றாக வுரைத்தீ ரதுகொண்மின்—வேகத்
தொருகாற் றொடுப்பே னுதுபிழைத்தாற் பின்னை
இருகாற் றொடாதொழிவேன் யான்.

குந்திதேவி கூறல்.

39. தருமனொடு வீமன் றனஞ்சய னல்லால்
இருவரும்வந் தாங்குன்னோ டேன்று—பொருகளத்து
முட்டிநேர் வந்தாலும் புத்திரனே கொல்லாயென்
றொட்டினேன் வேண்டுவனா னுற்று.

கன்னன் கூறல்.

40. பொன்னே யெனைப்பயந்த பொற்கொடியே யின்றுனக்கு
மின்னே ரிடையாய் மறுப்பனோ—அன்னாய்முன்
பெற்றதாய் வேண்ட மறுத்தா னெனும்வார்த்தை
உற்றழியா நிற்கு முலகு.

41. பெற்ற வுனக்கரிதோ போராழி வையகத்து
மற்றொருவர் வேண்ட மறுதநான்—கொற்றக்
குடையா லுலகாண்ட கொற்றவன்றன் றேவி
படையான போதின்கட் பார்.

42. மற்றவர்க் கென்னு மறுவென்னை வாய்த்தவரம்
பெற்றாய் பெறல்பேசல் வேண்டுமோ—கற்றபோர்
வெல்லுங் கணையொருகாற் றொட்டாலு நால்வரையும்
கொல்லேன் படியொருகாற் கூர்ந்து.

43, 44. அருச்சுனனால் இறப்பேனாயின், நான் உம்முடைய பிள்ளையென்பதை நீர் பலரும் அறியச் செய்யவேண்டும்.

---

37. குரவரென்றது, இங்கே தாயனா. பணி—கட்டளை.

39. தருமபுத்திரன், வீமன், நகுலன், சகாதேவனென்னும் இந்நால்வரையும் கொல்லாதே யென்றும் ஒரு வரம் வேண்டினாள்.

42. என்னும்—சிறிதும். வாய்த்த—பெற்ற. படி—பூமியில்.

45. போர்க்களத்தில் யான்பொருது பொன்றினு லெம்பியரால்
தீக்கடனு நீர்க்கடனுஞ் செய்விப்பீர்—சேர்க்கும்
மருமலருந் தாரார் மணிமுடியார் காண
உரிமையுடன் செய்க வுவந்து.

46. உம்முடைய மைந்தர்க்கிவ் வுண்மை தனையுரைக்கின்
அன்னவர்கள் பாக மெனக்களிப்பர்—பின்னதனை
ஈங்கெனது தோழற்கே யான்கொடுப்பே னுதலால்
ஆங்கவர்கட் கில்லை யரசு.

குந்திதேவி வருந்தல்.

47. முன்செய்த பாவத்தான் மூத்தா யுனைப்பிரிந்தேன்
என்செய்தா லிப்பிழைதான் றீருமெனப்—பொன்செய்த
மட்டவிழுந் தாரானை மார்புறவே தானணைத்து
விட்டவளு மீண்டாள் விரைந்து.

48. பாராளும் பாண்டவர்க்காப் பாவியே னென்மகனைக்
கோனுகம் வேண்டிக் கொலைநேர்ந்தேன்—ஆனாலும்
தேவர்க்காங் கில்லோ திரிவில்லே தாங்கில்லோ
யாவர்க்காம் பாவ மிது.

கன்னன் கூறல்.

49. பாரதத்துப் பட்டேன் படேனுயிற் பாண்டவர்பால்
ஆர்வமொடு நான்வருவே னுரணங்கே—சீர்மிகுத்துன்
பொற்கமலப் பாதம் புரிகின்றேன் போகென்றான்
நற்றவத்தின் மிக்கோ னயந்து.

குந்திதேவி செய்கை.

50. மல்லுயர் தோட்பார்த்தன் மாய னுடனிற்கக்
கொல்லு மிவனை யெனக்குலையா—நல்லமலர்க்
காராரும் பூங்குழலாள் காதலொடு கண்ணிணைகள்
நீராரப் போனு ணினைந்து.

---

48. தேவர்க்காங்கில்லோ—(இப்பாவம்) தேவர்க்கு ஆகுமோ. திரிவு இல்லே தாங்கில்லோ—பரிகாரமில்லாத என்னபாவமாகுமோ.

49. புரிகின்றேன்—விரும்பி வணங்குகின்றேன்.

51. வென்றிநெடு வேல்விசயன் மேற்கணைகள் வேறாக
என்று மிருகாற் றொடானாக்கிச்—சென்றங்கோர்
கோயில் குறுகிக் குலமாலுக் குற்றுரைத்தாள்
வேயனைய தோளாள் விரைந்து.

கண்ணபிரான் செய்கை.

52. ஏனைநடு வாக வெழின்மணித்தேர் பின்னாகச்
சேனையை முன்னே செலப்பணித்து—வானவர்முன்
தன்னெடுந்தே ரேறினான் றாரணிமேன் முன்னொருகால்
வன்னெடும்புள் வாய்பிளந்த மால்.

53. வரியாவத் திண்கொடியான் வஞ்சனையை வென்று
பரிவலரப் பார்வேந்தர் சூழ—முரிபணையின்
மூரிக் கொடியான் முழங்கொலிமா நாடணைந்தான்
மாரிக் கொடிதடுத்த மால்.

54. நாடு பலகடந்து நன்னெறிக ணீங்கிப்போய்க்
காடு மலையாறுங் கைகடந்து—கோடாத
செங்கோ னடத்துந் தருமனகர் சென்றடைந்தான்
அங்கோத வண்ணன்போ யாங்கு.

கண்ணபிரான் கூறல்.

55. நாகக் கொடியானைக் கண்டதுவு நன்னெடுந்தேர்
மேகக் கொடியான்றன் வில்லிறுப்பும்—பாகத்தால்
அஞ்சூர்கள் வேண்டியதும் வேண்ட மறுத்ததுவும்
நஞ்சூரச் சொன்னா னயந்து.

56. கொற்ற வரவுயர்த்தோன் கோயிற்க ணின்றம்போய்
வெற்றி விதுரனகத் துண்டமையும்—பெற்றமிகு
மாதாவைக் கண்டுமனந் தேற்றியது மற்றவற்றை
வேதா திபனுரைத்தான் மிக்கு.

---

52. ஏனைய—மற்றப்படைகள்; ஈறுதொகுத்தல். புள் — கொக்குவடிவமாக வந்த ஓரசுரன்.

53 வஞ்சனை—குழிதோண்டியதுமுதலிய தீச்செய்கைகள். பணைக்கொடியான்—தருமபுத்திரன்.

57. வாளிரவி மைந்தன் மணிக்கவச குண்டலங்கள்
கோளறவே தானேவக் கொண்டமையும்—மாமறையோன்
செம்மை யுரைத்ததுவுந் தேர்வேந்தற் குற்றுரைத்தான்
உண்மகிழ வாழியா னோர்ந்து.

58. கொன்னவில்வே லுகக் கொடிதடுப்பக் குந்திதனைக்
கன்னனிடை விட்டதொரு காரணமும்—முன்னி
வருவார் தமக்கருள வத்திகிரி மன்னும்
பெருமா னுரைத்தான் பெயர்ந்து.

தருமன் கூறல்.

59. உலகத் திருணீங்க லுன்பொருட்டே யன்றோ
நிலனும் விசும்புமாய் நின்றாய்—உலகுக்
குருவொன்றே யானுய்நீ யுன்னாலே வந்த
திருவன்றோ வெங்க டிரு.

காந்தாரி கூறல்.

60. மாய னெழுந்தருளி வந்தக்கான் மற்றவர்க்குத்
தாயங் கொடுக்கை தரமன்றோ—நீயாய்
ஒருகுலத்தார் கூடி யுலகாள்வ தன்றோ
குருகுலத்தார் கோவே குணம்.

துரியோதனன் கூறல்.

61. எல்லா மிழந்திடினு மின்றென் னுயிர்விடினும்
மல்லார்தோண் மன்னரெல்லா மாண்டிடினும்—நல்லாளே
பண்விடா மென்மொழியாய் பாண்டவர்க்கியா னுள்ளளவும்
மண்விடே னென்றான் மறுத்து.

திருதராட்டிரன் கூறல்.

62. பஞ்சவர்கள் பாகங் கொடாயாகிற் பார்வேந்தே
விஞ்சவே மாய னுடன்விசயன்—வெஞ்சமத்துப்
பொன்றி விழச்செறுமிப் பூமியிடை மாளாதே
நன்றியுட னல்காய் நயந்து.

---

57. மறையோன்—பிராமணவேடம்பூண்டு கன்னனிடம் சென்ற இந்திரன்.
58. வேல்—ஆயுதம், நாகக்கொடி—நாகாத்திரம். அத்திகிரி—ஒரு தலம்.
60. தரம்—தகுதி. நீ ஆய்—நீ ஆராய்ந்துபார்.
62. செறும்—கோபிப்பான்.

திருதராட்டிரன் சஞ்சயனைப்பார்த்துக் கூறல்.

63. தருமற்குந் தம்பியர்க்குந் தாமரையாள் கோக்கும்
வருவதுதான் காப்பரிதா மென்று—குருபதியைக்
கோணக வேந்தன்மேற் கோபம்விடீஇப் போகச்சொல்
காணாத காட்டிற் கடிது.

64. ஓதத் தரவணைமே லூழி பலகிடந்த
வேதத் தருமணியை வேறிறைஞ்சிப்—பேதத்தால்
அத்தரும னம்மோ டமர்புரியா வண்ணமவன்
சித்தமது தேற்றநீ செப்பு.

சஞ்சயன் உபப்பிலாவியத்திற்குச் செல்லுதல்.

65. என்றா னெழின்மன் னிருஞ்சேனை தற்சூழ
நன்றாக வென்றுரைத்து நான்மறையோன்—சென்றான்
படந்தா ழரவின்மிசைப் பாரடங்கக் கோட்டால்
இடந்தா னிருந்த விடத்து.

தன்னையுணராதவன்போலப் பள்ளிகொண்ட கண்ணபிரானைச் சஞ்சயன் சென்று வணங்கல்.

66. கோவத் தனமெடுத்த கோளரியைச் சென்றிறைஞ்சி
ஆவத் துயர மகற்றினான்—மேவிமிக
வாழ்ந்தான் மகிழ்ந்தான் மனங்கூர வைப்புற்றான்
வீழ்ந்தா னெழுந்தான் விரைந்து.

---

63. தாமரையாள் கோ—கண்ணபிரான். விடீஇ—நீக்கி.
66. ஆவத்துயரம்—ஆபத்தாகிய துன்பம்.

சிலப்பதிகாரம்.

தென்மொழியில் உள்ள பழைய காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரமென்பது, சேரமுனியாகிய இளங்கோவடிகளா லியற்றப்பட்டது;—உரையாசிரியர்களால் எடுத்துக் காட்டப்படும் பிரமாணநூல்களுள் ஒன்று; சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்துள்ளது; எவ்வெப்பொருளைச் சொல்லினும் அவ்வப்பொருளை நேரிற்கண்டாற்போல மனத்திற்குத் தோற்றும்வண்ணம் நன்கு புலப்படுத்தும் தெள்ளிய இனிய நன்னடையுடையது; கணவனும் மனைவியுமாகிய கோவலன் கண்ணகி என்பவருடைய சரித்திரத்தை விரித்துக்கூறுவது; தமிழ்நாட்டரசர் மூவருடைய இராசதானிகளாகிய புகார் (=காவிரிப்பூம்பட்டினம்) மதுரை வஞ்சியென்னும் மூன்றன் பெருமைகளையும் விளக்குவது; பண்டைக்காலத்திருந்த பல வகை மாந்தருடைய ஒழுக்க முதலியவற்றை இக்காலத்தார் எளிதில் தெரிந்து கொள்ளுதற்குச் சிறந்த கருவியாகவுள்ளது; அரசர், நீதியிற் சிறிது பிழைப்பினும் அவரை அறக்கடவுள் கூற்றாய்நின்று கொல்லுமென்பதும், கற்புடை மகளிரை மக்களேயன்றித் தேவரும் முனிவரும் துதித்தல் இயல்பென்பதும், இருவினையும் செய்தமுறையே செய்தோனை நாடிவந்து தம் பயனை நுகர்விக்குமென்பதுமாகிய இம்மூன்றினையும் இவ்வுலகத்தார்க்குத் தெரிவித்தற்பொருட்டே இளங்கோவடிகளாற் செய்யப்பட்டது; மேற்கூறிய மூன்று பகுதியையும் சிலம்புகாரணமாகத் தெரிவித்தலின், இந்நூல் சிலப்பதிகாரமென்னும் பெயர் பெற்றது.

இன்னும் இந்நூல், முத்தமிழும் விரவப்பெற்றதாதலின், இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுளென்றும், நாடக உறுப்புக்களை உடைத்தாதலின் நாடகக்காப்பியமென்றும், உரைப்பாட்டும் இசைப்பாட்டும் இடையிடையே விரவப்பெற்றதாதலின் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளென்றும் பெயர்பெறும்.

இக்கதை நடந்தகாலமும் இளங்கோவடிகள்காலமும் ஒன்றென்றும் இது முதலில் தமிழிலேதான் அவராற் செய்யப்பட்டதென்றும் இந்நூற் பதிகச்செய்யுளாலும், வரந்தருகாதையாலும் விளங்குகின்றமையின், இச்சரித்திரம் வேறுபாஷையிலிருந்து வந்ததென்று சொல்வதற்கு இடமில்லை.

இந்நூல், இளங்கோவடிகளால் தான் நூல்செய்ததற்குக் காரணமும் கதைச்சுருக்கமும் கூறியுள்ள பதிகச்செய்யுளை முதலிற்பெற்று, மங்கலவாழ்த்துப்பாடல் முதலிய பத்துறுப்புக்களையுடைய புகார்காண்டமும், காடுகாண்

காதை முதலிய பதின்மூன்றுறுப்புக்களையுடைய மதுரைக்காண்டமும், குன்றக்குரவை முதலிய ஏழுறுப்புக்களையுடைய வஞ்சிக்காண்டமுமாகப் பகுக்கப்பெற்றுள்ளது. இதில் இயற்றமிழின் பாகுபாடான வெண்பா அகவற்பா கலிப்பா என்பவைகளும், இசைத்தமிழின் பாகுபாடான ஆற்றுவரி முதலிய பாக்களும், நாடகத் தமிழின் பாகுபாடான உரைப்பாட்டுக்களும் வந்துள்ளன. இவற்றுள் மிகுதியாகவுள்ளது அகவற்பாவே.

இதற்கு இரண்டு உரைகள் உள்ளன. அவற்றுள், முதலாவது அரும்பதவுரை. அஃது இந்நூல் முழுவதுக்கும் அமைந்துள்ளது; அவ்வுரையை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்று விளங்கவில்லை. இரண்டாவது உரை மிக விரிவாக உள்ளது. ஆனால், முற்றும் இல்லை; அதனை இயற்றியவர் அடியார்க்கு நல்லாரென்பவர். அதனால் அவ்வுரை 'அடியார்க்கு நல்லார் உரை' என வழங்கும். இந்நூல், மேற்படி இரண்டு உரைகளுடனும் அச்சிடப்பெற்றுள்ளது. இந்நூற்பகுதிகளின் பொருள் நயங்களை மேற்கூறிய உரைகளால் அறிந்துகொள்ளலாம்.

பதிகம்.

[இந்நூலிலுள்ள முப்பதுகாதையின் பெயர்களும், சரித்திரச்சுருக்கமும், இதனால் அறியலாகும்.]

அகவற்பா.

குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்குக்
குன்றக் குறவ ரொருங்குடன் கூடிப்
பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை யிழந்தாளோர் திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் றமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி யவளொடெம்
கட்புலங் காண விட்புலம் போய
திறம்பூது போலுமஃ தறிந்தரு ளீயென,
அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்

1. குணவாயில்—திருக்குணவாயிலென்பதோரூர். கோட்டம்—கோயில்.

2. சேரல்—சேரராசன்.

9. இறும்பூது—ஆச்சரியம்.

10. சாத்தன்—ஒரு புலவர்; இவர் மணிமேகலை நூலாசிரியர்; கூலவாணிகன் சாத்தனாரென்றும் சீத்தலைச்சாத்தனாரென்றும் கூறப்படுவர்.

யானறி குவனது பட்டதென் றுரைப்போன்
ஆரங் கண்ணிச் சோழன் மூதூர்ப்
பேராச் சிறப்பிற் புகார்நக ரத்துக்
கோவல னென்பானோர் வாணிக னவ்வூர்
நாடக மேத்து நாடகக் கணிகையொ
டாடிய கொள்கையி னரும்பொருள் கேடுறக்
கண்ணகி யென்பாண் மனைவி யவள்காற்
பண்ணமை சிலம்பு பகர்தல் வேண்டிப்
பாடல்சால் சிறப்பிற் பாண்டியன் பெருஞ்சீர்
மாட மதுரை புகுந்தன னதுகொண்டு
மன்பெரும் பீடிகை மறுகிற் செல்வோன்
பொன்செய் கொல்லன் றன்கைக் காட்டக்
கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்
பியாப்புற வில்லையீங் கிருக்கென் றேகிப்
பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறனோர் கள்வன் கையென,
வினைவிளை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் றேரா னாகிக்
கன்றிய காவலர்க் கூஉயக் கள்வனைக்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கென,
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
நிலைக்களங் காணா ணெடுங்கணீ ருகுத்துப்
பத்தினி யாகலிற் பாண்டியன் கேடுற
முத்தார மார்பின் முலைமுகந் திருகி
நிலைகிளர் கூட னீளெரி யூட்டிய
பலர்புகழ் பத்தினி யாகு மிவளென,

---

11. பட்டது—நடந்த சரித்திரம்.
12. ஆரங்கண்ணி—ஆத்திமாலை.
13. புகார்—காவிரிப்பூம் பட்டினம்.
18. பகர்தல்—விற்றல்.
21. பீடிகைமறுகு—கடைவீதி.
23. அல்லதை—அல்லாமல்; ஐ—சாரியை.
24. யாப்புறவில்லை—பொருத்தமில்லை.
25. தான்கொண்ட—தான் திருடிக்கொண்ட.
28. வேம்பன்—வேப்பமாலையையுடைய பாண்டியன்.
29. கன்றிய—அடிப்பட்ட.

வினைவிளை கால மென்றீர் யாதவர்
வினைவிளை வென்ன, விறலோய் கேட்டி;
அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்
வெள்ளியம் பலத்து நள்ளிருட் கிடந்தேன்
ஆரஞ ருற்ற வீரபத் தினிமுன்
மதுரைமா தெய்வம் வந்து தோன்றி,
கொதியழற் சீற்றங் கொங்கையின் விளைத்தோய்,
முதிர்வினை நுங்கட்கு முடிந்த தாகலின்
முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவனொடு
சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்துச்
சங்கம னென்னும் வாணிகன் மனைவி
இட்ட சாபங் கட்டிய தாகலின்
வாரொலி கூந்தனின் மணமகன் றன்னை
ஈரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவி னல்லதை
ஈனோர் வடிவிற் காண்ட லில்லெனக்
கோட்டமில் கட்டுரை கேட்டனன் யானென,
அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென,
முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது
அடிக ணீரே யருளுகென் றாற்கவர்,
மங்கல வாழ்த்துப் பாடலுங் குரவர்
மனையறம் படுத்த காதையும் நடநவில்
மங்கை மாதவி யரங்கேற்று காதையும்

---

37. விளைகாலம்—பலிக்குங்காலம். அவர்—கோவலன், கண்ணகி.

40. சடைமுடி—சடைமுடியையுடைய சிவபிரான். பொதியிலில்—அம்பலங்களுள்.

53. ஈனோர்—இவ்வுலகத்துள்ள மனிதர்.

61. மூவர்—சோழன், பாண்டியன், சேரன்.

63. குரவர்—தாய்தந்தையர்.

அந்தி மாலைச் சிறப்புச்செய் காதையும்
இந்திர விழவூ ரெடுத்த காதையும்
கடலாடு காதையும், மடலவிழ்
கானல் வரியும் வேனில்வந் திறுத்தென
மாதவி யிரங்கிய காதையும் தீதுடைக்
கனாத்திற முரைத்த காதையும் வினாத்திறத்து
நாடுகாண் காதையும் காடுகாண் காதையும்
வேட்டுவ வரியும் தோட்டலர் கோதையொடு
புறஞ்சேரி யிறுத்த காதையும் கறங்கிசை
ஊர்காண் காதையும் சீர்சா னங்கை
அடைக்கலக் காதையும் கொலைக்களக் காதையும்
ஆய்ச்சியர் குரவையும் தீத்திறங் கேட்ட
துன்ப மாலையும் நண்பக னடுங்கிய
ஊர்சூழ் வரியும் சீர்சால் வேந்தனொடு
வழக்குரை காதையும் வஞ்சின மாலையும்
அழற்படு காதையு மருந்தெய்வந் தோன்றிக்
கட்டுரை காதையும் மட்டலர் கோதையர்
குன்றக் குரவையு மென்றிவை யனைத்துடன்
காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
வாழ்த்து வரந்தரு காதையொடு
இவ்வா றைந்தும்
உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசா லடிக ளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன், இது
பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபென.

---

88. அடிகள்—இளங்கோவடிகள்.

முதலாவது

புகார்க்காண்டம்.

1—மங்கலவாழ்த்துப் பாடல்.

[கண்ணகிக்கும் கோவலனுக்கும் கலியாணம் நிகழ்ந்தமுறையும் அவர்களை மகளிர் வாழ்த்தியதும் இதனால் அறியலாகும்.]

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்;
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் றிகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்;
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்;
பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான்; ஆங்கு,
பொதியி லாயினு மிமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லதை
ஒடுக்கங் கூறா ருயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே; அதனால்,
நாகநீ ணகரொடு நாகநா டதனொடு

---

2. சென்னி—சோழன்.
4. ஞாயிறு—சூரியன்.
5. திகிரி—ஆஞ்ஞாசக்கரம்.
13. பொதியில்—பொதியமலை.
16. நிலைஇய—நிலைத்தன.
19. நாகநீணகர்—சுவர்க்கம், நாகநாடு—பவணலோகம்; என்றது, நாகருலகத்தை.

போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னில்
மாகவா னிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னா ளீராறாண் டகவையாள்;
அவளுந்தான்,
போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவ டிறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாண்மன்னோ;
ஆங்கு,
பெருநில முழுதாளும் பெருமகன் றலைவைத்த
ஒருதனிக் குடிகளோ டுயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வானென்பான்
இருநிதிக் கிழவன்மக னீரெட்டாண் டகவையான்;
அவனுந்தான்,
மண்டேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த மொழியினா ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலனென் பான்மன்னோ.
அவரை,
இருபெருங் குரவரு மொருபெரு நாளால்
மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி
யானை யெருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்;
அவ்வழி,
முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம்
வெண்குடை

---

21. வான்–மேகம். மாநாய்கன்–கண்ணகியின் தந்தை.
22. ஈகைவான்கொடி–பொற்கொடி. ஈராறாண்டு அகவையாள்–பன்னிரண்டு பிராயத்திற்கு உட்பட்டவள்.
25. வடமீன்–அருந்ததி.
29. பெருமகன்–கரிகால் வளவன்.
31. மாசாத்துவான்–கோவலன் தந்தை.
41. இரீஇ–இருத்தி.
44. முருடு–பத்தலென்னும் பறை.

அரசெழுந்ததொர் படியெழுந்தன வகலுண்மங்கல வணி யெழுந்தது;
மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை?
விரையினர் மலரினர் விளங்கு மேனியர்
உரையினர் பாட்டின ரொசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
... ...
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்
போதொடு விரிகூந்தற் பொலநறுங் கொடியனார்
காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி
அங்க ணுலகி னருந்ததி யன்னாளை
மங்கல நல்லமளி யேற்றினார், தங்கிய
இப்பா லிமயத் திருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா வெப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒருதனி யாழி யுருட்டுவோ னெனவே.

---

47. விதானம்—மேற்கட்டி.
48. சகடு—உரோகிணி.
53. ஒசிந்த—ஒதுங்கிப்பார்த்த.
59. கவவுக்கை—அகத்திட்டகை.
62. அமளி—ஆசனமாகிய மெத்தை.
65. செம்பியன்—சோழன்.

இரண்டாவது

மனையறம்படுத்த காதை.

[கோவலனுடைய தாய்தந்தையர் அவனையும் கண்ணகியையும் தனியே யிருந்து இல்லறம் நடத்தச்செய்தது இதனால் அறியலாகும்.]

அகவல்.

உரைசால் சிறப்பி னரசுவிழை திருவிற்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்
முழங்குகடன் ஞால முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
அரும்பொரு டரூஉம் விருந்திற் றேஎம்
ஒருங்குதொக் கன்ன வுடைப்பெரும் பண்டம்
கலத்தினுங் காலினுந் தருவன ரீட்டக்
குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்
அத்தகு திருவி னருந்தவ முடித்தோர்
உத்தர குருவி னொப்பத் தோன்றிய
கயமலர்க் கண்ணியுங் காதற் கொழுநனும்
மயன்விதித் தன்ன மணிக்கா லமளிமிசை
நெடுநிலை மாடத் திடைநிலத் திருந்துழிக்
கழுநீ ராம்பன் முழுநெறிக் குவளை

---

1. உரை—புகழ்.
2. பரதர்—வணிகர்.
5. அரும்பொருள்—பொன், மாணிக்கம், முத்து, பவழம், அகில், சந்தன முதலியவை. விருந்தின்தேம்—புதுமையை யுடைய தேசங்கள்; என்றது தீவுகளை.
7. கலம்—கப்பல்.
9. தவம்— (இங்கே) தானம்.
10. உத்தரகுரு—போகபூமி.
11. கயமலர்க்கண்ணி — கண்ணகி. கொழுநன் — கணவன்; (இங்கே) கோவலன்.
12. மயன்—தெய்வத்தச்சன்.
14. முழுநெறிக்குவளை—இதழொடிக்கப்படாத குவளைப்பூ.

அரும்புபொதி யவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை
வயற்பூ வாச மளைஇ யயற்பூ
மேதகு தாழை விரியல்வெண் டோட்டுக்
கோதை மாதவி சண்பகப் பொதும்பர்த்
தாதுதேர்ந் துண்டு மாதர்வாண் முகத்துப்
புரிகுழ லளகத்துப் புகலேக் கற்றுத்
திரிதரு சுரும்பொடு செவ்வி பார்த்து
மாலைத் தாமத்து மணிநிரைத்து வகுத்த
கோலச் சாளரக் குறுங்க ணுழைந்து
வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்
கண்டு மகிழ்வெய்திக் காதலிற் சிறந்து
விரைமலர் வாளியொடு வேனில்வீற் றிருக்கும்
நிரைநிலை மாடத் தரமிய மேறிச்
சுரும்புணக் கிடந்த நறும்பூஞ் சேக்கை,

* * * *

தீராக் காதற் றிருமுக நோக்கிக்
கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை:
குழவித் திங்க ளிமையவ ரேத்த
அழகொடு முடித்த வருமைத் தாயினும்
உரிதி னின்னோ டுடன்பிறப் புண்மையிற்
பெரியோன் றருக, திருநுத லாகென;
அடையார் முனையகத் தமர்மேம் படுநர்க்குப்
படைவழங் குவதோர் பண்புண் டாகலின்,

---

17. தோடு—மடல்.
18. பொதும்பர்—மரங்களின் நெருக்கம்.
20. ஏக்கற்று—ஏங்கி.
22. மாலை—ஒழுங்கு.
23. சாளரம்—பல்கணி. குறுங்கண்—சிறுதுளை.
26. வேனில்—மன்மதன்; ஆகுபெயர்.
27. அரமியம்—நிலாமுற்றம்.
28. சேக்கை—படுக்கை.
28–35. சேக்கையிலிருந்தென ஒருசொல் வருவிக்க.
37. கூறும்—கூறுவான்.
40. உரிது—உரியது. கண்ணகியைத் திருமகளாக நினைந்து 'நின்னோடு' என்றான்.
41. பெரியோன்—சிவபெருமான்.

உருவி லாள ணொருபெருங் கருப்புவில்
இருகரும் புருவ மாக வீக்க;
மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலிற்
றேவர் கோமான் றெய்வக் காவற்
படைநினக் களிக்கவத னிடைநினக் கிடையென;
அறுமுக வொருவனோர் பெறுமுறை யின்றியும்
இறுமுறை காணு மியல்பினி னன்றே
அஞ்சுடர் நெடுவே லொன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்க ணிரண்டா வீத்தது;
மாயிரும் பீலி மணிநிற மஞ்ஞைநின்
சாயற் கிடைந்து தண்கா னடையவும்
அன்ன நன்னுதான் மென்னடைக் கழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவும்
அளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழு மமிழ்துங் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியும்
மடநடை மாதுநின் மலர்க்கையி னீங்கா
துடனுறைவு மரீஇ யொருவா வாயின;
நறுமலர்க் கோதைநின் னலம்பா ராட்டுநர்
மறுவின் மங்கல வணியே யன்றியும்
பிறிதணி யணியப் பெற்றதை யெவன்கொல்?
பல்லிருங் கூந்தற் சின்மல ரன்றியும்
எல்லவிழ் மாலையொ டென்னுற் றனர்கொல்?
நான நல்லகி னறும்புகை யன்றியும்
மான்மதச் சாந்தொடு வந்ததை யெவன்கொல்?

* * * *

திங்கண்முத் தரும்பவுஞ் சிறுகிடை வருந்தவும்

---

48. படை—வச்சிராயுதம்; அஃது இருதலைச் சூலமாய் நடுவிடம் பிடியா யிருத்தல்பற்றி அதன் இடையை இடைக்கு உவமை கூறினர்.
55–6. அன்னம் செறியவுமென்க.
57–61. கிளிகள் ஒருவாவாயின.
58. குழைத்த— (கலந்து) குழைத்தாலொத்த.
61. ஒருவா—நீங்கா.
63. மங்கலஅணி—மாங்கலியம்.
65. சில்மலர்—சில பூக்கள்.
67. நானம்—நெய்.

இங்கிவை யணிந்தன ரென்னுற் றனர்கொல்?
மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ!
யாழிடைப் பிறவா இசையே யென்கோ!
தாழிருங் கூந்தற் றையா னின்னையென்
றுலவாக் கட்டுரை பலபா ராட்டித்
தயங்கிணர்க் கோதை தன்னொடு தருக்கி
வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்துசெல் வுழிநாள்,
வாரொலி கூந்தற் பேரியற் கிழத்தி
மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க்க
யாண்டுசில கழிந்தன, இற்பெருங் கிழமையிற்
காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென.

பின்பு, கோவலன் அந்நகரத்திருந்த மாதவியென்னும் நாடகக் கணிகையை விரும்பியிருந்தமை 3-ஆம் காதையிலும், அவனுடைய பிரிவாற்றுமல் வருந்திய கண்ணகி அவ்வருத்தத்தைப் புலப்படுத்தாமல் இல்லறம் நடத்திக்கொண்டு வந்தமை 4-ஆம் காதையிலும் கூறப்பெற்றுள்ளன.

---

76. பெருங்குடி—வணிகர்குலவகை மூன்றனுள் ஒன்று.
77-9. என்கோ—என்பேனே?
83. செல்வுழி—செல்லுமிடத்து. நாள்—ஒருநாளில்.
84. பேரியற் கிழத்தி—கோவலனுடைய தாய்.
85. அறப்பரிசாரம்—துறவறத்தார்க்குச் செய்யுந்தொண்டு.
86. புறந்தரல்—பாதுகாத்தல்.
87. வீறு—உயர்ச்சி.
88. உரிமைச்சுற்றம்—அடிமைத்திரள்.

ஐந்தாவது

இந்திரவிழவூரெடுத்த காதை.

[காவிரிப்பூம் பட்டினத்தார் இந்திரனுக்குத் திருவிழா நடத்தியதும் நகர அமைப்பும் சில கோயில்களின் வகையும் பிறவும் இக்காதையால் அறியலாகும்.]

அகவல்.

*   *   *   *

கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதையிருட் படாஅம் போக நீக்கி
உதய மால்வரை யுச்சித் தோன்றி

[மருவூர்ப்பாக்கம்.]

உலகுவிளங் கவிரொளி மலர்கதிர் பரப்பி,
வேயா மாடமும் வியன்கல விருக்கையும்
மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்
வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையு மேவிய விரையும்
பகர்வநர் திரிதரு நகர வீதியும்

---

4. படாம்—போர்வை.
6. ஒளி—சூரியன். பரப்பி—பரப்ப.
7. வேயாமாடம் — நிலாமுற்றம். வியன்கலஇருக்கை — வேற்றுமைப் பட்ட ஆபரணங்களுள்ள அறை.
8. காலதர்—சாளரம்.
9. கயவாய்—கழிமுகம்.
11. புலம்பெயர்மாக்கள்—பிறநாட்டினுள்ளவர்கள்.
13. வண்ணம்—வர்ணக்குழம்புகள். சுண்ணம்—வாசனைப்பொடி.
14. புகை—நறும்புகைக்குரியவை.
15. பகர்வநர்—விற்போர்.

பட்டினு மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்
*ஆரமு மகிலுந் தூசுந் துகிரும்
மாசறு முத்து மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்து கடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் †பன்னிண விலைஞரோ
டோசுநர் செறிந்த வூன்மலி யிருக்கையும்
கஞ்ச காரருஞ் செம்புசெய் குநரும்
மரங்கொ றச்சருங் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும்
‡பொன்செய் கொல்லரு நன்கலந் தருநரும்
துன்ன காரருந் தோலின் றுன்னரும்

---

17. காருகர்—நெய்வோர் முதலியவர்கள்.
18. துகிர்—பவழம்.
20. வெறுக்கைக்கலம்—பொன் ஆபரணம்.
23. கூலம்—நெல் முதலிய தானியங்கள்.
24. காழியர்—பிட்டுவாணிகர், வண்ணார். கூவியர்—அப்பவாணிகர். கள்நொடையாட்டியர்—கள்ளை விற்கும் வலைச்சியர்.
25. பரதவர்—நெய்தல் நிலத்திற்குரிய ஒரு சாதியார்.
26. பாசவர்—வெற்றிலை விற்போர், கயிறுதிரித்து விற்போர், இறைச்சி விற்போர். வாசவர் — தக்கோலமுதலிய வாசனைப்பொருள்களை விற்போர். நிணவிலைஞர்—ஆட்டுவாணிகர்.
27. ஓசுநர்—எண்ணெய்வாணிகர், பரவர்.
28. கஞ்சகாரர்—வெண்கலக்கன்னர்.
30. கண்ணுள் வினைஞர்—சித்திரம் எழுதுவோர். மண்ணீட்டாளர்—சிற்பர், சுண்ணம்பாற் பாவை முதலியன செய்பவர், குயவர்.
31. பொன்செய் கொல்லர் — உருக்குத்தட்டார். நன்கலந்தருநர்—இரத்தினப்பணித்தட்டார்.
32. துன்னகாரர்—தையற்காரர். தோலின் துன்னர்—சக்கிலியர்.

* தூசுந் துகிரு மாரமு மகிலுமென மாற்றி வழங்குவாருமுளர்.

† மைந்நிண விலைஞரெனவும் பைந்நிண விலைஞரெனவும் பாடம்.

‡ பொன்செய் புலவரெனவும் பாடம்.

கிழியினுங் கிடையினுங் *தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குழலினும் யாழினுங் குரல்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கு மருவூர்ப் பாக்கமும்,

[பட்டினப்பாக்கம்.]

கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகும் மறையோ ரிருக்கையும்
வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதருங் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையும்
திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொ
டணிவளை போழுந ரகன்பெரு வீதியும்
சூதர் மாகதர் †வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
காவற் கணிகைய ராடற் கூத்தியர்
பூவிலை மடந்தைய ரேவற் சிலதியர்
பயிறொழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்

---

33. கிழி—நூலாடை. கிடை—நெட்டி.
40. கோவியன்வீதி—அரசர்பெருந்தெரு.
41. பீடிகைத்தெரு—கடைத்தெரு.
44. ஆயுள்வேதர்—வைத்தியநூலோர். காலக்கணிதர்—சோதிடநூலோர்.
46. மணிகுயிற்றுநர்—முத்துக்கோப்பார்.
47. வளைபோழுநர்—சங்கறுப்பார்.
48. சூதர்—நின்று ஏத்துவார். மாகதர்—இருந்து ஏத்துவார். வேதாளிகர்—வைதாளி யென்னும் கூத்தை ஆடுவோர்.
49. நாழிகைக் கணக்கர்—சென்ற நாழிகையை அரசனுக்குத் தெரிவிப்போர், கடிகையார், நாழிகை வட்டிவிடுவோர். கண்ணுளர்—கூத்தர்.
51. சிலதியர்—குற்றேவன் மகளிர்.
52. குயிலுவர்—தோற்கருவி வாசிப்போர். பன்முறைக்கருவியர்—சேனைக்கும் திருவிழாவிற்கும் கொட்டுவோர்.

* கழிபல பெருக்கியெனவும் பாடம். † வேதாளியரென்றும் பாடம்.

நகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையும்
கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
நெடுந்தே ரூருநர் கடுங்கண் மறவர்
இருந்து புறஞ்சுற்றிய பெரும்பா யிருக்கையும்
பீடுகெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமும்

[காலைக் கடைத்தெரு.]

இருபெரு வேந்தர் முனையிடம் போல
இருபாற் பகுதியி னிடைநில மாகிய
கடைகால் யாத்த மிடைமரச் * சோலைக்
கொடுப்போ ரோதையுங் கொள்வோ ரோதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங் காடியிற்

[இந்திரவிழாத்தொடக்கம்.]

சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென, அந்நாள்
வெற்றிவேன் மன்னற் குற்றதை யொழிக்கெனத்
தேவர் கோமா னேவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகைப்
புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து
துணங்கையர் குரவைய ரணங்கெழுந் தாடிப்
பெருநில மன்ன னிருநில மடங்கலும்

---

53. வேழம்பர்—கழைக்கூத்தர்.
59. முனையிடம்—போர்செய்யுமிடம்.
61. மரங்களையே கால்களாக அமைத்த சோலை.
63. நிலைஇய—நிலைத்த. நாளங்காடி—காலைக்கடை,
64. சித்திரைமாசத்திற் சித்திரை நட்சத்திரம் வர.
65–7. இந்திரனால் முசுகுந்த சக்கரவர்த்திக்குத் துணையாக முற்காலத்தில் அனுப்பப்பட்ட பூதத்தின் பலிபீடத்தில்.
68. புழுக்கல் — புழுக்கிய பயறு முதலியவை. நோலை—எள்ளுருண்டை. விழுக்கு உடை மடை—நிணத்தையுடைய சோறு.
69. பொங்கல்—கள்; காரணப்பெயர்.
70. துணங்கை, குரவை என்பன கூத்துவிசேடங்கள். அணங்கெழுந்தாடி—பேய் ஏறப்பெற்றுக் கூத்தாடி.

* சோலையுளென்றும் பாடம்.

பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
மாதர்க் கோலத்து வலவையி னுரைக்கும்
மூதிற் பெண்டி ரோதையிற் பெயர,

[வீரர்கள் தம்மையே பலியிடுதல்.]

மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழுப்பலி பீடிகை
வெந்திறன் மன்னற் குற்றதை யொழிக்கெனப்
பலிக்கொடை புரிந்தோர் வலிக்குவரம் பாகெனக்
கல்லுமிழ் கவணினர் கழிப்பிணிக் கறைத்தோற்
பல்வேற் பரப்பினர் மெய்யுறத் தீண்டி
ஆர்த்துக் களங்கொண் டோரார மழுவத்துச்
சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை
வெற்றி வேந்தன் கொற்றங் கொள்கென
நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்
குயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து
மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி,

[கரிகாற் பெருவளவனுடைய செயல்.]

இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசும்

---

73. வசி—மழை.
74. மாதர்—விருப்பம். வலவையின்—நாணிலிகளைப்போல.
75. மூதிற்பெண்டிர்—மறக்குடிமகளிர்.
78. முழுப்பலி—தம்மைத்தாமே இடும் பலி.
80. என—என்று சொல்லியிருத்தலால்.
81. கறைத்தோல்—கறுப்பையுடைய கேடகம்.
84. சூர்த்து—அச்சமுண்டாக்கி.
84–6. தம்முடைய தலையைப் பலிபீடத்தில் வைத்து.
88. ஊட்டி—ஊட்ட.
90. திருமாவளவன்—கரிகாற்சோழன்.
91–2. வாள் முதலியவற்றை நல்லநாளிற் புறப்படவிடுதல் முறையே, வாள் நாட்கோள், குடை நாட்கோள், முரசு நாட்கோளென வழங்கும்,

நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி *யேற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு

[ஒரு சிறந்த மண்டபம்.]

மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்
பொன்னினு மணியினும் புனைந்தன வாயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின; அவைதாம்
ஒருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோ ரேத்தும்
அரும்பெறன் மரபின் மண்டப மன்றியும்

92–3. என்தோள் பெறுக.
94. புண்ணியத்திசை—வடதிசை.
95. பிறக்கு—பின்.
97. இமயமலையின் பிடரில்.
98. கொடுவரியேற்றி—புலிவடிவை எழுதி.
98–100. பெயர்வோனுக்குக் கொடுத்த.
99. வச்சிரநாடு—வயிரநாடு.
100. இறை—திறை.
102. பட்டிமண்டபம்—வித்தியாமண்டபம்.
103. அவந்தி—உச்சயினி நகரம்.
104. தோரணவாயில்—வாயிற்றோரணம்.
106. கம்மியர்—கன்மியர்; தொழில் செய்வோர். காணா—செய்யப்படாத.
108–10. கொற்றப்பந்தர் முதலியன இம்மண்டபத்தில் வைக்கப்பெற்றுள்ளன.

* எழுதியென்வும் பாடம்.

[ஐவகை மன்றம்.]

வம்ப மாக்க டம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த வெண்ணுப் பலபொதி
கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலும்
உடையோர் காவலு மொரீஇய வாகிக்
கட்போ ருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்த லீயா
துள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்
கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
அழுகுமெய் யாளரு முழுகின ராடிப்
பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலஞ்செயாக் கழியு மிலஞ்சி மன்றமும்
வஞ்ச முண்டு மயற்பகை யுற்றோர்
நஞ்ச முண்டு நடுங்குதுய ருற்றோர்
அழல்வாய் நாகத் தாரெயி றழுந்தினர்
கழல்கட் கூளிக் கடுநவைப் பட்டோர்
சுழல வந்து தொழத்துயர் நீங்கும்
நிழல்கா னெடுங்க னின்ற மன்றமும்
தவமறைந் தொழுகுந் தன்மை யிலாளர்
அவமறைந் தொழுகு மலவைப் பெண்டிர்
அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்

---

111. வம்பமாக்கள்—புதியமனிதர். தம்பெயர் பொறித்த—தம்முடைய பெயரை எழுதிய.
112. பொதி—மூட்டை.
113. கடைமுகம்—பண்டசாலை வாயில்.
116. கொடுத்தல் ஈயாது—கொடாதாதலால்.
117. பனிக்கும்—நடுங்கும்.
118. குறள்—குறுகியவடிவு. ஊமம்—ஊமை.
119. அழுகுமெய்யாளர்—குட்ட நோயினர்.
121. இலஞ்சி—பொய்கை. மன்றம்—பொதுவிடம்.
122. மயற்பகை—மயக்கம்.
124. அழல்—விடம்.
125. கழல்கண்—பிதுங்கியகண். கூளி—பேய்.
127. நிழல்—ஒளி.
129. அலவை—இழிந்த நடை.
130. அறைபோதல்—கீழறுத்தல்; நம்பிக்கைக் கேடு.

பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காத நான்குங் கடுங்குர லெடுப்பிப்
பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்
அரசுகோல் கோடினும் அறங்கூ றவையத்
துரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்
நாவொடு நவிலாது நவைநீ ருகுத்துப்
பாவை நின்றழூஉம் பாவை மன்றமும்
மெய்வகை யுணர்ந்த விழுமியோ ரேத்தும்
ஐவகை மன்றத்து மரும்பலி யுறீஇ,

[இந்திரவிழா.]

வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி,
வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்துக்
கால்கோள் விழவின் கடைநிலை சாற்றி,
தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங்கொடி வானுற வெடுத்து,

[வீதியின் அணிகள்.]

மரகத மணியொடு வயிரங் குயிற்றிய
பவளத் திரள்காற் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக் கடைமுகத் தியாங்கணும்
கிம்புரிப் பகுவாய்க் கிளர்முத் தொழுக்கத்து

---

131. கரி—சாக்ஷி.
134. சதுக்கம்—நாற்றெருக் கூடுமிடம்.
135. அறங்கூறவையம்—நியாயசபை.
140. உறீஇ—இட்டு.
141. கோட்டம்—கோயில்.
143. வால்வெண்களிற்றரசு வயங்கிய கோட்டம் — ஐராவதம் நிற்கும் கோயில்.
143-4. ஐராவதத்திற்குச் சாற்றியது, இந்திரனைக் கொணர்தற்காக.
145. கற்பகதரு நிற்கும் கோயிலில்.
148. வேதிகை—திண்ணை.

மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரண நிலைஇய தோமறு பசும்பொற்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்குப் பசும்பொற் படாகை
தூமயிர்க் கவரி சுந்தரச் சுண்ணத்து
மேவிய கொள்கை வீதியிற் செறிந்தாங்
கைம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
அரச குமரரும் பரத குமரரும்
கவர்பரிப் புரவியர் களிற்றின் றொகுதியர்
இவர்பரித் தேரின ரியைந்தொருங் கீண்டி,
அரசு மேம்படீஇய வகனிலை மருங்கின்
உரைசான் மன்னன் கொற்றங் கொள்கென
மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்
ஆயிரத் தோரெட் டரசு தலைக்கொண்ட
தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணக மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டி,
பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ

151–2. பொறித்த—எழுதிய. திருவாசிகைபோன்ற தோரணம்.
154. படாகை—பெருங்கொடி.
156. செறிந்து—நிறைந்து.
157. ஐம்பெருங்குழு—மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர். எண்பேராயம்—கணக்கர் முதலிய எண்வகைக் கூட்டத்தார்.
160. இவர்தல்—ஏறுதல்.
161. மேம்படீஇய—மேம்படுத்தற்கு.
164. ஆயிரத்தெட்டு அரசர் தாங்கிய.
169. பெரியோன்—பரமசிவன்.
171. வாலியோன்—பலராமர்.
172. கண்ணபிரான் கோயிலும்.
173. மன்னவன்—இந்திரன்.
174. முதல்வன்—பிரமதேவர்.

நான்மறை மரபிற் றீமுறை யொருபால்;
நால்வகைத் தேவரு மூவாறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்;
அறவோர் பள்ளியு மறனோம் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்
துறவோ ருரைக்குஞ் செயல்சிறந் தொருபால்;
கொடித்தேர் வேந்தனொடு கூடா மன்னர்
அடித்தளை நீக்க வருள்சிறந் தொருபால்;
கண்ணு ளாளர் கருவிக் குயிலுவர்
பண்ணியாழ்ப் புலவர் பாடற் பாணரொ
டெண்ணருஞ் சிறப்பி னிசைசிறந் தொருபால்;
முழவுக்கண் டுயிலாது முடுக்கரும் வீதியும்
விழவுக்களி சிறந்த வியலு ளாங்கண்,

* * * *

கள்ளுக நடுங்குங் கழுநீர் போலக்
கண்ணகி கருங்கணு மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன
எண்ணுமுறை யிடத்தினும் வலத்தினுந் துடித்தன;
விண்ணவர் கோமான் விழவுநா ளகத்தென.

---

175. ஒருபாற் சிறக்கவென ஒருசொல் வருவிக்க.

176. நால்வகைத்தேவர்:—சூரியர், உருத்திரர், வசுக்கள், மருத்துவர். மூவாறு கணங்கள்—பதினெண் கணங்கள்.

178. சாறு—திருவிழா. சிறந்து—சிறக்க.

179. அறவோர் பள்ளி—அருகரும் புத்தரும் தங்குமிடம். அறன் ஓம் படை—தருமம் போதிக்குமிடம்; ஓம்படை—பாதுகாப்பு.

180. தானம்—இடம்.

183. அடித்தளை—கால்விலங்கு.

184. கண்ணுளாளர்—பெரும்பாணர். கருவிக்குயிலுவர்—தோற்கருவி வாசிப்பார்.

187. முடுக்கர்—குறுந்தெரு.

188. வியல் உள் ஆங்கண்—அகன்ற ஊரிடத்தே.

238. கரந்து—மறைத்து.

237–9. கண்ணகிக்கு இடக்கண்ணும் மாதவிக்கு வலக்கண்ணும் துடித்தன; மகளிர்க்கு இடக்கண் துடித்தல் நன்னிமித்தம்.

ஆறுவது

கடலாடு காதை.

[இந்திரவிழவின் முடிவில் நகரத்தாருடன் கோவலனும் மாதவியும் சென்று கடலாடுதல் இக்காதையால் அறியலாகும்.]

அகவல்.

வெள்ளி மால்வரை வியன்பெருஞ் சேடிக்
கள்ளவிழ் பூம்பொழிற் காமக் கடவுட்குக்
கருங்கய னெடுங்கட் காதலி தன்னொடு
விருந்தாட் டயருமோர் விஞ்சை வீரன்,

[ஒரு வித்தியாதரன் தன் மனைவிக்குக் கூறல்.]

தென்றிசை மருங்கினோர் செழும்பதி தன்னுள்
இந்திர விழவுகொண் டெடுக்குநா ளிதுவெனக்
கடுவிசை யவுணர் கணங்கொண் டண்டிக்
கொடுவரி யூக்கத்துக் கோநகர் காத்த
தொடுகழன் மன்னற்குத் தொலைந்தன ராகி
நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்
திருந்துவே லண்ணற்குத் தேவ னேவ
இருந்து பலியுண்ணு மிடனுங் காண்குதும்;

---

1. சேடி—வித்தியாதரர் நகரம்.
2. பொழிவில்.
4. விருந்தாட்டு—வருடவிழா.
5. பதி—காவிரிப்பூம்பட்டினம்.
6. என—என்று வித்தியாதரன் சொல்ல.
8. கோநகர்—அமராவதி.
9. மன்னற்கு—முசுகுந்த சக்கரவர்த்திக்கு.
11. வஞ்சம்—வஞ்சனை; என்றது, இருட்டை உண்டுபண்ணுவதாகிய ஓர் அஸ்திரத்தை.

7–13. தனது பகைவரைவென்ற முசுகுந்தனுக்கு உதவியாக இந்திரன் அனுப்பிய பூதம் அவனுடன் வந்து இந்நகரைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறதென்பது பழைய வரலாறு.

13. காண்குதும்—காண்பேம்,

அமரா வதிகாத் தமரனிற் பெற்றுத்
தமரிற் றந்து தகைசால் சிறப்பிற்
பொய்வகை யின்றிப் பூமியிற் புணர்த்த
ஐவகை மன்றத் தமைதியுங் காண்குதும்;

[18–25. கணிகையாகிய மாதவியின் ஆடலையுங் காண்போம்;]

துவரிதழ்ச் செவ்வாய்த் துடியிடை யோயே,
அமரர் தலைவனை வணங்குதும் யாமென,

[அவன் வழியிலுள்ளவற்றை மனைவிக்குத் தெரிவித்துக்கொண்டு வருதல்.]

சிமயத் திமயமுஞ் செழுநீர்க் கங்கையும்
உஞ்சையம் பதியும் விந்தத் தடவியும்
வேங்கட மலையுந் தாங்கா விளையுட்
காவிரி நாடுங் காட்டிப் பின்னர்ப்
பூவிரி படப்பைப் புகார்மருங் கெய்திச்
சொல்லிய முறைமையிற் றொழுதனன் காட்டி,
மல்லன் மூதூர் மகிழ்விழாக் காண்போன்,

[அவன் மாதவியின் ஆடல் வகைகளைக் காட்டல்.]

மாயோன் பாணியும் வருணப் பூதர்
நால்வகைப் பாணியு நலம்பெறு கொள்கை
வானூர் மதியமும் பாடிப் பின்னர்ச்

[பதினோராடல்.]

சீரியல் பொலிய நீரல நீங்கப்
பாரதி யாடிய பாரதி யரங்கத்துத்
திரிபுர மெரியத் தேவர் வேண்ட
வெரிமுகப் பேரம் பேவல் கேட்ப

---

26. துவர்—சிவப்பு.
29. உஞ்சையம்பதி—உச்சயினி நகர்.
30. விளையுள்—விளைவு.
32. படப்பை—தோட்டம். புகார்—காவிரிப்பூம்பட்டினம்.
35. பாணி—பாட்டு.
37. மதியம்—சந்திரனைப் பாடும் பாட்டு. பாடுதல்—மாதவியின் தொழில்.
39. பாரதி—துர்க்கை. பாரதியரங்கம்—மயானம்.

உமையவ ளொருதிற னாக வோங்கிய
இமையவ னாடிய **கொடுகொட்டி** யாடலும்,
தேர்மு னின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன்பாண் **டரங்கமும்**,
கஞ்சன் வஞ்சங் கடத்தற் காக
அஞ்சன வண்ண னாடிய வாடலுள்
அல்லியத் தொகுதியும், அவுணற் கடந்த
மல்லி னாடலும், மாக்கட னடுவண்
நீர்த்திரை யரங்கத்து நிகர்த்துமுன் னின்ற
சூர்த்திறங் கடந்தோ னாடிய **துடியும்**,
படைவீழ்த் தவுணர் பையு ளெய்தக்
குடைவீழ்த் தவர்மு னாடிய **குடையும்**,
வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீணில மளந்தோ னாடிய **குடமும்**,
ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காம னாடிய **பேடி** யாடலும்,
காய்சின வவுணர் கடுந்தொழில் பொறாஅள்
மாயவ ளாடிய **மரக்கா** லாடலும்,
செருவெங் கோல மவுணர் நீங்கத்

---

42. திறன்—பக்கம்.

42–3. ஓங்கிய இமையவன்—பரமசிவன்; அவர் திரிபுரத்தை எரித்தபின்பு கைகொட்டி நின்று ஆடுதலின், இவ்வாடல் இப்பெயர்பெற்றது.

45. பாண்டரம்—வெள்ளை; பாண்டராங்கமென்பது பாண்டரங்கமென்றாயிற்று. துர்க்கை வடிவுகொண்ட இறைவன் வெண்ணீற்றை யணிந்து ஆடினமையால் இஃது இப்பெயர்பெற்றது.

48. அவுணன்—வாணாசுரன்.

51. சூர்த்திறங்கடந்தோன் — முருகக்கடவுள்; அவர் துடியை (உடுக்கையை)க் கொட்டிக்கொண்டு ஆடினமையின், இவ்வாடல் இப்பெயர் பெற்றது.

53. குடையை முன்னே சாய்த்துக்கொண்டு நின்று முருகக்கடவுள் ஆடினமையின், இவ்வாடல் இப்பெயர்பெற்றது.

55. கண்ணபிரான், குடங்கொண்டு ஆடினமையின், இவ்வாடல் இப்பெயர் பெற்றது.

57. காமன்—கண்ணபிரான்புதல்வனாகிய பிரத்தியும்மனன்; அவன் பேடி வடிவங்கொண்டு ஆடினமையின், இவ்வாடல் இப்பெயர்பெற்றது.

58–9. மாயவள்—துர்க்கை; அவள் மரத்தாலாகிய காலின்மீது நின்று ஆடினமையின், இஃது இப்பெயர்பெற்றது,

திருவின் செய்யோ ளாடிய பாவையும்,
வயலுழை நின்று வடக்கு வாயிலுள்
அயிராணி மடந்தை யாடிய கடையமும்
அவரவ ரணியுட னவரவர் கொள்கையின்
நிலையும் படிதமு நீங்கா மரபிற்
பதினோ ராடலும் பாட்டின் பகுதியும்
விதிமாண் கொள்கையின் விளங்கக் காணாய்;
தாதவிழ் பூம்பொழி லிருந்தியான் கூறிய
மாதவி மரபின் மாதவி யிவளெனக்
காதலிக் குரைத்துக் கண்டுமகிழ் வெய்திய
மேதகு சிறப்பின் விஞ்சைய னன்றியும்
அந்தரத் துள்ளோ ரறியா மரபின்
வந்து காண்குறூஉம் வானவன் விழவும்
ஆடலுங் கோலமு மணியுங் கடைக்கொள
ஊடற் கோலமோ டிருந்தோ னுவப்ப,

[மாதவி நீராடல் முதலியன.]

பத்துத் துவரினு மைந்து விரையினும்
முப்பத் திருவகை யோமா லிகையினும்
ஊறின நன்னீ ருரைத்தநெய் வாச

---

61. திருமகள் கொல்லிப்பாவை வடிவங்கொண்டு ஆடினமையின், இஃது இப்பெயர்பெற்றது.

63. அயிராணி மடந்தை—இந்திராணி.

62–3. இறுதிக்கூத்தானமையின், இவ்வாடல் கடையமென்று பெயர்பெற்றது; கடைசியர் வடிவங்கொண்டு ஐராணி யாடினமையின், இப்பெயர் பெற்றதென்று கூறுவதுமுண்டு.

65. நிலை—நின்றாடல். படிதம்—வீழ்ந்தாடல்.

68. பொழில்—இமயமலைக்கணுள்ளதாக முன்பு கூறிய சோலை; (அடி, 2.)

69. ஊர்வசியென்பவள் இந்நகரிற் பிறந்து மாதவியெனப் பெயர்பெற்றா ளென்று பழஞ்சரிதமுண்மையின், இங்கேயுள்ள மாதவியென்னும் பெயரிரண்டனுள், முன்னது அவள் பெயரென்றறிக; இஃது, இக் காதையின் 18–ஆம் அடி முதலியவற்றாலு மறியலாகும்.

73. வானவன் விழவு—இந்திரன் விழவு.

75. ஊடல்—வெறுப்பு.

76. பத்துத் துவர்ப்பொருள்கள்—பூவந்தி முதலியவைகள். விரையைந்து—கோட்ட முதலியவை.

77. ஓமாலிகை முப்பத்திரண்டு—இலவங்க முதலியவை.

நாறிருங் கூந்த னலம்பெற வாட்டிப்
புகையிற் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறு மான்மதக் கொழுஞ்சே றூட்டி

[மாதவி ஆபரணங்களை அணிதல்.]

அலத்தக மூட்டிய வஞ்செஞ் சீறடி
நலத்தகு மெல்விர னல்லணி செறீஇப்
பரியக நூபுரம் பாடகஞ் சதங்கை
அரியகங் காலுக் கமைவுற வணிந்து
குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்துப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
நிறங்கிளர் பூந்துகி னீர்மையி னுடீஇக்
காமர் கண்டிகை தன்னொடு பின்னிய
தூமணித் தோள்வளை தோளுக் கணிந்து
மத்தக மணியொடு * வயிரங் கட்டிய
சித்திரச் சூடகஞ் செம்பொற் கைவளை
பரியகம் வால்வளை பவழப் † பல்வளை
அரிமயிர் முன்கைக் கமைவுற வணிந்து
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மாகதத் தாள்செறி
காந்தண் மெல்விரல் கரப்ப வணிந்து

---

79. கூந்தல்—மாதவி.
80. புலர்த்திய—உலர்த்திய.
83. செறீஇ—செறித்து.
84–5. பரியக முதலிய ஐந்தும் காலணிகள்.
86. குறங்கு செறி—தடையணி.
87. முத்தரை—முத்துக்கோவை. முப்பத்திருகாழ்—விரிசிகை என்னும் ஆபரணம்.
89. கண்டிகை—மாணிக்க வளை.
91. மத்தகம்—முகப்பு.
92. சூடகம்—ஒருவகை வளை.
93. பரியகம்—நவரத்தின வளை, சரி.
95. நெளியென்னும் ஆபரணம்.
97. தாள்செறி—மோதிரம்.

* வயிரங்குயிற்றியவெனவும் பாடம்.
† பல்வடமெனவும் பாடம்.

சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினை
அங்கழுத் தகவயி னாரமோ டணிந்து
கயிற்கடை யொழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையிற் சிறுபுற மறைத்தாங்
கிந்திர நீலத் *திடையிடை திரண்ட
சந்திர பாணித் தகைபெறு கடிப்பிணை
அங்கா தகவயி னழகுற வணிந்து
தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகந் தொடர்ந்த தலைக்கணி
மையீ ரோதிக்கு மாண்புற வணிந்து,
109–110: இருந்த மாதவியானவள்,
உருகெழு மூதூ ருவவுத் தலைவந்தெனப்

[இருவரும் கடலாடச் செல்லுதல்.]

பெருநீர் போகு மிரியன் மாக்களொடு
மடலவிழ் கானற் கடல்விளை யாட்டுக்
காண்டல் விருப்பு வேண்டின ளாகிப்
பொய்கைத் தாமரைப் புள்வாய் புலம்ப
வைகறை யாமம் வாரணங் காட்ட
வெள்ளி விளக்க நள்ளிருள் கடியத்
தாரணி மார்பனொடு பேரணி யணிந்து,
வான வண்கைய னத்திரி யேற
மானமர் நோக்கியும் வைய மேறி,
கோடிபல வடுக்கிய கொழுநிதிக் குப்பை
மாடமலி மறுகிற் பீடிகைத் தெருவின்

---

101. கயில்—மூட்டுவாய்.
102. சிறுபுறம்—பிடர்.
104. கடிப்பிணை—குதம்பையென்னும் காதணி.
106. தெய்வவுத்தியும் வலம்புரியும் ஒவ்வோராபரணம்.
107. தொய்யகம் — தலைப்பாளை. புல்லகம்—தென்பல்லி வடபல்லி யென்பவை.
111. உவவு—பௌர்ணமி திதி.
112. இரியல்—விரைவு.
116. வாரணம்—கோழி.
120. வையம்—ஒருவகை வண்டி.

* இடையிடை சிறந்தவெனவும் பாடம்.

மலரணி யொழுக்கத்து மணிவிளக் கெடுத்தாங்
கலர்கொடி யறுகும் நெல்லும் வீசி
மங்கலத் தாசியர் தங்கல னொலிப்ப
இருபுடை மருங்கினுந் திரிவனர் பெயரும்
திருமக ளிருக்கை செவ்வனங் கழிந்து
மகர வாரி வளந்தந் தோங்கிய
நகர வீதி நடுவட போகிக்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச் சேரி மருங்குசென் றெய்தி,

[விளக்கு வகைகள்.]

வண்ணமுஞ் சாந்து மலருஞ் சுண்ணமும்
பண்ணியப் பகுதியும் பகர்வோர் விளக்கமும்
செய்வினைக் கம்மியர் கைவினை விளக்கமும்
காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்
கூவியர் காரகற் குடக்கால் விளக்கமும்
நொடைநவின் மகடூஉக் கடைகெழு விளக்கமும்
இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமும்
இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்
விலங்குவலைப் பரதவர் மீன்றிமில் விளக்கமும்

---

127. செல்வமிகுதி பற்றி, சடைவீதியை, 'திருமகளிருக்கை' என்றார்.
128. வாரிவளம்—முத்து, பவழம், சங்கு முதலியன.
130. புலம்—இடம்.
132. கொடியெடுத்து நுவலும்—இன்ன சரக்கு இன்ன இடத்துள்ளதென்பதைக் கொடிகள் தெரிவிக்கும்.
133. மாலை—ஒழுங்கு.
135. பண்ணியப்பகுதி—சிற்றுண்டி வகைகள்.
136. கம்மியர்—தட்டார்.
137. காழியர்—பிட்டு வாணிகர். மோதகம்—(ஈண்டு) பிட்டு.
138 கூவியர்—அப்ப வாணிகர். குடக்கால்—குடத்தின் வடிவாகச் செய்யப்பட்ட தீபஸ்தம்பம்.
139. நொடை—விற்கப்படும் பண்டபங்கள்; ஆகுபெயர். மகடூஉ—மகள்.
141. கலங்கரை விளக்கம் — திசைக்குறி காட்டிக் கப்பலை அழைக்கும் விளக்கு.
142. மீன்றிமில்—மீன் படகு.

மொழிபெயர் தேத்தோ ரொழியா விளக்கமும்
கழிபெரும் பண்டங் காவலர் விளக்கமும்
எண்ணுவரம் பறியா வியைந்தொருங் கீண்டி,

[கடற்றுறையமைதி.]

இடிக்கலப் பன்ன வீரயிர் மருங்கிற்
கடிப்பகை காணுங் காட்சிய தாகிய
விரைமலர்த் தாமரை வீங்குநீர்ப் பரப்பின்
மருத வேலியின் மாண்புறத் தோன்றும்
கைதை வேலி நெய்தலங் கானற்
பொய்த லாயமொடு பூங்கொடி பொருந்தி
நிரைநிரை யெடுத்த புரைதீர் காட்சி
மலைப்பஃ றாரமுங் கடற்பஃ றாரமும்
வளந்தலை மயங்கிய துளங்குகல விருக்கை
அரசிளங் குமரரு முரிமைச் சுற்றமும்
பரத குமரரும் பல்வே றாயமும்
ஆடுகள மகளிரும் பாடுகள மகளிரும்
தோடுகொண் மருங்கிற் சூழ்தர லெழினியும்
விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்
தண்பதங் கொள்ளுந் தலைநாட் போல
வேறுவேறு கோலத்து வேறுவேறு கம்பலை
சாறயர் களத்தின் வீறுபெறத் தோன்றி,
கடற்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாற்
றிடங்கெட வீண்டிய நால்வகை வருணத்

---

143. ஒழியாவிளக்கு—விடிவிளக்கு.
144. காவலர்—பண்டசாலை காப்போர்.
145. வரம்பு—எல்லை.
146. இடி—மா. அயிர்—நுண்மணல்.
147. கடிப்பகை—வெண் சிறுகடுகு.
151. பொய்தலாயம்—விளையாட்டு மகளிருடைய கூட்டம்.
153. பல்தாரம்—பல பண்டம்.
154. கலம் துளங்கு இருக்கை—கப்பல் அசைகின்ற இடம்.
157. களம்—இடம், கழுத்து.
158. தோடு—தொகுதி. எழினி—திரைச்சீலை.
160. தண்பதம்—புதுப்புனல் விழவு.
162, தோன்றி—தோன்றாநிற்க.

தடங்காக் கம்பலை யுடங்கியைந் தொலிப்பக்
கடற்புலவு கடிந்த மடற்பூந் தாழைச்
சிறைசெய் வேலி யகவயி னாங்கோர்

[யாழ்வாசித்தற்கு இருவருமிருத்தல்.]

புன்னை நீழற் புதுமணற் பரப்பின்
ஓவிய வெழினி சூழ்வுடன் போக்கி
விதானித்துப் படுத்த வெண்கா லமளிமிசை
வருந்துபு நின்ற வசந்த மாலைகைத்
திருந்துகோ னல்யாழ் செவ்வனம் வாங்கிக்
கோவலன் றன்னொடுங் கொள்கையி னிருந்தனள்;
மாமலர் நெடுங்கண் மாதவி தானென.

யாழ் வாசித்தபொழுது ஒருபாடலின் பொருள்வேறுபாடு காரணமாக மாதவிபாற் கோவலன் பிணங்கிப் பிரிந்தமை 7-ஆம் காதையிலும், அவனது பிரிவாற்றாது மாதவி வருந்தியது 8-ஆம் காதையிலும் கூறப்பெற்றுள்ளன.

---

165. உடங்கு இயைந்து—ஒன்றுபடச் சேர்ந்து.
167. அகவயின்—உள்ளிடத்தே.
169. ஓவிய எழினி—சித்திரமெழுதிய திரை.
170. விதானித்து—மேற்கட்டி கட்டி.
171. வசந்தமாலை—மாதவியின் தோழி.

ஒன்பதாவது

கனாத்திறமுரைத்த காதை.

[கண்ணகியின் தோழியாகிய தேவந்தி யென்பவளுடைய வரலாறும் அவளுக்குத் தான்கண்ட கனாக்களைக் கண்ணகி கூறியது முதலியனவும் இக்காதையால் அறியலாகும்.]

கலிவெண்பாட்டு.

[மாலைக்காலம்.]

அகனக ரெல்லா மரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகன்மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற்கோர்
கோலங் கொடியிடையார் தாங்கொள்ள மேலோர்நாள்,
மாலதி மாற்றாண் மகவுக்குப் பாலளிக்கப்
பால்விக்கிப் பாலகன் றான்சோர மாலதியும்
பார்ப்பா னொடுமனையா ளென்மேற் படாதனவிட்
டேற்பன கூறாரென் றேங்கி மகக்கொண்

[கோயில்களின் வகை.]

டமரர் தருக்கோட்டம் வெள்ளியானைக் கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்வாயில்
உச்சிக் கிழான்கோட்ட மூர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தன் கோட்டம் நிலாக்கோட்டம் புக்கெங்கும்

---

2. நிகர்—ஒளி. தூஉய்—தூவி. பகல்—சூரியன்.
5. மாலதி—ஒரு பார்ப்பனி.
7. பார்ப்பானென்றது, தன் கணவனை. படாதன—அடாப்பழி.
9. அமரர்தரு—கற்பகதரு. கோட்டம்—கோயில். வெள்ளியானை—ஐராவதம்.
10. வெள்ளை நாகர்—பலதேவர்.
11. உச்சிக்கிழான்—சூரியன். ஊரென்றது,—கைலாயமலையை.
12. புறம்பணையான்—சாதவாகனனென்னும் தெய்வம்.
13. நிக்கந்தன்—அருகன். நிலா—சந்திரன்.

தேவிர்கா ளெம்முறுநோய் தீர்மென்று மேவியோர்
பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்
கேசும் படியோ ரிளங்கொடியாய் ஆசிலாய்
செய்தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
பொய்யுரை யன்று பொருளுரையே, கையிற்
படுபிணந்தா வென்று பறித்தவள்கைக் கொண்டு
சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளிற் சென்றாங்
கிடுபிணந் தின்னு மிடாகினிப்பேய் வாங்கி
மடியகத் திட்டாள் மகவை; இடியுண்ட
மஞ்ஞைபோ லேங்கி யழுதாளுக் கச்சாத்தன்
அஞ்ஞைநீ யேங்கி யழலென்று முன்னை
உயிர்க்குழவி காணாயென் றக்குழவி யாயோர்
குயிற்பொதும்பர் நீழற் குறுக, அயிர்ப்பின்றி
மாயக் குழவி யெடுத்து மடித்திரைத்துத்
தாய்கைக் கொடுத்தாளத் தையலாள் தூய
மறையோன்பின் மாணியாய் வான்பொருட் கேள்வித்
துறைபோ யவர்முடிந்த பின்ன ரிறையோனும்
தாயத்தா ரோடும் வழக்குரைத்துத் தந்தைக்கும்
தாயர்க்கும் வேண்டுங் கடன்கழித்து மேபநாள்
தேவந்தி யென்பாண் மனைவி யவளுக்குப்
பூவந்த வுண்கண் பொறுக்கென்று மேவித்தன்
மூவா விளநலங் காட்டியெங் கோட்டத்து
நீவா வெனவுரைத்து நீங்குதலும் தூமொழி
ஆர்த்த கணவ னகன்றனன் போயெங்கும்
தீர்த்தத் துறைபடிவே னென்றவனைப் பேர்த்திங்ஙன்
மீட்டுத் தருவா யெனவொன்றின் மேவிட்டுக்
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள் வாட்டருஞ்சீர்க்
கண்ணகி நல்லாளுக் குற்ற குறையுண்டென்

---

14. தீர்மென்று—தீருமென்று.
15. சாத்தன்—ஐயனார். பாடுகிடத்தல்—வரங்கிடத்தல்.
20. சுடுகாட்டுக் கோட்டம்—சக்கரவாளக் கோட்டம்.
22. மடி—வயிறு.
24. அஞ்ஞை—தாய்.
27. திரைத்து—அணைத்து.
29. மறையோன்—ஆசிரியனாகிய அந்தணன். மாணி—பிரமசாரி,

றெண்ணிய நெஞ்சத் தினையளாய் நண்ணி
அறுகு சிறுபூளை நெல்லொடுதூஉய்ச் சென்று
பெறுக கணவனோ டென்றாள்; பெறுகேன்
கடுக்குமென் னெஞ்சங் கனவினா லென்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டேம்;
பட்ட பதியிற் படாத தொருவார்த்தை
இட்டன ரூரா ரிடுதேளிட் டென்றன்மேற்
கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோ
டூர்க்குற்ற தீங்குமொன் றுண்டா லுரையாடேன்
தீக்குற்றம் போலுஞ் செறிதொடீஇ, தீக்குற்றம்
உற்றேனோ டுற்ற வுறுவனோ டியானுற்ற
நற்றிறங் கேட்கி னகையாகும்; பொற்றொடீஇ,
கைத்தாயு மல்லை கணவற் கொருநோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பிற் போய்க்கெடுக உய்த்துக்
கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில்
மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள;
சோமகுண்டஞ் சூரிய குண்டத் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்; யாமொருநாள்
ஆடுது மென்ற வணியிழைக்கவ் வாயிழையாள்
பீடன் றெனவிருந்த பின்னரே, நீடிய
காவலன் போலுங் கடைத்தலையான் வந்துநங்
கோவல னென்றாளோர் குற்றிளையாள்; கோவலனும்
பாடமை சேக்கையுட் புக்குத்தன் பைந்தொடி
வாடிய மேனி வருத்தங்கண் டியாவும்
சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்

---

42. இனையளாய்—வருத்தமுடையளாய்.

45. கடுக்கும்—சந்தேகிக்கும்.

48. இடுதேளிடல்—தேளல்லாததொன்றைக் கொண்டுவந்து மேலே போகட்டுக் கலங்கப்பண்ணுதல்.

55. கைத்தாயுமல்லை—வெறுக்கப்பட்டாயுமல்லை.

60. காமவேள் கோட்டம்—மன்மதன் கோயில்.

64. பீடன்று—பெருமையன்று.

69. சலம்—பொய். சலதி—பொய்ம்மையை யுடையவள்.

குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தருமெனக் கென்ன,
நலங்கேழ் முறுவ னகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மெனச் சேயிழை கேளிச்
சிலம்பு முதலாகச் சென்ற கலனோ
டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச்சென் றென்னோடிங்
கேடலர் கோதா யெழுகென்று நீடு
வினைகடைக் கூட்ட வியங்கொண்டான், கங்குற்
கனைசுடர் கால்சீயா முன்.

---

73. கொண்மென—கொள்ளுமென்று சொல்ல.

74. முதல்—முதற்பொருள்.

த்தாவது

நாடுகாண் காதை.

[மதுரைக்குச் செல்லத்துணிந்த கோவலன் கண்ணகியுடன் புறப்பட்டு வழியிற்கண்ட கௌந்தியென்னும் தவமுதுமகளைத் துணைக்கொண்டு சோழநாட்டின் வளங்களைக் கண்டுசென்றமை இக்காதையால் அறியலாகும்.]

[நிலைமண்டில ஆசிரியப்பா.]

[கண்ணகியும் கோவலனும் மதுரைக்குப் புறப்படல்.]

வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிரு ணின்ற கடைநாட் கங்குல்
ஊழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப
ஏழகத் தகரு மெகினக் கவரியும்
தூமயி ரன்னமுந் துணையெனத் திரியும்
தாளொடு குயின்ற தகைசால் சிறப்பின்
நீணெடு வாயி னெடுங்கடை கழிந்தாங்

[இடையிலுள்ளவை.]

கணிகிள ரரவி னறிதுயி லமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து,
பணையைந் தோங்கிய பாசிலைப் போதி
அணிதிகழ் நீழ லறவோன் றிருமொழி
அந்தர சாரிக ளறைந்தனர் சாற்றும்

---

1. வான்கண்—சூரியன்.
4. கடைஇ—செலுத்தி.
5. ஏழகத்தகர்—ஆட்டுக்கிடாய்.
7. தாள்—தாழ்ப்பாள்.
8. வாயில்—கதவு.
10. மணிவண்ணன் கோட்டம்—திருமால் கோயில்.
11. பணை—கிளை. போதி—அரசமரம்; ஞானோதயமானபொழுது கௌதம புத்தருக்கு நிழலளித்த அரசிற்குக் கிளைகள் ஐந்தென்பது பழைய வரலாறு.
12. அறவோன்—கௌதமபுத்தர்.
13. அறைந்தனர் சாற்றும்—மூலங்களைச் சொல்லிப் பொருள் சொல்லும்.

இந்திர விகார மேழுடன் போகி,
புலவூண் டுறந்து பொய்யா விரதத்
தவல நீத்தறிந் தடங்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமியோர் குழீஇய
ஐவகை நின்ற வருகத் தானத்துச்
சந்தி யைந்துந் தம்முடன் கூடி
வந்து தலைமயங்கிய வான்பெரு மன்றத்துப்
பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்
நீரணி விழவினு நெடுந்தேர் விழவினும்
சாரணர் வரூஉந் தகுதியுண் டாமென
உலக நோன்பிக ளொருங்குட னிட்ட
இலங்கொளிச் சிலாதலந் தொழுது வலங்கொண்டு,
மலைதலைக் கொண்ட பேர்யாறு போலும்
உலக விடைகழி யொருங்குட னீங்கி,
கலையி லாளன் காமர் வேனிலொடு
மலைய மாருத மன்னவற் கிறுக்கும்
பன்மல ரடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந் திகையி னெயிற்புறம் போகித்
தாழ்பொழி லுடுத்த தண்பதப் பெருவழிக்
காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து,

---

14. விகாரம்—பௌத்த வித்தியாசாலை.

18. அருகத்தானம்—ஜினாலயம்.

19. சந்தி ஐந்து—அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள் என்பவர்கள் தங்கிய ஐந்து தெருக்கள்.

20. மன்றம்—சபை.

21. பிண்டி—அசோகமரம்.

23. சாரணர் — ஆகாயத்திற் சஞ்சரிக்கும் சைனமுனிவர்கள்; இவர்கள் விசேடகாலங்களில் அங்கங்கே இவ்விருவராகச்சென்று தருமோபதேசஞ் செய்பவர்.

24. உலக நோன்பிகள்—சைனர்களில் இல்லறத்தார்.

25. சிலாதலம்—வட்டக்கல்.

27. உலக இடைகழி—நகரவாயில்.

28. கலையிலாளன்—மன்மதன்; கலை—உடம்பு.

29. மன்னவற்கு—சோழராசனுக்கு.

31. இலவந்திகை—அரசனும் தேவியுமே இருந்து விளையாடுதற்குரிய காவற்சோலை.

குடதிசைக் கொண்டு கொழும்புனற் காவிரி
வடபெருங் கோட்டு மலர்ப்பொழி னுழைந்து
காவதங் கடந்து கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப் பொருந்தி யாங்கண்
இறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி,
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து,

[கண்ணகியின் வினா.]

முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ,

[கோவலன் விடை.]

ஆறைங் காதநம் மகனாட் டும்பர்
நாறைங் கூந்த லணித்தென நக்குத்

[இருவரும் கவுந்தியடிகளைக் காண்டல்.]

தேமொழி தன்னொடுஞ் சிறையகத் திருந்த
காவுந்தி யையையைக் கண்டடி தொழலும்,

[அவர் வினா.]

உருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்
பெருமகன் றிருமொழி பிறழா நோன்பும்
உடையீ ரென்னோ உறுக ணாளரிற்
கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென,

[கோவலன் விடை.]

உரையாட் டில்லை யுறுதவத் தீர்யான்
மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்;

---

36. கவுந்தி—ஒரு தவப்பெண்.
39. நறும்பல் கூந்தல்—கண்ணகி.
44. சிறை—(தவ) வேலி.
45. ஐயை—தவப்பெண்.
47. பெருமகன்—அருகன்.
48. உறுகண்—வறுமை.
49. என—என்று கவுந்தி கேட்ப.
51. 'என்று சொல்ல' என ஒருமொழி வருவிக்க.

[கவுந்தியடிகள் கூறல்.]

பாடகச் சீறடி பரற்பகை யுழவா;
காடிடை யிட்ட நாடுநீர் கழிதற்
கரிதிவள் செவ்வி யறிகுநர் யாரோ!
உரிய தன்றீங் கொழிகென வொழியீர்;
மறவுரை நீத்த மாசறு கேள்வியர்
அறவுரை கேட்டாங் கறிவனை யேத்தத்
தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்
கொன்றிய வுள்ள முடையே னாகலிற்
போதுவல் யானும் போதுமி னென்ற

[கோவலன் வார்த்தை.]

காவுந்தி யையையைக் கைதொழு தேத்தி,
அடிக ணீரே யருளுதி ராயினித்
தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேனென,

[கவுந்தியடிகள் வழியிலுள்ளவற்றைக் கூறல்.]

கோவலன் காணாய், கொண்ட விந்நெறிக்
கேதந் தருவன யாங்கும்பல கேண்மோ;
வெயினிறம் பொறாஅ மெல்லியற் கொண்டு
பயில்பூந் தண்டலைப் படர்குவ மெனினே,
மண்பக வீழ்ந்த கிழங்ககழ் குழியைச்
சண்பக நிறைத்த தாதுசேர் பொங்கர்
பொய்யறைப் படுத்துப் போற்றா மாக்கட்குக்
கையறு துன்பங் காட்டினுங் காட்டும்;
உதிர்பூஞ் செம்மலி னொதுங்கினர் கழிவோர்
முதிர்தேம் பழப்பகை முட்டினு முட்டும்;

---

52. பரல்—பருக்கைக்கல்.
60. போதுவல்—வருவேன்.
63. என—என்று கோவலன் சொல்ல.
64. கோவலன், விளி.
67. தண்டலை—சோலை.
69. பொங்கர்—பழம்பூ.
70. பொய்யறை—பொய்க்குழி.
73. முதிர்தேம் பழம்—பலாப்பழம்.

மஞ்சளு மிஞ்சியு மயங்கரில் வலயத்துச்
செஞ்சுளைப் பலவின் பரற்பகை யுறுக்கும்;
கயனெடுங் கண்ணி காதற் கேள்வ,
வயலுழைப் படர்குவ மெனினே யாங்குப்
பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி
நீர்நாய் கௌவிய நெடும்புற வாளை
மலங்குமிளிர் செறுவின் விலங்கப் பாயிற்
கலங்கலு முண்டிக் காரிகை யாங்கண்
கரும்பிற் றொடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கும்;
அடங்கா வேட்கையி னறிவஞ ரெய்திக்
குடங்கையி னொண்டு கொள்ளவுங் கூடும்;
குறுந ரிட்ட குவளையம் போதொடு
பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரஞ ரெய்தி
அறியா தடியாங் கிடுதலுங் கூடும்;
எறிநீ ரடைகரை இயக்கந் தன்னிற்
பொறிமா ணலவனு நந்தும் போற்றா
தூழடி யொதுக்கத் துறுநோய் காணிற்
றாழ்தரு துன்பந் தாங்கவு மொண்ணா;
வயலுஞ் சோலையு மல்லதி யாங்கணும்
அயல்படக் கிடந்த நெறியாங் கில்லை;
நெறியிருங் குஞ்சி நீவெய் யோளொடு
குறியறிந் தவையவை குறுகா தோம்பெனத்

---

74. வலயம்—பாத்தி.

75. பரல்—விதை.

80. மலங்கு—ஒருவகை மீன்.

85. குடங்கை—உள்ளங்கை. நொண்டுகொள்ளல்—முகந்துகொள்ளல்.

86. குறுநர்—களைபறிப்பார்.

90. இயக்கம்—வழி.

91. அலவன்—நண்டு. நந்து—நத்தை.

96. குஞ்சி—குடுமி. வெய்யோள்—விரும்பப்பெற்றவள்; கண்ணகி.

97. ஓம்பு—பாதுகாப்பாய்.

[அவர் புறப்படல்.]

தோமறு *கடிஞையுஞ் சுவன்மே லறுவையும்
காவுந்தி யையைகைப் பீலியுங் கொண்டு
மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகென,
பழிப்பருஞ் சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்

[சோழநாட்டு வளம்]

கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்றொடு
சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பஃ றாரமொடு
கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
ஓவிறந் தொலிக்கு மொலியே யல்லது
ஆம்பியுங் கிழாரும் வீங்கிசை யேற்றமும்
ஓங்குநீர்ப் பிழாவு மொலித்தல் செல்லாக்
கழனிச் செந்நெற் கரும்புசூழ் மருங்கிற்
பழனத் தாமரைப் பைம்பூங் கானத்துக்
கம்புட் கோழியும் கனைகுர னாரையும்
செங்கா லன்னமும் பைங்காற் கொக்கும்
கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்
உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும்

---

98. கடிஞை—பிச்சைப்பாத்திரம். அறுவை—உறி.

100. பொருள்மொழித் தெய்வம்—பஞ்ச நமஸ்காரமென்கிற மந்திரம். என—என்றுசொல்ல.

102. கரியவன்—சனி. புகைக்கொடி—தூமகேது.

103. வெள்ளி—சுக்கிரன்.

108. வாய்த்தலை—வாய்க்காலின் தலைப்பு.

109. ஓ—மதகுநீர் தாங்கும் பலகை.

110–11. ஆம்பி, கிழார், ஏற்றம், பிழா என்பவைகள் நீர் இறைத்தற்குரிய கருவிகள்.

114. கம்புட்கோழி—சம்பங்கோழி.

117. உள்ளு—உள்ளான்பறவை. ஊரல்—குளுவைப்பறவை. புள்—கணந்துட்புள். புதா—பெருநாரை.

* கடிகையெனவும் பாடம்.

மவல்போர் வேந்தர் முனையிடம் போலப்
பல்வேறு குழூஉக்குரல் பரந்த வோதையும்,
உழாஅ நுண்டொளி யுள்புக் கழுந்திய
கழாமயிர் யாக்கைச் செங்கட் காரான்
சொரிபுற முரிஞ்சப் புரிஞெகிழ் புற்ற
குமரிக் கூட்டிற் கொழுமடல் லுணவு
கவரிச் செந்நெற் காய்த்தலைச் சொரியக்
கருங்கை வினைஞருங் களமருங் கூடி
ஒருங்குநின் றார்க்கு மொலியே யன்றியும்
கடிமலர் களைந்து முடிநா றழுத்தித்
தொடிவளைத் தோளு மாகமுந் தோய்ந்து
சேறுடு கோலமொடு வீறுபெறத் தோன்றிச்
செங்கய னெடுங்கட் சின்மொழிக் கடைசியர்
வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணியும்,
கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏரொடு நின்றோ ரேர்மங் கலமும்,
அரிந்துகால் குவித்தோ ரரிகடா வுறுத்த
பெருஞ்செந் நெல்லின் முகவைப் பாட்டும்,
தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த
மண்கணை முழவின் மகிழிசை யோதையும்

---

118. முனையிடம்--சண்டைக்களம்.
120. தொளி—சேறு.
121. காரான்—எருமை.
122. ஞெகிழ்பு—ஞெகிழ்ந்து.
123. கூடு—நெற்கூடு.
127. நாறு—நாற்று.
131. கள்தொலைச்சிய—கள்ளையுண்டு தொலைத்த. பாணி—பாட்டு.
133. விரியல்—மாலை.
135. ஏர்மங்கலம்—ஒருவகைப் பாட்டு.
136. கடாவுறுத்த—கடாவிடுதலாலுண்டாகிய.
137. முகவைப்பாட்டு—தானியங்களை முகந்துகொடுக்கும்பொழுது பாடும் பாட்டு.
138. கிணைப்பொருநர்—கிணையென்னும் பறையை வாசிக்கும் கூத்தர்.

பேரியாற் றடைகரை நீரிற் கேட்டாங்
கார்வ நெஞ்சமோ டவலங் கொள்ளார்,
உழைப்புலிக் கொடித்தே ருரவோன் கொற்றமொடு
மழைக்கரு வுயிர்க்கு மழற்றிக மூட்டில்
மறையோ ராக்கிய * ஆவுதி நறும்புகை
இறையுயர் மாட மெங்கணும் போர்த்து
மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்று
மங்கல மறையோ ரிருக்கை யன்றியும்,
பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் பழவிற லூர்களும்
பொங்கழி யாலைப் புகையொடு பரந்து
மங்குல் வானத்து மலையிற் றோன்றும்
ஊரிடை யிட்ட நாடுடன் கண்டு,
காவத மல்லது கடவா ராகிப்
பன்னாட் டங்கிச் சென்னா ளொருநாள்,

[சாரணர் வருகை.]

ஆற்றுவீ யரங்கத்து வீற்றுவே றுகிக்
குரங்கமை யுடுத்த மாம்பயி லடுக்கத்து
வானவ ருறையும் பூநா றொருசிறைப்
பட்டினப் பாக்கம் விட்டனர் நீங்காப்
பெரும்பெய ரைய ரொருங்குட னிட்ட
இலங்கொளிச் சிலாதல மேலிருந் தருளிப்

---

142. புலிக்கொடி யுரவோன்—சோழன்.
144. ஆவுதி—ஆகுதி.
145. இறை—இறப்பு.
148. காவிரிப்பாவை தன் புதல்வர்—வேளாளர்.
151. பொங்கழி—தூற்றுப்பொலி.
155. செல்நாள்—செல்லும் தினங்களில்.
156. அரங்கம்—ஆற்றின் நடுத்திட்டு.
157. குரங்கு அமை—வளைந்த மூங்கில். அடுக்கம்—நெருங்கிய சோலை.
159. பட்டினப்பாக்கம்—காவிரிப்பூம் பட்டினத்தின் ஒருபகுதி; (இந்திரவிழவூ ரெடுத்த காதை 58–ஆம் அடியைப் பார்க்க.

* வானவி நறும்புகையென்றும், வானவருணஅவென்றும் பாடம்.

பெருமக னதிசயம் பிறழா வாய்மைத்
தருமஞ் சாற்றுஞ் சாரணர் தோன்ற,

[இவர் வணங்கல்.]

பண்டைத் தொல்வினை பாறுக வென்றே
கண்டறி கவுந்தியொடு காலுற வீழ்ந்தோர்
வந்த காரணம் வயங்கிய கொள்கைச்
சிந்தை விளக்கிற் றெரிந்தோ னாயினும்
ஆர்வமும் செற்றமும் அகல நீக்கிய
வீர னாகலின் விழுமங் கொள்ளான்,

[சாரணர் உபதேசம்.]

கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணாய்;
ஒழிகென வொழியா தூட்டும் வல்வினை
இட்ட வித்தி னெதிர்ந்துவந் தெய்தி
ஒட்டுங் காலை ஒழிக்கவு மொண்ணா;
கடுங்கா னெடுவெளி இடுஞ்சுட ரென்ன
ஒருங்குட னில்லா, உடம்பிடை யுயிர்கள்;
அறிவன் அறவோன் அறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் தேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்
தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி

---

167. சிந்தை விளக்கு—அவதிஞானம்; அஃதாவது முற்பிறப்பை யறியும் அறிவு.

169. வந்த சாரணர் இருவருள் உபதேசிப்பவர் மூத்தவரானமையின், அவர் இங்கே ஒருமையாகக் கூறப்பட்டார்.

177. செறிவன்—சலியாதவன். சித்தன்—செய்யப்படுவனவற்றைச் செய்து முடித்தவன்.

180. சினவரன்—கோபத்தை யடக்கி மேற்பட்டவன்.

181. குணவதன்—குணத்தையுடையோன்.

இறைவன் குரவன் இயல்குணன் எங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோன் அருகன் அருண்முனி
பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
ஓதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோரென,

[கவுந்தியடிகள் செய்கை.]

சாரணர் வாய்மொழி கேட்டுத் தவமுதற்
காவுந் தியுந்தன் கைதலை மேற்கொண்டு,
ஒருமூன் றவித்தோ னோதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகம் திறவா;
காமனை வென்றோ னாயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னா;
ஐவரை வென்றோ னடியிணை யல்லது
கைவரைக் காணினும் காணா வென்கண்;
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது;
அருக ரறவ னறிவோற் கல்லதென்
இருகையுங் கூடி ஒருவழிக் குவியா;
மலர்மிசை நடந்த மலரடி யல்லதென்
தலைமிசை யுச்சி தானணிப் பொறாஅது;
இறுதியி லின்பத் திறைமொழி யல்லது
மறுதர வோதியென் மனம்புடை பெயராது;
என்றவன் இசைமொழி யேத்தக் கேட்டதற்கு

---

184. இறைவன்—எப்பொருளிலுந் தங்குகின்றவன்.
186. சயம்பு—தானே தோன்றியவன்.
187. அங்கம்—சைனாகமங்களுள் ஒருவகை நூல்.
188. பாத்தில்—பகுத்தலில்லாத.
191. பொதியறை—துவாரமில்லாத கீழறை. என—என்று சாரணர் உப தேசிக்க.
198. ஐவரை—ஐந்து இந்திரியங்களை.
207. மறுதர—மீளவும்.

[சாரணர் போதல்.]

ஒன்றிய மாதவ ருயர்மிசை யோங்கி
நிவந்தாங் கொருமுழ நீணில நீங்கிப்
பவந்தரு பாசங் கவுந்தி கெடுகென்
றந்தர மாறாப் படர்வோர்த் தொழுது
பந்த மறுகெனப் பணிந்தனர் போந்து

[காவிரியைக் கடத்தல்]

காரணி பூம்பொழிற் காவிரிப் பேரியாற்று
நீரணி மாடத்து நெடுந்துறை போகி,
மாதரும் கணவனும் மாதவத் தாட்டியும்
தீதுதீர் நியமத் தென்கரை யெய்திப்
போதுசூழ் கிடக்கையோர் பூம்பொழி லிருந்துழி,

[தீயவரிருவர் வருகை முதலியன.]

வம்பப் பரத்தை வறுமொழி யாளனொடு
கொங்கலர் பூம்பொழிற் குறுகினர் சென்றோர்,
காமனும் தேவியும் போலு மீங்கிவர்
ஆரெனக் கேட்டீங் கறிகுவ மென்றே,
நோற்றுணல் யாக்கை நொசிதவத் தீருடன்
ஆற்றுவழிப் பட்டோ ராரென வினவ, என்

[கவுந்தியடிகள் கூறல்.]

மக்கள் காணீர் மானிட யாக்கையர்
பக்க நீங்குமின் பரிபுலம் பினரென,

[வந்த கொடியோரிருவரும் கூறல்.]

உடன்வயிற் றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை
கடவது முண்டோ? கற்றறிந் தீரென,
தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்

[கண்ணகி நடுங்கல்.]

காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க,

---

215. நீரணிமாடம்—ஒருவகை ஓடம்.
217. நியமம்—மருதநிலத்து ஊர்.
223. நொசிதவத்தீர்—நுண்மையான தவத்தையுடையவரே.
226. பரிபுலம்பினர்—மிகவும் வருந்தினர்.
227. ஒருங்கு உடன் வாழ்க்கை–கணவனும் மனைவியுமாக வாழ்தல்.

[கவுந்தியார் அவர்களைச் சபித்தல்.]

எள்ளுநர் போலுமிவ ரென்பூங் கோதையை
முள்ளுடைக் காட்டின் முதுநரி யாகென,
கவுந்தி யிட்ட தவந்தரு சாபம்
கட்டிய தாதலிற் பட்டதை யறியார்
குறுநரி நெடுங்குரற் கூவிளி கேட்டு
நறுமலர்க் கோதையு நம்பியு நடுங்கி,

[கண்ணகியும் கோவலனும் வேண்டுதல்.]

நெறியி னீங்கியோர் நீரல கூறினும்
அறியா மையென் றறியல் வேண்டும்;
செய்தவத் தீர்நுந் திருமுன் பிழைத்தோர்க்கு
உய்திக் கால முரையீ ரோவென,

[சாபவிடை.]

அறியா மையினின் றிழிபிறப் புற்றோர்
உறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கிப்
பன்னிரு மதியம் படர்நோ யுழந்தபின்
முன்னை யுருவம் பெறுகவீங் கிவரெனச்
சாபவிடை செய்து தவப்பெருஞ் சிறப்பிற்

[மூவரும் உறையூரை அடைதல்.]

காவுந்தி யையையுங் தேவியுங் கணவனும்
முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென.

---

231. எள்ளுநர்போலும்—இகழுகின்றார்கள்போலும்.

232. என—என்று கவுந்தி சபிக்க.

240. உய்திக்காலம்—சாபம் நீங்கிப் பிழைக்கும் காலம்.

242. நொச்சி—மதில்.

243. படர்—துன்பம்.

245. சாபவிடை—சாபநீக்கம்.

247–8. முறஞ்செவி வாரணம்—முறம்போலும் காதையுடைய யானை. 'புறஞ்சிறை வாரணம்' என்றது சிலேடை; புறத்தே சிறையையுடைய கோழி, புறஞ்சேரியையுடைய உறையூர். முற்காலத்து ஒரு கோழி யானையைப் போரில் வென்றதை யறிந்து அவ்விடத்தில் செய்யப்பட்ட நகரமாதலின் உறையூர்க்குக் கோழியென்பது பெயர்; இங்கே அதன் பரியாயமாக வாரணமென்றார்.

மணிமேகலை.

முகவுரை.

இந்நூல், தமிழிலுள்ள பழைய காப்பியமைந்தனுள் ஒன்று; **சிலப்பதிகாரக்** கதாநாயகனுன கோவலனுடைய காதற் பரத்தையாகிய மாதவி மகள் **மணிமேகலை** என்பவளுடைய துறவு முதலிய சரித்திரங்களை விரித்துக் கூறுதலின், இஃது இப்பெயர் பெற்றது; மணிமேகலைதுறவென்றும் வழங்கும் இது முதலிற் கதைச்சுருக்கமாகிய பதிகத்தை யுடைத்தாய், விழாவறை காதைமுதற் பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதை இறுதியாகவுள்ள முப்பது காதையைப் பெற்றுள்ளது; ஒவ்வொரு காதையும் ஒவ்வொரு பெரிய ஆசிரியப்பாவாற் செய்யப்பெற்றது; சொற்சுவை பொருட்சுவைக ளிற் சிறந்து எளிதாகப் பொருளையுணர்த்தும் இனிய நல்ல நடையை யுடையது. மணிமேகலை பௌத்த சமயக்கொள்கையைத் தழுவி ஒழுகிய வளாதலின் அக்கொள்கையையே இந்நூல் சிறப்பித்துக் கூறும். சிலப்பதிகார நூலாசிரியராகிய இளங்கோவடிகள் கேட்ப **மதுரைக் கூலவாணிகன் சாத்தனுர்** இந்நூலை இயற்றினர். இதனை, "இளங்கோ வேந்தனருளிக் கேட்ப, வளங்கெழு கூல வாணிகன் சாத்தன், மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற, வாறைம் பாட்டினு ளறிய வைத்தனன்" என்னும் இந்நூற் பதிகத்தாலுணர்க. இந்நூலின் அருமை பெருமையை உளங்கொண்டே, "மாதவி பெற்ற மணிமே கலைநம்மை வாழ்விப்பதே" என மகாகவியாகிய **கம்பர்** புதல்வர் **அம்பிகாபதியும்**, "கொந்தார் குழன்மணி மேகலை நூனுட்பங் கொள்வ தெங்ஙன்" எனத் துறைமங்கலம் **சிவப்பிரகாச முனிவரும்** தாங்கள் இயற்றிய கோவைகளிற் சிலேடையில் அமைத்து விளக்கினர். இந்நூலின் நயங்கள் முதலியவற்றை, உரையோடு அச்சிற் பதிப்பிக்கப்பெற்றிருக்கும் முழுப்புத்தகத்தாலுணர்க. பௌத்தமதக் கொள்கைகளைத் தழுவியே இந்நூற்குக் குறிப்புரை எழுதப்பெற்றிருக்கிறது.

மணிமேகலை.

பதிகம்.

[இதனால், காவிரிப்பூம்பட்டினத்தின் பழைய வரலாறும் இந்நூலி லுள்ள கதைச்சுருக்கமும் அறியலாகும்.]

* நிலைமண்டில ஆசிரியப்பா.

இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்கொளி மேனி விரிசடை யாட்டி,
பொன்றிகழ் நெடுவரை யுச்சித் தோன்றித்
தென்றிசைப் பெயர்ந்தவித் தீவத் தெய்வதம்,
சாகைச் சம்பு தன்கீழ் நின்று
மாநில மடந்தைக்கு வருந்துயர் கேட்டு
வெந்திற லரக்கர்க்கு வெம்பகை நோற்ற
சம்பு வென்பாள் சம்பா பதியினள்;
செங்கதிர்ச் செல்வன் றிருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட,
அமர முனிவ னகத்தியன் றனாது
கரகங் கவிழ்ந்த காவிரிப் பாவை
செங்குணக் கொழுகியச் சம்பா பதியயற்
பொங்குநீர்ப் பரப்பொடு பொருந்தித் தோன்ற,

---

* பின்வருங் காதைகள்தோறும் உள்ளனவும் இந்தச் செய்யுளே.

1. எள்ளும்—ஒக்கும்.

4. இத்தீவத்தெய்வதம்—சம்புத்தீவத்தெய்வம்.

5. சம்பு—நாவல்மரம்.

7. பகைநோற்ற—பகையாக நோற்ற.

8. சம்பாபதியினள்—காவிரிப்பூம் பட்டினத்திலிருந்தாள்.

10. கஞ்சவேட்கை — தண்ணீரை உண்டாக்கும் விருப்பம். காந்தமன்— காந்தனென்னும் அரசன்; இவன் ஒரு சோழன்.

12. கரகம்—கமண்டலம். கவிழ்ந்தகாவிரி—கவிழ்ந்ததனால் பெருகிய காவிரி நதி.

13. செங்குணக்கு—நேர் கிழக்கு.

ஆங்கினி திருந்த வருந்தவ முதியோள்
ஓங்குநீர்ப் பாவையை யுவந்தெதிர் கொண்டாங்
காணு விசும்பி னாகாய கங்கை
வேணவாத் தீர்த்த விளக்கே வாவென,
பின்னிலை முனியாப் பெருந்தவன் கேட்டீங்கு
அன்னை கேளிவ் வருந்தவ முதியோள்
நின்னால் வணங்குந் தகைமையள் வணங்கென,
பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய
கோடாச் செங்கோற் சோழர்தங் குலக்கொடி,
கோனிலை திரிந்து கோடை நீடினும்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை
தொழுதன ளிற்பவத் தொன்மூ தாட்டி
கழுமிய வுவகையிற் கவாற்கொண் டிருந்து,
தெய்வக் கருவும் திசைமுகக் கருவும்
செம்மலர் முதியோன் செய்த வந்நாள்
என்பெயர்ப் படுத்தவிவ் விரும்பெயர் மூதூர்
நின்பெயர்ப் படுத்தே னீவா ழியவென,
இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்,
ஒருநூறு வேள்வி யுரவோன் றனக்குப்
பெருவிழா வறைந்ததும் பெருகிய தலரெனச்
சிதைந்த நெஞ்சிற் சித்திரா பதிதான்

---

15. முதியோள்—சம்புத்தீவத் தெய்வம்.

16. நீர்ப்பாவை—காவிரி.

19. பெருந்தவன்—அகத்திய முனிவர்.

20. 'அன்னை' என்றது காவிரியை.

22. பரதம்—பரதகண்டம்.

24. கோல்—செங்கோல்.

25. 'தண்டமிழ்ப்பாவை' என்றது காவிரியை.

27. கழுமிய—கலந்த. கவான்—தொடை.

28. தெய்வக்கரு — தெய்வகண பிண்டங்கள். திசைமுகக்கரு—பிரமகண பிண்டங்கள்.

29. செம்மலர் முதியோன்—மஹாப் பிரமதேவர்.

32. உரு—அச்சம். இருபாற்பெயரிய ஊர்—சம்பாபதி, காவிரிப்பூம் பட்டினமென்னும் பெயரையுடைய ஊர்.

34. அலர்—பலரறிய நிகழ்த்தும் சொல்.

35. சித்திராபதி—மாதவியின் நற்றாய்.

வயந்த மாலையான் மாதவிக் குரைத்ததும்
மணிமே கலைதான் மாமலர் கொய்ய
அணிமலர்ப் பூம்பொழி லகவயிற் சென்றதும்
ஆங்கப் பூம்பொழி லரசிளங் குமரனைப்
பாங்கிற் கண்டவள் பளிக்கறை புக்கதும்
பளிக்கறை புக்க பாவையைக் கண்டவன்
துளக்குறு நெஞ்சிற் றுயரொடும் போயபின்
மணிமே கலாதெய்வம் வந்துதோன் றியதும்
மணிமே கலையைமணி பல்லவத் துய்த்ததும்
உவவன மருங்கினவ் வுரைசா றெய்வதம்
சுதமதி தன்னைத் துயிலெடுப் பியதூஉம்
ஆங்கத் தீவகத் தாயிழை நல்லாள்
தான்றுயி லுணர்ந்து தனித்துய ருழந்ததும்
உழந்தோ ளாங்கணொ ரொளிமணிப் பீடிகைப்
பழம்பிறப் பெல்லாம் பான்மையி னுணர்ந்ததும்
உணர்ந்தோள் முன்ன ருயர்தெய்வந் தோன்றி
மனங்கவ லொழிகென மந்திரங் கொடுத்ததும்
தீவ திலகை செவ்வனந் தோன்றி
மாபெரும் பாத்திர மடக்கொடிக் களித்ததும்
பாத்திரம் பெற்ற பைந்தொடி தாயரொடு

---

36 வயந்தமாலை—மாதவியின் தோழி.

38. பொழில் அகவயின்—பூஞ்சோலையின் உள்ளிடத்தே.

39. அரசிளங்குமரன்—உதயகுமரன்.

40. அவள்—மணிமேகலை. பளிக்கறை—பளிங்காலாகிய அறை.

42. துளங்குதல்—நிலை கலங்குதல்.

44. மணி பல்லவம்—ஒரு சிறுதீவு.

45. உவவனம்—உண்டாக்கப்பட்ட வனம்.

46. சுதமதி—மாதவியின் தோழியாகிய ஒரு பார்ப்பனி. எடுப்பியது—எழுப்பியது.

47. நல்லாள்—மணிமேகலை.

49. பீடிகை—புத்தனுடைய பாதபீடம்.

52. கவல்—கவலை. மந்திரம்—வேறுருவை அடையச்செய்வதும் ஆகாயத்தில் திரியச்செய்வதும் பசியை ஒழிப்பதுமாகிய மூன்று மந்திரங்கள்.

53. தீவதிலகை—புத்தபீடிகையைக் காத்திருப்பவள். செவ்வனம்—நேரே.

54. பாத்திரம்—அமுதசுரபியென்னும் பிச்சைப் பாத்திரம்.

யாப்புறு மாதவத் தறவணர்த் தொழுததும்
அறவண வடிக ளாபுத் திரன்றிறம்
நறுமலர்க் கோதைக்கு நன்கன முரைத்ததும்
ஆங்கப் பாத்திர மாபுத் திரன்பாற்
சிந்தா தேவி கொடுத்த வண்ணமும்
மற்றப் பாத்திர மடக்கொடி யேந்திப்
பிச்சைக் கவ்வூர்ப் பெருந்தெரு வடைந்ததும்
பிச்சை யேற்ற பெய்வளை கடிஞையிற்
பத்தினிப் பெண்டிர் பாத்தூ ணீத்ததும்
காரிகை நல்லாள் காயசண் டிகைவயிற்று
ஆனைத் தீக்கெடுத் தம்பல மடைந்ததும்
அம்பல மடைந்தன ளாயிழை யென்றே
கொங்கலர் நறுந்தார்க் கோமகன் சென்றதும்
அம்பல மடைந்த வரசிளங் குமரன்முன்
வஞ்ச விஞ்சையன் மகள்வடி வாகி
மறஞ்செய் வேலோன் வான்சிறைக் கோட்டம்
அறஞ்செய் கோட்ட மாக்கிய வண்ணமும்
காயசண் டிகையென விஞ்சைக் காஞ்சனன்
ஆயிழை தன்னை யகலா தணுகலும்
வஞ்ச விஞ்சையன் மன்னவன் சிறுவனை

---

56. அறவணர்—ஒரு பௌத்தமுனிவர்.
57. ஆபுத்திரன்—ஓர் அந்தணன். திறம்—வரலாறு.
58. நன்கனம்—நன்ருக.
60. சிந்தாதேவி—ஸரஸ்வதி; ஞானபாரமிதை யென்றும் கூறுவர்.
62. அவ்வூர்—காவிரிப்பூம்பட்டினம்.
63. கடிஞை—பிச்சைப்பாத்திரம்.
64. பத்தினிப்பெண்டிர்—ஆதிரையென்பவள். பாத்தூண்—பகுத்துண்ணும் உணவு.
65. காயசண்டிகை—ஒரு வித்தியாதர மங்கை.
67. ஆனைத்தீ—தணியாப்பசியை உண்டாக்கும் ஒரு நோய்.
68. கோமகன்—உதய குமரன்.
70. விஞ்சையன் மகள்—காயசண்டிகை.
71. வேலோன்—மாவண்கிள்ளி.
73. காஞ்சனன்—காயசண்டிகையின் கணவன்.
74. அணுகலும்—(உதயகுமரன்) அடைதலும்.

மைந்துடை வாளிற் றப்பிய வண்ணமும்
ஐயரி யுண்க ணவன்றுயர் பொறுஅள்
தெய்வக் கிளவியிற் றெளிந்த வண்ணமும்
அறைகழல் வேந்த னாயிழை தன்னைச்
சிறைசெய் கென்றதும் சிறைவீடு செய்ததும்
நறுமலர்க் கோதைக்கு நல்லற முரைத்தாங்கு
ஆய்வளை ஆபுத் திரனா டடைந்ததும்
ஆங்கவன் றன்னோ டணியிழை போகி
ஓங்கிய மணிபல் லவத்திடை யுற்றதும்
உற்றவ ளாங்கோ ருயர்தவன் வடிவாய்ப்
பொற்கொடி வஞ்சியிற் பொருந்திய வண்ணமும்
நவையறு நன்பொரு ளுரைமி னோவெனச்
சமயக் கணக்கர் தந்திறங் கேட்டதும்
ஆங்கத் தாயரோ டறவணர்த் தேர்ந்து
பூங்கொடி கச்சி மாநகர் புக்கதும்
புக்கவள் கொண்ட பொய்யுருக் களைந்து
மற்றவர் பாதம் வணங்கிய வண்ணமும்
தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
பவத்திற மறுகெனப் பாவை நோற்றதும்
இளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற
வாறைம் பாட்டினு ளறியவைத் தனனென.

பதிகம் முற்றிற்று.

---

76. தப்பிய—கொன்ற.

78. தெய்வக்கிளவியின்—கந்திற்பாவையென்னும் கடவுளின் சொல்லால்.

81. நல்லறம்—தயாதர்மம்.

86. வஞ்சி—சேரனுடைய இராசதானி.

87. நன்பொருள்—நல்ல தத்துவங்கள்.

88. சமயக்கணக்கர்—சமயவாதிகள்.

90. கச்சி—காஞ்சிபுரம்.

92. அவர்—அறவணவடிகள்.

95. இளங்கோ வேந்தன்—இளங்கோவடிகள்; இவர் சிலப்பதிகார நூலாசிரியர்.

96. கூலவாணிகன் சாத்தன்—இந்நூலாசிரியர்.

முதலாவது

விழாவறைகாதை.

[இந்திரவிழாவின் நிகழ்ச்சியைப் பறையறைவித்துத் தெரிவித்தல் இதனால் அறியலாகும்.]

உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்,
விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினு நன்கினி துறைகென
அமரர் தலைவ னாங்கது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவா ராகலின்
மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
இத்திறந் தத்த மியல்பினிற் காட்டும்
சமயக் கணக்கருந் தந்துறை போகிய
அமயக் கணக்கரு மகலா ராகிக்
கரந்துரு வெய்திய கடவு ளாளரும்
பரந்தொருங் கீண்டிய பாடை மாக்களும்

---

2. மேம்படீஇய—மேம்படுத்தற்பொருட்டு.
3. மலயத்து அருந்தவன்—அகத்தியர்.
4. செம்பியன்—சோழன்.
7. கோள்—கொள்ளுதல்.
8. என—என்று சோழன் வேண்ட.
10. கடவார்—தப்பார்.
11. மெய்த்திறம்—மெய்ந்நூல். பொருள்—தத்துவம்.
14. அமயக்கணக்கர்—சோதிடர்.
15. கரந்து—மறைந்து.
16. பாடை—பாஷை.

ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
வந்தொருங்கு குழீஇ, வான்பதி தன்னுட்
கொடித்தேர்த் தானைக் கொற்றவன் றுயரம்
விடுத்த பூதம் விழாக்கோண் மறப்பின்
மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்க
இடிக்குரன் முழக்கத் திடும்பை செய்திடும்;
தொடுத்த பாசத்துத் தொல்பதி நரகரைப்
புடைத்துணும் பூதமும் பொருந்தா தாயிடும்
மாயிரு ஞாலத் தரசுதலை யீண்டும்
ஆயிரங் கண்ணோன் விழாக்கால் கொள்கென,
வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி,
ஏற்றுரி போர்த்த விடியுரு முழக்கிற்
கூற்றுக்கண் விளிக்குங் குருதி வேட்கை
முரசு கடிப்பிடூஉ முதுகுடிப் பிறந்தோன்,
திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
வானமும் மாரி பொழிக; மன்னவன்
கோணிலை திரியாக் கோலோ னாகுக;
தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்
ஆயிரங் கண்ணோன் றன்னோ டாங்குள
நால்வேறு தேவரும் நலத்தகு சிறப்பிற்
பால்வேறு தேவரும் இப்பதிப் படர்ந்து,
மன்னன் கரிகால் வளவனீங் கியநாள்

---

17. ஐம்பெருங்குழு—அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், ஒற்றர். எண்பேராயம்—யானைவீரர் முதலியோர்.

20. பூதம்—நாளங்காடிப் பூதம்.

24. பூதம்—சதுக்கப் பூதம்.

26. கால்கொள்க—தொடங்குக. என—என்று சமயக்கணக்கர் முதலியோர் சொல்ல.

30. விளிக்கும்—அழைக்கும்.

31. கடிப்பு—முரசடிக்கும் குறுந்தடி.

32. வாழ்க என்று.

34. கோள்—நவக்கிரகங்கள்.

35. தீவகச்சாந்தி—(இங்கே) இந்திரவிழா.

37. நால்வேறு தேவர்—வசுக்கள், சூரியர், உருத்திரர், மருத்துவர்.

38. பால்வேறு தேவர்—பதினெண்கணங்கள். படர்ந்து—நினைந்து.

இந்நகர் போல்வதோ ரியல்பின தாகிப்
பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது
தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலின்,
தோரண வீதியும் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்;
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பு நடுமின்;
பத்தி வேதிகைப் பசும்பொற் றூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்;
விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணன் மாற்றுமின்; புதுமணற் பரப்புமின்;
கதலிகைக் கொடியும் காழூன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்;
நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபி னறிந்தோர் செய்யுமின்;
தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை யறிவீர் பொருந்துமின்;
ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந் தேறுமின்;
பற்றா மாக்க டம்முட னாயினும்

---

41. பொன்னகர்—அமராவதி.
43. கோட்டி—சபை.
46. வஞ்சி—ஒருவகை மரம்.
48. வேதிகை—திண்ணை.
50. மன்றம்—ஊர்க்கு நடுவாய் எல்லாரும் இருத்தற்குரிய மரத்தினடி.
52. விலோதம்—துவசம்.
53. மதலை—கொடுங்கை.
58. பொதியில்—அம்பலம்.
59. புண்ணிய நல்லுரை—தருமோபதேச வார்த்தைகள்.
61. பட்டிமண்டபம்-வித்தியாமண்டபம். பாங்கு—உரிய இடம்.
62. பற்றாமாக்கள்—விரோதிகள்.

செற்றமுங் கலாமும் செய்யா தகலுமின்;
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மணற் றுருத்தியும் தாழ்பூந் துறைகளும்
தேவரு மக்களும் ஒத்துடன் றிரிதரும்
நாலேழ் நாளினும் நன்கறிந் தீரென
ஒளிறுவாண் மறவருந் தேரும் மாவும்
களிறும் சூழ்தரக் கண்முர சியம்பிப்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா வறைந்தன னகநகர் மருங்கென.

விழாவறைகாதை முற்றிற்று.

---

63. செற்றம்—தணியாக்கோபம்; வைரம். கலாம்—சண்டை.
65. துருத்தி—ஆற்றிடைத்திட்டு.
67. அறிந்தீர், விளி.
71. வசி—மழை.

இரண்டாவது

ஊரலருரைத்தகாதை.

[ஊரார் மாதவியை இகழ்ந்து கூறுதலை அவளுக்கு வயந்தமாலை கூறியது முதலியன இதனால் அறியலாகும்.]

நாவ லோங்கிய மாபெருந் தீவினுட்
காவற் றெய்வதம் தேவர்கோற் கெடுத்த
தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்
மணிமே கலையொடு மாதவி வாராத்
தணியாத் துன்பம் தலைத்தலை மேல்வரச்
சித்திரா பதிதான் செல்லலுற் றிரங்கித்
தத்தரி நெடுங்கட் டன்மக டோழி
வயந்த மாலையை வருகெனக் கூஉய்ப்
பயங்கெழு மாநக ரலரெடுத் துரையென,
வயந்த மாலையும் மாதவி துறவிக்கு
அயர்ந்துமெய் வாடிய அழிவின ளாதலின்
மணிமே கலையொடு மாதவி யிருந்த
அணிமலர் மண்டபத் தகவயிற் செலீஇ
ஆடிய சாய லாயிழை மடந்தை
வாடிய மேனி கண்டுளம் வருந்தி,
பொன்னே ரனையாய் புகுந்தது கேளாய்;
உன்னோ டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல்?

---

2. காவற்றெய்வதம்—சம்பாபதி.
5. தலைத்தலை—ஒவ்வொருவரிடத்தும்.
8. கூஉய்—அழைத்து.
9. என—என்று சித்திராபதி சொல்ல.
10. துறவிக்கு—துறவுக்கு.
13. அகவயின் செலீஇ—உள்ளிடத்தே சென்று.
14. மடந்தை யென்றது—மாதவியை.
17. ஒன்று—ஒருபகைமை.

வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும்
பண்ணியாழ்க் கரணமும் பாடைப் பாடலும்
தண்ணுமைக் கருவியும் தாழ்தீங் குழலும்
கந்துகக் கருத்தும் மடைநூற் செய்தியும்
சுந்தரச் சுண்ணமும் தூநீ ராடலும்
பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமும்
காயக் கரணமும் கண்ணிய துணர்தலும்
கட்டுரை வகையும் கரந்துறை கணக்கும்
வட்டிகைச் செய்தியும் மலராய்ந்து தொடுத்தலும்
கோலங் கோடலுங் கோவையின் கோப்பும்
காலக் கணிதமும் கலைகளின் றுணிவும்
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை
நற்றவம் புரிந்தது நாணுடைத் தென்றே
அலகின் மூதூ ரான்றவ ரல்லது
பலர்தொகு புரைக்கும் பண்பில் வாய்மொழி
நயம்பா டில்லை நாணுடைத் தென்ற
வயந்த மாலைக்கு மாதவி யுரைக்கும்:
காதல னுற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா உயிரொடு நின்றே
பொற்கொடி மூதூர்ப் பொருளுரை யிழந்து
நற்றொடி நங்காய் நாணுத் துறந்தேன்;

18–9. வேத்தியற் கூத்து—அரசர்க்கு ஆடுங்கூத்து. பொதுவியற்கூத்து—எல்லார்க்கும் ஒப்ப ஆடுங்கூத்து.

19. தூக்கு—தாளத்தைச் சார்ந்தவை.

20. கரணம்—செய்கை.

22. கந்துகம்—பந்து. மடைநூல்—பாகசாத்திரம்.

26. கரந்துறை கணக்கு—மறைந்துறையும் வகை.

27. வட்டிகை—எழுதுகோல்.

32. நங்கையென்றது மாதவியை.

35. தொகுபு—கூடி.

38. காதலன்—கோவலன். கடுந்துயர்—கொலை.

40. பொருள்—புகழ்.

காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்காது
இன்னுயி ரீவ ரீயா ராயின்
நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்;
நளியெரி புகாஅ ராயி னன்பரோடு
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்;
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்து,
அத்திறத் தாளும் அல்லளெம் மாயிழை,
கணவற் குற்ற கடுந்துயர் பொறாஅள்
மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்ப
... ...
... ...
காவலன் பேரூர் கனையெரி யூட்டிய
மாபெரும் பத்தினி மகண்மணி மேகலை,
அருந்தவப் படுத லல்ல தியாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்
ஆங்கன மன்றியு மாயிழை கேளாய்;
ஈங்கிம் மாதவ ருறைவிடம் புகுந்தேன்
மறவண நீத்த மாசறு கேள்வி
அறவண வடிக ளடிமிசை வீழ்ந்து
மாபெருந் துன்பம் கொண்டுளை மயங்கிக்
காதல னுற்ற கடுந்துயர் கூற,
பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்

---

42. கனை—மிகுதி. பொத்தி—மூட்டி.

43. ஊதுலைக்குருகு—கொல்லன் உலைத்துருத்தி.

47. உடம்பு அடுவர்—உடம்பை வருத்துவர்.

49. ஆயிழை யென்றது கண்ணகியை.

51. சிறுபுறம்—பிடர்.

54. பேரூர்—மதுரை.

56. அருந்தவப்படுதலல்லது—அரிய தவவழியிற் சேர்தற்கு உரியளேயன்றி. யாவதும்—சிறிதும்.

60. மறவண்ணம்—பாவத்தன்மை.

64–7. இவற்றால், துக்கம், துக்கநிவாரணம், துக்கோற்பத்தி, துக்கநிவாரண மார்க்கமென்னும் பௌத்தமத வாய்மைகள் நான்கும் கூறப்பெற்றன.

பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றே ருறுவ தறிகென் றருளி
ஐவகைச் சீலத் தமைதியுங் காட்டி
உய்வகை யிவைகொளென் றுரவோ னருளினன்;
மைத்தடங் கண்ணார் தமக்குமெற் பயந்த
சித்திரா பதிக்கும் செப்பு நீயென,
ஆங்கவ ளுரைகேட் டரும்பெறன் மாமணி
ஓங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று
மைய னெஞ்சமொடு வயந்த மாலையும்
கையற்றுப் பெயர்ந்தனள் காரிகை திறத்தென.

உவ ரல.நுரைத்தகாதை முற்றிற்று.

---

68. ஐவகைச் சீலம்—காமம், கொலை, கள், பொய், களவென்னும் இவ்வைந்தையும் முற்றத்துறத்தல்.

69. கொள்—கொள்வாயாக. உரவோன்—அறவண அடிகள்.

75. கை—செயல்,

மூன்றாவது

மலர்வனம்புக்ககாதை.

[மலர் கொய்தற்கு மணிமேகலை சுதமதியோடு பூஞ்சோலையிற் புகுந்தது முதலியன இதனால் அறியலாகும்.]

வயந்த மாலைக்கு மாதவி யுரைத்த
உயங்குநோய் வருத்தத் துரைமுன் றோன்றி
மாமலர் நாற்றம் போன்மணி மேகலைக்கு
ஏது நிகழ்ச்சி எதிர்ந்துள தாதலின்,
தந்தையும் தாயும் தாநனி யுழந்த
வெந்துய ரிடும்பை செவியகம் வெதுப்பக்
காத னெஞ்சங் கலங்கிக் காரிகை
மாதர்ச் செங்கண் வரிவனப் பழித்துப்
புலம்புநீ ருருட்டிப் பொதியவிழ் நறுமலர்
இலங்கிதழ் மாலையை இட்டுநீ ராட்ட,
மாதவி மணிமே கலைமுக நோக்கித்
தாமரை தண்மதி சேர்ந்தது போலக்
காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றி,
தூநீர் மாலை தூத்தகை யிழந்தது
நிகர்மலர் நீயே கொணர்வா யென்றலும்,
மதுமலர்க் குழலியொடு மாமலர் தொடுக்கும்
சுதமதி கேட்டுத் துயரொடுங் கூறும்:

---

2. உரைமுன் தோன்றி—சொல்லினிடமாக உண்டாகி.

4. ஏது நிகழ்ச்சி—கர்மங்களாகிய காரணங்கள் தத்தம் பயனைக் கொடுத்தற்குத் தோற்றுதல்.

5. தாயென்றது, இங்கே கண்ணகியை.

7. காரிகை—மணிமேகலை.

12–3. மாதவிகைக்குத் தாமரை மலரும் மணிமேகலைமுகத்திற்குச் சந்திரனும் உவமைகள்.

14. கண்ணீர்த்துளி பட்டமையின், மாலை தூய்மையை இழந்ததென்றாள்.

15. நிகர்மலர்—ஒளியையுடைய பூ.

குரவர்க் குற்ற கொடுந்துயர் கேட்டுத்
தணியாத் துன்பந் தலைத்தலை யெய்தும்
மணிமே கலைதன் மதிமுகந் தன்னுள்
அணிதிகழ் நீலத் தாய்மல ரோட்டிய
கடைமணி யுகுநீர் கண்டன னாயிற்
படையிட்டு நடுங்கும் காமன்; பாவையை
ஆடவர் கண்டா லகறலு முண்டோ?
பேடிய ரன்றோ பெற்றியி னின்றிடின்?
ஆங்கன மன்றியு மணியிழை கேளாய்;
ஈங்கிந் நகரத் தியான்வருங் காரணம்,
பாரா வாரம் பல்வளம் பழுனிய
காராளர் சண்பையிற் கௌசிக னென்போன்
இருபிறப் பாள னொருமக ளுள்ளேன்,
ஒருதனி யஞ்சேன் ஓரா நெஞ்சமோடு
ஆரா மத்திடை அலர்கொய் வேன்றனை
மாருத வேகனென் பானோர் விஞ்சையன்,
திருவிழை மூதூர் தேவர்கோற் கெடுத்த
பெருவிழாக் காணும் பெற்றியின் வருவோன்,
தாரன் மாலையன் தமனியப் பூணினன்
பாரோர் காணாப் பலர்தொழு படிமையன்
எடுத்தனன் எற்கொண் டெழுந்தனன் விசும்பிற்
படுத்தனன் ஆங்கவன் பான்மையே னாயினேன்;
ஆங்கவன் ஈங்கெனை அகன்றுகண் மாறி
நீங்கினன் தன்பதி, நெட்டிடை யாயினும்.

---

18. குரவர்—தந்தை தாயர்.
22. கடைமணியுகுநீர்—கண்ணீர்.
28. பாராவாரம்—கடல்.
29. சண்பை—ஒரு நகரம்.
32. ஆராமம்—பூஞ்சோலை.
33. விஞ்சையன்—வித்தியாதரன்.
37. படிமை—தெய்வவடிவு.
38. எற்கொண்டு—என்னைத் தூக்கிக்கொண்டு.
39. படுத்தனன்—சேர்த்தான்.
40. ஈங்கு—இவ்வூரில். கண்—தாட்சணியம்.
41. நெட்டிடை—நெடுந்தூரம்.

மணிப்பூங் கொம்பர் மணிமே கலைதான்
தனித்தலர் கொய்யுந் தகைமைய ளல்லள்;
பன்மல ரடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந் திகையி னெயிற்புறம் போகின்
உலக மன்னவ னுழையோ ராங்குளர்;
விண்ணவர் கோமான் விழாக்கோ ணன்னாள்
மண்ணவர் விழையார், வானவ ரல்லது;
பாடுவண் டிமிரா, பன்மரம் யாவையும்;
வாடா மாமலர் மாலைக டூக்கலிற்
கைபெய் பாசத்துப் பூதங் காக்குமென்று
உய்யா னத்திடை யுணர்ந்தோர் செல்லார்;
வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்
தவாநீர்க் காவிரிப் பாவைதன் றாதை
கவேரனாங் கிருந்த கவேர வனமும்
மூப்புடை முதுமைய தாக்கணங் குடைய;
யாப்புடைத் தாக வறிந்தோ ரெய்தார்;
அருளு மன்பு மாருயி ரோம்பும்
ஒருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவன தாணையிற் பன்மரம் பூக்கும்
உவவன மென்பதொன் றுண்டத னுள்ளது,
விளிப்பறை போகாது மெய்புறத் திடூஉம்

44. பந்தர்—நிழல்.
45. இலவந்திகை—எந்திரவாவியைச் சூழ்ந்த சோலை.
46. உழையோர்—பக்கத்திலுள்ளோர்.
50. தூக்கலின்—தொங்கச்செய்திருத்தலால்.
51. பாசம்—கயிறு.
52. உய்யானம்—அரசருக்குரிய காவற்சோலை.
54. சம்பாதி—இராமாயணத்திற்கூறப்பெற்ற ஒரு பறவை.
56. கவேரன்—ஓர் இராஜ ரிஷி.
57. தாக்கணங்கு—தீண்டிவருத்தும் தெய்வம்.
58. யாப்பு—உறுதி.
60. பூட்கை—மேற்கொண்ட கொள்கை.
61. பகவன்—புத்ததேவன்.
63. விளிப்பு அறை போகாது—அழைக்கும் ஓசை வெளிப்படாமல். மெய்புறத்து இடும்—சரீரத்தைப் புறத்தே காட்டுகின்ற.

பளிக்கறை மண்டப முண்டத னுள்ளது,
தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
தாமரைப் பீடிகை தானுண் டாங்கிடின்
அரும்பவிழ் செய்யு மலர்ந்தன வாடா,
சுரும்பின மூசா, தொல்யாண்டு கழியினும்.
மறந்தே னதன்றிற மாதவி, கேளாய்;
கடம்பூண்டோர் தெய்வங் கருத்திடை வைத்தோர்
ஆங்கவ ரடிக்கிடி னவரடி தானுறும்;
நீங்கா தியாங்கணும் நினைப்பில ராயிடின்;
ஈங்கிதன் காரண மென்னை யென்றியேல்,
சிந்தை யின்றியுஞ் செய்வினை யுறுமெனும்
வெந்திற னோன்பிகள் விழுமங் கொள்ளவும்
செய்வினை சிந்தை யின்றெனின் யாவதும்
எய்தா தென்போர்க் கேது வாகவும்
பயங்கெழு மாமல ரிட்டுக் காட்ட
மயன்பண் டிழைத்த மரபின ததுதான்.
அவ்வன மல்ல தணியிழை நின்மகள்
செவ்வனஞ் செல்லுஞ் செம்மை தானிலள்;
மணிமே கலையொடு மாமலர் கொய்ய
அணியிழை நல்லா யானும் போவலென்று
அணிப்பூங் கொம்ப ரவளொடுங் கூடி
மணித்தேர் வீதியிற் சுதமதி செல்வுழிஇச்
சிமிலிக் கரண்டைய னுழைகோற் பிரம்பினன்,

---

64. பளிங்கு அறை—பளிங்காலாகிய அறை.

66. தாமரைப் பீடிகை—புத்ததேவனுடைய தாமரை மலர்போன்ற பாத வடிவங்களமைந்த பீடம்.

68. சுரும்பு—வண்டு.

70. கடம்—முறைமை.

74. சிந்தை—எண்ணம்.

75. விழுமம்—வருத்தம்.

78. பயம்—பலன்.

81. செவ்வனம்—நேராக.

85. செல்வுழி—செல்லுமிடத்து.

86. சிமிலி—உறி. கரண்டை—கமண்டலம். நுழை கோல் பிரம்பு—நுண்ணிதாகத்திரண்ட பிரம்பு.

தவலருஞ் சிறப்பி னராந்தா ணத்துளோன்,
நாணமு முடையு நன்கன நீத்துக்
காணா வுயிர்க்குங் கையற் றேங்கி
உண்ணா நோன்போ டுயவ லியானையின்
மண்ணா மேனியன் வருவோன் றன்னை,
வந்தீ ரடிகளும் மலரடி தொழுதேன்;
எந்த மடிக ளெம்முரை கேண்மோ;
அழுக்குடை யாக்கையிற் புகுந்த நும்முயிர்
புழுக்கறைப் பட்டோர் போன்றுளம் வருந்தாது
இம்மையு மறுமையு மிறுதியி லின்பமும்
தன்வயிற் றரூஉமென் தலைமக னுரைத்தது;
கொலையு முண்டோ? கொழுமடற் றெங்கின்
விளைபூந் தேறலின், மெய்த்தவத் தீரே,
உண்டு தெளிந்திவ் யோகத் துறுபயன்
கண்டா லெம்மையுங் கையுதிர்க் கொண்மென
உண்ணா நோன்பி தன்னொடுஞ் சூளுற்று
உண்மென விரக்குமோர் களிமகன் பின்னரும்,
கணவிரி மாலையிற் கட்டிய திரள்புயன்,
குவிமுகி ழெருக்கிற் கோத்த மாலையன்,
சிதவற் றுணியொடு சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்வீழ் பொடித்துக் கட்டிய வுடையினன்,

---

87. அராந்தாணம்—சைன முனிவர்களுடைய தவப்பள்ளி.
89. கை அற்று—செயலற்று.
90. உயவல்—வருத்தம்.
92. அடிகள்—சுவாமீ.
93. கேண்ம்—கேளும்.
95. புழுக்கு அறை—புழுங்குதலைச் செய்யும் அறை.
98–9. தெங்கின் தேறல்—தென்னங்கள்
100. இவ்யோகம்—இந்த மருந்து.
101. கை உதிர்க்கொண்மென—கையசைத்துக்கொள்ளுமென.
102. சூளுற்று—சபதஞ் செய்து.
103. பின்னரும்—பின்னே நிற்போரும்.
104. கணவிரிமாலை—செவ்வலரிமாலை.
106. சிதவல் துணி—கிழிந்ததுணி.
107. ததர் வீழ்பு—நெருங்கிய சுள்ளிகள்.

வெண்பலி சாந்த மெய்ம்முழு துறீஇப்
பண்பில் கிளவி பலரொடு முரைத்தாங்கு
அழூஉம் விழூஉ மாற்றுங் கூஉம்
தொழூஉ மெழூஉஞ் சுழலலுஞ் சுழலும்
ஓடலு மோடு மொருசிறை யொதுங்கி
நீடலு நீடு நிழலொடு மறலும்
மைய லுற்ற மகன்பின் வருந்திக்
கையறு துன்பங் கண்டுநிற் குநரும்,
சுரியற் றாடி மருள்படு பூங்குழற்
பவளச் செவ்வாய்த் தவள வாணகை
ஒள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதல்
* * * * * *
* * * * * *
இகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து,
வாணன் பேரூர் மறுக்கிடைத் தோன்றி
நீணில மளந்தோன் மகன்முன் னாடிய
பேடிக்கோ லத்துப் பேடுகாண் குநரும்,
வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடும ணோங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை யுயிர்களு முவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய

---

108. வெண்பலி—வெண்ணீறு.
110. அழூம்—அழுவான்.
113. மறலும்—பகைப்பான்.
114. மையலுற்றமகன்—பித்தன்.
116. தாடி—மோவாய்.
122. வட்டுடை—முழந்தாளளவாக உடுக்குமுடை.
123. வாணன்—பாணாசுரன்.
124. நீணிலமளந்தோன் மகன் — கண்ணபிரானுடைய மகனாகிய பிரத்தியுமனன்.
125. பேடு—ஒருவகைக்கூத்து.
126. வம்பமாக்கள்—புதியோர்.
127. சுடுமண்—செங்கல்.
128. படிவம்—தெய்வவடிவம்.

கண்கவ ரோவியங் கண்டுநிற் குநரும்,
விழவாற்றுப் படுத்த கழிபெரு வீதியிற்
பொன்னுண் கோத்த நன்மணிக் கோவை
ஐயவி யப்பிய நெய்யணி முச்சி
மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ்
பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்
செவ்வாய்க் குதலை மெய்பெறு மழலை
சிந்துபு சின்னீ ரைம்படை நனைப்ப
அற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகில்
தொடுத்தமணிக் கோவை யுடுப்பொடு துயல்வரத்
தளர்நடை தாங்காக் கிளர்பூட் புதல்வரைப்
பொலந்தேர் மீமிசைப் புகர்முக வேழத்து
இலங்குதொடி நல்லார் சிலர்நின் றேற்றி
ஆலமர் செல்வன் மகன்விழாக் கால்கோள்
காண்மி னோவெனக் கண்டுநிற் குநரும்,
விராடன் பேரூர் விசயனும் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்
மணிமே கலைதனை வந்துபுறஞ் சுற்றி,
அணியமை தோற்றத் தருந்தவப் படுத்திய
தாயோ கொடிய டகவில ளீங்கிவள்
மாமலர் கொய்ய மலர்வனந் தான்புகின்
நல்விள வன்ன நாணு தாங்குள

---

132. ஆற்றுப்படுத்த—வழிப்படுத்திய; நடத்திய.
134. ஐயவி—வெண் சிறுகடுகு. முச்சி—மயிர்முடி.
135. கயிற்கடை—கொக்குவாய்; கொக்கி. முக்காழ்—மூன்றுகோவையான முத்து வடம்.
136. பொலம் பிறை—பொன்னாற்செய்யப்பட்ட பிறைவடிவமான ஆபரணம்.
138. ஐம்படை—திருமாலின் ஐந்து ஆயுதங்களின் வடிவமமைந்த கழுத்தணி.
139. அற்றம்—மறைத்தற்குரிய உறுப்பு.
141. பூண்—ஆபரணம்.
142 தேர்மீதுள்ள செயற்கை யானையின்மேல்.
144. மகன்—முருகக்கடவுள், என்றது சிறுவனை.
145. என—என்று சொல்ல.
146. விசயனும் பேடியை—அருச்சுனனாகிய பேடியை.
149. அணி அமை—ஆபரணங்களில்லாத,

வல்லுந கொல்லோ மடந்தை தன்னடை?
மாமயி லாங்குள வந்துமுன் னிற்பன
சாயல்கற் பனகொலோ தைய றன்னுடன்?
பைங்கிளி தாமுள பாவைதன் கிளவிக்கு
எஞ்சல கொல்லோ? இசையுந வல்ல;
என்றிவை சொல்லி யாவரு மினைந்துகச்
செந்தளிர்ச் சேவடி நிலம்வடு வுறுமற்
குரவமு மரவமுங் குருந்துங் கொன்றையும்
திலகமும் வகுளமுஞ் செங்கால் வெட்சியும்
நரந்தமு நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமுந் தளவமு முடமுட் டாழையும்
குடசமும் வெதிரமுங் கொழுங்கா லசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய வுவவனந் தன்னைத்
தொழுதனள் காட்டிய சுதமதி தன்னொடு
மலர்கொய்யப் புகுந்தனண் மணிமே கலையென.

மலர்வனம்புக்ககாதை முற்றிற்று.

---

158. இனைந்து—வருந்தி.
160. குரவம்—குராமரம், மரவம்—வெண்கடம்பு.
161. திலகம்—மஞ்சாடிமரம்.
162. நரந்தம்—நாரத்தை. நாகம்—சுரபுன்னை.
163. தளவம்—செம்முல்லை.
164. குடசம்—வெட்பாலைமரம். வெதிரம்—மூங்கில்.
167. வித்தகர்—சித்திரமெழுதும் திறமையுடையோர்.
168. சித்திரச்செய்கைப்படாம்—சித்திரத்தொழிலமைந்த போர்வை.

நான்காவது

பளிக்கறைபுக்ககாதை.

[உவவனஞ்சென்ற மணிமேகலை, உதயகுமரன் தன்னை விரும்பி வந்ததையறிந்து பளிங்கறையிற் புகுந்ததும் பிறவும் இதனால் அறியலாகும்.]

பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழிற்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டின நல்லியாழ் செய்ய
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்
மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்;
மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்
பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்
றொருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
அரச வன்ன மாங்கினி திருப்பக்
கரைநின் றாலு மொருமயி றனக்குக்
கம்புட் சேவல் கனைகுரன் முழவாக்
கொம்ப ரிருங்குயில் விளிப்பது காணாய்;
இயங்குதேர் வீதி எழுதுகள் சேர்ந்து
வயங்கொளி மழுங்கிய மாதர்நின் முகம்போல்
விரைமலர்த் தாமரை கரைநின் றோங்கிய
கோடுடைத் தாழைக் கொழுமட லவிழ்ந்த

---

3. கொளுத்தி—பொருத்தி.
5. நுழைபு—நுழைதல். குயில் நுழையெனப் பிரிக்க
7. மணி நீர் இலஞ்சி—பளிங்குபோலும் நீரையுடைய பொய்கை.
8. பாசடை—பசிய இலை.
11. ஆலும்—ஆடும்.
12. கம்புள்—சம்பங்கோழி.
13. விளிப்பது—பாடுவது.

வால்வெண் சுண்ண மாடிய திதுகாண்;
மாதர் நின்கண் போதெனச் சேர்ந்து
தாதுண் வண்டின மீதுகடி செங்கையின்
அஞ்சிறை விரிய அலர்ந்த தாமரைச்
செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டாங்கு
எறிந்தது பெறூஅ திரையிழந்து வருந்தி
மறிந்து நீங்கு மணிச்சிரல் காணெனப்
பொழிலும் பொய்கையுஞ் சுதமதி காட்ட
மணிமே கலையம் மலர்வனங் காண்புழி,
மதிமருள் வெண்குடை மன்னவன் சிறுவன்
உதய குமரன், உருகெழு மீதூர்
மீயா னடுங்க நடுவுநின் றோங்கிய
கூம்புமுதன் முறிய வீங்குபிணி யவிழ்ந்து
கயிறுகால் பரிய வயிறுபாழ் பட்டாங்கு
இதைசிதைந் தார்ப்பத் திரைபொரு முந்நீர்
இயங்குதிசை யறியா தியாங்கணு மோடி
மயங்குகா லெடுத்த வங்கம் போலக்
காழோர் கையற மேலோ ரின்றிப்
பாகின் பிளவையிற் பணைமுகந் துடைத்துக்
கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்கலக் குறுத்தாங்கு
இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்

---

18. வால் வெண் சுண்ணம் — மிகவும் வெண்மையையுடைய வாசனைப் பொடி.

24. சிரல்—மீன்கொத்திக் குருவி.

27. மருள், உவம உருபு.

29. மீயான்—மேலேயிருக்கின்ற மாலுமி.

30. கூம்பு—பாய்மரம்.

31. பரிய—அறுபட. வயிறு—நடுவிடம்.

32. இதை—கப்பற்பாய்.

35. காழோர்—குத்துக்கோற்காரர்.

36. பாகு—பாகன். பிளவை—பிளந்த துண்டம்.

37. கோ வியன் வீதி—இராசப் பெருந்தெரு.

38. பீடிகைத் தெரு—கடைத் தெரு.

39. இருபால் பெயரிய—சம்பாபதி காவிரிப்பூம்பட்டினமென்னும் இரு பெயர்களைப் பெற்ற.

ஒருபாற் படாஅ தொருவழித் தங்காது
பாகும் பறையும் பருந்தின் பந்தரும்
ஆதுல மாக்களும் அலவுற்று விளிப்ப
நீல மால்வரை நிலனொடு படர்ந்தெனக்
கால வேகங் களிமயக் குற்றென,
விடுபரிக் குதிரையின் விரைந்துசென் றெய்திக்
கடுங்கண் யானையின் கடாத்திற மடக்கி
அணித்தேர்த் தானையொ டரசிளங் குமரன்
மணித்தேர்க் கொடிஞ்சி கையாற் பற்றிக்
காரலர் கடம்ப னல்ல னென்பது
ஆரங் கண்ணியிற் சாற்றினன் வருவோன்,
நாடக மடந்தையர் நலங்கெழு வீதி
ஆடகச் செய்வினை மாடத் தாங்கண்
சாளரம் பொளித்த கால்போகு பெருவழி
வீதிமருங் கியன்ற பூவணைப் பள்ளித்
தகரக் குழலா டன்னொடு மயங்கி
மகர யாழின் வான்கோடு தழீஇ
வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்
எட்டி குமர னிருந்தோன் றன்னை,
மாதர் தன்னொடு மயங்கினை யிருந்தோய்;
யாதுநீ யுற்ற விடுக்க ணென்றலும்,
ஆங்கது கேட்டு, ...

---

41. பந்தர்—பந்தல்போன்ற நிழல்.

42. ஆதுலமாக்கள்—மிக்க வறுமையையுடையோர். அலவுற்று—சுழன்று.

44. காலவேகம்—அரசனுடைய பட்டத்து யானை. உற்றென—உற்றதாக.

28–45. உதயகுமரன் சென்றெய்தி.

47. அரசிளங்குமரன்—உதயகுமரன்.

48. கொடிஞ்சி—தாமரைமொட்டின் வடிவாகச்செய்து தேர்த்தட்டின் முன்னே நட்டு வைக்கப்படுவது.

49. கடம்பன்—முருகக்கடவுள்.

50. ஆரங்கண்ணி—ஆத்திமாலை.

52. ஆடகம்—ஒருவகைப்பொன்.

56. மகரயாழ்—மகரவீணை; நால்வகை வீணையுள் ஒன்று.

57. வட்டிகை—எழுதுகோல். பாவையின்—சித்திரம்போல.

58. எட்டி யென்பது, வைசியர் பெறும் பட்டப் பெயர்.

60. என்றலும்—என்று உதயகுமரன் கேட்கவும்.

பாங்கிற் சென்று தான்றொழு தேத்தி
மட்டவி ழலங்கன் மன்ன குமரற்கு
எட்டி குமர னெய்திய துரைப்போன்,
வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போல்
தகைநலம் வாடி மலர்வனம் புகூஉம்
மாதவி பயந்த மணிமே கலையொடு
கோவல னுற்ற கொடுந்துயர் தோன்ற,
நெஞ்சிறை கொண்ட நீர்மையை நீக்கி
வெம்பகை நரம்பி னென்கைச் செலுத்தியது;
இதுயா னுற்ற இடும்பை யென்றலும்,
மதுமலர்த் தாரோன் மனமகிழ் வெய்தி
ஆங்கவ டன்னையென் னணித்தே ரேற்றி
ஈங்கியான் வருவே னென்றவற் குரைத்தாங்கு
ஓடுமழை கிழியு மதியம் போல
மாட வீதியின் மணித்தேர் கடைஇக்
காரணி பூம்பொழிற் கடைமுகங் குறுகவத்
தேரொலி மாதர் செவிமுத லிசைத்தலும்,
சித்திரா பதியோ டுதய குமரனுற்று
என்மேல் வைத்த வுள்ளத் தானென
வயந்த மாலை மாதவிக் கொருநாட்
கிளந்த மாற்றங் கேட்டே னாதலின்,
ஆங்கவன் றேரொலி போலு மாயிழை,
ஈங்கென் செவிமுத லிசைத்ததென் செய்கென

---

65. செப்பினுளிருக்கும் மலர் புழுக்கத்தால் வாடும்.
68. தோன்ற—எனது ஞாபகத்திற்குவர.
69. இறை கொண்ட—தங்குதல் கொண்ட.
68–70. அத்துயர் நீக்கிச் செலுத்தியது.
71. என்றலும்—என்று எட்டிகுமரன் சொல்லவும்.
72. தாரோன்—உதயகுமரன்.
75. கிழியும் மதியம்—கிழிதற்குக் காரணமாகிய சந்திரன்.
76. கடைஇ—செலுத்தி.
77. கடை முகம்—வாயிலிடம்.
78. மாதர்—மணிமேகலை.
83. ஆயிழை—சுதமதியே.
84. என் செய்கு—என்ன செய்வேன்.

அமுதுறு தீஞ்சொ லாயிழை யுரைத்தலும்,
சுதமதி கேட்டுத் துளக்குறு மயில்போற்
பளிக்கறை மண்டபம் பாவையைப் புகுகென்று
ஒளித்தறை தாழ்கோத் துள்ளகத் திரீஇ
ஆங்கது தனக்கோ ரைவிலின் கிடக்கை
நீங்காது நின்ற நேரிழை தன்னைக்
கல்லென் தானையொடு கடுந்தேர் நிறுத்திப்
பன்மலர்ப் பூம்பொழிற் பகன்முளைத் ததுபோற்
பூமரச் சோலையும் புடையும் பொங்கரும்
தாமரைச் செங்கண் பரப்பினன் வரூஉம்
அரசிளங் குமரன், ஆருமி லொருசிறை
ஒருதனி நின்றாய்; உன்றிற மறிந்தேன்;
..................மடந்தை மெல்லியல்
தளரிடை யறியுந் தன்மையள் கொல்லோ?
விளையா மழலை விளைந்து மெல்லியல்
முளையெயி றரும்பி முத்துநிரைத் தனகொல்?
செங்கய னெடுங்கண் செவிமருங் கோடி
வெங்கணை நெடுவேள் வியப்புரைக் குங்கொல்?
மாதவ ருறைவிட மொரீஇமணி மேகலை
தானே தமியளிங் கெய்திய துரையென,
பொதியறைப் பட்டோர் போன்றுளம் வருந்தி
மதுமலர்க் கூந்தற் சுதமதி யுரைக்கும்:
"இளமை நாணி முதுமை யெய்தி
உரைமுடிவு காட்டிய உரவோன் மருகற்கு

---

86. துளக்குறும்—நடுங்குதலுற்ற.

88. தாழ்—தாழ்ப்பாள். இரீஇ—இருத்தி.

89. ஐவிலின் கிடக்கை—ஐந்துவில் கிடக்கும் தூரம்.

91. கடுந்தேர்—விரைந்து செல்லும் தேர்.

92. பகல்—சூரியன்.

93. பொங்கர்—கட்டுமலை.

97. மெல்லியல்—மணிமேகலை.

104. உரையென—சுதமதியை நோக்கி உதய குமரன் சொல்லென்று சொல்ல.

105. பொதி அறை—துவாரமில்லாத புழுக்கறை.

107–8. உரவோன்—கரிகால் வளவன்; தம்முட் பகைமைகொண்டு வந்தாரிருவர் இளையோனென்று தன்னை இகழ்ந்தது தெரிந்து அவர்களறியாதபடி முதுமை வேடம் பூண்டுவந்து அவர்கள் வழக்கை இவன் தீர்த்தனனென்பது பண்டை வரலாறு. மருகற்கு—அவன் குடியிற்பிறந்த உனக்கு.

அறிவுஞ் சால்பு மாசியல் வழக்கும்
செறிவளை மகளிர் செப்பலு முண்டோ?
அனைய தாயினும் யானென்று கிளப்பல்;
வினைவிளங்கு தடக்கை விறலோய் கேட்டி;
வினையின் வந்தது, வினைக்குவிளை வாயது,
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது,
மூத்துவிளி வுடையது, தீப்பிணி யிருக்கை,
பற்றின் பற்றிடம், குற்றக் கொள்கலம்,
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை,
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்"
என்றவ ளுரைத்த இசைபடு தீஞ்சொல்
சென்றவ னுள்ளஞ் சேரா முன்னர்ப்
பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவையின்
இளங்கொடி தோன்றுமா விளங்கோ முன்னென.

பளிக்கறைபுக்ககாதை முற்றிற்று.

---

109. சால்பு—அமைதி.

111. கிளப்பல்—சொல்லுவேன்.

113. இந்த அடிமுதலியவற்றால், சுதமதி உடம்பின் அசுத்தத்தை உணர்த்துகின்றாள்.

117. செற்றம்—தணியாக்கோபம்.

121. புறமறிப்பார்த்தல்—ஒன்றன் உட்பாகத்தை வெளிப்படுத்திப் பார்த்தல்.

124. பாவையின்—பாவைபோல.

ஐந்தாவது

மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை.

[மணிமேகலை உதயகுமரன்பால் உள்ளம் வைத்தனளென்று நினைந்து அதனை மாற்றுதற்கு மணிமேகலாதெய்வம் வந்து தோன்றியது இதனால் அறியலாகும்.]

இளங்கோன் கண்ட இளம்பொற் பூங்கொடி,
விளங்கொளி மேனி விண்ணவர் வியப்பப்
பொருமுகப் பளிங்கி னெழினி வீழ்த்துத்
திருவின் செய்யோ ளாடிய பாவையின்
விரைமல ரைங்கணை மீன விலோதனத்
துருவி லாளனொ டுருவம் பெயர்ப்ப,
ஓவிய னுள்ளத் துள்ளியது வியப்போன்,
காவியங் கண்ணி யாகுத றெளிந்து
தாழொளி மண்டபந் தன்கையிற் றடைஇச்
சூழ்வோன் சுதமதி தன்முக நோக்கி,
சித்திரக் கைவினை திசைதொறுஞ் செறிந்தன;
எத்திறத் தாளின் னிளங்கொடி யுரையென,
குருகுபெயர்க் குன்றங் கொன்றோ னன்னநின்
முருகச் செவ்வி முகந்துதன் கண்ணாற்

---

1. இளங்கோன்—உதயகுமரன். இளம்பொற் பூங்கொடி—மணிமேகலை.

3. பொருமுகம்—செருகின்றமுகம். எழினி—திரைச்சீலை.

4. பாவை—திருமகளாடிய கூத்து.

1–6. பூங்கொடி உருவம் பெயர்ப்ப.

7. ஓவியன்—சித்திரம் போன்றவனாகி. அது உள்ளத்து உள்ளி—அவ்வுருவத்தை மனத்தில் நினைந்து.

9. தடைஇ—தடவிப்பார்த்து.

12. என—என்று உதயகுமரன் கேட்ப.

13. குருகுபெயர்க்குன்றம் — கிரவுஞ்சகிரி. அதனைக்கொன்றோன்—முருகக் கடவுள்.

14. முருகச் செவ்வி—இளமையழகு.

பருகா ளாயிற் பைந்தொடி நங்கை,
ஊழ்தரு தவத்தள், சாப சரத்தி,
காமற் கடந்த வாய்மைய ளென்றே
தூமலர்க் கூந்தற் சுதமதி யுரைப்ப,
சிறையு முண்டோ செழும்புனன் மிக்குழீஇ
நிறையு முண்டோ காமங் காழ்கொளின்
செவ்விய ளாயினென் செவ்விய ளாகென
அவ்விய நெஞ்சமோ டகல்வோ னாயிடை,
அஞ்செஞ் சாய லராந்தா ணத்துளோர்
விஞ்சைய னிட்ட விளங்கிழை யென்றே
கல்லென் பேரூர்ப் பல்லோ ருரையினை;
ஆங்கவ ருறைவிட நீங்கி ஆயிழை,
ஈங்கிவ டன்னோ டெய்திய துரையென,
வார்கழல் வேந்தே, வாழ்கநின் கண்ணி;
தீநெறிப் படரா நெஞ்சினை யாகுமதி;
ஈங்கிவ டன்னோ டெய்திய காரணம்
வீங்குநீர் ஞால மாள்வோய் கேட்டருள்;
யாப்புடை யுள்ளத் தம்மனை யிழந்தோன்
பார்ப்பன முதுமகன் படிம வுண்டியன்
மழைவளந் தரூஉ மழலோம் பாளன்
பழவினைப் பயத்தாற் பிழைமண மெய்திய
எற்கெடுத் திரங்கித் தற்றக வுடைமையிற்

---

15. ஆயின்—ஆராயுமிடத்து.
16. ஊழ்—முறை. சாபசரத்தி—சபித்தலாகிய அம்பை யுடையவள்.
19. சிறை—அணை.
20. நிறை—மனத்தை நிறுத்தும் தன்மை. காழ்கொளின்—முதிர்ந்தால்.
23. சாயல், விளி.
24. விஞ்சையன்—வித்தியாதரன்.
25. பல்லோர் உரையினை—பலராற்கூறப்படும் சொல்லையுடையாய்.
27. என—என்று உதயகுமரன் கேட்ப.
29. படரா—செல்லாத.
32. யாப்பு—உறுதி. அம்மனை—தாய்.
33. படிமவுண்டி—நோற்றுப் பட்டினியிருந்து உண்ணும் உணவு.
35. வினைப்பயத்தால்—தீவினையின் பயனால். மாருதவேகனுக்குச் சிலநாள் தான் உரியளானதுபற்றி, 'பிழைமணமெய்திய' என்றாள்.

குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறைப்
பரந்துசென் மாக்களொடு தேடினன் பெயர்வோன்,
கடன்மண்டு பெருந்துறைக் காவிரி யாடிய
வடமொழி யாளரொடு வருவோன் கண்டீங்கு
யாங்கனம் வந்தனை யென்மக ளென்றே
தாங்காக் கண்ணீ ரென்றலை யுதிர்த்தாங்கு
ஓத லந்தணர்க் கொவ்வே னாயினும்
காதல னாதலிற் கைவிட லீயான்
இரந்தூண் டலைக்கொண் டிந்நகர் மருங்கிற்
பரந்துபடு மனைதொறுந் திரிவோ னொருநாட்
புனிற்றாப் பாய்ந்த வயிற்றுப் புண்ணினன்
கணவிரி மாலை கைக்கொண் டென்ன
நிணநீடு பெருங்குடர் கையகத் தேந்தி
என்மக ளிருந்த விடமென் றெண்ணித்
தன்னுறு துன்பந் தாங்காது புகுந்து,
சமணீர் காணுஞ் சரணென் றோனை
இவணீ ரல்லவென் றென்னோடும் வெகுண்டு
மையறு படிவத்து மாதவர் புறத்தெனைக்
கையுதிர்க் கோடலிற் கண்ணிறை நீரேம்,
அறவோ ருளீரோ? ஆருமி லோமெனப்
புறவோர் வீதியிற் புலம்பொடு சாற்ற,
மங்குறோய் மாட மனைதொறும் புகூஉம்
அங்கையிற் கொண்ட பாத்திர முடையோன்

---

37. குரங்கு—இலங்கை செல்லுதற்குக் கடலில் அணைகட்டிய வானரங்கள். குமரி—கன்னியாகுமரி நதி.

40. வடமொழியாளர்—பார்ப்பார்.

44. காதலன்—அன்புடையவன். கைவிடலீயான்—கைவிடான்.

45. இரந்து ஊண்—யாசித்துண்ணுதல்.

47. புனிறு ஆ—சமீபகாலத்திற் கன்றை யீன்றபசு.

52. சமணீர்காள்—சமணர்களே. சரண்—அடைக்கலம்.

54. படிவம்—தவவேடம்.

55. கை உதிர்க்கோடலின்—கையையசைத்துப் போய்விடுகவென்று குறிப்பித்தலினால்.

கதிர்சுடு மமயத்துப் பனிமதி முகத்தோன்
பொன்னிற் றிகழும் பொலம்பூ வாடையன்
என்னுற் றனிரோ வென்றெனை நோக்கி
அன்புட னளைஇய அருண்மொழி யதனல்
அஞ்செவி நிறைத்து நெஞ்சகங் குளிர்ப்பித்துத்
தன்கைப் பாத்திர மென்கைத் தந்தாங்கு
எந்தைக் குற்ற விடும்பை நீங்க
எடுத்தனன் றழீஇக் கடுப்பத் தலையேற்றி
மாதவ ருறைவிடங் காட்டிய மறையோன்
சாதுயர் நீக்கிய தலைவன் தவமுனி
சங்க தருமன் றனெமக் கருளிய,
எங்கோன் இயல்குணன் ஏதமில் குணப்பொருள்
உலக நோன்பிற் பலகதி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
இன்பச் செவ்வி மன்பதை யெய்த
அருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையின்
அறக்கதி ராழி திறப்பட வுருட்டிக்
காமற் கடந்த வாமன் பாதம்
தகைபா ராட்டுத லல்ல தியாவதும்
மிகைநா வில்லேன் வேந்தே வாழ்கென,
அஞ்சொ லாயிழை நின்றிற மறிந்தேன்;
வஞ்சி நுண்ணிடை மணிமே கலைதனைச்
சித்திரா பதியாற் சேர்தலு முண்டென்று
அப்பொழி லாங்கவ னயர்ந்து போயபின்,
பளிக்கறை திறந்து பனிமதி முகத்துக்

---

60. பகற்காலத்தில் உச்சிப்பொழுதிற் பிச்சைக்குச் செல்லுதல் பௌத்தசந்நியாசிகளின் இயல்பு.

74. மன்பதை—உயிர்கள்.

75. அருளறம்—தயாதர்மம்.

76. அறக்கதிராழி—தர்மசக்கரம்.

77. வாமன்—புத்தன்.

70—77. அருளிய வாமன் பாதம்.

78. தகை பாராட்டுதல்—துதித்தல். யாவதும்—சிறிதும்.

79. என—என்று சுதமதிசொல்ல.

80. திறம்—வரலாறு.

களிக்கயல் பிறழாக் காட்சிய ளாகி,
கற்புத் தானிலள், நற்றவ வுணர்விலள்,
வருணக் காப்பிலள், பொருள்விலை யாட்டியென்று
இகழ்ந்தன னாகி நயந்தோ னென்னாது
புதுவோன் பின்றைப் போனதென் னெஞ்சம்,
இதுவோ வன்னாய் காமத் தியற்கை;
இதுவே யாயிற் கெடுகதன் றிறமென
மதுமலர்க் குழலாண் மணிமே கலைதான்
சுதமதி தன்னொடு நின்ற வெல்லையுள்,
இந்திர கோடணை விழாவணி விரும்பி
வந்து காண்குறூஉ மணிமேக லாதெய்வம்,
பதியகத் துறையுமோர் பைந்தொடி யாகி
மணியறைப் பீடிகை வலங்கொண் டோங்கி,
புலவன், தீர்த்தன், புண்ணியன், புராணன்,
உலக நோன்பி னுயர்ந்தோ யென்கோ?
குற்றங் கெடுத்தோய்! செற்றஞ் செறுத்தோய்!
முற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ?
காமற் கடந்தோய்! ஏம மாயோய்!
தீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ?
ஆயிர வாரத் தாழியன் திருந்தடி
நாவா யிரமிலே னேத்துவ தெவனென்று
எரிமணிப் பூங்கொடி யிருநில மருங்குவந்து
ஒருதனி திரிவதொத் தோதியி னொதுங்கி,
நிலவரை யிறந்தோர் முடங்குநா நீட்டும்

---

85. களிக்கயல்—கண்கள்.

89. புதுவோனென்றது உதய குமரனை.

94. இந்திரகோடணை விழா—இந்திர விழா.

96. காவிரிப்பூம்பட்டினத்துள்ளாளாகிய ஒரு பெண்வடிவு கொண்டுவந்து.

97. மணி அறை பீடிகை—பளிங்கறையிலுள்ள புத்தபாதபீடம்.

104. புத்தனுடைய பாதத்தில் ஆயிர ஆரத்தினையுடைய சக்கரரேகையுள்ளதென்பர்.

107. ஓதி—ஞானம். ஒதுங்கி—ஒதுங்க.

108. நிலவரை இறந்தோர்—தேவர்.

புலவரை யிறந்த புகாரெனும் பூங்கொடி,
பன்மலர் சிறந்த நன்னீ ரகழிப்
புள்ளொலி சிறந்த தெள்ளரிச் சிலம்படி
ஞாயி லிஞ்சி நகைமணி மேகலை
வாயின்மருங் கியன்ற வான்பணைத் தோளி,
* * * * * *
* * * * * *
ஆர்புனை வேந்தற்குப் பேரள வியற்றி
ஊழி யெண்ணி நீடுநின் றோங்கிய
ஒருபெருங் கோயிற் றிருமுக வாட்டி
குணதிசை மருங்கி னாண்முதிர் மதியமும்
குடதிசை மருங்கிற் சென்றுவீழ் கதிரும்
வெள்ளிவெண் டோட்டொடு பொற்றோ டாக
எள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலும்
அன்னச் சேவ லயர்ந்துவிளை யாடிய
தன்னுறு பெடையைத் தாமரை யடக்கப்
பூம்பொதி சிதையைக் கிழித்துப் பெடைகொண்
டோங்கிருந் தெங்கி னுயர்மட லேற,
அன்றிற் பேடை யரிக்குர லழைஇச்
சென்றுவீழ் பொழுது சேவற் கிசைப்ப,
பவளச் செங்காற் பறவைக் கானத்துக்
குவளை மேய்ந்த குடக்கட் சேதா

---

109. புலவரை—அறிவின் எல்லை. இது முதல், காவிரிப்பூம்பட்டினத்தை ஒரு மங்கையாக வருணித்து அந்திக்காலம் வருதலைக் கூறுவர்.

110–11. அகழி, சிலம்பையுடைய அடி.

112. மதிலாகிய மேகலை.

113. வாயிலின் இருபுறத்தும் நாட்டப்பட்ட மூங்கில்களாகிய தோள்களை யுடையவள்.

116. ஆர்புனை வேந்தன்—சோழன்.

117. ஊழி—யுகம்.

118. அரண்மனையாகிய முகத்தையுடையவள்.

119-22. சந்திரன் வெண்டோடும் சூரியன் பொற்றோடுமாகக் கொண்டவுடன்; சூரியன் அத்தமித்தவுடனென்றபடி.

123–6. சேவல் ஏற.

127. அழைஇ—அழைத்து.

129. அன்னப்பறவைக் கூட்டம்.

முலைபொழி தீம்பா லெழுதுக ளவிப்பக்
கன்றுநினை குரல மன்றுவழிப் படர,
அந்தி யந்தணர் செந்தீப் பேண,
பைந்தொடி மகளிர் பலர்விளக் கெடுப்ப,
யாழோர் மருதத் தின்னரம் புளர,
கோவலர் முல்லைக் குழன்மேற் கொள்ள,
அமரக மருங்கிற் கணவனை யிழந்து
தமரகம் புகூஉ மொருமகள் போலக்
கதிராற்றுப் படுத்த முதிராத் துன்பமோடு
அந்தி யென்னும் பசலைமெய் யாட்டி
வந்திறுத் தனளான் மாநகர் மருங்கென.

மணிமேகலாதெய்வம் வந்து தோன்றியகாதை முற்றிற்று.

---

136. முல்லைக்குழல்—முல்லைப்பண்ணையுடைய வேய்ங்குழல்.

139. கதிர் ஆற்றுப்படுத்த—சூரியனைப்போக்கிய.

141. இறுத்தனள்—தங்கினள்.

140–41. மாலைக்காலம் வந்தது.

ஆறாவது

சக்கரவாளக்கோட்ட முரைத்தகாதை.

[மணிமேகலைக்கு மணிமேகலாதெய்வம் சக்கரவாளக்கோட்டமுரைத்து அவளை மணிபல்லவத்துக்குக் கொண்டுபோன செய்தி இதனால் அறியலாகும்.]

அந்தி மாலை நீங்கிய பின்னர்,
வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம்,
சான்றோர் தங்க ணெய்திய குற்றம்
தோன்றுவழி விளங்குந் தோற்றம் போல
மாசறு விசும்பின் மறுநிறங் கிளர
ஆசற விளங்கிய வந்தீந் தண்கதிர்
வெள்ளிவெண் குடத்துப் பால்சொரி வதுபோற்
கள்ளவிழ் பூம்பொழி லிடையிடைச் சொரிய
உருவு கொண்ட மின்னே போலத்
திருவி லிட்டுத் திகழ்தரு மேனியள்
ஆதிமுதல்வ னறவாழி யாள்வோன்
பாத பீடிகை பணிந்தன ளேத்திப்
பதியகத் துறையுமோர் பைந்தொடி யாகிச்
சுதமதி நல்லா டன்முக நோக்கி
ஈங்கு நின்றீ ரென்னுற் றீரென,
ஆங்கவ ளாங்கவன் கூறிய துரைத்தலும்,
அரசிளங் குமரன் ஆயிழை தன்மேல்

2. மண்டிலம்—சந்திரமண்டிலம்.
2–5. மண்டிலம் கிளரவென்க.
6. தண்கதிர்—நிலா.
10. திருவில்—இந்திரவில். 'மேனியள்' என்றது மணிமேகலா தெய்வத்தை.
17. இதுமுதல் மணிமேகலா தெய்வத்தின் கூற்று.

தணியா நோக்கந் தவிர்ந்தில னாகி
அறத்தோர் வனமென் றகன்றன னாயினும்
புறத்தோர் வீதியிற் பொருந்துத லொழியான்;
பெருந்தெரு வொழித்துப் பெருவனஞ் சூழ்ந்த
திருந்தெயிற் குடபாற் சிறுபுழை போகி
மிக்க மாதவர் விரும்பின ருறையும்
சக்கர வாளக் கோட்டம் புக்காற்
கங்குல் கழியினுங் கடுநவை யெய்தாது
அங்குநீர் போமென் றருந்தெய்வ முரைப்ப,
வஞ்ச விஞ்சையன் மாருத வேகனும்
அஞ்செஞ் சாயல் நீயு மல்லது
நெடுநகர் மருங்கி னுள்ளோ ரெல்லாம்
சுடுகாட்டுக் கோட்ட மென்றல துரையார்;
சக்கர வாளக் கோட்ட மஃதென
மிக்கோய் கூறிய உரைப்பொரு ளறியேன்
ஈங்கிதன் காரண மென்னை யோவென,
ஆங்கதன் காரண மறியக் கூறுவன்
மாதவி மகளொடு வல்லிருள் வரினும்
நீகே ளென்றே நேரிழை கூறுமிந்
நாமப் பேரூர் தன்னொடு தோன்றிய
ஈமப் புறங்கா டங்கித னயலது,
ஊரா நற்றே ரோவியப் படுத்துத்
தேவர் புகுதருஉஞ் செழுங்கொடி வாயிலும்
நெல்லுங் கரும்பு நீருஞ் சோலையும்
நல்லவழி யெழுதிய நலங்கிளர் வாயிலும்
வெள்ளி வெண்சுதை இழுகிய மாடத்து

---

22. எயில் குடபால்—மதிலின் மேற்றிசை. சிறுபுழை—சிறியவாயில்.
27. இதுமுதலுள்ளன சுதமதி கூற்று.
33. என—என்று சுதமதி கேட்க.
35—6. மாதவிமகளொடு நீ கேள்.
36. கூறும்—சொல்லுவாள்.
37. நாமம்—புகழ்.
39. ஊராத்தேர்—விமானம்.
43. இழுகிய—பூசிய.

உள்ளுரு வெழுதா வெள்ளிடை வாயிலும்
மடித்த செவ்வாய்க் கடுத்த நோக்கிற்
றொடுத்த பாசத்துப் பிடித்த சூலத்து
நெடுநிலை மண்ணீடு நின்ற வாயிலும்
நாற்பெரு வாயிலும் பாற்பட் டோங்கிய
காப்புடை யிஞ்சிக் கடிவழங் காரிடை
உலையா வுள்ளமோ டுயிர்க்கட னிறுத்தோர்
தலைதூங்கு நெடுமரந் தாழ்ந்துபுறஞ் சுற்றிப்
பீடிகை யோங்கிய பெரும்பலி முன்றிற்
காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்
அருந்தவர்க் காயினு மரசர்க் காயினும்
ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்
நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன
சுடும ணோங்கிய நெடுநிலைக் கோட்டமும்
அருந்திறற் கடவுட் டிருந்துபலிக் கந்தமும்
நிறைக்கற் றெற்றியு மிறைக்களச் சந்தியும்
தண்டு மண்டையும் பிடித்துக் காவலர்
உண்டுகண் படுக்கு முறையுட் குடிகையும்
தூமக் கொடியும் சுடர்த்தோ ரணங்களும்
ஈமப் பந்தரு மியாங்கணும் பரந்து,
சுடுவோ ரிடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போர்

---

47. மண்ணீடு—சுண்ணும்பாற் செய்யப்பட்ட பூதவடிவம்; ஆகுபெயர்.
49. கடி—பேய். ஆரிடை—அரிய இடம்.
50. உயிர்க்கடன் இறுத்தோர்—தம்மையே பலிகொடுத்தோர்.
51. தூங்கு—தொங்குகின்ற.
53. காடமர் செல்வி—துர்க்காதேவி. கோட்டம்—கோயில்.
54—5. ஆயினுமென்பது எண்ணிடைச்சொல்.
59. சுடுமண்—செங்கல்.
60. கந்தம்—தூண்.
61. கல் தெற்றி—கல்லாலாகிய திண்ணை. மிறைக்களம்—வளைந்த இடம்.
63. குடிகை—குடிசை.
37. தாழ் வயின்—பள்ளமான இடங்களில்,

இரவும் பகலும் மிளிவுடன் றரியாது
வருவோர் பெயர்வோர் மாறாச் சும்மையும்
எஞ்சியோர் மருங்கி னீமஞ் சாற்றி
நெஞ்சு நடுக்குறூஉ நெய்த லோசையும்
துறவோ ரிறந்த தொழுவிளிப் பூசலும்
பிறவோ ரிறந்த அழுவிளிப் பூசலும்
நீண்முக நரியின் தீவிளிக் கூஉம்
சாவோர்ப் பயிரும் கூகையின் குரலும்
புலவூண் பொருந்திய குராலின் குரலும்
ஊண்டலை துற்றிய ஆண்டலைக் குரலும்
நன்னீர்ப் புணரி நளிகட லோதையின்
இன்னா விசையொலி என்றுநின் றறாது,
தான்றியு மொடுவையு முழிஞ்சிலு மோங்கிக்
கான்றையுஞ் சூரையுங் கள்ளியு மடர்ந்து,
காய்பசிக் கடும்பேய் கணங்கொண் டீண்டும்
மாமலர்ப் பெருஞ்சினை வாகை மன்றமும்
வெண்ணிணந் தடியொடு மாந்தி மகிழ்சிறந்து
புள்ளிறை கூரும் வெள்ளின் மன்றமும்
சுடலை நோன்பிக ளொடியா வுள்ளமொடு
மடைதீ யுறுக்கும் வன்னி மன்றமும்
விரத யாக்கைய ருடைதலை தொகுத்தாங்கு
இருந்தொடர்ப் படுக்கு மிரத்தி மன்றமும்

---

68. இளிவு—அருவருப்பு.
71. நெய்தலோசை—சாப்பறையின் ஒலி.
73. பிறவோர்—மற்றையோர்.
75. பயிரும்—அழைக்கும். கூகை—பேராந்தைப் பறவை.
76. குரால்—கோட்டான்.
77. தலை ஊண் துற்றிய—தலைமூளையை உணவாக உண்ட. ஆண்டலை—ஒருவகைப் பறவை.
78. ஓதையின்—ஓசைபோல.
79. இன்னா—துன்பம்.
83. மன்றம்—பலரிருக்கும் மரத்தின் அடி.
85. இறைகூரும்—தங்கும்.
86. சுடலை நோன்பிகள்—காபாலிகமதத்தினர்.
87. மடை—சோறு. வன்னி—ஒருவகை மரம்.
89. இரத்தி—இலந்தை மரம்.

பிணந்தின் மாக்கள் நிணம்படு குழிசியில்
விருந்தாட் டயரும் வெள்ளிடை மன்றமும்
அழற்பெய் குழிசியும் பிழற்பெய் மண்டையும்
வெள்ளிற் பாடையு முள்ளீட் டறுவையும்
பரிந்த மாலையு முடைந்த கும்பமும்
நெல்லும் பொரியுஞ் சில்பலி யரிசியும்
யாங்கணும் பரந்த ஓங்கிரும் பறந்தலை,
தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டி ராற்றாப் பாலகர்
முதியோ ரென்னா னிளையோ ரென்னான்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ?
ஆங்கது தன்னையோ ரருங்கடி நகரெனச்
சார்ங்கல னென்போன் றனிவழிச் சென்றோன்
என்புந் தடியு முதிரமு மியாக்கையென்று
அன்புறு மாக்கட் கறியச் சாற்றி
வழுவொடு கிடந்த புழுவூன் பிண்டத்து
அலத்தக மூட்டிய அடிநரி வாய்க்கொண்
டுலப்பி லின்பமோ டுளைக்கு மோதையும்

*   *   *   *

*   *   *   *

கடகஞ் செறித்த கையைத் தீநாய்
உடையக் கவ்வி யொடுங்கா வோதையும்

*   *   *   *

---

90. குழிசி—பானை.
91. வெள்ளிடை—வெளியான இடம்.
92. மண்டை—வாணாய்.
93. வெள்ளிற்பாடை— இருபெயரொட்டு. அறுவை—உறி.
94. பரிந்த—அறுத்தெறிந்த.
96. பறந்தலை—பாழிடம்.
100. கொடுந்தொழிலாளன்—காலன்.
109. ஊன் பிண்டம்—உடம்பு.

காய்ந்தபசி யெருவை கவர்ந்தூ ணோதையும்
பண்புகொள் யாக்கையின் வெண்பலி யரங்கத்து
மண்கனை முழவ மாக வாங்கோர்
கருந்தலை வாங்கிக் கையகத் தேந்தி
இரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள்
புயலோ குழலோ, கயலோ கண்ணோ,
குமிழோ மூக்கோ, இதழோ கவிரோ,
பல்லோ முத்தோ வென்னா திரங்காது
கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத்
தண்டாக் களிப்பி னாடுங் கூத்துக்
கண்டனன் வெரீஇக் கடுநவை யெய்தி
விண்டோர் திசையின் விளித்தனன் பெயர்ந்தீங்கு
எம்மனை காணா யீமச் சுடலையில்
வெம்முது பேய்க்கென் னுயிர்கொடுத் தேனெனத்
தம்மனை தன்முன் வீழ்ந்துமெய் வைத்தலும்
பார்ப்பான் றன்னொடு கண்ணிழந் திருந்தவித்
தீத்தொழி லாட்டியென் சிறுவன் றன்னை
யாருமி றமியே னென்பது நோக்காது
ஆருயி ருண்ட தணங்கோ? பேயோ?
துறையு மன்றமுந் தொல்வலி மரனும்
உறையுளுங் கோட்டமுங் காப்பாய் காவாய்,
தகவிலை கொல்லோ? சம்பா பதியென
மகன்மெய் யாக்கையை மார்புறத் தழீஇ
ஈமப் புறங்காட் டெயிற்புற வாயிலிற்

---

118. பலி—சாம்பல்.
111–19. உளைக்கு மோதை முதலியவை முழவமாக.
125. பேய்க்குக் கவையடி உண்டென்பர்.
126 தண்டா—தணியாத.
127. வெரீஇ—அஞ்சி. கடு நவை எய்தி.—பிடிக்கப்பட்டு.
128. விண்டு—நீங்கி.
129. எம்மனை—தாயே.
131. தம்மனை—தாய்.
134, தமியேன்—தனியேன்.
137. காவாய்—என் மகனைக் காவாமலிருந்தனை.
138. சம்பாபதி, விளி.

கோதமை யென்பாள் கொடுந்துயர் சாற்ற,
கடிவழங்கு வாயிலிற் கடுந்துய ரெய்தி
இடையிருள் யாமத் தென்னையீங் கழைத்தனை;
என்னுற் றனையோ? எனக்குரை யென்றே
பொன்னிற் பொலிந்த நிறத்தா டோன்ற,
ஆருமி லாட்டியென் னறியாப் பாலகன்
ஈமப் புறங்காட் டெய்தினேன் றன்னை
அணங்கோ பேயோ ஆருயி ருண்டது
உறங்குவான் போலக் கிடந்தனன் காணென,
அணங்கும் பேயு மாருயி ருண்ணா;
பிணங்குநூன் மார்பன் பேதுகந் தாக
ஊழ்வினை வந்திவ னுயிருண்டு கழிந்தது;
மாபெருந் துன்பநீ யொழிவா யென்றலும்,
என்னுயிர் கொண்டிவ னுயிர்தந் தருளிலென்
கண்ணில் கணவனை யிவன்காத் தோம்பிடும்;
இவனுயிர் தந்தென் னுயிர்வாங் கென்றலும்,
முதுமூ தாட்டி யிரங்கினண் மொழிவோள்:
ஐய முண்டோ? ஆருயிர் போனாற்
செய்வினை மருங்கிற் சென்றுபிறப் பெய்துதல்;
ஆங்கது கொணர்ந்துநின் னாரிடர் நீக்குதல்
ஈங்கெனக் காவதொன் றன்றுநீ யிரங்கல்;
கொலையற மாமெனுங் கொடுந்தொழின் மாக்கள்
அவலப் படிற்றுரை ஆங்கது மடவாய்,
உலக மன்னவர்க் குயிர்க்குயி ரீவோர்
இலரோ? இந்த வீமப் புறங்காட்டு
அரசர்க் கமைந்தன வாயிரங் கோட்டம்
நிரயக் கொடுமொழி நீயொழி யென்றலும்,
தேவர் தருவர் வரமென் றொருமுறை

---

141. கோதமை—இறந்தவனுடைய தாய்.

143. இடையாமம்—நடுயாமம்.

149. என—என்று கோதமை சொல்ல.

151. பேதுகந்தாக—அறியாமையே பற்றுக் கோடாக.

158—9. எய்துதலில் ஐயமுண்டோ.

163. படிற்றுரை—பொய்வார்த்தை.

நான்மறை யந்தணர் நன்னூ லுரைக்கும்;
மாபெருந் தெய்வ நீயரு ளாவிடின்
யானோ காவே னென்னுயி ரீங்கென,
ஊழி முதல்வ னுயிர்தரி னல்லது
ஆழித் தாழி யகவரைத் திரிவோர்
தாந்தரின் யானுந் தருகுவன் மடவாய்,
ஈங்கெ னாற்றலுங் காண்பா யென்றே
நால்வகை மரபி னரூபப் பிரமரும்
நானால் வகையி னுரூபப் பிரமரும்
இருவகைச் சுடரு மிருமூ வகையிற்
பெருவனப் பெய்திய தெய்வத கணங்களும்
பல்வகை யசுரரும் படுதுய ருறூஉம்
எண்வகை நரகரு மிருவிசும் பியங்கும்
பன்மீ னீட்டமு நாளுங் கோளும்
தன்னகத் தடக்கிய சக்கர வாளத்து
வரந்தாற் குரியோர் தமைமுன் னிறுத்தி,
அரந்தை கெடுமிவ ளருந்துய ரிதுவென,
சம்பா பதிதா னுரைத்தவம் முறையே
எங்குவாழ் தேவரு முரைப்பக் கேட்டே
கோதமை யுற்ற கொடுந்துயர் நீங்கி
ஈமச் சுடலையின் மகனையிட் டிறந்தபின்,
சம்பா பதிதன் ஆற்ற றோன்ற
எங்குவாழ் தேவருங் கூடிய விடந்தனிற்
சூழ்கடல் வளைஇய ஆழியங் குன்றத்து
நடுவு நின்ற மேருக் குன்றமும்
புடையி னின்ற எழுவகைக் குன்றமும்
நால்வகை மரபின் மாபெருந் தீவும்

---

172. ஊழி முதல்வன்—மஹாப்பிரமன். இது முதலியவை பௌத்தமத நூற் கொள்கைகள்.

173. சக்கரவாளமாகிய தாழியின் உள்ளிடத்தே சஞ்சரிப்பவர்கள்.

183. பிரமலோக முதலியவற்றைத் தன்னுள் அடக்கிய கோளத்தைச் சக்கர வாள மென்பர்.

185. கெடும்—கெடுங்கள்.

192. ஆழியங்குன்றம்—சக்கரவாளகிரி.

ஓரீ ராயிரஞ் சிற்றிடைத் தீவும்
பிறவு மாங்கத னிடவகை யுரியன
பெறுமுறை மரபி னறிவுவரக் காட்டி,
ஆங்குவா ழுயிர்களு மவ்வுயி ரிடங்களும்
பாங்குற மண்ணீட்டிற் பண்புற வகுத்து
மிக்க மயனா லிழைக்கப் பட்ட
சக்கர வாளக் கோட்டமீங் கிதுகாண்;
இடுபிணக் கோட்டத் தெயிற்புற மாதலிற்
சுடுகாட்டுக் கோட்ட மென்றல துரையார்;
இதன்வர விதுவென் றிருந்தெய்வ முரைக்க,
மதனி னெஞ்சமொடு வான்றுய ரெய்திப்
பிறந்தோர் வாழ்க்கை சிறந்தோ ளுரைப்ப
இறந்திருள் கூர்ந்த விடையிருள் யாமத்துத்
தூங்குதுயி லெய்திய சுதமதி யொழியப்
பூங்கொடி தன்னைப் பொருந்தித் தழீஇ
அந்தர மாறா ஆறைந் தியோசனைத்
தென்றிசை மருங்கிற் சென்றுதிரை யுடுத்த
மணிபல் லவத்திடை மணிமே கலாதெய்வம்
அணியிழை தன்னைவைத் தகன்றது தானென.

சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை முற்றிற்று.

---

200. மண்ணீட்டின்—சுண்ணம்பினால்.
210. பூங்கொடி தன்னை—மணிமேகலையை.
213. மணிபல்லவம்—ஒரு சிறுதீவு.

ஏழாவது

துயிலெழுப்பியகாதை.

[மணிமேகலாதெய்வம் உவவனம்புகுந்து சுதமதியைத் துயிலெழுப்பிய செய்தி இதனுல் அறியலாகும்.]

மணிமே கலைதனை மணிபல் லவத்திடை
மணிமே கலாதெய்வம் வைத்து நீங்கி,
மணிமே கலைதனை மலர்ப்பொழிற் கண்ட
உதய குமா னுறுதுய ரெய்திக்
கங்குல் கழியிலென் கையகத் தாளெனப்
பொங்குமெல் லமளியிற் பொருந்தா திருந்தோன்
முன்னர்த் தோன்றி, மன்னவன் மகனே!
கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்;
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்;
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை;
மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்;
தவத்திறம் பூண்டோ டன்மேல் வைத்த
அவத்திற மொழிகென் றவன்வயி னுரைத்தபின்,
உவவனம் புகுந்தாங் குறுதுயில் கொள்ளும்
சுதமதி தன்னைத் துயிலிடை நீக்கி,
இந்திர கோடணை யிந்நகர்க் காண
வந்தேன் அஞ்சல் மணிமே கலையான்;
ஆதிசான் முனிவ னறவழிப் படூஉம்

1—2. மணிபல்லவத்திடை வைத்து.
2—7. தெய்வம் தோன்றி.
8. கோல்—செங்கோல். கோள்—நவக்கிரகங்கள்.
9. வறம் கூரும்—இல்லையாகும்.
14. ஒழிக என்று.
18. அஞ்சல்—அஞ்சாதொழிக. யான் மணிமேகலா தெய்வமென்க.
19. முனிவன்—புத்தன்.

ஏது முதிர்ந்த திளங்கொடிக் காதலின்,
விஞ்சையிற் பெயர்த்துநின் விளங்கிழை தன்னையோர்
வஞ்சமின் மணிபல் லவத்திடை வைத்தேன்;
பண்டைப் பிறப்பும் பண்புற வுணர்ந்தீங்கு
இன்றேழ் நாளி லிந்நகர் மருங்கே
வந்து தோன்றும், மடக்கொடி நல்லாள்;
களிப்புமாண் செல்வக் காவற் பேரூர்
ஒளித்துரு வெய்தினு முன்றிற மொளியாள்;
ஆங்கவ ளிந்நகர் புகுந்த வந்நாள்
ஈங்கு நிகழ்வன ஏதுப் பலவுள,
மாதவி தனக்கியான் வந்த வண்ணமும்
ஏதமி னெறிமக ளெய்திய வண்ணமும்
உரையாய் நீயவ ளென்றிற முணரும்;
திரையிரும் பௌவத்துத் தெய்வமொன் றுண்டெனக்
கோவலன் கூறியிக் கொடியிடை தன்னையென்
நாமஞ் செய்த நன்னா ளள்ளிருட்
காமன் கையறக் கடுநவை யறுக்கு
மாபெருந் தவக்கொடி யீன்றனை யென்றே
நனவே போலக் கனவகத் துரைத்தேன்;
ஈங்கிவ் வண்ண மாங்கவட் குரையென்று
அந்தரத் தெழுந்தாங் கருந்தெய்வம் போயபின்,
வெந்துய ரெய்திச் சுதமதி யெழுந்தாங்கு
அகன்மனை யரங்கத் தாசிரியர் தம்மொடு
வகைதெரி மாக்கட்கு வட்டணை காட்டி,
ஆடல் புணர்க்கு மரங்கியன் மகளிரிற்
கூடிய குயிலுவக் கருவிகண் டுயின்று,

---

20. இளங்கொடிக்கு—மணிமேகலைக்கு.
25. தோன்றும்—தோன்றுவாள்.
27. உருவொளித்தென்க.
31. ஏதம்—குற்றம்.
32. உரையாய்—சொல்.
36. கை அற—செயலற.
42. மனை அரங்கத்து—வீடாகிய நடன சாலையில்.
43. வட்டணை—அபிநய விசேடம்.
45. குயிலுவக்கருவி—வேய்ங்குழல் முதலியவை. கண்துயின்று—அடங்கி.

பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ்த் தீந்தொடை
கொளைவல் லாயமோ டிசைகூட் டுண்டு
வளைசேர் செங்கை மெல்விர லுகைத்த
வெம்மைவெய் துறுது தன்மையிற் றிரியவும்,

* * * * *
* * * * *
* * * * *
* * * * *

தளர்நடை யாயமொடு தங்கா தோடி
விளையாடு சிறுதே ரீர்த்துமெய் வருந்தி
அமளித் துஞ்சும் ஐம்படைத் தாலிக்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக்
காவற் பெண்டிர் கடிப்பகை யெறிந்து
தூபங் காட்டித் தூங்குதுயில் வதியவும்,
இறையுறை புறவு நிறைநீர்ப் புள்ளும்
காவுறை பறவையு நாவு ளழுந்தி
விழவுக்களி யடங்கி முழவுக்கண் டுயின்று
பழவிறன் மூதூர் பாயல்கொ ளடுநாட்
கோமகன் கோயிற் குறுநீர்க் கன்னலின்
யாமங் கொள்பவ ரேத்தொலி யரவமும்
உறையுணின் றொடுங்கிய வுண்ணா வுயக்கத்து
நிறையழி யானை நெடுங்கூ விளியும்
தேர்வழங்கு தெருவுஞ் சிற்றிடை முடுக்கரும்
ஊர்காப் பாள ரெறிதுடி யோதையும்
முழங்குநீர் முன்றுறைக் கலம்புணர் கம்மியர்
துழந்தடு கள்ளின் தொப்பியுண் டயர்ந்து
பழஞ்செருக் குற்ற வனந்தர்ப் பாணியும்

46—9. தொடை திரியவும்.
58. காவற்பெண்டிர்—செவிலித்தாயர்.
60. இறை—வீட்டின் இறப்பு.
64. கன்னல்—நாழிகை வட்டில்.
66. உயக்கம்—வருத்தம்.
70. கலம்—கப்பல். கம்மியர்—தொழில் செய்வோர்.
71. தொப்பி—நெல்லாற் சமைத்த கள்.

அரவாய்க் கடிப்பகை யையவிக் கடிப்பகை
விரவிய மகளி ரேந்திய தூமத்துப்
புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கம்
தீர்வினை மகளிர் குளனா டரவமும்,
வலித்த நெஞ்சி னாடவ ரின்றியும்
புலிக்கணத் தன்னோர் பூத சதுக்கத்துக்
கொடித்தேர் வேந்தன் கொற்றங் கொள்கென
இடிக்குரன் முழக்கத் திடும்பலி யோதையும்
ஈற்றிளம் பெண்டி ராற்றாப் பாலகர்
கடுஞ்சூன் மகளிர் நெடும்பு ணுற்றோர்
தந்துயர் கெடுக்கு மந்திர மாக்கள்
மன்றப் பேய்மகள் வந்துகைக் கொள்கென
நின்றெறி பலியி னெடுங்குர லோதையும்
பல்வே றோதையும் பரந்தொருங் கிசைப்பக்
கேட்டுளங் கலங்கி ஊட்டிரு ளழுவத்து
முருந்தே ரிளநகை நீங்கிப் பூம்பொழில்
திருந்தெயிற் குடபாற் சிறுபுழை போகி
மிக்கமா தெய்வம் வியந்தெடுத் துரைத்த
சக்கர வாளக் கோட்டத் தாங்கண்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
உலக வறவியி னொருபுடை யிருத்தலும்,
கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய
அந்தி லெழுதிய வற்புதப் பாவை,
மைத்தடங் கண்ணாள் மயங்கினள் வெருவத்
திப்பிய முரைக்கும் தெய்வக் கிளவியின்,

73. அரவாய்க் கடிப்பகை—வேப்பிலை.
75. கயக்கம்—கசங்குதல்.
78—80. சதுக்கத்து இடும் பலி ஓதையும்.
87. இருள் அழுவத்து—இருட்பரப்பில்.
88. இளநகை—சுதமதி.
93. உலக அறவி—ஊரம்பலம்.
94. கந்து—தூண். காட்டிய—காட்டுதற்கு.
96. மைத்தடங்கண்ணாள்—சுதமதி.
97. கிளவியின் உரைக்கும்.

இரவி வன்ம னொருபெரு மகளே!
துரகத் தானைத் துச்சயன் றேவி!
தயங்கிணர்க் கோதைத் தாரை சாவுற
மயங்கி யானைமுன் மன்னுயிர் நீத்தோய்!
காராளர் சண்பையிற் கௌசிகன் மகளே!
மாருத வேகனோ டிந்நகர் புகுந்து
தாரை தவ்வை தன்னொடு கூடிய
வீரையாகிய சுதமதி கேளாய்;
இன்றேழ் நாளி லிடையிருள் யாமத்துத்
தன்பிறப் பதனொடு நின்பிறப் புணர்ந்திங்கு
இலக்குமி யாகிய நினக்கிளை யாள்வரும்;
அஞ்சலென் றுரைத்த தவ்வுரை கேட்டு
நெஞ்ச நடுக்குறாஉ நேரிழை நல்லாள்,
காவ லாளர் கண்டுயில் கொள்ளத்
தூமென் சேக்கைத் துயில்கண் விழிப்ப,
வலம்புரிச் சங்கம் வறிதெழுந் தார்ப்பப்
புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க,
புகர்முக வாரணம் நெடுங்கூ விளிப்பப்
பொறிமயிர் வாரணங் குறுங்கூ விளிப்ப,
பணைநிலைப் புரவி பலவெழுந் தாலப்
பணைநிலைப் புள்ளும் பலவெழுந் தால,
பூம்பொழி லார்கைப் புள்ளொலி சிறப்பப்
பூங்கொடி யார்கைப் புள்ளொலி சிறப்ப,
கடவுட் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
கலம்பகர் பீடிகைப் பூப்பலி கடை கொள,

---

98. இதுமுதல் சுதமதியின் பழம் பிறப்புச் செய்தி.
104. தாரை—மாதவியின் பழம் பிறப்புப்பெயர். தவ்வை—தமக்கை.
109. உரைத்தது—சொல்லியது.
110. நல்லாள்—சுதமதி.
114. சங்கம்—புலவர்கூட்டம்.
115–6. வாரணம்—யானை, கோழி.
117–8. பணை—குதிரை கட்டுமிடம், மரக்கிளை.
119–20. புள்—வளை, பறவை.
121–2. பீடிகை—பீடம், கடைத்தெரு.

குயிலுவர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழக்
கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ,
ஊர்துயி லெடுப்ப உரவுநீ ரழுவத்துக்
காரிருள் சீத்துக் கதிரவன் முளைத்தலும்,
ஏவுறு மஞ்ஞையி னினைந்தடி வருந்த
மாநகர் வீதி மருங்கிற் போகிப்
போய கங்குலிற் புகுந்ததை யெல்லாம
மாதவி தனக்கு வழுவின் றுரைத்தலும்,
நன்மணி யிழந்த நாகம் போன்றவள்
தன்மகள் வாராத் தனித்துய ருழப்ப,
இன்னுயி ரிழந்த யாக்கையி னிருந்தனள்;
துன்னிய துரைத்த சுதமதி தானென.

துயிலெழுப்பியகாதை முற்றிற்று.

123–4. பண்ணியம்—செவ்வை செய்யப் பெற்ற வாத்தியம், பலவகைப்பொருள்
125. நீர் அழுவம்—கடற்பரப்பு.
129. போயகங்குலில்—சென்ற இரவில்.

சீவக சிந்தாமணி.

முகவுரை.

இந்நூல், பெருங்காப்பியம் ஐந்தனுள் முதலாவது. திருத்தக்க தேவ ரென்னும் சைன முனிவரால் இயற்றப்பெற்றது; முதலில் கடவுள் வாழ்த்து முதலியனவும், சரித்திரச் சுருக்கமாகிய பதிகமும் முறையே அமையப்பெற்றுப் பின்னர் நாமகளிலம்பகமுதலிய பதின்மூன்று இலம் பக உறுப்புக்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது; சொல்லழகும் பொருளழ கும் நிறைந்தது; சைன மதத்தினனாகிய சீவகனென்னும் அரசனுடைய சரித்திரத்தை விரித்துக் கூறி மேம்பட்டு விளங்குதலின், இஃது இப் பெயர் பெற்றது. இது சிந்தாமணியெனவும் வழங்கும். இதன் செய் யுட்டொகை 3,145; அவற்றுட்பல பழைய உரையாசிரியர்களால் மேற் கோள்களாக எடுத்துக் காட்டப்பெற்றிருக்கின்றன. இதற்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் இயற்றிய சிறந்த உரை ஒன்றுண்டு. அவ்வுரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கும் இந்நூல் முழுப் புத்தகத்தால் இதன் மற்ற வரலாறுகள் விளங்கும்.

* நாமகளிலம்பகச் சரித்திரச் சுருக்கம்.

ஏமாங்கதமென்னும் நாட்டில் இராசமாபுரத்தில் அரசாட்சி செய்து வந்த சச்சந்தனென்பவன், அழகிற் சிறந்த விசயை என்பவளை மணம் புரிந்து தனது அரசாட்சியைக் கட்டியங்காரனென்னும் மந்திரியின்பால் ஒப்பித்துவிட்டு, தான் எப்பொழுதும் அவளுடன் அந்தப்புரத்தே தங்கு வானாயினன். பின்பு, கட்டியங்காரன் அரசனைக் கொன்று தானே அரச னாவதற்கு நினைந்து நால்வகைப் படையுடன் அந்தப்புரத்தை வளைத்துக் கொண்டான். அது தெரிந்த சச்சந்தன், கருப்ப முதிர்ச்சியுற்றிருந்த விசயையை மயிற்பொறி ஒன்றன்மேலே ஏற்றி, ஆகாயவழியே செல்லச் செய்து அப்பால் புறத்தே வந்து போர்செய்து கட்டியங்காரனாற் கொல்லப் பட்டான். அரசாட்சியானது மந்திரி வயத்ததாயிற்று. மயிற்பொறிமீது சென்ற விசயை அந்நகரத்தைச் சார்ந்த மயானத்தில் இறங்கி, அற்றை இரவிலேயே சீவகனைப் பெற்றாள்; பிறகு அவள் தன் தோழிவடிவு கொண்டு வந்த தெய்வத்தின்சொற்படி அவனை ஒரு துகிலிற் கிடத்திவிட்டு மறைந்து நின்றாள். அப்பொழுது, இறந்த தன் குழந்தையைப் புதைத் தற்கு அங்கே வந்த கந்துக்கடனென்னும் வணிகன், சீவகனைக் கண்டு வியந்து எடுத்துக்கொண்டுபோய் அன்போடு வளர்த்து உரிய பருவத்தே அச்சணந்தி என்னும் சைனமுனிவர் ஒருவரிடம் பலவகைக் கலைகளைப் பயிலச் செய்வித்தான். அங்ஙனம் பயின்று முதிர்ந்த சீவகன், அம்முனி வர் ஒரு கதைமுகமாகக் கூறிய தன் வரலாற்றைக் கேட்டுத் துயர முற்றுச் சினந்து கட்டியங்காரனைக் கொல்ல எழுந்தான்; உடனே அவர், 'இது காலமன்று' என்று தடைசெய்ய அடங்கி இருந்தனன். அப்பால் அம்முனிவர் சமயக் கொள்கைகளை அவனுக்கு உபதேசித்துவிட்டுத் தவஞ் செய்தற்கு அயலிடஞ் சென்றனர்.

---

* இவ்விலம்பகச் செய்யுட்கள் முற்றும் இங்கே பதிப்பிக்க இயலாமை யால், தொடர்ச்சி தெரிதற்பொருட்டுக் கதைச் சுருக்கம் எழுதலாயிற்று.

சீவக சிந்தாமணி.

நாமகளிலம்பகச் செய்யுட்கள்.

கடவுள் வாழ்த்து.

1. மூவா முதலா வுலகம்மொரு மூன்று மேத்தத்
தாவாத வின்பந் தலையாயது தன்னி னெய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வ னென்ப
தேவாதி தேவ னவன்சேவடி சேர்து மன்றே.

அவையடக்கம்.

2. கற்பா லுமிழ்ந்த மணியுங்கழு வாது விட்டால்
நற்பா லழியு நகைவெண்மதி போனி றைந்த
சொற்பா லுமிழ்ந்த மறுவும்மதி யாற் கழுவிப்
பொற்பா விழைத்துக் கொளற்பாலர் புலமை மிக்கார்.

ஏமாங்கத நாடு.

3. காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற்றிசை போய துண்டே.

இராசமாபுரம்.

4. தேன்றலைத் துவலை மாலை பைந்துகில் செம்பொன் பூத்து
நான்றன வயிர மாலை நகுகதிர் முத்த மாலை
கான்றமிர் தேந்தி நின்ற கற்பகச் சோலை யார்க்கும்
ஈன்றருள் சுரந்த செல்வத் திராசமா புரம தாமே.

---

2. இழைத்து—அமைத்து.

3. நெற்றி—உச்சி. தொடை—தாறு; குலை.

4. இராசமாபுரம் கற்பகச்சோலையென்க,

சச்சந்தன்.

5. வண்கை யாற்கலி மாற்றிவை வேலினல்
திண்டி றற்றெவ்வர் தேர்த்தொகை மாற்றினன்
நுண்க லைக்கிட னய்த்திரு மாமகள்
கண்க ளுக்கிட னங்கடி மார்பனே.

6. கோதை நித்திலஞ் சூழ்குளிர் வெண்குடை
ஓத நீருல கொப்ப நிழற்றலால்
தாதை யேயவன் றாணிழற் றங்கிய
காத லாற்களிக் கின்றதிவ் வையமே.

7. தருமன் றண்ணளி யாற்றன தீகையால்
வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே
அருமை யாலழ கிற்கணை யைந்துடைத்
திரும கன்றிரு மாநில மன்னனே.

8. ஏனை மன்னர்த மின்னுயிர் செற்றவேற்
றானை மன்னரிற் றானிமி லேறனன்
தேனை மாரியன் னன்றிசை காவலன்
வானந் தோய்புக ழான்மலி வெய்தினன்.

விசயை.

9. செல்வற் கின்னணஞ் சேறலிற் றீம்புனல்
மல்ல னீர்விதை யத்தா சன்மகள்
அல்லி சேரணங் கிற்கணங் கன்னவள்
வில்லி னீள்புரு வத்தெறி வேற்கணள்.

10. வண்டின முகபடா மணிந்து வார்மதம்
உண்டுகுத் திடுகளிற் றுழவன் றன்மகள்
பெண்டிர்தம் பெருநலங் கடந்து பெற்றபேர்
விண்டலர் கோதைக்கு விசயை யென்பவே.

---

7. தருமன்—அறக்கடவுள். வாமன்—அருகக்கடவுள்.
8. தேனைமாரி—தேன்மாரி; ஐ சாரியை.
10. உழவன்—வீரன்.

விசயையின் மணம்.

11. மருமகன் வலந்தது மங்கை யாக்கமும்
அருமதிச் சூழ்ச்சியி னமைச்ச ரெண்ணிய
கருமமுங் கண்டவர் கலத்தற் பான்மையிற்
பெருமகற் சேர்த்தினர் பிணைய னாளையே.

சச்சந்தன் கட்டியங்காரனுக்குக் கூறல்.

12. களிறனு னமைச்சர் தம்முட் கட்டியங் கார னென்பான்
ஒளிறுவாட் டடக்கை யானுக் குயிரென வொழுகு நாளுள்
பிளிறுவார் முரசிற் சாற்றிப் பெருஞ்சிறப் பியற்றி வேந்தன்
வெளிறிலாக் கேள்வி யானை வேறுகொண் டிருந்து சொன்னான்.

13. அசைவிலாப் புரவிவெள்ளத் தருஞ்சயன் குலத்துட் டோன்றி
வசையிலாள் வரத்தின் வந்தாள் வான்சுவை யமிர்த மன்னாள்
விசயையைப் பிரித லாற்றேன் வேந்தனீ யாகி வையம்
இசைபடக் காத்தல் வேண்டு மிலங்குபூண் மார்ப வென்றான்.

கட்டியங்காரன் கூற்றும் அரசன் கூற்றும்.

14. அண்ணலு னுரைப்பக் கேட்டே யடுகளிற் றெருத்தி னிட்ட
வண்ணப்பூந் தவிசு தன்னை ஞமலிமே விட்ட தொக்கும்
கண்ணகன் ஞாலங் காத்த லெனக் கெனக் கமழுங் கண்ணி
மண்ணகம் வளருந் தோளான் மறுத்துநீ மொழிய லென்
[றான்.

15. எழுதரு பரிதி மார்ப னிற்றென விசைத்த லோடும் [லோய்
தொழுதடி பணிந்து சொல்லுந் துன்னலர்த் தொலைத்த வே
கழிபெருங் காத லாள்கட் கழிநலம் பெறுக வையம்
பழிபடா வகையிற் காக்கும் படுநுகம் பூண்ப லென்றான்.

---

11. வலந்தது—சொல்லிட்டது. அவர் என்றது விசயையின் தந்தையையும் தாயையும்.

13. அருஞ்சயன்—விசயையின் பாட்டன.

14. ஞமலி—நாய்.

நிமித்திகனென்னுமமைச்சன் நீதிகூறல்.

16. வலம்புரி பொறித்த வண்கை மதவலி விடுப்ப வேகிக்
கலந்தனன் சேனை காவல் கட்டியங் கார னென்ன
உலந்தரு தோளி னுய்நீ யொருவன்மேற் கொற்றம் வைப்பின்
நிலந்திரு நீங்கு மென்றோர் நிமித்திக னெறியிற் சொன்னான்.

சச்சந்தன் மறுத்தல்.

17. எனக்குயி ரென்னப் பட்டா னென்னலாற் பிறரை யில்லான்
முனைத்திற முருக்கி முன்னே மொய்யமர் பலவும் வென்றான்
தனக்கியான் செய்வசெய்தேன் றான்செய்வ செய்கவொன்றும்
மனத்தினு மொழிய வேண்டா வாழிய ரொழிக வென்றான்.

நிமித்திகன் உலகியலால் நீதிகூறல்.

18. காவல குறிப்பன் றேனுங் கருமமீ தருளிக் கேண்மோ
நாவலர் சொற்கொண் டார்க்கு நன்கலாற் றீங்கு வாரா
பூவலர் கொடிய னார்கட் போகமே கழுமி மேலும்
பாவமும் பழியு முற்றார் பற்பலர் கேளி தென்றான்.

உருத்திரதத்தனென்னும் அமைச்சன் கூறல்.

19. ஆரறி விகழ்தல் செல்லா வாயிரஞ் செங்க ணானும்
கூரறி வுடைய நீரார் சொற் பொருள் கொண்டு செல்லும்
பேரறி வுடையை நீயும் பிணையனாட் கவலஞ் செய்யும்
ஓரறி வுடையை யென்றா னுருத்திர தத்த னென்பான்.

சச்சந்தன் மறுத்தல்.

20. அளந்துதாங் கொண்டு காத்த வருந்தவ முடைய நீரார்க்
களந்தன போக மெல்லா மவரவர்க் கற்றை நாளே
அளந்தன வாழு நாளு மதுவெனக் குரைய லென்றான்
விளங்கொளி மணிகள் வேய்ந்து விடுசுட ரிமைக்கும் பூணான்.

---

16. மதவலியென்றது சச்சந்தனை
18. கழுமி—மயங்கி.

கருப்பழிதீர்ச்சியால் விசயை தளர்ச்சியுறல்.

21. பண்கனி யப்பரு கிப்பய னுடகம்
கண்கனி யக்கவர்ந் துண்டுசின் னுள்செல
விண்கனி யக்கவின் வித்திய வேற்கணி
மண்கனிப் பான்வள ரத்தளர் கின்றாள்.

சச்சந்தன் ஆராய்ந்து ஒரு பொறி செய்விக்கத் தன்னுள் துணிதல்.

22. தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளி லேபோல்
தேம்புடை யலங்கன் மார்பிற் றிருமகன் றமியனாக
ஓம்படை யொன்றுஞ் செப்பா டிருமக ளொளித்து நீங்க
ஆம்புடை தெரிந்து வேந்தற் கறிவெனு மமைச்சன் சொன்
[னான்.

23. காதிவேன் மன்னர் தங்கள் கண்ணென வைக்கப் பட்ட
நீதிமேற் சேற றேற்றாய் நெறியலா நெறியைச் சேர்ந்து
கோதியல் காம மென்னு மதுவினுட் குளித்த ஞான்றே
ஓதிய பொறியற் றாயோ ரரும்பொறி புனைவி யென்றான்.

யந்திரஞ் செய்யச் சொல்லுதல்.

24. அந்தரத் தார்மய னேயென வையுறும்
தந்திரத் தாற்றம நூல்கரை கண்டவன்
வெந்திற லான்பெருந் தச்சனைக் கூவியோர்
எந்திர வூர்தி யியற்றுமி னென்றான்.

தச்சன் மயிற்பொறி செய்தல்.

25. பல்கிழி யும்பயி னுந்துகி னூலொடு
நல்லரக் கும்மெழு குந்நலஞ் சான்றன
அல்லன வும்மமைத் தாங்கெழு நாளினுட்
செல்வதோர் மாமயில் செய்தன னன்றே.

---

21. மண்கனிப்பான்—மண்ணுலகத்தாரை உருக்குமவன் (சீவகன்.)

22. வேழம்—விளாவிற்கு வருவதொரு நோய். வெள்ளில்—விளாமரம். ஓம்படை—பாதுகாப்பு.

25. துகில் நூல்—வெள்ளை நூல்.

தச்சன் மயிற்பொறியைக் கொணர்ந்து காட்டல்.

26. பீலிநன் மாமயி லும்பிறி தாக்கிய
கோலநன் மாமயி லுங்கொடு சென்றவன்
ஞாலமெ லாமுடை யானடி கைதொழு
தாலுமிம் மஞ்ஞை யறிந்தரு ளென்றான்.

கண்ட அரசன் தச்சனுக்கு நன்கொடை யளித்தல்.

27. நன்னெறி நூனயந் தானன்று நன்றிது
கொன்னெறி யிற்பெரி யாயிது கொள்கென
மின்னெறி பல்கல மேதகப் பெய்ததோர்
பொன்னறை தான்கொடுத் தான்புகழ் வெய்யோன்.

விசயை மயிற்பொறியை ஊர்ந்து பழகல்.

28. ஆடியன் மாமயி லூர்தியை யவ்வழி
மாடமுங் காவு மடுத்தொர்சின் னுள்செலப்
பாடலின் மேன்மேற் பயப்பயத் தான்றரங்
தோட முறுக்கியு ணர்த்தவு ணர்ந்தாள்.

29. பண்டவழ் விரலிற் பாவை பொறிவலந் திரிப்பப் பொங்கி
விண்டவழ் மேகம் போழ்ந்து விசும்பிடைப் பறக்கும் வெய்ய
புண்டவழ் வேற்கட் பாவை பொறியிடந் திரிப்பத் தோகை
கண்டவர் மருள வீழ்ந்து கால்குவித் திருக்கு மன்றே.

சச்சந்தனைக் கொல்லநினைந்த கட்டியங்காரன் கூறல்.

30. காதி வேல்வல கட்டியங் காரனும்
நீதி யானிலங் கொண்டபி னீதிநூல்
ஓதி னார்தமை வேறுகொண் டோதினன்
கோது செய்குணக் கோதினுட் கோதனன்.

31. மன்ன வன்பகை யாயதோர் மாதெய்வம்
என்னை வந்திடங் கொண்டஃதி ராப்பகல்
துன்னி நின்று செகுத்திடு நீயெனும்
என்னை யான்செய்வ கூறுமி னென்னவே.

---

28. பாடலின்—பாட்டைப்போல.

தருமதத்தனென்னுமமைச்சன் நீதி கூறல்

32. அருமை மாமணி நாக மழுங்கவோர்
உருமு வீழ்ந்தென வுட்கின ராவவன்
கருமங் காழ்த்தமை கண்டவர் தம்முளான்
தரும தத்தனென் பானிது சாற்றினன்.

அரசர் பெருமை.

33. தன்னை யாக்கிய தார்ப்பொலி வேந்தனைப்
பின்னை வெளவிற் பிறழ்ந்திடும் பூமகள்
அன்ன வன்வழிச் செல்லினிம் மண்மிசைப்
பின்னைத் தன்குலம் பேர்க்குந ரில்லையே.

34. திலக நீண்முடித் தேவரும் வேந்தரும்
உலக மாந்தர்க ளொப்பவென் றோதுப
குலவு தார்மன்னர்க் கியானிது கூறுவன்
பலவு மிக்கனர் தேவரிற் பார்த்திபர்.

35. அருளு மேலா சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தெனு மாதெய்வம்
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்க லழித்தலங் காபவோ.

36. உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்
இறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்
தறங்கள் வெளவ வதன்புறங் காக்கலார்.

37. யாவ ராயினு நால்வரைப் பின்னிடின்
தேவ ரென்பது தேறுமிவ் வையகம்
காவன் மன்னவர் காய்வன சிந்தியார்
நாவி னும்முரை யார்நவை யஞ்சுவார்.

---

32. உட்கினரா—அஞ்ச. கருமம் காழ்த்தமை—கொலைசெய்யத் துணிந்தமை.
35. மருளி—மயக்கம்; இகரம் பகுதிப்பொருள் விகுதி.

38. தீண்டி னூர்தமைத் தீச்சுடு மன்னர்தீ
ஈண்டு தங்கிளை யோடு மெரித்திடும்
வேண்டி லின்னமிர் துந்நஞ்சு மாதலான்
மாண்ட தன்றுநின் வாய்மொழித் தெய்வமே.

39. பிறையது வளரத் தானும் வளர்ந்துடன் பெருகிப் பின்னாட்
குறைபடு மதியந் தேயக் குறுமுய றேய்வ தேபோல்
இறைவனைத் தன்னை யாக்கி யவன்வழி யொழுகி னென்றும்
நிறைமதி யிருளைப் போழு நெடும்புகழ் விளைக்கு மென்றான்.

படைசூழ்ந்தமையை வாயிலோன் சச்சந்தனுக்கு அறிவித்தல்.

40. நீணில மன்ன போற்றி நெடுமுடிக் குரிசில் போற்றி
பூணணி மார்ப போற்றி புண்ணிய வேந்தே போற்றி
கோணினைக் குறித்து வந்தான் கட்டியங் காரனென்று
சேணிலத் திறைஞ்சிச் சொன்னான் செய்யகோல் வெய்ய
[சொல்லான்.

அதனைக்கேட்ட சச்சந்தன் செயல்.

41. திண்ணிலைக் கதவ மெல்லாந் திருந்துதா ழுறுக்க வல்லே
பண்ணுக பசும்பொற் றேரும் படுமதக் களிறு மாவும்
கண்ணகன் புரிசை காக்குங் காவல ரடைக வென்றான்
விண்ணுரு மேறு போன்று வெடிபட முழங்குஞ் சொல்லான்.

42. புலிப்பொறிப் போர்வை நீக்கிப் பொன்னணிந் திலங்கு கின்ற
ஒலிக்கழன் மன்ன ருட்கு முருச்சுடர் வாளை நோக்கிக்
கலிக்கிறை யாய நெஞ்சிற் கட்டியங் கார னம்மேல்
வலித்தது காண்டு மென்று வாளெயி றிலங்க நக்கான்.

சச்சந்தன் கூற்றும் விசயை வருந்தலும்.

43. நங்கைநீ நடக்கல் வேண்டு நன்பொருட் கிரங்கல் வேண்டா
கங்குனீ யன்று கண்ட கனவெலாம் விளைந்த தென்னக்
கொங்கலர் கோதை மாழ்கிக் குழைமுகம் புடைத்து வீழ்ந்து
செங்கயற் கண்ணி வெய்ய திருமகற் கவலஞ் செய்தாள்.

---

40. போற்றி—பாதுகாத்தருள்க. கோள்—கொலை.
42. போர்வை—கவசம்.
43. பொருள்—பிள்ளை.

சச்சந்தன் விசயையைத் தேற்றல்.

44. சாதலும் பிறத்த லுனுந் தம்வினைப் பயத்தி னுகும்
ஆதலு மழிவு மெல்லா மவைபொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லா நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி யென்றான்

45. தொல்லைநம் பிறவி யெண்ணிற் றொடுகடன் மணலு மாற்றா
எல்லைய வவற்று ளெல்லா மேதிலம் பிறந்து நீங்கிச்
செல்லுமக் கதிக டம்முட் சேரலஞ் சேர்ந்து நின்ற
இல்வினு ளிரண்டு நாளைச் சுற்றமே யிரங்கல் வேண்டா.

46. வண்டுமொய்த் தாற்றும் பிண்டி வாமனால் வடித்த நுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயு முணர்விலா நீரை யாகி
விண்டுகண் ணருவி சோர விம்முயிர்த் தினையை யாதல்
ஒண்டொடி தகுவ தன்று லொழிகநின் கவலை யென்றான்.

47. உரிமைமுன் போக்கி யல்லா லொளிமுடி மன்னர் போகார்
கருமமீ தெனக்கு மூர்தி யமைந்தது கவல வேண்டா
புரிநரம் பிரங்குஞ் சொல்லாய் போவதே பொருண்மற் றென்
எரிமுயங் கிலங்கு வாட்கையேற்றிளஞ் சிங்க மன்னன்.[றான்

மயிற்பொறிமீதுசென்று மயானத்திலிறங்கிய விசயையின் நிலை.

48. உண்டென வுரையிற் கேட்பா ருயிருறு பாவ மெல்லாம்
கண்டினித் தெளிக வென்று காட்டுவாள் போல வாகி
விண்டொட நிவந்த கோயில் விண்ணவர் மகளிற் சென்றாள்
வெண்டலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமிய ளானாள்.

விசயை கருவுயிர்த்தல்.

49. இருள்கெட விகலி யெங்கு மணிவிளக் கெரிய வேந்தி
அருளுடை மனத்த வாகி யணங்கெலாம் வணங்கி நிற்பப்
பொருகடற் பரிதி போலப் பொன்னனான் பிறந்த போழ்தே
மருளுடை மாத ருற்ற மம்மர்நோய் மறைந்த தன்றே.

---

46. பிண்டி—அசோகமரம்.
47. உரிமை—மனைவி.

கந்துக்கடன் குழந்தையை எடுத்தல்.

50. புனைகதிர்த் திருமணிப் பொன்செய் மோதிரம்
வனைமலர்த் தாரினன் மறைத்து வண்கையால்
துனைகதிர் முகந்தென முகப்பத் தும்மினன்
சினைமறைந் தொருகுரல் சீவ வென்றதே.

விசயை குழந்தையை வாழ்த்தல்.

51. என்பெழுந் துருகுபு சோர வீண்டிய
அன்பெழுந் தரசனுக் கவலித் தையனை
நுன்பழம் பகைதவ நூறு வாயென
இன்பழக் கிளவியி னிறைஞ்சி யேத்தினள்.

கந்துக்கடன் தன்னிடம் போதல்.

52. ஒழுக்கிய லருந்தவத் துடம்பு நீங்கினர்
அழிப்பரும் பொன்னுடம் படைந்த தொப்பவே
வழுக்கிய புதல்வனங் கொழிய மாமணி
விழுத்தகு மகனொடும் விரைவி னேகினன்.

சீவகன் சிறந்து விளங்குதல்.

53. பல்பூம் பொய்கைத் தாமரை போன்றும் பனிவானத்
தெல்லார் கண்ணு மின்புற வூரும் மதிபோன்றும்
கொல்லுஞ் சிங்கக் குட்டியும் போன்றிவ் வுலகேத்தச்
செல்லும் மன்னோ சீவகன் றெய்வப் பகைவென்றே.

54. சாதிப் பைம்பொன் றன்னொளி வெளவித் தகைகுன்றா
நீதிச் செல்வம் மேன்மே னீந்தி நிறைவெய்திப்
போதிச் செல்வம் பூண்டவ ரேத்தும் பொலிவின்னால்
ஆதிக் காலத் தந்தணன் காதன் மகனொத்தான்.

அச்சணந்தியாசிரியன்பாற் சீவகன் வில்வேதமுதலிய கலைகளைப் பயிறல்.

55. நாமக ணலத்தை யெல்லா நயந்துடன் பருகி நன்னூல்
ஏமுத லாய வெல்லாப் படைக்கலத் தொழிலு முற்றிக்
காமனுங் கனிய வைத்த புலங்கரை கண்டு கண்ணார்
பூமகள் பொலிந்த மார்பன் புவிமிசைத் திலக மொத்தான்.

---

50. மோதிரம்—சீவகன் விரலில் விசயை சேர்த்திய அரசன் மோதிரம்.
51. நுன்—உன்னுடைய.

சீவகனுக்கு அச்சணந்தியாசிரியன் ஞானோபதேசஞ்செய்தல்.

56. வான்சுவை யமிர்த வெள்ளம் வந்திவட் டொக்கதென்னத்
தான்சுவைக் கொண்ட தெல்லாந் தணப்பறக் கொடுத்தபின்
தேன்சுவைத் தாற்றும் பைந்தார்ச் சீவககுமரனென்ற [றைத்
ஊன்சுவைத் தொளிரும் வேலாற் குறுதியொன் றுரைக்க
[லுற்றான்.

57. அறிவினாற் பெரிய நீரா ரருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி யின்ப நிறைகட லகத்து நின்றார்
பொறியெனும் பெயர வைவாய்ப் பொங்கழ லரவின் கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார் வேதனைக் கடலு ணின்றார்.

58. கூற்றுவன் கொடிய னாகிக் கொலைத்தொழிற் கருவி சூழ்ந்து
மாற்றரும் வலையை வைத்தான் வைத்ததை யறிந்து நாமும்
நோற்றவன் வலையை நீங்கி நுகர்ச்சியி லுலக நோக்கி
ஆற்றுறப் போத றேற்றா மளியமோ பெரிய மேகாண்.

59. பேரஞ ரிடும்பை யெல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும்.
ஆரமிர் தரிதிற் பெற்று மதன்பயன் கோட றேற்றாம்
ஒருமைம் பொறியு மோம்பி யுள்பகல் கழிந்த பின்றைக்
கூரெரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்த வெல்லாம்.

சீவகன் ஆசிரியனைச் சரணடைதல்.

60. சூழ்கதிர் மதிய மன்ன சுடர்மணிப் பூணி னானும்
வீழ்தரு கதியி னீங்கி விளங்குபொன் னுலகத் துய்க்கும்
ஊழ்வினை துரத்த லானு முணர்வுசென் றெறித்த லானும்
ஆழ்கடற் புணையி னன்ன வறிவரன் சரண டைந்தான்.

ஆசிரியன் செயல்.

61. நல்லறத் திறைவ னாகி நால்வகைச் சரண மெய்தித்
தொல்லறக் கிழமை பூண்ட தொடுகழற் காலினாற்குப்
புல்லற நெறிக்க ணின்று பொருள்வயிற் பிழைத்த வாறும்
இல்லறத் தியல்பு மெல்லா மிருளறக் கூறி யிட்டான்.

---

58. நுகர்ச்சியில் உலகம்—இதற்கு முன்பு அநுபவியாத உலகம்.

61. நால்வகைச் சரணம்—அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தர்ம சரணம்.

ஆசிரியன் சீவகனுக்குப் பிறப்பைத் தெளிவித்தல்.

62. எரிமுயங் கிலங்கு வைவே லிளையவர் குழாத்தி னீங்கித்
திருமுயங் கலங்கன் மார்பிற் சீவகற் கொண்டு வேறு
விரிமலர்க் கண்ணி கட்டி விழைதக வேய்ந்த போலும்
தெரிமலர்க் காவு சேர்ந்து பிறப்பினைத் தெருட்ட லுற்றான்.

கேட்ட சீவகன் சோகம் அடைதல்.

63. கற்பகங் கலங்கி வீழ்ந்த வண்ணம்போற் காளை வீழச்
சொற்பகர் புலவன் வல்லே தோன்றலைச் சார்ந்து புல்லி
நற்பல குழீஇய தம்மா னவையறத் தேற்றத் தேறிக்
கற்புனை திணிதிண் டோளான் கவலைநீர்க் கடலுட் பட்டான்.

ஆசிரியன் தேற்றத் தேறல்.

64. இனையைநீ யாய தெல்லா மெம்மனோர் செய்த பாவம்
நினையனீ நம்பி யென்று நெடுங்கணீர் துடைத்து நீவிப்
புனையிழை மகளிர் போலப் புலம்பனின் பகைவ னின்றான்
நிலைவெலா நீங்கு கென்ன நெடுந்தகை தேறி னானே.

குண்டலகேசி.

முகவுரை.

இந்நூல், ஐம்பெருங்காப்பியங்களுள் நான்காவது; கிடைத்த கடவுள் வாழ்த்துச் செய்யுளாலும் **நீலகேசியி**லுள்ள சில வாக்கியங்களாலும் இது பௌத்தசமய நூலென்று தெரிகின்றது; அன்றியும் **நீலகேசி**, மொக்கல வாதச் சருக்கத்துள்ள "என்றாளை முகநோக்கி" என்னும் செய்யுளுரையால், குண்டலகேசியெனப் பெயர் பெற்ற வணிககுல மகளொருத்தியின் வரலாறு கூறுவதென்றும் அதனால் இந்நூல் இப்பெயர் பெற்றதென்றும் தெரிந்துகொள்ளலாம். நூல் முற்றும் அகப்படாமையால், நூலாசிரியர் இன்னாரென்பதும் இதன் பகுப்புக்கள் இவ்வளவின என்பதும் இதன் செய்யுட்கள் இத்துணையின என்பதும் பிறவும் விளங்கவில்லை; ஆனாலும் தான் எடுத்துக் காட்டுஞ் செய்யுட்களின் தலைப்பில் அவ்வந்நூற்பெயர் எழுதப்பெற்றிருக்கும் **புறத்திரட்டென்னும்** புத்தகத்திலிருந்தும் நீலகேசி யுரையிலிருந்தும் வேறு சில நூல்களின்பழைய உரைகளிலிருந்துமே இந்நூற் செய்யுட்கள் சிற்சில கிடைக்கின்றன.

குண்டலகேசிச் செய்யுட்கள்.

கடவுள் வாழ்த்து.

1. முன்றான் பெருமைக்க ணின்றான்முடி வெய்துகாறும்
நன்றே நினைந்தான் குணமேமொழிந் தான்றனக்கென்
றொன்றானு மில்லான் பிறர்க்கேயுறு திக்குழந்தான்
அன்றே யிறைவ னவன்றாள்சர ணங்களன்றே.

அவையடக்கம்.

2. நோய்க்குற்ற மாந்தர் மருந்தின்சுவை நோக்ககில்லார்
தீக்குற்ற காத லுடையார்புகைத் தீமைநோக்கார்
போய்க்குற்ற மூன்று மறுத்தான்புகழ் கூறுவேற்கென்
வாய்க்குற்ற சொல்லின் வழுவும்வழு வல்லவன்றே.

தீவினையச்சம்.

3. வாயுவினை நோக்கியுள மாண்டவினை நாவாய்
ஆயுவினை நோக்கியுள ஆக்கையது வேபோல்
தீயவினை நோக்குமியல் சிந்தனையு மில்லாத்
தூயவனை நோக்கியுள துப்புரவு மெல்லாம்.

தூய்தன்மை.

4. நன்கன நாறுமி தென்றிவ் வுடம்பு நயக்கின்ற தாயின்
ஒன்பது வாயில்க டோறு முண்ணின் றழுக்குச் சொரியத்
தின்பதொர் நாயு மிகப்பத் திசைதொறுஞ் சீப்பில்கு போழ்தின்
இன்புறு நாற்ற மிதன்க ணெவ்வகை யாற்கொள லாமே.

---

2. குற்றமூன்றும் அறுத்தான்—புத்ததேவன்,

3. நாவாய்—மரக்கலம். ஆயு—வாழ்நாள், துப்புரவு—அனுபவிக்கப்படும் பொருள்கள்.

4. நன்கனம் நாறும்—நன்றாக மணக்கும். இகப்ப—விட்டு ஓட.

5. உறுப்புக்க டாமுடன் கூடி யொன்று யியைந்த பெரும்பை
மறைப்பில் விழைவிற்குச் சார்வாய் மயக்குவ தேலிவ் வுறுப்புக்
குறைத்தன போல வழுகிக் குறைந்து குருதி சொரிய
வெறுப்பிற் கிடந்த பொழுதின் வேண்டப் படுவது முண்டோ.

இறைமாட்சி.

6. இறந்த நற்குண மெய்தற் கரியவாய்
உறைந்த தன்மையெல் லாமுட னுக்குவான்
பிறந்த மூர்த்தியொத் தான்றிங்கள் வெண்குடை
அறங்கொள் கோலண்ணன் மும்மத யானையான்.

7. சீற்றஞ் செற்றுப்பொய் நீக்கிச்செங் கோலினுற்
கூற்றங் காய்ந்து கொடுக்க வெனுந்துணே
மாற்ற மேநவின் றுன்றடு மாற்றத்துத்
தோற்றந் தன்னையுங் காமுறத் தோன்றினன்.

யாக்கைநிலையாமை.

8. பாலையாந் தன்மை செத்தும் பாலனுந் தன்மை செத்தும்
காளையாந் தன்மை செத்துங் காமுறு மிளமை செத்தும்
மீளுமிவ் வியல்பு மின்னே மேல்வரு மூப்பு மாகி
நாளுநாஞ் சாகின் றுமா னமக்குநா மழாத தென்னே.

குற்றங்கடிதல்.

9. மண்ணுளார் தம்மைப் போல்வார் மாட்டதே யன்று வாய்மை
நண்ணினுர் திறத்துங் குற்றங் குற்றமே நல்ல வாகா
விண்ணுளார் புகழ்தற் கொத்த விழுமியோ னெற்றி போழ்ந்த
கண்ணுளான் கண்டந் தன்மேற் கறையையார் கறையன்றென்
[பார்.

---

5. விழைவு—விருப்பம்.
6. பிறந்தமூர்த்தி—புத்ததேவன்.
9. கறை—களுப்பு.

வ ளை ய ா ப தி.

மு க வு ரை.

இந்நூல், ஐம்பெருங்காப்பியங்களுள் ஐந்தாவது; நூல் முற்றும் இது காறும் கிடைத்திலது. நூலாசிரியர் இன்னாரென்பதும் பிறவும் ஒரு வாற்றானும் புலப்படவில்லை. ஆனாலும் இதிலுள்ள செய்யுட்கள்சில பண்டையோர்களாற் பழையவுரைகளில் மேற்கோள்களாக எடுத்துக் கர்ட்டப்பெற்றுள்ளன. புறத்திரட்டிலும் இந்நூற் செய்யுட்கள் சிறசில ஆங்காங்குக் காணப்படுகின்றன. பன்னூற்றிரட்டிலும் செந்தமிழ் முதற் றொகுதியின் நான்காம் பகுதியிலும் அச்செய்யுட்கள் பதிப்பிக்கப்பெற் றிருக்கின்றன.

வளையாபதிச் செய்யுட்கள்.

கடவுள் வாழ்த்து.

1. உலக மூன்று மொருங்குட னேத்துமாண்
திலக மாய திறலறி வன்னடி
வழுவி னெஞ்சொடு வாலிதி னாற்றவும்
தொழுவ ரெல்வினை நீங்குக வென்றியான்.

பெறுதற்கருமை.

2. வினைபல வலியி னாலே வேறுவே றியாக்கை யாகி
நனிபல பிறவி தம்முட் டுன்புறூஉம் பல்லு யிர்க்கும்
மனிதரி னரிய தாகுந் தோன்றுத றோன்றி னாலும்
இனியவை நுகர வெய்துஞ் செல்வமு மன்ன தேயாம்.

3. உயர்குடி நனியுட் டோன்ற லூனமில் யாக்கை யாதல்
மயர்வறு கல்வி கேள்வித் தன்மையால் வல்ல ராதல்
பெரிதுணர் வரிய வெய்தல் பேறறங் கோட லென்றாங்
கரிதிவை பெறுத லேடா பெற்றவர் மக்க ளென்பார்.

புதல்வரைப் பெறுதல்.

4. பொறையிலா வறிவு போகப் புணர்விலா விளமை மேவத்
துறையிலா வனச வாவி துகிலிலாக் கோலந் தூய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னர்ச்
சிறையிலா நகரம் போலுஞ் சேயிலாச் செல்வ மன்றே.

தீவினையச்சம்.

5. பொய்யன் மின்புறங் கூறன்மின் யாரையும்
வையன் மின்வடி வல்லன சொல்லிநீர்
உய்யன் மின்னுயிர் கொன்றுண்டு வாழுநாள்
செய்யன் மின்சிறி யாரொடு தீயன.

---

1. வாலிதின்—தூய்மையாக. ஆற்றவும்—மிகவும்.
3. உணர்வு அரிய எய்தல்—அரிய ஞானமடைதல்.
4. சேய்—பிள்ளை.
5. நீர்வையன்மினென்க.

நல்குரவு.

6. தொழுமக னாயினுந் துற்றுடை யானைப்
பழுமரஞ் சூழ்ந்த பறவையிற் சூழ்ப
விழுமிய ரேனும் வெறுக்கை யுலந்தாற்
பழுமரம் வீந்த பறவையிற் போப.

கள்ளாமை.

7. பீடில் செய்திக ளாற்கள விற்பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயனெனக்
கூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்
தோட லின்றி யுலையக் குறைக்குமே.

பழவினை.

8. உய்த்தொன்றி யோர்தந் துழவுழு தாற்றவும்
வித்தின்றிப் பைங்கூழ் விளைக்குற லென்னும்
மெய்த்தவ மில்லான் பொருளொடு போகங்கட்
கெய்த்துழந் தெய்தா னிடர்ப்படு மாறே.

அருளுடைமை.

9. ஆற்று மின்னரு ளாருயிர் மாட்டெலாம்
தூற்று மின்னறந் தோநனி துன்னன்மின்
மாற்று மின்கழி மாயமு மானமும்
போற்று மின்பொரு ளாவிவை கொண்டுநீர்.

---

6. தொழுமகன்—குட்ட நோயையுடைய மனிதன். துற்று—உணவு. பழு மரம்—பழுத்தமரம்; ஆலமரமுமாம். வீந்த—நீங்கிய.

8. எய்த்து—இளைத்து.

9. அறம்தூற்றுமின்—தருமமொழிகளைப் பலருக்கும் உபதேசம் செய்யுங்கள்.

கல்லாடம்

இது அகப்பொருட்டுறைகளை அகவற்பாக்களால் விளக்குவது; கடைச் சங்கப் புலவருள் ஒருவரான கல்லாடர் என்பவர் இயற்றியது. ஒவ்வொரு பாவிலும் சில வரிகள் நான்மாடக் கூடலில் வீற்றிருக்கும் ஸோமஸுந்தரக் கடவுளைப் புகழ்ந்துரைக்கும்.

கல்லாடருடைய பாக்கள் சில புறநானூற்றில் சேர்ந்திருக்கின்றன. தொல்காப்பியத்திற்கு இவர் இயற்றிய உரை ஒன்றுண்டு. திருவள்ளுவ மாலையில் ஒரு வெண்பா இவர் இயற்றியது.

கல்லாடத்தில் குறித்திருக்கும் விஷயங்களில் சிலவற்றையும் கல்லாடத்தின் நடையையும் ஆராய்ச்சி செய்து, சில புலவர்—கடைச்சங்கத்துப் புலவரான கல்லாடனார் வேறு; கல்லாடம் செய்த கல்லாடர் வேறு; கல்லாடம் செய்தார் கடைச்சங்கத்துக்குச் சில காலம் பிற்பட்டவர் என்பர்.

இந்நூலின் பெருமையை விளக்க,

"கல்லாடர் செய்பனுவல் கல்லாட நூறும்நூல்
வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயும்
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்."

என வழங்கும் வெண்பாவைக் காட்டுவர். "கல்லாடம் படித்தவனோடு மல்லாடாதே" என்றொரு பழமொழியும் வழங்கிவருகிறது.

முதல் முப்பத்தேழு அகவல்களுக்கு மயிலேறும்பெருமாள் பிள்ளை யென்பவர் இயற்றிய உரை அருமை வாய்ந்தது.

அறத்தோடு நிற்றல்

தன்னுழை[1]ப் பலவுயிர் தனித்தனி படைத்துப்
பாப்பிக் காட்டலிற் பதும[2] னாகியும்,
அவ்வுயி ரெவ்வுயி ரனைத்துங் காத்தலின்
செவ்விகொள் கருமுகிற் செல்வ[3] னாகியும்,
கட்டிய கரைவரம் புட்புக வழித்து
நீர்தலை தரித்தலின் நிமல[4] னாகியும்,

[1] தன்னிடத்தில்.
[2] பிரமன்.
[3] விட்டுணு.
[4] சிவன்.

தருவு மணியும் சங்கமுங் கிடைத்தலின்
அரி[1]முதி ரமரர்க் கரச[2]ஞகியும், [1]கண்கள்மிக்க. [2]இந்திரன்.
மூன்றழ ஞன்மறை முனிவர் தோய்ந்து
மறைநீ ருகுத்தலின் மறையோ ஞகியும்,
மீனுங் கொடியும் விரிதிணை யைந்தும்
தேனுறை தமிழும் திருவுறை கூடலும் தமிழ்-இரசம்.
மணத்தலின் மதிகுல மன்னவ[3]ஞகியும், [3]பாண்டியன்.
நவமணி யெடுத்து நற்புலங் காட்டலின்
வளர்கூறி மயங்கா வணிக ஞகியும்,
விழைதரு முழவும் வித்து நாறும்
தழைதலின் வேளாண் டலைவ ஞகியும்,
விரிதிரை வையைத் திருநதி சூழ்ந்த [தை யுடையவன்.
மதுரையம் பதிநிறை மைம்மலர்க் களத்த[4]ன் [4]குவளைபோன்ற கண்டத்
இணையடி வழுத்தார் அணை[5]தொழி லென்னக் [5]பொருந்திய.
கைதை[6]யங் கரைசெய் பொய்தற் பாவை[7]யோ

[6]தாழை. [7]விளையாட்டுப்பாவை.

டிருதிரை யெடுக்க[8]ப் பொருதிரை யெடுத்து[9]ம்,

[8]கடல் என்னை எடுக்கக் [9]கடலினின்றும் என்னை எடுத்து.

பூழிப் போனகம்[10] புதுவுட னுண்டு[11]ம்,

[10]புழுதியாலமைந்த சிறு சோறு. [11]விருந்தாகவுண்டு.

சாய்தாட் பிள்ளை[12] தந்து கொடுத்தும்,

[12]தாள் சாய்பிள்ளை—தாளினையுடைய கோரைப்பாவை.

முடவுடற்[13]கைதை மடல்முறித் திட்டும் [13]வளைந்தவுடல். [பாவை.
கவைத்துகிர்ப் பாவைக்[14] கண்ணி சூட்டக் [14]கவர்ப்பட்ட பவளப்
குவலயத்[15]திருமலர் கொணர்ந்து கொடுத்தும், [15]நீலோற்பலம்.
நின்ரு னுண்டொரு காளை [டுத்தல்.
என்ரு லித்தொழில் செய்வது[16]புகழே? [16]இங்ஙனம் வெறியாட்டெ

எடுத்தும்—உண்டும்—கொடுத்தும்—இட்டும் — கொடுத்தும் நின்றவனொரு காளை உண்டென்ருல் வெறியாட்டெடுத்தல் நங்குடிக்குப் புகழன்று. தோழி உனக்குத் தக்கது செய்வாய் என வினைமுடிவு செய்து கொள்ளவேண்டும்.

'யாம் முன்பொருநாள் கடற்கரையிடத்தே வண்டல்செய்து விளையாடாநின்றேமாக, அந்நேரத்து ஒரு தோன்றல் "நம் வண்டன் மனைக்கு யாம் விருந்து" என்று வந்து நின்றபொழுது, நீ பூக்கொய்யச் சிறிது புடை

பெயர்ந்தாய். அந்நிலைமைக்கண் கீழ்காற்று மிகுதலால் கரைமேலேறும் கடல் மேல்வந்துற்றது. உற யான் "தோழியே – தோழியோ" என்று நின்னை விளித்தேன். அதுகண்டிரங்கி அவன் அருளொடுவந்து தன் கையைத் தந்தான்; யானும் மயக்கத்தாலே அதனை நின்கையென்று தொட்டேன். அவனும் பிறிதொன்றும் சிந்தியாது என்னுயிர் கொண்டுதந்து என்னைக் கரைக்கண் உய்த்துப் போயினன். அன்று என் நாணினால் நினக்கு அதனைச் சொல்லமாட்டிற்றிலேன். இன்று இவ்வாறுயினபின் இது கூறினேன். இனி நினக்கடுப்பது செய்வாயாக' எனத் தோழிக்குத் தலைமகள் அறத்தொடுநிற்பது இச்செய்யுளின் கருத்து.

கல்விநலங்கூறல்.

நிலையினிற் சலியா நிலைமை யானும்
புலவுல கெடுத்த ஒருதிறத் தானும்
நிறையும் பொறையும் பெறுநிலை யானும்
தேவர் மூவரும் காவ லானும்
தமனியப் பாரரைச் சைல[1]மாகியும்;

[1] பராரை–பருமை+அரை=பரிய அரையினையுடைய. தமனியச்சைலம்–பொன்மலை–மேருமலை.

அளக்கவென் றமையாப் பரப்பின தானும்
அமுதமுந் திருவும் உதவுத லானும்
பலதுறை முகத்தொடு பயிலுத லானும்
முள்ளுடைக் கோட்டு முனையெறி[2]சுறவம் [2] பகையை வெல்லாநின்ற.
அதிர்வளை[3]தடியும்[4] அளக்க[5]ராகியும்; [3] சங்கம். [4] வெல்லும். [5] கடல்.
நிறையுளங் கருதி நிகழ்பவை நிகழ்பவை
தருதலின் வானத் தருவைந் தாகியும்;
மறைவெளிப் படுத்தலின் கலைமக ளிருத்தலின்
அகமலர் வாழ்தலின் பிரம னாகியும்;
உயிர்பரிந் தளித்தலின் புலமிசை போக்கலின்
படிமுழு தளந்த நெடியோ னாகியும்;
இறுதியிற் சலியா திருத்த லானும்
மறுமைதந் துதவும் இருமை யானும்
பெண்ணிடங் கலந்த புண்ணிய னாகியும்;
அருள்வழி காட்டலின் இருவிழி யாகியும்;

கொள்ளுநர் கொள்ளக் குறையா தாதலின்
நிறையுள நீங்கா துறையரு ளாகியும்;
அவைமுத லாகி இருவினை கெடுக்கும்
புண்ணியக் கல்வி உண்ணிகழ் மாக்கள்—
பரிபுரக் கம்பலை[1] இருசெவி யுண்ணும் [1] காற்சிலம் போசை.
குடக்கோச் சேரன்[2] கிடைத்திது காண்கென
[2] குடதிசைக் கோவாகிய சேரமான்.
'மதிமலி புரிசை'த்[3] திருமுகங்[4] கூறி
[3] மதிமலிபுரிசை யென்றடியெடுத்துப்பாடிய திருமுகம். [4] சடிதம்—ஓலை
அன்புருத் தரித்த இன்பிசைப் பாணன்
பெறநிதி கொடுக்கென உறவிடுத் தருளிய
மாதவர் வழுத்தும் கூடற் கிறைவன்
இருசரண் பெறுகுநர் போலப்—
பெருமதி நீடுவர் சிறுமதி நுதலே!

சிறுமதி நுதலே! கல்விமாக்கள் இறையவன் சரணம் பெறுகுநர்போலப் பெருமதிநீடுவர் என வினைமுடிவு செய்து கொள்ளவேண்டும்.

வரைந்தபின்னர்த் தலைமகட்கு ஓதற்பிரிவு உணர்த்துவானாகத் தலைமகன், "கல்வியுடைய மாக்கள் இறைவன் சரணம் பெற்றூற்போல நீடுவர்" எனத் தோழிக் கறிவித்தது இச்செய்யுளின் கருத்து.

சேரமானுக்குத் திருமுகங் கொடுத்ததைத் திருவிளையாடற் புராணத்தில் 42-வது படலத்தில் காணலாம். திருமுகப்பாசுரம் இது:—

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பாணிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான், மொழிதரு மாற்றம்—
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க!
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
றன்போல் என்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்.
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே."

நலம் புனைந்துரைத்தல்.

அருடரும் கேள்வி அமையத் தேக்கப்
பற்பல வாசான் பாங்குசெல் பவர்போல்
மூன்றுவகை யடுத்த தேன்றரு கொழுமலர்[1]
கொழுதி[2]ப் பாடும் குணச்சுரும் பினங்காள்!
உளத்துவே றடக்கி முகமன் கூறுது
வேட்கையி னீயிர் வீழ்[3]நாட்பூ வினத்துள்,
காருடற் பிறையெயிற் றரக்கனைக் கொன்று
வச்சிரத் தடக்கை வரைப்பகை[4]சுமந்த
பழவுருக் காட்டுந் தீராப் பெரும்பழி
பனிமலை பயந்த மாதுடன் தீர்த்தருள்
பெம்மான் வாழும் பெருநகர்க் கூடல்
ஒப்புறு[5] பொற்றொடிச் சிற்றிடை மடந்தைதன்,
கொலையின ருள்ளமுங் குறைகொள இருண்டு
நான[6]நீவி[7]நாண்மலர் மிலைந்து[8]
கூடி யுண்ணுங் குணத்தினர் கிளைபோல்
நீடி[9]ச் செறிந்து நெய்த்துடல் குளிர்ந்த
கருங்குழற் பெருமணம்[10]போல
ஒருங்கு[11]முண்டேல், பேசுவி[12]ரெமக்கே.

[1] கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ. [2] கோதி. [3] சேரத்தங்கும். [4] இந்திரன். [5] மதுரையைப் போலும். [6] புழுகு. [7] பூசப்பட்டு. [8] அணிந்து. [9] கூடி உண்ணும்... நீடி = இருவகை விருந்தினரையும் கூடிநுகர்தற்குக் காரணமாகிய குணத்தினையுடையார் சுற்றம் நீண்டாற்போல் நீண்டு. [10] மடந்தைதன் கருங்குழல். கருங்குழல் பெருமணம் = கரிய கூந்தலில் உண்டாகும் மிகுந்தவாசம். [11] ஒருங்கு—ஒருதன்மை. நீயிர் வீழ்நாட்பூவினத்துள் கருங்குழற் பெருமணம்போல ஒருதன்மையான பூ உண்டேல். [12] சொல்வீராக.

> "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
> காமஞ் செப்பாது கண்டது மொழிமோ,
> பயிலியது கெழீஇய நட்பின்
> மயிலியல் செறியெயிற் றரிவை கூந்தலின்
> நறியவும் உளவோ?நீ அறியும் பூவே"

என்னும் இறையனார் பாசுரத்தின் கருத்தே இவ்வகவலின் கருத்து.

நலம் புனைந்துரைத்தல்:—களவிவேட்டு வருந்தக்கண்ட தலைமகள் மூரன்முறுவல் செய்ய, தலைமகன் அது பெற்றுப் பொங்கிழையைப் புனை நலம் புகழ்ந்து சொல்லாடாமையான் உண்டாகிய வருத்தம் நீங்குதல்.

பதிபரிசுரைத்தல்.

எரிதெறற் கரிய பொடி[1]பொறுத் தியங்கினை;[2]
முகிறலை சுமந்த ஞிமிறெழுந் திசைக்கும்
பொங்க[3]ருட் படுத்த மலர்[4]கால் பொருந்துக:
கருங்கடத்[5]தெதிர்ந்த கொடும்புலிக் கொதுங்கினை;
வரியுடற் செங்கண் வராவினம் எதிர்ப்ப
உழவக் கணத்தர்[6] உடைவது[7] நோக்குக:
கொலைஞர் பொலிந்த[8] கொடித்தேர்க் கணங்கினை;[9]
வேதியர் நிதிமிக விதிமக முற்றி[10]
அவ்விர தத்துறை யாடுதல் கெழுமிப்[11]
பொன்னுருள் வையம்[12] போவது காண்க:
ஆறலை எயினர்[13] அமர்க்கலிக்[14]கழுங்கினை;
பணைத்தெழு சாலி[15] நெருங்குபு புகுந்து
கழுநீர் களைஞர்[16]தம் கம்பலை[17]காண்க:
தழறலைப் பழுத்த பரன்முரம்[18]படுத்தனை;
சுரிமுகக்[19]குழுவளை[20] நிலவெழச் சொரிந்த
குளிர்வெண் தரளக் குவா[21]லிவை காண்க:
அலகைநெட் டிரதம்[22] புனலெனக் காட்டினை;
வன்மீன்[23]நெடுங்கயல் பொதிவினை[24]யகத்துக்
கிடங்[25]கெனப் பெயரிய கருங்கடல் காண்க:
காகளம்[26]பூசற் றுடி[27]யொலி ஏற்றனை;
குடுமியஞ் சென்னியர்[28] கருமுகில் விளர்ப்பக்
கிடை[29]முறை யெடுக்கு மறையொலி கேண்மதி.[30]

[1] நெருப்புப்பாலும் சுடுதற்குக் கூடாத வெவ்விய பரற்பொடிகள். [2] நடந்தனை. [3] சோலை. [4] மலரில். [5] காடு. [6] (கணம்—கூட்டம்). கூட்டமாகிய உழவர்கள். [7] பிதிர்ந்தோடுவதை. [8] ஏறிவந்த. [9] அணங்கினை—வருந்தினை. [10] முறைமையால் யாகங்களை முடித்து. [11] அவ்விரதத்தின் பொருட்டு நீராடல் செய்து. [12] பொன்னுலாகிய சக்கரமுள்ள தேர்மேல். [13] வேடர். [14] பேரொலி, [15] அடிபருத்து மேல்வளர்ந்த நெற்பயிர்கள். [16] செங்கழுநீராகிய களையைப் பறிப்பவர். [17] ஓசை. [18] பருக்கைக்கல்மேடு. [19] சுரிந்த முகத்தினையுடைய. [20] சங்குகள். [21] குவை. [22] நெடு அலகை இரதம்—நெடியபேய்த்தேர். [23] முதலை. [24] வினை—ஒன்றோடொன்று மோதுகின்றதொழிலை. பொதி அகத்து—தன்னிடத்துள்ள. [25] அகழ். [26] காகளம்—Trumpet. [27] போர்த்தொழிற்குரிய பம்பை. [28] பார்ப்பார், [29] வேதப்பள்ளி, எடுக்கும்—சந்தைசொல்லும். [30] கேண்மதி—கேள் (மதி—முன்னிலைக்கண் வரும் ஓரிடைச்சொல்.

அமரர்கள் முனிக்கணத் தவை[1]முன் தவறு
புரிந்துடன் உமைகண் புதைப்ப,மற் றுமையும்
ஆடகச் சயிலச் சேகரந்[2]தொடர்ந்த
ஒற்றையம் பசுங்கழை[3]ஒல்கிய போல[4]
உலகுயிர்க் குயிரெனும் திருவுரு[5]வணைந்து
வளைக்கரங் கொடுகண் புதைப்ப,அவ்வுழியே[6]
உலகிருள் துரக்கும் செஞ்சுடர் வெண்சுடர்
பிரமனுட் பட்ட நிலவுயி ரனைத்தும்
தமக்கெனக் காட்டும் ஒளிக்கண் கெடலும்,
மற்றவர் மயக்கம் கண்டவர் கண்பெறத்
திருநுதல் கிழித்த தனிவிழி நாயகன்
தாங்கிய கூடற் பெருநகர்
ஈங்கிது காண்க: முத் தெழினகைக் கொடியே!

[1] முனிவர் கூட்டம். [2] பொன்மலைச் சிகரம். [3] மூங்கில். [4] அசைவதுபோல.
[5] சிவபிரான் திருமேனியை. [6] அப்பொழுதே.

பதிபரிசுரைத்தல்—நகர்காட்டிக் கொண்டு சென்று அந்நகரிடைப் புக்கு அவ்விடத்துள்ள குன்றுகள் வாவிகள் பொழில்கள் மாளிகைகள் முதலியவெல்லாம் தனித்தனி காட்டி ‘இதுகாண் நம் பதியாவது’ எனத் தலைமகளுக்குத் தலைமகன் பதிபரிசு காட்டாநிற்றல்.

புறப்பொருள் வெண்பாமாலை.

இது அகத்தியர் மாணுக்கர் பன்னிருவரும் இயற்றிய பன்னிருபடலம் என்னும் நூலுக்கு வழிநூலாக இயற்றியது. இயற்றிய ஆசிரியர் ஐயனாரிதனர் என்பவர். இது

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்,
ஓங்கிய சிறப்பின் உலக முழுதாண்ட
வாங்குவிற் றடக்கை வானவர் மருமான்
ஐய னாரிதன் அகலிடத் தவர்க்கு
மையறு புறப்பொருள் வழாலின்று விளங்க
வெண்பா மாலை யெனப்பெயர் நிறீஇப்
பண்புற மொழிந்தனன் பான்மையிற் றெரிந்தே

என்னும் இந்நூலின் சிறப்புப்பாயிரத்தால் விளங்கும்."

இந்நூலுக்கு உரைகண்டவர் "சயங்கொண்ட சோழமண்டலத்து மேற்கானாட்டு மாகறலூர் கிழான் சாமுண்டி தேவநாயகன்" என்பவர். இதற்கு

"ஒப்பரிய மாகறலூ ரான்கிழா ராதிபன்
செப்பரிய தெய்வநாய கன்றெரிந்து—தப்பரிய
வெண்பாமா லைதனக்குத் தக்க விருத்தியினை
நண்பா லுரைத்தா னவின்று"

என்கிற வெண்பா ஆதாரம்.

முதனூலுக் கேற்க இந்நூலில் வெட்சிப்படலம் முதல் பெருந்திணைப் படலம் இறுதியாகப் பன்னிரண்டு படலங்கள் உண்டு. முதனூல் புத்தக ரூபமாக முழுவதும் அகப்படுவது இல்லையாயிற்று. பழைய வுரைகளில் காட்டிய சில சூத்திரங்களே இப்பொழுது கிடைப்பவை.

புறப்பொரு ளிலக்கணமாகிய சூத்திரங்களும் அவற்றுக் கிலக்கிய மாகிய வெண்பாக்களுமாக இயற்றியிருத்தலால் இந்நூல் புறப்பொருள் வெண்பாமாலை எனப் பெயர்பெற்றது.

பாடாண் படலத்தில் இயன்மொழிவாழ்த்துக்கு இலக்கியமாகிய,

"முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
இரவாம லீந்த இறைவர்போல் நீயும்
கரவாம லீகை கடன்"

என்னும் வெண்பாவில் பாரி பேகன் என்னும் வள்ளல்களைத் "தொல்லை இரவாமலீந்த இறைவர்" என்றதனால், இந்நூல் சங்ககாலத்துக்கு நெடுங் காலம் பிற்பட்டதென்பது தெளிவு. இவ்வாசிரியர் நச்சினார்க்கினியருக்கு முற்பட்டவர் என்பது தொல்காப்பிய வுரையால் விளங்கும்.

புறப்பொருள் வெண்பாமாலை.

வஞ்சி:

ஒரு தனிநிலை—பெரும்படையை ஒருவீரன் தடுத்தநிலை.

வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமால் இந்நின்ற
வாடன் முதியாள்[1] வயிற்றிடம்[2]—கூடார்
பெரும்படை வெள்ளம் நெரிதரவும், பேரா[3]
இரும்புலி[4] சேர்ந்த[5] விடம்.

[1] பொலிவிழந்த கிழவி. [2] மடியகம். [3] நின்ற நிலையினின்றும் நீங்காத. [4] புலியனையான். [5] கிடந்த.

தழிஞ்சி—தோற்றோடுவார்மேல் படைவிடாமை.

கான்படு தீயிற்[1] கலவார்தன் மேல்வரினும்
தான்படை[2] தீண்டாத் தறுகண்ணன்—வான்படர்தல்
கண்ணியபி னன்றிக்[3] கறுத்தார் மறந்தொலைதல்
எண்ணியபின்[4] போக்குமோ[5] வெஃகு[6].

[1] தீப்போல. [2] ஆயுதம். [3] சுவர்க்கலோகத்தே போதலைக் கருதி எதிரினல்லது. [4] முதுகிடுதல் கருதியபின். [5] ஒக்குமோ—ஒச்சுவானே? [6] வாளினை.

காஞ்சி:

மன்னைக்காஞ்சி—வீரசுவர்க்கத்தே சென்றவன் பண்பினைப் புகழ்ந்து நொந்து வருந்தியது.

போர்க்குப் புணை[1]மன்; புரையோர்க்[2]குத் தாணுமன;
ஊர்க்கும் உலகிற்கும் ஒருயிர்மன்—யார்க்கும்
அறந்திறந்த வாயில்[3] அடைத்ததால் அண்ணல்
நிறந்[4] திறந்த நீளிலைவேல்.

[1] தெப்பமனையவன். [2] உயர்ந்தோர். தாணு—Pillar. [3] தருமந் தோன்றின வாயிலை. [4] நிறம்—மார்பு. மன்—கழிவுபொருளில் வந்த இடைச்சொல்.

தும்பை:

தன்னை வேட்டல்—வேந்தன் விசும்படைந்தானாக ஒரு வீரன் தன்னுயிரை ஆகுதிபண்ணியது.

வானம் இறைவன் படர்ந்தென வாள்துடுப்பா[1]
மானமே நெய்யா மறம்விறகாத்—தேனிமிருங்
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன்[2] வாளமர்
ஒள்ளழலுள்[3] வேட்டா[4] னுயிர்.

[1] நெய்த்துடுப்பு. [2] வீரன். [3] வாட்போராகிய ஒள்ளிய தீயுள். [4] ஆகுதிபண்ணினான்.

நூழிலாட்டு—தன் மார்பில் பாய்ந்த வேலைப்பறித்துப் பகைப்படை கெட ஓச்சுவது.

மொய்யக[1]த்து மன்னர் முரணினி என்னாங்கொல்!
கையகத்துக் கொண்டான் கழல்விடலை—வெய்ய
விடுசுடர் சிந்தி விரையகலம்[2] போழ்ந்த
படுசுடர் எஃகம் பறித்து.

[1] போரிடம். [2] மார்பம். விடலை அகலம்போழ்ந்த எஃகம்பறித்துக் கையத்துக்கொண்டான். இனி மன்னர்முரண் என்னாங்கொல்!

வாகை:

அறிவன்வாகை—திரிகாலஞானியின் இயல்பு.

இம்மூ வுலகின் இருள்கடியும் ஆய்கதிர்போல்
அம்மூன்றும்[1] முற்ற அறிதலால்,—தம்மின் — [1] முக்காலமும்.
உறழா மயங்கி உறழினும்[2], என்றும்
பிறழா[3] பெரியோர்வாய்ச் சொல். — [3] தப்பா.

[2] தம்மில்தாம் மாறுபடாதவை அந்நிலையில் மாறி மாறுபடினும்.

"பால்புளிப்பினும் பகலிருளினும் நால்வேத நெறிதிரியினும்" என்ற புறநானூற்றைத் தழுவிப் "பால்புளித்துப் பகலிருண்டு மாறுபடினும்' என்றார் உரையாசிரியர்.

மூதின் முல்லை:

வந்த படைநோனாள் வாயின் முலைபறித்து
வெந்திற லெஃக மிறைக்கொளீஇ—முந்தை
முதல்வர்கல் தான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு.

பாடாண்:

செவியறிவுறூஉ—பெரிய எண்ணத்தை அரசனுக்கு அறிவித்தல்.

அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்[1]
தந்தைதாய் என்றிவர்க்குத் தார்வேந்தே—முந்தை
வழி[2]நின்று பின்னை வயங்குநீர் வேலி — [2] முன்னோர்செய்த நெறி.
மொழிநின்று கேட்டல் முறை. — [1] தமையன்மார்.

பொதுவியல்:

கன்னடுதல்—வீரன்பெயரைக் கல்லிலே யெழுதிக் கல்லை நடுதல்.

மாலைதுயல மணியெறிந்து[1] மட்டுகுத்துப்[2] ²மதுவைத் தெளித்து.
பீலி யணிந்து பெயர்பொறித்து—வேலமருள்
ஆண்டக[3] நின்ற அமர்வெய்யோற்[4] காகென்[5]று
காண்டக நாட்டினார் கல்.

[1] தூமமணியைக் கறங்கப்பண்ணி. [3] ஆண்மைத்தன்மை மிகுதிபெற. [4] போரை விரும்பினவனுக்கு. [5] இஃது—உருவமென்று சொல்லி.

கன்முறை பழிச்சல்—வீரனுடைய கல்லினை ஏத்தியது.

அடும்புகழ்[1] பாடி அழுதழுது நோனா[2]
திடும்பை[3]யுள் வைகிற் றிருந்த[4]—கடும்[5]பொடு [5] சுற்றம்.
கைவண் குரிசில்கல் கைதொழூஉ[6]ச் செல்பாண
தெய்வமாய் நின்றான் திசைக்கு[7]. [6]கைதொழுது. [7]திக்கெட்டிற்கும்.

[1] பகைவரைக்கொல்லும் கீர்த்தி. [2] பொறாது. [3] இடும்பை—துன்பம். [4] தங்கியிருந்த.

காஞ்சிப் பொதுவியற்பால்:

முதுமொழிக்காஞ்சி—உலகியலுள் முடிந்த பொருளாகிய அறம்பொருளின்பத்தை அறியச்சொல்வது.

ஆற்றி னுணரின் அருளறமாம்; ஆற்றார்[1]க்குப் [1] வறியவர்.
போற்றார் வழங்கிற் பொருள்பொருளாம்;—மாற்றிப்
புகலா[2] தொழுகும்[3] புரிவளையார் மென்றோள் [2] விரும்பாது.
அகலா தளித்தொழுகல் அன்பு.

[3] ஒருநெறிப்பட நடக்கும்.

பொருண்மொழிக்காஞ்சி—முனிவர் விரும்பித்தெளிந்த பொருளைச் சொல்வது.

ஆய பெருமை அவிர்சடையோர் ஆய்ந்துணர்ந்த
பாய நெறிமேல் படர்ந்தொடுங்கித்—தீய
இருளொடு[1] வைகா திடம்படு[2] ஞாலத் [1] மன்மயக்கத்துடனே.
தருளொடு வைகி[3] யகல்.

[2] அகன்ற. [3] தங்கி.

புலவரேத்தும் புத்தேளுடு—ஜிதேந்திரியர் விரும்பும் மேலுலகம்.

பொய்யில் புலவர் புரிந்துறையு மேலுலகம்
ஐயமொன் றின்றி அறிந்துரைப்பின்—வெய்ய
பகலின் றிரவின்று பற்[1]றின்று துற்[2]றின்
றிக[3]லின் றிளிவரவு [4]மின்று.

[1] பாசம். [2] உணவு. [3] மாறுபாடு. [4] தாழ்வு.

முல்லைப்பொதுவியற்பால்:

இல்லாண்முல்லை—இல்லின் மிகுதியைச் சொல்லியது.

கல்லெனீர் வேலிக் கணவன் கழல்வாழ்த்தி
ஒல்லும் வகையால் விருந்தோம்பிச்—செல்லுந்தம்
இற்செல்வ[1] மன்றி இரந்தவர்க் கீகல்லாப்
புற்செல்வம்[2] பூவா புகழ்[3].

[3] இசைபூக்கமாட்டா.

[1] இல்விடத்துச் செல்வம். [2] புல்லிய சம்பத்து.

பான்முல்லை — கலியாணம் செய்துகொண்டவன் விதியை ஏத்தியது.

திங்கள் விளங்குந் திகழ்ந்திலங்கு பேரொளி
அங்கண் விசும்பின் அகத்[1]துறைக—செங்கண்
குயிலனைய தேமொழிக் கூரெயிற்றுச் செவ்வாய்ப்
பயில்வளையை நல்கிய பால்[2].

[1] விசும்பின் அகத்து - சுவர்க்கத்திலே. [2] செறிந்த தொடியினையுடையாளை எனக்குத்தந்த விதி.

கற்புமுல்லை—பெண்டாட்டி கொழுநனுடைய நன்மையைப் பெருகச் சொல்லியது.

நெய்கொள் நிணந்து[1] நிறைய அமைத்திட்ட
குய்கொள் அடிசில்[2] பிறர்நுகர்க—வைகலும்
அங்குழைக்[3] கீரை அடகு[4] மிசையினும்[5]
எங்கணவ னல்க[6] லினிது.[7]

[1] நிணம் து—நிணமும் தசையும். [2] பொரிக்கறியுடைத்தான சோறு. [3] அழகிய தளிர். [4] கீரையாகிய இலைக்கறி. [5] உண்டாலும். [6] நல்கல்—அருளுமது—தேடிக்கொடுக்கின்ற உணவு. [7] எமக்கு இனிதாயிருக்கும்.

பெருந்திணை:

வென்றிப்பெருந்திணை—வாணிகவென்றி.

காடும் கடுந்திரை நீர்ச்சுழியும் கண்ணஞ்சான்
சாடு[1]ம் கல[2]னும் பலவியக்கி[3]—நீடும் 1 சாடு—சகடு.
பலிசை[4]யாற் பண்டம் பகர்வான் பரியான்[5]
கலி[6]கையால் நீக்கல் கடன். 6 கலி—(பிறர்) மிடி.

2 மரக்கலம். 3 இயக்கி—இடங்கடோறும் செலுத்தி. 4 பலிசை — இலாபம்.
5 பொருள்பற்றிலனாய்.

உழவன் வென்றி.

மண்பத[1] நோக்கி மலிவயலும் புன்செய்[2]யும் 1 பதம்—செவ்வி.
கண்பட ஏர்பூட்டிக் காலத்தால்—எண்பதனும்
தத்துநீ ரார்க்குங் கடல்வேலித்[3] தாயர்போல்
வித்தித் தருவான்[4] விளைவு[5]. 5 விளைவு—பல்லுயிர்க்கும் ஆக்கம்.

2 கொல்லை. 3 கடலை வேலியாக வுடையபூமி. 4 வித்தி விளைப்பான்.

எண்பதன்—"நெல்வரகு சாமை திணையிறுங்கு கேழ்வரகு
கொள்ளுழுந்தோ டெண்விளை வாகும்."

ஏறுகோள்வென்றி.

குடைவரை[1] ஏந்தியநம் கோவலனே கொண்டான்;
அடையவிழ் பூங்கோதை! அஞ்சல்;—விடையரவம்[2]
மன்றங் கறங்க மயங்க[3]ப் பறைபடுத் 3 கண்டார் மயங்க.
தின்று நமர்[4]விட்ட வேறு. 4 நம் உறவுமுறையார்.

1 மலையாகிய குடை. 2 மிக்க ஆரவாரம்.

திருவள்ளுவ மாலை.

திருவள்ளுவமாலையென்பது திருவள்ளுவரையும் அவர் செய்தருளிய திருக்குறளையும் சிறப்பித்துப் பாடப்பெற்ற ஒரு நூல். திருவள்ளுவர் என்னுஞ்சொல் தெய்வப்புலவராகிய நாயனாரையேயன்றி அவரது நூலாகிய திருக்குறளையும் குறிக்குமென்பது புலவர்களது கொள்கை. ஆகவே, திருவள்ளுவமாலை என்னும் சொற்றொடர்க்குத் திருக்குறளின் பெருமையைக் கூறும் நூல் எனவும் பொருள் கொள்ளப்பட்டது. இதனை இயற்றியவர் நக்கீரர் முதலான கடைச்சங்கப் புலவர்கள் எனவே, சங்கப்புலவர்களால் எடுத்துப் பாராட்டப்பெற்ற அரும் பெருஞ் சிறப்பினையுடையது இத்திருக்குறள் என்பது கொள்கை. கடைச்சங்கப்புலவர் நக்கீரர் தொடக்கத்தவரான நாற்பத்தொன்பதின்மரெனவும், அவர் மதுரையிலுள்ள கோயிலில் தமக்குரியதான பலகை யொன்றன்மேலிருந்து தமிழாராய்ந்தாரெனவும், அப்பலகை சங்கப்பலகை* எனப்படுவதெனவும் கூறுப.

திருக்குறளை வரலாற்றுமுறையினால் பன்முறை படித்து அறியவேண்டும் அருமை பெருமைகளையெல்லாம் இத்திருவள்ளுமாலை தெளிதாகவும் எளிதாகவும் புலப்படுத்துமென்பது இம்மாலையைப் படிப்பார்க்கு விளங்காமற்போகாது.

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்னும் இடைக்காடர் பாடலும்,

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

எனச் சிறிது மாற்றப்பட்ட ஔவையார் பாடலும் திருவள்ளுவரது திருக்குறளின் மகத்துவத்தை நன்கு வெளிப்படுத்துதல் காண்க.

---

* The meeting plank or seat, or board of meeting. How strikingly similar this is to the *Sanhedrim* of the Jews, we read of in the Gospels, will be apparent from the meaning of that word, which is derived from *sun, together* and *hedra*, a *seat*, a council, assembly or company of people sitting together, exactly what is conveyed by the term *Sangappalagai*. The *Sanhedrim*, like the Madura institution, had its babitation in the temple of Jerusalem. The president of this assembly was called *nāsi* or prince; his deputy or vice president was called *ābbēth-din*, father of the house of judgment. It had seventy fellows, besides the president and the vice president called *tzekanim*, elders or senators. They were all men learned in the law; and they were obliged also to study and master magic, divination, fortune-telling, physic, astrology, arithmetic, and languages." Editor.

*உக்கிரப்பெருவழுதியார்.

1. நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்
தோன், றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்
முறையை, வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்,
சிந்திக்க கேட்க செவி.

கபிலர்.

2. திணையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்—மனையளகு
[1]வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.[2]

[1] வள்ளை—உலக்கைப் பாட்டு.

[2] Trans: O king of the fertile country where the birds reared in houses are lulled by the women's chants! Valluvar's Kural is short in words but extensive in sense, even as in a drop of water on the blade of the Tinei (millet) might be seen reflected the image of the tall Panei (palmyra tree). *Tamil Plutarch.*

பரணர்.

3. மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.[1]

[1] திருமால் தானே குறளாய் வளர்ந்து தனது பெரிய அடியால், அளவுபட்ட உலகத்தை யளந்து பின் அக்குறளுரு நீங்கப் பெற்றான்; திருவள்ளுவர் தாம் ஒரு குறளை உண்டாக்கி அதன் சிறிய அடியால், அளவுபடாத நினைக்கப்பட்டவற்றை அளந்து இக்குறளை நிலைநிற்கச் செய்தார். எனவே, அக்குறளினும் இக்குறள் சிறந்த தென்றதாம். உள்ளுவ—நினைப்பன.

நக்கீரர்.

4. தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானா வறமுதலா மந்நான்கு—மேனோருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று[1] மற்று.

[1] இதனால், "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு" என்னுங் குறளின் பொருள் குறிக்கப்பட்டது. ஆனா—கெடாத.

*One of the forty-nine Professors of the Madura College; some invest him likewise with royal dignity. *Tamil Plutarch.*

* கல்லாடர்.

5. ஒன்றே பொருளென்னின் வேறென்ப வேறென்னி
னன்றென்ப [1]வாறு சமயத்தார்—நன்றென்ன
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி.

[1] ஆறு சமயமாவன:—வியாஸமதம், ஜைமினிமதம், கபிலமதம், கணாதமதம், பதஞ்சலிமதம், அக்ஷபாதமதம், சைவம், வைணவம் முதலியனவுமாம். 'எப்பா லவரும்' என்றதனால், வேதத்துக்குட்பட்ட மதத்தாரேயன்றிப் பிறமதத்தாரும் இதனைத் தழுவுதல் கூறப்பட்டது.

நாகன்றேவனார்.

6. தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதா
மப்பா லொருபாவை யாய்பவோ வள்ளுவனார்
முப்பான் மொழிமூழ்கு வார்.

கோதமனார்.

7. ஆற்ற லழியுமென் றந்தணர்க ணான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா—ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று.

மதுரைத்தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார்.

8. புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்ப—னிலவு
[1] பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
[2] கறங்கிருண்மா லைக்கும் பெயர்.

[1] பிறங்குதல்—விளங்குதல். [2] கறங்குதல்—சுழதல்.

---

*'This poet was one of the forty-nine professors of the Madura College, and like many of the learned men of his time he lived and died an ascetic. He appears to have devoted his attention chiefly to Grammar and Rhetoric, of the principles and rules of which two sciences he wrote a treatise, calling it after his own name கல்லாடம்.' *Tamil Plutarch*. See also p. 370.

நப்பாலத்தனார்.

9. [1]அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு - குறும்பாவா
வள்ளுவனா ரேற்றினார் வையத்து வாழ்வார்க
ளுள்ளிரு ணீக்கும் விளக்கு.[2]

[1] Trans: Valluvar has lighted a lamp for dispelling the darkness from the hearts of those who live in the world, having virtue for its bowl, wealth for its wick, pleasure for its oil, the fire of expression for its flame, and the short stanza for its stand. *Tamil Plutarch.*

[2] "அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா — நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்" என்னும் பூதத்தார் பாசுரத்தில் இக்குறளின் பொருளை அறிக. ஆன்றல்—மேம்படுதல்.

தலபதியார்.

10. உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிரு டள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மொக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு.

தேனீக்குடிக்கீரனார்.

11. பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலிற்
றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.[1]

[1] "வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்"
"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"
என்னுங் குறள்கள் இச்செய்யுளால் குறிக்கப்பட்டன.

கோடிஞாழன்மாணிபூதனார்.

12. அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
திறனறிந்தேம் [1]வீடு தெளிந்தே—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.[2]

[1] 'வீடு தெளிந்தேம்' என்றதனால், நாயனார் முப்பாலாகிய திருக்குறளில் மோக்ஷத்தையும் உணர்த்தினார் என்றதாயிற்று. 'நெடுமாற' என இங்கும், இப்படியே பிறசெய்யுட்களிலும் பாண்டியனை முன்னிலைப்படுத்திக் கூறலால், திருக்குறளைச் சங்கப்புலவர் ஆமோதித்துப் பாண்டியன் சபையில் அரங்கேற்றியதும், பாண்டியன் வித்யா நிலயத்துக்கு அத்தியக்ஷனாயிருந்தானென்பதும் உணரப்படும்.

[2] Trans: O Pandiya, the mighty king, who wields the sword brandished among the enemy! Having heard to-day from the mouth of Valluvar what we never heard before, and comprehended their meaning, we have been enlightened with the knowledge of eternal happiness. *Tamil Plutarch*.

கவுணியனார்.

13. சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள்வெண் பா.

ஆலங்குடிவங்கனார்.

14. வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் றீஞ்சுவையு மொவ்வாதாற்—றெள்ளமுத
முண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்
வண்டமிழின் முப்பான்[1] மகிழ்ந்து.

[1] 'முப்பால்' என்றதில் இத்திருக்குறளாகிய முப்பால் தேவருணவாகிய பாலினும் மும்மடங்கு சிறந்தது என்பது தொனிக்கின்றது.

S.P.C.K. PRESS, UNIVERSITY PRINTERS, MADRAS.—1917.